# ஈழவேந்தன் சங்கிலி



கௌதம நீலாம்பரன்

சாரதா பதிப்பகம்

2.1
ாம்
/PR

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா ஏஜென்ஸீஸ்**

6/16, தோப்பு வெங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
☎ : 044-2844 3791 / 94440 42232

| | | |
|---|---|---|
| இரண்டாம்பதிப்பு | : | அக்டோபர் 2006 |
| © உரிமை | : | பதிப்பகத்திற்கே |
| பதிப்பாசிரியர் | : | எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S., |
| விலை | : | ரூ. 50.00 |
| ஒளி அச்சு | : | ஜெய்ஜீனா |

Printed at : C.V.S.P. Offset Press
Chennai - 14. Ph : 55184286



# அணிந்துரை

வரலாற்றுக் கட்டுரைகள், வரலாற்றுச் செய்திகளையும், களத்தையும் நம் காலத்திற்குக் கொண்டு வருவன.

வரலாற்று நாவல்களோ, வரலாற்றுக் காலத்திற்கும், களத்திற்கும் நம்மைக் கொண்டு செல்வன.

சிறந்த முறையில் படைக்கப்பட்ட வரலாற்று நாவலைப் படிக்கும்போது ஏற்படும் அனுபவம் வித்தியாசமானது.

அமரர் கல்கியின் பொன்னியின் செல்வன் – சாண்டில்யனின் கடல்புறா – இவற்றைப் படித்த காலத்தில் என் மனம் நனவுலகைவிட்டுக் கனவுலகுக்குப் பறப்பதைப் பலமுறை அனுபவித்திருக்கிறேன்.

1983-ல் ஈழப் பிரச்னை தமிழகத்தை ஆட்கொண்டபோது எல்லோர் மனமும் உணர்ச்சிவசப்பட்டதுபோல் என் மனமும்.

ஆனாலும் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலேயே உறைந்து போகாமல், அறிவு வழியில் சிந்தித்து, நிகழ்வுகளைச் சீர்தூக்கிப் பார்த்து, என்னளவில் ஈழப்பிரச்னைக்கான தீர்வை வடித்து 'ஈழ விடுதலை யார் கையில்' என்று ஓர் நூல் எழுதினேன்.

அது 1984–85ல் அய்ரோப்பாவில் பல இடங்களில் வெளியிடப்பட்டுப் பரவியது.

ஈழப் பிரச்னையை அறிவு வழியிலேயே அணுகிக் கொண்டிருந்தபோது உணர்ச்சி நிலையற்றுப் போனதால் ஓர் வறட்சி எனக்குள் வந்தது நிஜம்.

அந்த வறட்சியை ஈரப்படுத்த அன்று எனக்கு உதவியாய் இருந்தது ஒரு சரித்திர நாவல்.

அதுதான் ராஜகங்கணம். அதன் ஆசிரியர்தான் கவுதம நீலாம்பரன்.



நிகழ்கால ஈழப்பிரச்னைகளின் நெருடல்களிலிருந்து விடுபட்டு, சரித்திர கால ஈழத்தில் என்னைப் பிரவேசிக்கச் செய்தது இந்நூல்.

இந்த நூலின் தனிச்சிறப்புகள் என்னை வெகுவாகப் பாதித்தன.

'அஷ்டமங்கல'ப் புரவி ஈழமண்ணில் வருணகுலத்தானை மட்டும் சுமக்கவில்லை. என்னையும் சுமந்ததென்றே சொல்ல வேண்டும்.

ஞானவல்லி என்னும் துயருறுத் தமிழ்ச்செல்வி வருணகுலத்தானை மட்டும் ஆட்கொள்ளவில்லை – என்னையும் ஆட்கொண்டாள் என்றே சொல்ல வேண்டும்.

சங்கிலி மன்னரின் கம்பீரம் – தஞ்சைப் படையின் செயல் வேகம் – வன்னியத்தேவன் சூது – போர்ச்சுக்கீசியரின் பாதகங்கள் – ராஜகாமினியின் சரசம் – எதைச் சொல்வது – எதை விடுவது? – காலப் புரவியின் முதுகில் ஏறிப் பின்னோட்டம் ஓடிப் பண்டைய ஈழத்தில் பதிந்துவிடச் செய்கிறது இந்த நாவல்.

இராஜகாமினி வெள்ளைப் பெண்ணைக் கொண்டு வருணகுலத்தானை வசியம் செய்ய நடுக்கடலில் முனையும் போது அவ்வீரனின் உரை தர்க்கசாத்திர இலக்கணமாய் அமைகிறது.

முதற்காட்சிகளில் இராஜகாமினி வருணகுலத்தானுக்கு வலைவீசுவதும், வருணகுலத்தான் வீசாத வலையிலேயே விழுந்து தவிப்பதும் உளவியல் தாக்கங்கள். போர்ச்சுக்கீசியரிடமும் கடற்கொள்ளையர்களிடமும் வருணகுலத்தான் நடத்தும் போர் வீரக்கலைக்கு வழிகாட்டி.

ஞானவல்லியின் பாத்திரப்படைப்பு பெண்ணியிலின் பிரதிபலிப்பு.

இப்படி அனைத்து ஞானத்துறைகளின் சங்கமமாய்ப் படைக்கப்பட்டிருக்கிற இந்நாவல் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அற்புதப்படைப்பு. 'ஈழவேந்தன் சங்கிலி' என்ற தலைப்பில், இதோ உங்கள் கைகளில் தவழ்கிறது. நான் பலமுறை படித்துச் சுவைத்துவிட்டேன். நீங்கள்?

அன்புடன்

— பெரியார் தாசன்

# என்னுரை

ஈழம் கொந்தளித்துக் கொண்டிருந்த நேரம்; இனிய தமிழ்ச் சகோதரர்கள் அங்கே இரத்தம் சிந்தி, இதயம் நலிந்து கிடந்த வேளை — என் மனம் துடியாய் துடித்தது.

இறகுகள் நமக்கில்லையே — மறுகணம் பறந்து அம் மண்ணில் இறங்க ஒரு வழியில்லையே; கடல் சூழ்ந்த இலங்கையைக் கனல் சூழவைத்த ஆஞ்சநேயனுக்கு இருந்த ஆற்றல் நமக்கில்லாது போயிற்றே என்றெல்லாம் உள் மனம் உளைச்சலிட்டது.

இந்திய அமைதிப்படை ஈழம் நோக்கிச் செல்லும் என்ற நிலை அப்போது உருவாகியிருக்கவில்லை. ஆனால், வரலாற்று உணர்வுகள் ஊற்றெடுக்கும் என் நெஞ்சமோ, 'முன்னம் எத்தனையோ முறை ஈழத்தின் அரசியற் கொந்தளிப்பை அடக்கி, இனக் கலவரங்களை அடக்கி — தமிழ் மக்களின் இன்னல் களைந்து அமைதி நிலவச் செய்ய இந்தியத் துணைக் கண்டம் அரும்பாடு பட்டிருக்கிறதே... இப்போது மட்டும் என்ன தயக்கம்?' என்று கூவிக் கொண்டே இருந்தது. உடனே நம் மண்ணின் வரலாற்றை மனதால் உழத் தொடங்கினேன். அப்போதுதான் என் முன்னே எழுந்து நின்றான் வருணகுலத்தான். என்னைப் பொறுத்தவரை இந்த நூலின் நாயகன் அவன்தான்.

ஈழமாமன்னர் சங்கிலிகுமாரருக்குப் பக்கபலமாக ஓர் இமயம் போல் எழுந்து நின்ற அவன், இனக் கலவரங்களை ஒடுக்கினான். போர்ச்சுகீசியர்களைப் பொல பொலத்துப் போகச் செய்தான்.ஆனாலும் சதிமேகங்கள் அந்த இமயத்தையே மறைத்தன. அதுதானே காலம் காலமாக வரலாறு நம்முன்னே ஓலமிடுகிற விஷயமாக இருக்கிறது!

சங்கிலி மன்னர் பற்றியும் தஞ்சை வீரன் வருணகுலத்தான் பற்றியும் உடனே தமிழ் மக்களுக்குச் சொல்லியாக வேண்டும் என்று அவசரப்பட்ட நான், அடுத்த சில மணி நேரங்களில் ஒரு சிறிய நாடகமாக அந்த வரலாற்று உண்மைகளை எழுதி முடித்தேன். அப்போது நான் 'இதயம் பேசுகிறது' வார இதழில் உதவி ஆசிரியனாகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். ஆசிரியர் திரு.மணியன் நாடகத்தைப் படித்தார். அவர் என்னைப் பாராட்டியதும் சிலாகித்ததும் ஒரு புறமிருக்க, தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான் அவரது இதயத்தை மிகப் பலமாக ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான்.

தஞ்சை மண்ணைச் சேர்ந்தவரில்லையா திரு.மணியன், தன்னுடைய மண்ணிலிருந்து புறப்பட்ட மாவீரன் ஒருவன்தான் ஈழத்தில் அமைதி நிலவச் செய்ய அரும்பாடு பட்டான் என்ற வரலாற்றுச் செய்தி அவருள் மாபெரும் உத்வேகத்தை ஏற்படுத்தியதில் வியப்பில்லை. உடனே அந்த வரலாற்று நாடகத்தை பிரமாண்டமான மேடை நாடகமாக்க வேண்டும் — ஒலி நாடாவில் பதிவு செய்து, தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கச் செய்ய வேண்டும் என்று கூறி, செயல்படவும் துவங்கினார் அவர். எனினும்




பல காரணங்களால் அது நிறைவேறவில்லை. மேடை நாடகத்துக்காக ஒரு நாடகக் குழுவினர் மூலம் ரிகர்சல் கூட நடந்தது. மேடையேறும் நாள் குறிப்பிடப்பட்டு, ஒரு சபாக்காரர்கள் இசைவுடன் பூஜையும் நிகழ்ந்தது. சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கில், அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில், இலங்கைத் தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் முன்னிலையில் 'ஈழவேந்தன் சங்கிலி' நாடகம் அரங்கேறுவதாக அழைப்பிதழும் அச்சாயிற்று.

அது மட்டும் நிகழ்ந்திருந்தால், என் மீது புகழ் வெளிச்சம் சிறப்பாக விழுந்திருக்கும்; நான் இன்னும் சற்று உத்வேகம் பெற்று எழுத்துலகில் அழுத்தமாகத் தடம் பதித்திருப்பேன்.

அப்போதுதான் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் பதற்றமான சூழ்நிலையில் இலங்கையிலிருந்து வெளியேறி, தமிழகம் வந்து, சென்னை சேப்பாக்கத்திலுள்ள அரசின் விருந்தினர் இல்லத்தில் தங்கியிருந்தார். ஆசிரியர் மணியன் கூறியபடி அவரைச் சந்திக்க நாடகத்தின் கையெழுத்துப் பிரதியுடன் நான் சென்றேன். உலகத் தமிழ் மாணவர் அமைப்பின் தலைவர் திரு. ஜனார்த்தனம் அழைத்துச் சென்றார். நாடகக் குழுவினர் சிலரும் உடன் வந்தனர்.


இலங்கைத் தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் எங்களை இன்முகத்துடன் வரவேற்று உரையாடினார். சங்கிலி மன்னன் கதை நாடகமாகிறது என்ற செய்தி அவரை மகிழ வைத்தது. கையெழுத்துப் பிரதியைப் புரட்டிப் பார்த்த அவர், வரணகுலத்தான் பற்றி சில கேள்விகளை எழுப்பினார். விளக்கமளித்தேன். சங்கிலி மன்னன் சிலை யாழ்ப்பாணத்தில் இருப்பதையும், அவனுடைய வீரவாள் நல்லூர் வீரமாகாளியின் கரத்தில் இன்றும் இருப்பதாகவும் கூறினார். 'இந்தக் கதையை நீங்கள் ஒரு பெரிய தொடர் கதையாக எழுதியிருக்கலாமே' என்றும் கூறினார். அது அப்போது என் உள்ளத்தில் அழுத்தமாகப் பதியவில்லை. நாடக அரங்கேற்றத்துக்கு அவர் வரச் சம்மதித்த மகிழ்வுடன் விடைபெற்று வந்தேன்.



அடுத்த சில நாட்களில் நாடக ஒத்திகை திடீரென நிறுத்தப்பட்டு விட்டது. மேடையேற்றமும் இல்லை என்று அறிந்து, மிகவும் வருத்தப்பட்டு, ஒரு சில நாட்கள் நான் அலுவலகத்திற்கே செல்லாமலிருந்துவிட்டேன். ஆசிரியர் மணியன் ஒரு நாள் என்னை அழைத்து, 'உன் வருத்தம் எனக்குப் புரிகிறது. நான் சி.எம். மைச் சந்தித்த போது அவர் உன் கதையைப் பற்றி விவரம் கேட்டார்; சொன்னேன். அவர், 'இந்தக் கதையை இப்போது நாடகமாகப் போட வேண்டாம். பிரச்னை வரும். மத்திய அரசு ஒரு வேளை இதைத் தடை செய்யச் சொல்லலாம். முதலில் இதை உங்கள் வார இதழில் பிரசுரியுங்கள். மக்கள் கவனத்துக்கு வந்த பிறகு இதை மேடையேற்றலாம். இயலுமானால் இதை நாம் திரைப்படமாக்கவும் எடுக்கலாம்' என்றார். சி.எம். (எம்.ஜி.ஆர்.)

இப்படிக் கூறியதால்தான் நாடக ஒத்திகையை நிறுத்தச் சொன்னேன். இது புரியாமல் நீ கோபித்துக் கொண்டு போய்விட்டாயே...' என்று சமாதானப்படுத்தினார். அத்துடன் என்னை அவருடன் காரில் அழைத்துச் சென்று, ஒரு ஓவியக் கூடத்தில் உருவான பெரிய கட்-அவுட் ஒன்றைப் பார்க்கச் சொன்னார். இலங்கை வடிவிலான அந்தக் கட்-அவுட்டில் 'ஈழவேந்தன் சங்கிலி' தொடராக இதயம் பேசுகிறது இதழில் ஆரம்பமாகும் விளம்பரம் இருந்தது. அத்துடன் அமிர்தலிங்கம் எழுதப்போகும் கட்டுரைத் தொடர் பற்றியும் அறிந்தேன்.

'ஈழவேந்தன் சங்கிலி' நாடகம் பிறகு ஆர்.எஸ். மனோகர் குழுவினர் மூலம் அரங்கேற வேண்டுமென்பது எம்.ஜி.ஆரின் விருப்பமாக இருந்ததாகவும், ஒத்திகை பார்த்த குழுவினர் நகைச்சுவை நாடகங்கள் நடத்திப் புகழ்பெற்றவர்கள் என்பதால், அவர்கள் சங்கிலி மன்னனின் கம்பீரமான வரலாற்றை நடிப்பது கேலிக்கூத்தாகிவிடும் என்று அவர் கருதியதாகவும் ஆசிரியர் மணியன் கூறினார். 'சி.எம். உன்னை அழைத்துவரச் சொன்னாரப்பா. ஒரு நாள் உன்னை நானே அழைத்துச் செல்கிறேன்' என்றும் கூறினார். அதெல்லாம் பிறகு நிகழாது போனது வேறு கதை. நாடகம் தொடராகப் பிரசுரமாயிற்று.



அமிர்தலிங்கம் அவர்கள், 'இதை நீங்கள் பெரிய நாவலாக எழுதியிருக்கலாம்' என்று சொன்னதும் என் மனதுள் ஒலித்தபடி இருந்தது. அதைப் பிறகு ஒரு சில ஆண்டுகள் கழித்து, 'கலைமகள்' மாத இதழில் 'ராஜகங்கணம்' நாவலாக எழுதி நிறைவேற்றினேன். அது நூல் வடிவம் பெற்றபோது, ஸ்ரீராம் டிரஸ்டின் பாரதி விருது ரூ. பத்தாயிரம் பரிசு கிடைத்தது. பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து, திருத்திய பதிப்பாக 'ஈழவேந்தன் சங்கிலி' நூலை சாரதா பதிப்பகம் வெளியிடுகிறது. கல்கியின் அமர இலக்கியங்களை ஏராளமான தமிழ் மக்கள் கரங்களில் தவழ விடும் பணியைச் செய்து வரும் திரு. ராஜசேகரன் அவர்களுக்கும் பேராசிரியர் திருமிகு. பெரியார்தாசன் அவர்களுக்கும் என் இனிய இதய நன்றியைத் தெரிவீத்துக் கொள்கிறேன்.

இனி 'ஈழவேந்தன் சங்கிலி' உங்கள் கரங்களில்.

அன்புடன்

**கௌதம நீலாம்பரன்**

***'ஈழவேந்தன் சங்கிலி' நாடகம் 'இதயம் பேசுகிறது' வார இதழில் தொடராக வெளிவந்தபோது வைக்கப்பட்ட விளம்பர கட்-அவுட்.***

# 1. தஞ்சையிலிருந்து வந்த தமிழ் வீரன்!

'சில்'லென்ற குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. எப்போது வேண்டுமானாலும் மழை வரக்கூடும். குளிர் தாங்காமல் பறவைகளெல்லாம் கூட மரப்பொந்துகளில் போய் அடைந்து கொண்டிருந்தன. ஆனால் அந்த இளைஞன் இதையெல்லாம் சற்றும் பொருட்படுத்தாதவனாகப் புரவியைச் செலுத்திக் கொண்டிருந்தான். இடியும் மின்னலும் கூட, ஈழ மண்ணில் தான் வந்து இறங்கியிருப்பதைக் கொண்டாடும் கொட்டு மேளமாகவும் வாண வேடிக்கையாகவுமே அவனுக்குத் தோன்றின.

அந்த உயர் ஜாதிப் புரவி, உறைக்கும் குளிரை அலட்சியப்படுத்த முடியாமல் ஒரு கணம் நின்று, உடலை ஓர் உதறு உதறிச் சிலிர்த்தபடி ஓடத் துவங்கியது. அஷ்ட மங்கலம் என்ற அந்த அசுவத்துக்குத் தெரியும், தன் மீது அமர்ந்திருப்பவன் இளைஞனாக இருந்த போதும் எஃகு சரீரம் கொண்டவன் என்பது. குளிரோ, கோடையோ எதுவாக இருந்த போதும் அவன் வழிப் பயணத்தில் தளர்வோ, சோர்வோ அடைய மாட்டான். வழியில் இளைப்பாறுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல் அவன் குறி வைத்த இடத்தில் போய்த்தான் பயணத்தை முடித்துக் கொண்டு புரவியிலிருந்து இறங்குவான். இதை நன்றாக அறிந்திருக்கும் அசுவம் என்பதனால்தான், தஞ்சையிலிருந்து ஈழத்துக்குப் புறப்பட்டபோது தன்னுடனேயே இந்த அசுவத்தையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான்.

நாகைப் பட்டினம் துறைமுகத்தில் மரக்கலத்தில் ஏறி, ஈழ மண்ணில் வந்து இறங்கியதிலிருந்தே அவன் கடந்த சில நாட்களாக இப்படித்தான் மூலை முடுக்கெல்லாம் சுற்றித் திரிகிறான். இந்த இடத்தை நோக்கித்தான் பயணம் என்று அவன் திட்டமிட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. காடு மேடெல்லாம் அலைந்து நெடுந்தூரம் பயணம் செய்வான். பிறகு திடீரென்று திரும்பி விடுவான். அந்த அசுவத்திற்குத் தாங்கள் எங்கிருந்து

புறப்பட்டோம் என்பது நன்றாகத் தெரியும். சூரிய அஸ்தமனத்திற் குப் பின் திரும்பினால் கூட, அது பாதைகளைத் துல்லியமாகப் பிடித்து, புறப்பட்ட இடத்திற்கே அவனைக் கொண்டு வந்து சேர்த்து விடும்.

இந்தத் துணிவினால் தானோ என்னவோ அன்று அவன் அந்த அடர்ந்த காட்டுப் பாதையில் கடுங்குளிரையும் பொருட்படுத்தா மல் பயணம் செய்து கொண்டிருந்தான். அப்படி மூலை முடுக் கெல்லாம் சுற்றித் திரிந்து ஈழத்தின் ஒவ்வொரு பகுதியையும் பரிச்சயம் செய்து கொள்வது அவனுக்கு மிகவும் அவசியமாயிருந் தது. அவன் ஏற்று வந்திருக்கும் பணி வெற்றி பெற வேண்டுமா னால், எந்த இடத்திலும் வழி தெரியவில்லையே என்று திகைத்து நின்றுவிடும் நிலை வந்துவிடக் கூடாது. அதனால்தான் பணியைத் துவக்குமுன்பாகப் பாதைகளை அலசுகிறான்.

ஈழத்தைப் பற்றியும் அவன் ஏற்று வந்திருக்கும் பணியைப் பற்றியும் எண்ணும்போதே பெருமிதம் பொங்க அவன் நெஞ்சு நிமிர்ந்து, ஆழ்ந்த சுவாசத்தால் அகன்று விரிந்தது. 'ஈழம் என்று தமிழர்களால் அழைக்கப்படும் இலங்கைத் தீவு பரதக் கண்டத் தோடு எப்போதுமே தொடர்புடையதுதான். இரண்டு மண்ணை யும் இணைத்து இராமாயண காவியமே சிறப்பிக்கிறதே... அதன் பிறகும் வரலாறுகளில் நெடுக தொடர்பு துலங்குகிறது. இலங்கை மண்ணில் வாழும் இரண்டு பெரிய இனங்களான தமிழர்களும் சிங்களர்களும் அவர்களுடைய மதங்களும் பாரத பூமிக்குச் சொந்த மன்றோ!

'சங்க இலக்கியங்களில் ஈழப் புலவர்களின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரம் இலங்கை மன்னன் முதலாம் கயவாகு சேரன் செங்குட்டுவனைச் சந்தித்த விவரம் கூறுகிறது. சமுத்திர குப்தன், இலங்கையை ஆண்ட மேகவர்ணனுக்குப் படை உதவி அளித்துள்ளான். பல்லவர்கள் எத்தனையோ சிங்கள அரசர் களுக்கு ஆட்சி பீடத்தை மீட்டுத் தந்திருக்கிறார்கள். நரசிம்ம பல்லவன், சிங்கள இளவரசன் மானவர்மனுக்கு ஆட்சி உரி மையை மீட்டுத் தந்தது காவியமாகப் போற்றப்படத்தக்க தாயிற்றே!*

'ராஜ ராஜ சோழனும் ராஜேந்திர சோழனும் குலோத்துங்க னும் இலங்கை அரசியலில் அக்கறை உள்ளவர்களாகத் தானே

* இந்த வரலாற்றுச் சம்பவங்களை மையமாக வைத்து நான் எழுதியுள்ள 'பல்லவன் தந்த அரியணை' நாவலை வாசிக்கவும்.



இருந்தனர். ஜடாவர்மன் சுந்தர பாண்டியனும் குலசேகர பாண்டிய னும் கூட அப்படித்தான். பலமுறை பாண்டிய அரியணையை இலங்கை வேந்தர்கள் பாதுகாத்ததும் உண்டுதான். இதோ இன்று நாம் இந்த ஈழமண்ணில் மகத்தான பொறுப்பை ஏற்று நடத்த வந்துள்ளோம். வாணிபம் செய்ய வந்த போர்ச்சுக்கீசியர்கள், அரியணைகளையும் அரச மகுடங்களையுமல்லவா கபளீகரம் செய்து, ராஜ வேஷம் போடத் துடிக்கிறார்கள்! எப்படி அநுமதிக்க முடியும்? இந்த வஞ்சகக் கூட்டத்தின் சதி வலைகளை அறுத்தெறி யாமல் விடுவதா.....' என்றெல்லாம் பலவாறாகச் சிந்தித்துக் கொண்டிருந்ததால், அவனிடமிருந்து அஷ்டமங்கலப் புரவிக்கு எந்தச் சமிக்ஞையும் கிடைக்கவில்லை.

சில்லிட்ட காற்றில் ஒரு கணம் அந்த அசுவம் நடை தயங்கி, உடலைச் சிலிர்த்தபடி ஓடத் துவங்கிய போதுதான் அவன் சூழ்நி லையை உணர்ந்தான்.

நெடுந் தூரத்திற்கு ஊர்கள் எதுவுமே தென்படவில்லை. பாதையும் கரடு முரடாயிருந்தது. ஆயினும் எங்கே பார்த்தாலும் ஒரே பச்சைப் பசேலென்ற இயற்கை அழகு கண்ணை மயக்கியது. 'ஈழத்திற்கு* மரகதத் தீவு என்ற பெயரும் பொருத்தமானது தான் என்று அவன் கருத்து ஒருகணம் கவிதை எழுதியது. அவன் அசுவத்தின் விலாப் புறத்தில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்தபடி அதன் செவியருகில் குனிந்து, ''ஓ! உன்னை இந்தக் குளிர் காற்றில் மிகவும் சிரமப்படுத்தி விட்டேனோ..... சரி, நாம் திரும்பி விட லாம்'' என்று கூறிக் கொண்டிருந்த போதே, தொலைவில் ஏதோ கூக்குரல் எழுவதைக் கவனித்தான். தொடர்ந்து அவன் கட்டளை யைக் கூறி முடிக்காததாலும் பாதையிலிருந்து பின்னோக்கித் திரும்புவதற்காகக் கடிவாளக் கயிற்றைப் பிடித்து இழுக்காததா லும் அந்த அசுவம் மேலும் பத்தடி தூரம் முன்னோக்கியே நடந்தது. அப்போதுதான் சற்றுத் தொலைவில் ஒரு பெண்ணை நாலைந்து முரடர்கள், கை கால்களைக் கட்டி ஒரு புரவியின் மீது ஏற்றுவதை அவன் கவனித்தான்.

அடுத்த கணம் அவன் கால்கள் அஷ்ட மங்கலத்தின் அடி வயிற்றில் மெல்ல அழுந்திப் புதைந்தன. அந்தக் குறிப்பை உணர்ந்த அசுவம், கணை புறப்படுவது போல் பாய்ந்தது. பின் னால் ஒருவன் புரவி மீது துரத்தி வருவதைக் கவனித்ததும் அந்த நாலைந்து முரடர்களும் புரவிகளில் விரைவாகத் தாவியேறியபடி தலைதெறிக்க ஓடலாயினர்.

*கி. வா. ஜ. அவர்களின் 'இலங்கைக் காட்சிகள்'

அஷ்ட மங்கலத்துக்கு ஒரு சில விநாடிகளே தேவையாயிருந் தன. முன்னால் ஓடும் புரவிகளை முந்துவதற்கு அந்த இளைஞன் வழி மறித்ததும் முரடர்கள் புரவிகளை இழுத்துப் பிடித்து நிறுத்தி னர். ஒருவன் முன்வந்து எச்சரித்தான்:

''போய்விடு, நீ வழிமறிப்பதைக் கண்டு நாங்கள் அஞ்ச வில்லை. நாங்கள் நாலைந்து பேர் இருக்கிறோம். சிறுபிள்ளைத் தனமாக எங்கள் விஷயத்தில் தலையிட்டு அழிவைத் தேடிக் கொள்ளாதே...''

''நாலைந்து பேராக இருப்பதால்தான் துணிச்சலா? தனித்தனி யாக நிற்க உங்களில் ஒருவனுக்கும் துணிச்சல் இல்லை. அப்படித் தானே?''

''வீண் வார்த்தைகள் பேச எங்களுக்கு நேரமில்லை. அவசி யம் இல்லாத வேளைகளில் நாங்கள் கொலைகாரர்களாவதும் இல்லை. ஒதுங்கிப் போகிறாயா அல்லது உன்னை ஒழித்துக் கட்டிவிட்டுப் போக வேண்டுமா?''

''உங்கள் வீரப் பிரதாபங்களை அறிவதில் எனக்கும் அத் தனை ஆவல் இல்லை. ஒருபெண்ணை நாலைந்து பேர் துரத்தி வந்திருப்பதிலிருந்தே உங்கள் வீரம் எத்தகையதென்று புரிந்து கொண்டு விட்டேன். கட்டுகளை அவிழ்த்து முதலில் அந்தப் பெண்ணை இறக்கி விடுங்கள்...''

''சரி, உன் தலையெழுத்து எங்கள் கையால் நீ மடிய வேண்டுமென்று இருந்திருக்கிறது. விதியை யாரும் மீற முடி யாது...'' என்றவாறே அந்த முரடன் தோளிலிருந்த வில்லை எடுத்து அம்பு பூட்டினான்.

''இப்போது கூட நீ ஓடிப் போகச் சந்தர்ப்பம் தருகிறேன்...'' என்றபடி குறி பார்த்தான். அந்தக் கரிசனத்தை இளைஞன் ஏற்க வில்லை; பாதையை விட்டு நகரவும் இல்லை. அந்தத் துணிச்சல் முரடர்களுக்கு வியப்பை அளிப்பதாக இருந்தது. இன்னும் ஒன்றி ரண்டு விநாடிப் போதில் அவன் பிணமாகச் சரியப் போவதை அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

வில்லை ஏந்தியவன், நாணை நன்றாகக் காதுவரை இழுத்து அம்பை எய்தான். அந்த அம்பு இளைஞனின் மார்பில் பாய வேண்டியது. ஆனால் அதை அவன் வெகு இலாகவமாகத் தன் இடது கரத்தால் பிடித்துக் கீழே எறிந்தான்.

இது சாத்தியமானது என்பதை அந்த முரடர்களால் நம்ப முடியவில்லை.

R



அடுத்த நாலைந்து அம்புகளுக்கும் அதே கதி நேர்ந்த பிறகு தான் அந்த அம்புகளை எய்த முரடன் எதிரி சாமான்யமானவ னல்ல என்பதை உள் மனத்தில் ஒப்புக் கொண்டான்.

'எப்படி இது சாத்தியம்! வில்லிலிருந்து புறப்பட்ட கணை களை ஒருவன் வெறும் கையால் பிடித்து விடுவது நடக்கக் கூடியதா? குறியிலிருந்து தப்பலாம்; அதற்கும் ஓடி ஒளியாமல் இயலாது. இவன் அசையாமல் நின்றவாறே சீறிவரும் அம்புக ளைப் பயனற்றுப் போகச் செய்து வருகிறானே..... இப்படிக்கூட ஒரு வித்தை இருக்கிறதா?' என்று எண்ணங்களை இதயத்தில் ஓடவிட்டவாறு,

''யார் நீ?எங்கிருந்து வருகிறாய்... இந்தப் பெண்ணை எங்களி டமிருந்து மீட்பதில் உனக்கென்ன அத்தனை அக்கறை?'' என்று வினவினான்.

''இது வீண் பேச்சு. இரு, பதில் சொல்கிறேன். ஒரு வீரனுக்கு உள்ள அக்கறைதான் எனக்கு. கண் முன்னே ஒரு அக்கிரமம் நடப்பதை நான் அனுமதிக்க முடியாது...''

''இதில் அக்கிரமம் ஏதுமில்லை. இந்தப் பெண்ணின் தாயின் அனுமதியோடுதான் நாங்கள் இவளைத் தூக்கிச் செல்கிறோம்...''

''அது எனக்கு முக்கியமில்லை. இந்தப் பெண்ணின் விருப் பத்துக்கு மாறாக இவளைத் தூக்கிச் செல்ல முயலுகிறீர்கள். அதுவும் இப்படி அரக்கத் தனமாக இவளின் கை, கால்களைக் கட்டி முதுகில் கவிழ்த்துப் போட்டு... பேச்சு தேவையில்லை. முதலில் அந்தப் பெண்ணின் கட்டுகளை அவிழ்த்து விடு...''

''நீ வீரன் என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஆனால், உன் கட்டளைக்குக் கீழ்ப்படிவது மட்டும் இயலாது...''

''வேறு என்ன செய்வதாக உத்தேசம்?''

இதற்கு அந்த வில்லாளி பதில் சொல்வதற்குள் இருவர் வாட்களை உருவிக் கொண்டு சரேலென்று தங்கள் புரவிகளை இளைஞனை நோக்கிப் பாயவிட்டனர்.

அந்த முரடர்களின் பட்டை வாள்களின் பயங்கர வீச்சுக்குச் சாதாரணமாக வேறு யாரும் அங்கிருந்தால் தப்புதல் அரிதுதான். அந்த இளைஞனின் இரண்டு பக்கத்திலுமாக அவர்கள் ஒரே சமயத்தில் வாட்களை வீசியபடி பாய்ந்தனர். ஆனால் அந்த இளைஞன் ஒரு கணம் அசுவத்தின் மீதிருந்தே அந்தர்த்தனமாகி விட்டான். நொடிப்போது நிலைகுலைந்து போன அந்த முரடர்கள்

இருவரும் நாலைந்து அடி தள்ளிப் போய்த் தங்கள் புரவிகளை இழுத்துப் பிடித்து நிறுத்திய பிறகு தான் நிலைமையை உணர்ந்தனர்.

இளைஞன், அசுவத்தின் முதுகிலிருந்து பறந்து, தலைக்கு மேலே ஆளுயரத்தில்படர்ந்து பரவியிருந்த மரக்கிளை ஒன்றில் போய் தொற்றிக் கொண்டிருந்தான். மறுகணமே அவன் தன் புரவியின் மீது ஆரோகணித்தான்.

இப்போது அந்த இரண்டு முரடர்களும் மறுபடியும் தங்கள் புரவிகளைத் திருப்பிக் கொண்டு உருவிய வாளுடன் பாய்ந்தனர். ஆனால் புத்திக் கூர்மையுள்ள அஷ்டமங்கலம், சரேலெனத் திரும்பித் தன் முன்னங்கால்களை உயர்த்தி எதிரிகளில் ஒருவனுடைய புரவியின் முகத்தில் ஓர் உதை விட்டது. அந்த அசுவம் நிலைகுலைந்து மண்ணில் சரியவே, அதன் மீதிருந்த முரடன் பாதையோரமிருந்த பாறைகளில் விழுந்து உருண்டான்.

அடுத்த புரவி மீதிருந்தவன், திடீரென்று தன் மார்பில் இடி விழுவதைப் போல் உணர்ந்தபடியே மண்ணில் விழுந்து புரண்டான். அஷ்டமங்கலத்தின் மீதிருந்த அந்த இளைஞன் பாய்ந்த வேகத்தையும், தங்கள் சகாவின் மார்புக்கு நேரே காலை உயர்த்தி உதைத்துத் தள்ளிவிட்டு அவன் தன் ஒற்றைக் காலைப் புரவியின் முதுகில் ஊன்றித் திரும்பி, தன்னுடைய புரவியின் மீது தாவி அமர்ந்ததையும் கண்ட மற்றவர்கள் வியப்பின் எல்லைக்கே சென்று விட்டனர்.

ஒரு பயங்கரமான எதிரியைச் சந்திக்க நேர்ந்துள்ள உணர்வு அவர்களை வெறி கொள்ளச் செய்தது.மற்ற மூவரும், ''இவனை எப்படியும் ஒழித்தே ஆக வேண்டும்'' என்று கூவியபடியே புரவியினின்று குதித்தபடி தங்கள் வாட்களை உருவிக் கொண்டனர்.

இளைஞன் அதை அலட்சியம் செய்தவனாய், வில்லை ஏந்தித் தன் மீது முதலில் அம்பு எய்தவனை நோக்கி, ''நீ இவர்களை மேய்ப்பவன் என்று புரிகிறது. உங்களில் தலைவன் என்று எவனும்இல்லை போலும், ஆளாளுக்கு வாய் வீரம் பேசி



வருகின்றனர். இதுவரை நான் என் ஆயுதத்தைத் தொடவில்லை. என்னை அந்த நிலைக்குத் தூண்டாமலிருப்பது நல்லது. மீறினால் உங்களில்எவனும் உயிரோடு திரும்புதல் நடவாத காரியம்...'' என்றான்.

''இருக்கட்டும். கீழே இறங்கு. உன் வாளை உருவிக் கொள். நாங்கள் உன்னோடு போரிடத் தயாராக இருக்கிறோம்'' என்றான் அந்த முதல் முரடன்.

''இருக்கலாம். ஆனால் நான் எனக்குச் சமமில்லாதவர்களுடன் வாட்போர் புரிவதில்லை...''

''சமமில்லாதவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். நாங்கள் தனித்தனியாக உனக்கு ஈடு கொடுக்கத் தகுதியில்லாதிருந்தாலும் நாலு பேரும் ஏக காலத்தில் உன்னோடு போரிடுகிறோம். 'முரடனுக்கு மூணு ஆள்' என்பார்கள். எங்கள் நால்வரோடு மகா பெரிய வீரனான நீ தாராளமாகப் போரிடலாம்...'' என்று கூறி விட்டு, இடி இடியென அவன் சிரித்தான். அவனோடு மற்றவர்களும் சேர்ந்து கொண்டார்கள்.

ஆனால், யாருக்கு முன்னால் வாளை உருவுகிறோம் என்பதைச் சற்றேனும் அறிந்திராத அந்த முரடர்கள், தங்கள் பலத்திலும் நாலு பேராக இணைந்து நிற்பதிலும் நம்பிக்கை வைத்து அந்தப் பயங்கரத் தாக்குதலைத் துவக்கினர். கீழே உருண்டு விழுந்திருந்த மற்ற இருவரும் கூட இப்போது எழுந்து வாளுடன் ஓடி வந்தனர்.

இளைஞன் அந்த அறைகூவலை அலட்சியமாக ஏற்பவன் போல் மண்ணில் குதித்தான். வாளை மட்டும் தொடவே இல்லை.

ஏக காலத்தில் பலம் பொருந்திய ஐந்தாறு முரடர்களின் கொடூரமான வாள் வீச்சுகளை அநாயாசமாக அந்த இளைஞன், வாளை உருவாமலே சமாளித்த விதத்தை இரண்டு விழிமலர்கள் வியப்புடன் நோக்கிக் கொண்டிருந்தன. புரவியின் முதுகில் கவிழ்ந்து கிடந்த இளநங்கையினுடைய விழிமலர்கள் தாம் அவை. விலா எலும்புகளின் நோவையும் பொருட்படுத்தாமல் அவள் அந்த இளைஞனை நோக்கினாள்.

அவனுடைய வெற்றுக் கரங்களுக்கு முன் முரடர்களின் வாள் வீச்சுகள் பயனற்றுப் போய்க் கொண்டிருப்பது விந்தையிலும் விந்தையாக இருந்தது. இலாகவமான அசைவுகளால் வாள் வீச்சுக் களினின்று தப்பியவாறே எதிரிகளின் மார்பிலும் நெற்றியிலும் சரமாரியான உதைகளை விட்டு அவர்களைத் திணற அடித்துக் கொண்டிருந்தான் அந்த வீர வாலிபன். ஒரு சில நொடிப் போதிலேயே எதிரிகள் நிராயுதபாணிகளாக நேர்ந்தது. வாள் வீசி வந்தவர்களின் மணிக்கட்டுகளைப் பிடித்து ஒடித்தும் கால்களைத் தட்டி விட்டும் அவர்களை நிலை குலையச் செய்து கொண்டிருந்த அவன், இனியும் அவர்களோடு விளையாடிக் கொண்டிருக்க நேரமில்லை என்றெண்ணியவனாய், தற்காப்பு முறைப்படி எதிரி களை உணர்விழக்கச் செய்யும் நரம்பு ஸ்தானங்களைக் குறி பார்த்து ஒவ்வோர் அடியைப் பிரயோகித்து, அவர்களை மயங்கி விழச் செய்தான்.

R

## 2. இளநங்கையின் தியாக நெஞ்சம்!

அந்த இளைஞன், நடைபெற்றசண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து எதிரிகளை வீழ்த்தி விட்டு எழுந்து நின்றதுமே அஷ்டமங்கலப் புரவி அவன் அருகில், 'சரி, நாம் புறப்படலாமா?' என்று கேட்பது போல் வந்து நின்றது. 'இல்லை, இன்னும் நமது பணி முழுமையாக முடியவில்லை' என்பதுபோல் அதன் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்த அந்த இளைஞன், அருகில் கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் மிகவும் சோர்வும் கிலியுமாக, முரடர்களின் புரவிகளில் ஒன்றின் மீது துவண்டு கிடந்த அந்த இளநங்கையின் அருகில் சென்று தன் இடையிலிருந்த குறுவாளை உருவி, அவளது கட்டுகளை அறுத்தெறிந்து, கைலாகு கொடுத்துப் புரவி மீதிருந்து கீழே இறக்கினான்.

புரவியின் முதுகில் நெடுநேரமாய் ஒரு நிலையில் கிடந்ததா லும் அதற்கு முன்பு வெகு தூரம் ஓடிக் களைத்திருந்ததாலும் அந்த மென் கொடியாள், நிற்கக் கூட வலுவின்றி அவன் தோள்மீது சரிந்தாள். சட்டென்று அவள் கீழே விழுந்து விடாவண்ணம் அவன் அவளைத் தாங்கிப் பற்றிக் கொண்டான். அப்படி அவன் கைகள் பற்றிய இடம், அவளது இடைப்பகுதியாக இருந்தது. தன் இடையில் அவனுடைய முரட்டுக் கரங்கள் பதிந்த அந்த வேளையில் அந்த இளநங்கை, தான் ஏற்கெனவே இருந்த அரை மயக்க நிலையோடு ஒரு புதுவித மயக்கமும் கிறக்கமும் தன்னில் படர்வதை உணர்ந்தாள். அவள் விழிகள் இமைகளின் அடியில் செருகின. அவன் தன்னை உறுதியாகப் பற்றிக் கொண்டு இருக்கி றான் என்பதை உணர்ந்த போதும், அவள் தன் மென்கரங்களில் ஒன்றை அவன் வலது தோளிலும் மற்றொன்றை அவன் மார்பின் குறுக்காகக் கழுத்தை ஒட்டியும் வளைத்துப் போட்டு அவனை இறுகப் பற்றிக் கொண்டாள்.

முரடர்களின் இடியொத்த எத்தனை அடிகள் தன்மீது விழுந்த போதும் சற்றும் நிலைகுலையாத அந்த இளைஞன், இப்போது

அந்த மெல்லிய மலர்க்கொடிகள் போன்ற இரண்டு கரங்கள் தன்மீது இறுகிப் படர்ந்த கணத்தில் குலைந்த நெஞ்சோடு நலிந்து நின்றான். இடது புஜத்தின் மீதும் சற்றுக் கீழேயும் இரண்டு மலர்க்கொத்துகள் இளஞ் சூட்டோடு புதைந்து கிடப்பதை உணர்ந்து அவன் புத்தி தடுமாறியது. அரை மயக்க நிலையில் தடுமாறி விழுந்து விடப் போகிறாளே என்ற நல்லெண்ணத்தோடு அவள் இடையைப் பற்றிய தன் கரங்களை இப்போது எடுக்க விருப்பமில்லாதவன் போல் நின்றான் அவன்.

அந்த இடைப் பகுதி அத்தனை மென்மையாக இருக்கக் கூடுமென்பதை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மஞ்சள் வண்ணப் பட்டுத் துணியை மடித்து வைத்தது போன்ற அந்த மெல்லிய இடைப் பகுதியின் சதைப் பற்றான பகுதியில் விரல்கள் அழுந்திப் பதிவது அவனுக்குச் சுகமானதோர் அநுபவமாக இருந் தது. அவனையறியாமலேயே அவனது கரங்களில் ஒன்று அந்த மெல்லிடையின் கீழ்ப்புறத்து மேட்டுப் புறங்களில் மெல்ல இறங் கித் தவழ்ந்தது. அரை மயக்க நிலையிலிருந்தாளென்றாலும் அந்தப் பெண் இதை அனுமதிக்க விரும்பாதவளாகச் சட்டென்று அந்தக் கரத்தைத் தட்டிவிட்டாள்.

அந்தச் சந்தன மேனியாளின் மேடு பள்ளங்களின் ஸ்பரிசத் தால் தன்புத்தி ஸ்வாதீனத்தை அறவே இழந்து, மயக்க நிலைக்குச் சென்று கொண்டிருந்த அவன், இப்போது உணர்வு வரப் பெற்றவ னாகத் தன் கரத்தை அத்துமீறிப் போகாமல் விலக்கிக் கொண்டான்.

மாலைப் போதில் மழை மேகங்கள் வேறு கவிந்து கொண்டி ருந்ததால் வானம் இருண்டு கிடந்த அந்த வேளையில், கீழே உணர்விழந்து கிடப்பவர்கள் பிரக்ஞை திரும்பியதும் தங்கள் புரவிகளில் ஏறிக் கொண்டு செல்லட்டும் என்று எண்ணிய அந்த இளைஞன், அவர்களின் புரவிகள் எதையும் தொடாமல் தன் புரவியிலேயே அந்த இளநங்கையைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று ஏற்றிக் கொண்டு புறப்பட்டான்.

அஷ்டமங்கலம், வந்த பாதையில் திரும்பி ஓடத் துவங்கிய சிறிது நேரம் கழித்து அந்தப் பெண், ''புரவியை நிறுத்துங்கள்'' என்றாள் உரத்த குரலில்.

''ஏன்?''

''அந்த முரடர்கள் மயக்கம் தெளிந்து, துரத்திக் கொண்டு வந்தால் கண்ணில் படக் கூடாது என்பதற்காகவே உங்களுடன் இதுவரை வந்தேன். என்னை இங்கேயே இறக்கிவிட்டு விடுங்கள். நான் காட்டுப் பாதை வழியாக எங்கள் கிராமத்துக்கு நடந்து சென்று விடுகிறேன்.''



''உன் வீட்டில் உனக்கு ஏதோ ஆபத்து காத்திருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. உன் தாயே இந்த முரடர்களுக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரிகிறது. பிறகு நீ ஏன், உன் வீட்டிற்குச் செல்ல விரும்புகிறாய்?''

''நீங்கள் எந்த ஊர்க்காரர்?''

''நான் இங்கே எந்த ஊரைச் சேர்ந்தவனுமல்ல. இலங் கைக்கே புதியவன். நீ மிகவும் களைத்துப் போயிருப்பதால், வழியில் எங்கேனும் ஒரு சத்திரத்தில் உன்னைத் தங்க வைத்து, பிறகு விவரமாக விசாரிக்கலாம் என்று எண்ணினேன்.''

''என் தாயால் எனக்கு எந்த ஆபத்துமில்லை. நான் உடனே என் வீட்டிற்குச் சென்றாக வேண்டும்... விவரம் தெரியாமல் ஏதேதோ பேசாதீர்கள்.'' அவள் பரபரத்தாள்.

''அதைத்தான் சொல் என்று வினவினேன்.''

''முதலில் நான் கூறுகிற வழியில் புரவியைத் திருப்புங்கள். போகிற வழியில் அதைப் பற்றிச் சொல்கிறேன். ஒரு நாழிகைப் போது புரவியில் சென்றால் எங்கள் கிராமத்தை அடைந்து விட லாம். என்னை அங்கே கொண்டு சென்று விட்ட பின்னர் நீங்கள் உங்கள் வழியே செல்லலாம்'' என்றாள் அவள்.

அந்த இளநங்கை காட்டிய திசையில் புரவியை திருப்பிச் செலுத்தினான்அவன். சற்று மரங்கள் அடர்ந்திருந்த பகுதியை விட்டு விலகி வேறு பாதையில் அவர்கள் இப்போது பயணம் செய்யத் துவங்கியிருந்தனர்.

மேட்டுப் பாங்கான பகுதி ஒன்றிலிருந்து சற்றுச் சரிந்த பாதையாக அது இருந்ததால், அஷ்டமங்கலம் துரிதகதியில் ஓட வசதியாக இருந்தது. ஆனால் அதே சமயம் அது வேறொரு வகையில்அவனைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. சோர்வுற்றிருக்கும் அவள் கீழே விழுந்து விடக் கூடாதென்ற நல்லெண்ணத்தில், முன்புறமாக அவளை அமரச் செய்திருந்தான். இப்போது அவள் முதுகுப் பகுதியில் சாய்வதும் உரசுவதும் அவனுக்குத் தவிர்க்க இயலாததாக இருந்தது. அவளும் நிலை மையை உணர்ந்ததால் ஆட்சேபம் காட்டவில்லை.

சில்லென்று வீசும் காற்றில் சிங்காரப் பதுமையொன்றின் நெருக்கத்தில் ஓர் இளைஞனுக்கு இயல்பாக எழுகின்ற சிருங்கார மனப் புயலில் அவன் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த அந்த வேளையில் தான், அந்த இளநங்கை அப்படியொரு வார்த்தையை எடுத்து வீசினாள்:

''என் தந்தையைக் காக்கவும் இந்தத் தேசத்தைக் காக்கவும் நான் என் பெண்மையை இழக்கச் சித்தமாக இருந்தேன்...''

இந்த வார்த்தைகள் செவிகளில் விழுந்ததும் நெருப்புத் துண்டுகளை விழுங்கி விட்டதைப் போல் துடித்தான் அவன். சில்லிடும் குளிர்காற்றையும் மீறி அவன் மேனியில் 'குப்'பென்று வேர்வைத் துளிகள் முத்திட்டன.

''பெண்ணே! நீ என்ன சொல்கிறாய்?'' காரணம் அறியாமலேயே அவன் கைகள் அஷ்டமங்கலத்தின் கடிவாளத்தைப் பிடித்திழுத்தன. அத்தனை வேகமாக அவன் அதற்கு முன் தன் புரவியைப் பிடித்திழுத்து நிறுத்தி நோகச் செய்திருப்பானோ என்பதே சந்தேகந்தான். அதை அஷ்டமங்கலத்தின் கடூரக் கனைப்பும் உறுதிப்படுத்தியது.

''ஆமாம். அதைத் தவிர எனக்கு வேறு வழியே தெரியவில்லை. என் தந்தையை அந்தப் படுபாவிகளிடமிருந்து எப்படியும் நான் மீட்டேயாக வேண்டும். அதனால் தான் என் தாய் துணிந்து என்னை அங்கே அனுப்பினாள். ஆனால், நடந்தது வேறாகி விட்டது. நான் என்ன செய்வது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் தாயிடம் சென்று உடனே அனைத்தையும் தெரிவித்தாக வேண்டும். அவள் என்ன சொல்கிறாளோ, அதற்குக் கீழ்ப்படிய நான் சித்தமாக இருக்கிறேன். இதோ, ஊரை நெருங்கி விட்டோம். புரவியை நிறுத்தாதீர்கள்'' என்றாள் அவள்.

அந்த இளைஞன் மனத்திற்குள் மிகவும் நொந்து கொண்டான். அவள் ஏதோ சொல்லிக் கொண்டு வந்திருக்கிறாள். அவன் அதைக் கவனிக்கவில்லை. அவள் அழகையே கவனித்தபடி, புத்தியை அதிலேயே செலுத்திக் கொண்டிருந்ததால் அவன் பேச்சிற்கு யந்திர கதியில் 'ம்' கொட்டிக் கொண்டு வந்திருக்கிறான்.

இந்தச் செய்கைக்காக உண்மையாகவே அவன் நாணினான். 'எப்பேர்ப்பட்ட தியாகத்தைச் செய்யத் துணிந்தவள் இவள்' என்ற எண்ணம், இப்போது அவள் மீது அவனுக்கு ஒரு மரியாதையை உருவாக்கியிருந்தது.



அவள் என்ன சொல்லிக் கொண்டு வந்தாள் என்பதை முழுவதுமாகச் செவிமடுக்கத் தவறியிருந்த போதும், அவள் கடைசியாகச் சொன்ன விஷயங்களிலிருந்தே அவளுக்கு ஏற்பட்டிருந்த துர்ப்பாக்கியமான நிலையை அவனால் ஓரளவு ஊகித்துக் கொள்ள முடிந்தது.

''புரவியை நிறுத்துங்கள்... இதோ எங்கள் வீடு வந்து விட்டது'' என்றாள் அந்தப் பெண்.

அஷ்டமங்கலம், ஓராள் உயரத்துக்கு மேல் கம்பீரமாக வளர்ந்திருந்த புரவி என்பதால் அதை நிறுத்தியதும் முதலில் அவன் கீழிறங்கி, அந்த இளம் பெண் கீழிறங்கக் கைகொடுத்து உதவினான்.

காரைகள் உதிர்ந்து போயிருந்த ஒரு சாதாரண வீடு அது. வீட்டில் வெளிச்சமேதும் தென்படவில்லை. உள்ளே யாரும் இருப்பதாகவே தோன்றவில்லை. வாசற்கதவு அடைபட்டுக் கிடந்தது. அந்த இளம்பெண் நடைப்படிகளில் ஏறியவாறே, ''அம்மா, அம்மா'' என்று உரத்த குரலில் அழைத்தாள். பதில் ஏதுமில்லை. சாத்திக்கிடந்த கதவின் நாதாங்கி இழுத்து மாட்டப்பட்டு, சிறிய குச்சி ஒன்று செருகப்பட்டிருப்பதை அவள் கவனித்தாள். அப்படியானால் அம்மா வெளியே அக்கம்பக்கத்தில்தான் எங்கோ சென்றிருக்க வேண்டும். ஆனால், அந்திசாயும் வேளையில் அப்படி எங்கும் செல்ல மாட்டாளே! வீட்டில் விளக்கைக் கூட ஏற்றாமல் அப்படி எங்கே சென்றிருக்கக் கூடும்?

அந்த இளநங்கை ஏதோ யோசித்தாள். பிறகு வாசலுக்கு வந்து, ''ஐயா, நன்றி! என் மீது இரக்கப்பட்டு முன்பின் தெரியாத என்னை அந்த முரடர்களிடமிருந்து மீட்டு, இவ்வளவு தூரம் கொண்டு வந்து விட்டிருக்கிறீர்கள். ஆனால் உங்களை உள்ளே அழைத்து உபசரிக்க இயலவில்லை. என் தாய் வெளியில் எங்கோ சென்றிருக்கிறாள் போலிருக்கிறது. உங்களுக்கு நேரமாகிறது, நீங்கள் புறப்படுங்கள்...'' என்றாள்.

''இல்லை. எனக்கு ஒரு அவசரமும் இல்லை. உன் தாய் வருகிற வரை நான் இங்கேயே இருக்கிறேன்'' என்றவாறே அவன் அந்த வீட்டின் சிறிய திண்ணையில் ஏறி அமர்ந்தான்.

அப்போதுதான் அவர்கள் எதிரே கடுமையான சீற்றத்தோடு அந்த மனிதர் வந்து நின்றார். அவரிடமிருந்துதான் அந்தத் துயரம் தோய்ந்த செய்தியும் வெளிப்பட்டது.

# 3. வன்னியன் கோட்டை ரகசியம்

வந்து நின்ற மனிதர் வயது முதிர்ந்தவராக — மரியாதைக்குரிய தோற்றத்தோடு இருந்த போதும் அவரிடமிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளில் நிதானம் சிறிதும் இல்லை.

''யாரடா நீ...? என்ன துணிவிருந்தால் இந்தப் பெண்ணுடன் இடித்து உரசியபடி புரவியில் உட்கார்ந்து வந்திருப்பாய்...? ஊருக்குள் நுழைந்ததுமல்லாமல், இப்போது வீட்டுத் திண்ணையில் வேறு உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறாய்?'' என்று சீறிச் சினந்தார் அவர்.

அந்த இளைஞன், ''ஏனய்யா, பார்த்தால் பெரிய மனிதராகத் தோன்றுகிறீர். பேச்சிலே சிறிதும் பண்பில்லையே...?'' என்றான்.

''என்னடா எதிர்த்துப் பேசுகிறாய்? பண்பைப் பற்றி உன்னிடந்தான் நாங்கள் பாடம் படிக்க வேண்டும். வன்னியன் கோட்டை ஆட்கள் இந்த அளவு பகிரங்கமாக ஊருக்குள் நுழைந்து அக்கிரமம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கிற அளவுக்கு நாங்கள் ஒன்றும் சொரணையற்றவர்களல்ல... பார், இன்னும் சிறிது நேரத்தில் உனக்கு இங்கே என்ன கதி நேரப் போகிறதென்று...'' — பேசிக் கொண்டே போன அந்த மனிதரின் முன்னால் ஓடிவந்த அந்த இளம்பெண்,

''ஐயா, தாங்கள் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிட வேண்டாம். இவர் வன்னியன் கோட்டையைச் சேர்ந்தவரல்ல. ஈழத்துக்கே புதியவர். என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றியவர். என் தாய் எங்கே? முதலில் அதைச் சொல்லுங்கள். பிறகு மற்ற விவரங்களை நான் கூறுகிறேன்'' என்று இறைஞ்சும் குரலில் வினவினாள்.

''ஞானவல்லி! நீ நல்ல பெண். உனக்கு இப்படியெல்லாம் நேர்ந்திருக்க வேண்டாந்தான். ஆனாலும் விதி யாரை விட்டது? நீ அசட்டுத் துணிச்சலுடன் மலைக்காட்டில் உள்ள அந்த மாளி



கைக்குப் போகத் துணிந்தாய். அப்படி நீ போய்க் கேட்பதால் மட்டுமே அந்தக் கொடியவர்கள் உன் தந்தையை விட்டுவிட மாட்டார்கள் என்பதை உனக்கும் உன் தாய்க்கும் பலர் எடுத்துரைத்தனர். உணர்ச்சி வயப்பட்டிருந்த நீங்கள் இருவரும் அதைச் செவிமடுக்கவில்லை.

''இந்த ஊர் வாயாடிப் பெண்கள் சிலர் உன் தாயை இழிவாகப் பேசினர். மகள் கெட்டாலும் பாதகமில்லை; புருஷன் பிழைத்தால் போதுமென்று அவள் நினைப்பதாகத் தூற்றினர். நீயும் வரவில்லை; உன் தந்தையும் வரவில்லை. பாவம், அவள் மிகவும் மனம் நொந்து உத்தரத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு விட்டாள். காலையில் நெடு நேரமாகக் கதவு திறக்கப் படாததால் நாங்கள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றோம். ஊர் கூடி முடிவெடுத்தபடி, மதியம் வரை வைத்திருந்து பார்த்துவிட்டு உன் தாயை நாங்களே அடக்கம் செய்து விட்டோம்.''

''ஐயோ! ஒரே நாளில் இந்த ஊர் என் தாயைக் கொன்று விட்டதே....? இப்போது நான் என்ன செய்வேன்?'' என்று புலம்பியபடி வீரிட்டு அலறத் தொடங்கினாள் ஞானவல்லி.

ஆறுதல் கூறி அவளைத் தேற்றினார், அந்தக் கிராமத்துப் பெரியவர். பிறகு இளைஞனைப் பார்த்துப் பேசினார்:

''தம்பி! நீ யாரோ, எந்த ஊரோ எதுவும் எனக்குத் தெரியாது. உன்னைப் பார்த்தால் நல்ல உள்ளம் கொண்டவனாகவும் வீரம் செறிந்தவனாகவும் தெரிகிறது. நான் உன் மனம் நோகப் பேசியிருந்தால் அதைப் பொருட்படுத்தாதே. பாவம், இந்தச் சிறுபெண். இவளுடைய தந்தையைப் போர்ச்சுக்கீசியர்களின் அடிவருடியாக நின்று இந்த ஈழத்திருநாட்டை நாசமாக்கிக் கொண்டிருக்கும் ஒரு நயவஞ்சகனின் ஆட்கள், அரசியல் காரணங்களுக்காகத் தூக்கிச் சென்று கொடுமைப்படுத்துகின்றனர். தாயோ இப்படி உத்தரத்தில் தொங்கி விட்டாள். ஊரோ இவளைப் பழிக்கிறது. இந்த நிலையில் இவளுக்கு உன்னைத் தவிர, பாதுகாப்பு வேறு யாரும் இல்லையப்பா, நீயே இவளை அழைத்துச் சென்று விடுவதுதான் நல்லது'' என்று நெஞ்சை நெகிழ்த்தும் குரலில் பேசினார்.

''ஐயா... நானே இந்த நாட்டுக்குப் புதியவன், வழிப்போக்கன். என்னை நம்பியா இந்தப் பெண்ணை ஒப்படைக்கிறீர்கள்?''

''நான் ஒப்படைக்கவில்லையப்பா, விதி அப்படிச் செய்கிறது. ஊரார் முன் அவமானப்பட்டு, இந்தச் சிறு பெண் ஏதாவது செய்யக் கூடாததைச் செய்து கொண்டு விடுமோ என்று எனக்கு

அச்சமாயிருக்கிறது. வாழ வேண்டிய இந்த இளம் தளிர் கருகிப் போகக் கூடாதப்பா'' என்று மன்றாடினார். அந்தப் பெரியவர்.

ஊரில் செல்வாக்கு மிக்கவர் என்ற ஆணவத்தோடு வந்து ஆவேசமாகப் பேசத் துவங்கிய அந்த மனிதர், இத்தனை இனிய இதயம் உடையவராக இருப்பதையறிந்து அந்த இளைஞன் வியந்து போனான்.

''சரி, இவ்வளவு அக்கறையோடு பேசுகிற தாங்கள் இந்தப் பெண்ணின் தந்தையை அந்த அநியாயக்காரர்களிடமிருந்து மீட்க ஏன் முயலவில்லை?'' என்று வினவினான்.

''அப்பா, நீ விவரம் புரியாதவனாக இருக்கிறாய். நான் உன்னோடு இத்தனை நேரம் நின்று பேசிக் கொண்டிருப்பதே சாத்தியமற்ற விஷயம். ஊரின் நிலைமை அப்படி இருக்கிறது. இந்தப் பெண்ணின் தந்தை நல்லூர்க் கோட்டையில் ஊழியம் பார்ப்பவர். அரச கட்டளைப்படி அவர் அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்று வருவார். அதற்கு மேல் அவரைப் பற்றி இந்த ஊருக்கு எதுவும் தெரியாது. ஆனால் அவரிடம் ஏதோ பெரிய இரகசிய மொன்று இருப்பதாக எதிரிகள் சந்தேகப்படுகின்றனர். அதன் விளைவுதான் இதெல்லாம். உன்னால் முடியுமானால் இந்தப் பெண்ணை யாழ்ப்பாண நல்லூரில் உள்ள கோட்டையில் கொண்டு போய் விட்டுவிடு. உடனே இங்கிருந்து போய்விடு'' என்று தீர்மானமாகக் கூறிவிட்டார்.

அதற்குமேல் அவரிடம் விவாதிப்பதோ, விவரம் அறிய முயல்வதோ வீண் முயற்சி என்பதை உணர்ந்து கொண்டதால் நல்ல உள்ளத்தோடு நின்றிருந்த அந்த மனிதருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, ஞானவல்லியை அழைத்துக் கொண்டு புறப்பட்டான் அந்த இளைஞன்.

நம்மீது ஒரு துரும்பு வந்து விழுவதாக இருந்தால் கூடச் சரி, அது விதியின் எல்லைக்குட்பட்டுத்தான் நிகழ முடியும். இது வாழ்க்கையை நுணுகிப் பார்க்கிற ஒவ்வொருவரும், உணர்கிற — ஒப்புக் கொள்கிற உண்மை.

இல்லையென்றால் ஞானவல்லி, வழிப்போக்கனாக வந்த அந்த இளைஞனோடு சேர்ந்திருக்க முடியுமா?

இரவுப் போதாகி விட்டிருந்ததால், பெரியவர் அவர்களுக்கு ஒரு போசனையும் கூறியிருந்தார்.



''தம்பி! ஊரெல்லையைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றால் ஒரு சத்திரம் தென்படும். அங்கே இரவு தங்கிக் கொள்ளுங்கள். அங்கிருந்து நல்லூர்க் கோட்டைக்குச் செல்லும் பெருவழி மிகச் சமீபத்தில்தான் இருக்கிறது.''

அதன்படியே அவன் ஞானவல்லியை அழைத்துக் கொண்டு அந்த ஊர் எல்லையைத் தாண்டிச் சிறிது தூரம் கூடச் சென்றிருக்க மாட்டான். அவளிடமிருந்து விம்மலும் கேவலும் அடக்க மாட்டாமல் வெடித்துக் கிளம்பின. அவர்கள் இன்னும் புரவியில் ஏறிக் கொள்ளவில்லை. அடக்க மாட்டாத துயரங்களைச் சுமந்து வரும் அவளிடம் என்ன பேசுவது, எப்படி ஆறுதல் கூறுவது என்றும் புரியாமல் தடுமாறித் தவித்த அந்த இளைஞன், ''ஞானவல்லி'' என்று ஆதரவான குரலில் அவள் பெயரைச் சொல்லி அழைத்தான்.

''உம்'' — அழுகையோடு அவள் குரல் நடுங்கியது.

''நீ மனத்தைத் தேற்றிக் கொள்ள வேண்டும். இப்படி அழுது கொண்டேயிருப்பதால் ஆகப்போவது ஒன்றுமில்லை.''

''எனக்கு இனி ஆக வேண்டியது என்ன இருக்கிறது? நான் சாக வேண்டியது தானே மீதமுள்ளது...''

''நீ இப்படிப் பேசக்கூடாது. நான் உன்னை ஒரு வீரப் பெண் என்று நினைத்தேன். இந்தத் தேசத்துக்காகவும் உன் தந்தையைக் காப்பதற்காகவும் நீ எதை வேண்டுமானாலும் இழக்கச் சித்தமாக இருந்ததாகச் சொன்னபோது, நான் உன் துணிவைக் கண்டு வியந்து போனேன். அப்படிச் சொன்ன நீ இப்போது...''

''ஆமாம்; சொன்னேன். என் பெண்மையை இழக்க நேர்ந்தாலும் பாதகமில்லை என்று நினைத்ததாகச் சொன்னேன். அதற்கென்ன இப்போது? இந்த இரவு வேளையில் தன்னந்தனியாக உங்களோடு நடந்து வருகிற வேளையில் அதை நினைவுபடுத்த வேண்டிய அவசியம் என்ன? அப்படி நேர்ந்த பிறகு நான் உயிரோடு இருப்பேனா என்ன? என் தந்தைக்காக உயிரை இழக்கவும் சித்தமாக இருந்தேன் என்பதையே அப்படிக் கூறினேன். சீ! இந்த உலகில் ஆண்கள் அத்தனை பேரும் கொடியவர்களாகத்தான் இருப்பார்கள் போல் இருக்கிறது.''

அந்த இளைஞனுக்குச் 'சுரீல்' என்று இதயத்தில் சுட்டது.

''ஞானவல்லி! நீ என்னைத் தவறாகச் சந்தேகிக்கிறாய். நான் கொண்டு வந்து விட்ட உடன் திரும்பிச் சென்றிருந்தால் அதன்

பிறகு உன்னைத் தேடிக் கொண்டு வர எனக்குச் சந்தர்ப்பமே இருந்திருக்காது. அத்தனை பொறுப்பு மிக்க பணிகள் எனக்காகக் காத்திருக்கின்றன. எதிர்பாராத விதமாக நிலைமை இப்படியாகி விட்டது. புரவியில் ஏறிக்கொள். நாம் விரைவாகச் சத்திரத்தை அடைந்து ஓய்வெடுத்துக் கொண்டால் நாளை அதிகாலையில் நல்லூர்க் கோட்டையை நோக்கிப் பயணம் புறப்படலாம்'' என்றான்.

''தேவையில்லை. என்னை இங்கேயே விட்டு விட்டு நீங்கள் உங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு போகலாம். நான் என் தாயைப் புதைக்க இடத்தைச் சென்று காண வேண்டும்...''

''சரி, நாளைக் காலையில் நானே உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன். இரவு நேரத்தில் நீ அங்கெல்லாம் போகக்கூடாது. என் பேச்சைக் கேட்டு நடந்து கொள்வது உனக்குத்தான் நல்லது...''

''நன்மை, தீமை பற்றியெல்லாம் என்னால் இப்போது சிந்திக்க முடியவில்லை. என் வாழ்வே சூன்யமாகி விட்டது போன்று நான் உணர்கிறேன். என் தாய் இனி நான் என்றுமே காண முடியாத இடத்துக்குப் போய் விட்டாள். என் தந்தையை இனி நான் சந்திக்க முடியுமென்ற நம்பிக்கையே எனக்கு இல்லை. கொடியவர்களிடம் சிக்கியுள்ள அவர் என்ன ஆவாரோ...? பயமும் குழப்பமும் என்னை வதைக்கின்றன. இந்த நிலையில் நீங்கள் எதற்காக என்னைத் தொடர்கிறீர்கள்? நான் எதற்காக உங்களுடன் வர வேண்டும்? என்மீது அப்படியென்ன உங்களுக்கு அக்கறை?''

ஞானவல்லி புத்தி ஸ்வாதீனம் இழந்தவள் போல் புலம்பலும் கேவலுமாக இப்படிக் கேட்டாள்.

''நீ மிகவும் மனம் நலிந்த நிலையில் இருக்கிறாய். நான் யாரென்பது தெரியாத நிலையில் நீ பேசுகிற பேச்சு என்னைப் பொறுத்தவரை அர்த்தமற்றவை. என்னைப் பற்றி நீ துளியும் அச்சப்பட வேண்டாம். என்னால் உனக்கு எந்த ஆபத்தும் நேராது. மனத்தைத் தேற்றிக் கொள். இந்த இரவு வேளையில் இப்படி நட்ட நடுக்காட்டில் உன்னை நிர்க்கத்தியாக விட்டுச் செல்ல என்னால் முடியாது. அந்தச் சத்திரத்தில் கொண்டு விட்டு விடுகிறேன். நாளை உன் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் போ. அதன்பிறகு உன்னை நான் தொடர மாட்டேன். இப்போது பிடிவாதம் செய்யாமல் என்னோடு வா.''



அந்த இளைஞன் இப்படிப் பேசிய பின் சிறிது நேரம் அவள் ஒன்றும் பேசாமல் நின்றாள். அழுகை மட்டும் ஓயவில்லை. பிறகு,

''சரி வருகிறேன். ஆனால் புரவியில் அல்ல; நடந்துதான்'' என்றாள்.

இளைஞன் வேறு வழியின்றி இதற்குச் சம்மதித்து,அவளை அழைத்துக் கொண்டு நடக்கத் துவங்கினான். அவளுடைய தந்தையைப் பற்றி விசாரித்தறிய அவன் மனம் விழைந்தது. எதை அறிந்து கொள்ள அந்த வன்னியன் கோட்டை ஆட்கள் அவரைப் பிடித்து வைத்துக் கொடுமை புரிகிறார்கள் என்று அவளிடம் கேட்டறிய விரும்பினான். ஆனால் அப்போது அதிகம் பேச்சுக் கொடுப்பது உசிதம் இல்லை என்பதால், அமைதியாக நடந்தான். அதே வேளையில் இருளென்னும் அரக்கன் தன் தீ விழிகளைத் திறப்பது போல் திடீரென்று நாலைந்து தீப்பந்தங்கள் எங்கிருந்தோ முளைத்தன. ஒரு மனிதன் விழுந்தடித்து ஓடிவந்து கொண்டிருந்தான். எதிரிகள் நெருங்கிவிட்ட நிலையில்தான் அவன் மீது தீப்பந்த வெளிச்சம் பட்டது. அடுத்த கணம் ஞானவல்லி அந்த மனிதனைப் பார்த்து, ''அப்பா'' என்று வீரிட்டலறினாள்.

## மழைத் தூறல் சொன்ன மகத்தான உண்மை!

சூழ்நிலையை நொடிப் போதில் உணர்ந்து கொண்டு விட்டான் அந்த இளைஞன். ஞானவல்லி அவன் கைகளைப் பற்றிக் கொண்டு, ''எப்படியாவது என் தந்தையைக் காப்பாற்றுங்கள்'' என்று இறைஞ்சுவது போல் கூறினாள்.

பதற்றமும் பரிதவிப்புமாய் அவள் அவன் கரங்களைப் பற்றி அழுத்திய விதம், என்ன என்னவோ அர்த்தங்களை அவனுக்கு உணர்த்தி, 'நான் உன்னிடம் சரண் அடைந்து விட்டேன். என்னைக் கைவிட்டு விடாதே' என்பது போல் இருந்தது.

ஞானவல்லியின் தந்தையைத் தீவட்டி ஏந்திய அந்த முரடர்கள் பிடித்து இழுத்து வந்தனர்.

''தந்தையும் மகளும் ஒன்றாகச் சாக வேண்டுமென்பது உங்கள் விதி போல் இருக்கிறது. அதனால்தான் இவ்வளவு தூரம் ஓடிவந்த பின்னும் எங்களிடம் மாட்டிக் கொண்டீர்கள்'' என்று அவளைப் பார்த்து எக்காளச் சிரிப்புடன் முழக்கமிட்ட ஒருவன் அந்த இளைஞனைப் பார்த்து விட்டு,

''யாரடா நீ? நீதான் எங்கள் வீரர்களை அடித்துப் போட்டு விட்டு ஓடிவந்தவனா?'' என்று சினம் கனல விழிகளை உருட்டிய படி வினவினான். அவனுடைய கண்கள் தீப்பந்த வெளிச்சத்தில் நெருப்புத் துண்டுகள் போலிருந்தன.

''ஆம்'' என்ற ஒற்றைச் சொல்லில் பதிலிறுத்தான் இளைஞன்.

''நீ ஆபத்தானவன். உன்னோடு பேசுவது வீண் வேலை...'' என்றபடியே அவன் தன் குறுவாளை உருவி, இளைஞன் மீது செருகக் கையை ஓங்கினான்.



ஞானவல்லியின் தந்தை, 'அடடா! இந்த இளைஞன் நமக்கு உதவ முனைந்த தோஷத்துக்காகத் தன் உயிரையே இழக்கும்படி ஆகிவிடும் போல் இருக்கிறதே' என்று எண்ணினார். பரிதாப உணர்வு மேலிட அவர் அவனைக் கூர்ந்து நோக்கிய போது, 'இவனை நாம் எங்கோ பார்த்திருக்கிறோம் போல் இருக்கிறதே!' என்ற எண்ணமும் அவர் புத்தியைக் குழப்பியது.

தீப்பந்தம் ஏந்தி வந்த நாலைந்து முரடர்களும் ஏக காலத்தில் அந்த இளைஞனைக் குறி வைத்துத் தாக்கமுனைந்தனர். இளைஞன் வெகு லாகவமாக அந்த நிலைமையைச் சமாளித்தான். அடுத்த கணம் அங்கே இருள் திரையில் விதவிதமான ஒளிக்கோலங்கள் பல வரையப்படுவது போல் தீப்பந்தங்கள் சுழன்றன.

அந்த இளைஞன் ஆயுதம் எதுவும் ஏந்தாமலும், தன் இடையி லிருந்த வாளைக் கூட உருவாமலும் எதிரிகளின் நடுவேசுழன்று சுழன்று போரிட்டது ஞானவல்லியின் தந்தையை வியப்பில் மூழ்கச் செய்திருந்தது. அப்படியோர் அற்புதமான போர்க்கலையை அவர் அதற்கு முன் கண்டதில்லை. இரண்டொருவர் தங்கள் உயிர் பிழைத்தால் போதுமென்று இருளில் ஓடி மறைந்தனர். மீதமுள்ள சிலர் அடுத்த சில விநாடிகளில் நரம்பு ஸ்தானங்களில் பட்ட வர்ம அடிகளால் நிலை குலைந்து மண்ணில் விழுந்து புரண்டனர். அவர்களைக் கொல்லும் நோக்கம் இல்லாததால் அந்த இளைஞனும் 'பிழைத்துப் போகட்டும்' என்று கைகளை உதறிக் கொண்டு, ஞானவல்லியும் அவள் தந்தையும் நின்றிருந்த இடம் நோக்கி நடந்தான். அப்போது அவன்இடது தோளில் ஒரு குறுவாள் பறந்து வந்து பாய்ந்தது. குபுகுபுவென்று குருதி பொங்கிப் பிரவகித்தது.

ஞானவல்லியின் தந்தை சீற்றத்தோடு கீழே கிடந்த பாறாங்கல் ஒன்றைத் தூக்கி மண்ணில் விழுந்து கிடந்த ஒருவன் மண்டையில் போட யத்தனித்தார்.

அதைப் பார்த்த இளைஞன், ''இது போர் அறமல்ல... என்று கூறித் தடுத்தான்.

''உன்மீது இவர்களில் ஒருவன் குறுவாள் வீசியது மட்டும் போர் அறமா?'' என்று கேட்டார் அவர். அதே சமயம் 'ஆ' என்ற அலறல் சற்றுத் தொலைவிலிருந்து ஒலித்தது. ஞானவல்லியின் தந்தை, விழிகளைச் சுழற்றி இருளை உழுதார். மண்ணில் விழுந்த தீப்பந்தங்கள் சில அணைந்து கருகிப் புகை நாற்றம் எழுப்பிக் கொண்டிருந்தாலும் ஒன்றிரண்டு அரை குறையாக எரிந்து மெல்

லிய ஒளியைப் பரவ விட்டிருந்ததால், சற்றுத் தொலைவில் ஆஜானுபாகுவான அந்த முரடர் தலைவன் குருதி பெருக மண் ணில் புரள்வதைக் கவனிக்க முடிந்தது. அவர் வியப்போடு இளைஞனை நோக்கினார். அவன் இடது புஜத்தில் பாய்ந்திருந்த குறுவாளைக் காணவில்லை.

தன் மீது பாய்ந்த குறுவாளையே பிடுங்கி, அது எங்கிருந்து பாய்ந்தது என்பதை நொடிப் போதில் கவனித்து, அந்தத் திசையில் வீசி எதிரியை வீழ்த்தியிருந்த அந்த இளைஞன், ''நான் இவர்க ளைக் கொல்ல வேண்டாமென்று எண்ணியிருந்தேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஒருவன் விதி இங்கே முடிய வேண்டுமென்று இருந்திருக்கிறது. சரி, கல்லைக் கீழே எறிந்து விட்டு வாருங்கள். நாம் புறப்படலாம்'' என்றான்.

ஞானவல்லியின் தந்தை, ''குறுவாளை வீசி விட்டதால் மட் டுமே அவன் இறந்து விடுவானா?'' என்றபடியே, அடிபட்டுக் கிடந்த மனிதன் அருகே சென்று குனிந்து பார்த்தார். அவன் கழுத்தில் குறுவாள் ஆழமாகப் பாய்ந்திருந்தது. அவன் விழிகள் மேலே செருகிக் கொண்டிருந்தன. ஆவி அடங்க ஆரம்பித்திருந் தது.

இளைஞனின் பிரமிக்கத்தக்க இந்தச் சாதனையை எண்ணி வியந்தவாறு நின்ற தந்தையைப் பார்த்து ஞானவல்லி, ''அப்பா! செத்துக் கொண்டிருப்பவனை ஆராய்ந்தது போதும். வாருங்கள், இவருக்கு உடனடியாக இரத்த சேதாரத்தைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்'' என்று கூறியவாறே தன் சேலைத் துணியைக் கிழித்து இளைஞனின் இடது புஜத்தில் குருதியைத் துடைத்துக் கட்டுப் போட்டாள்.

மகள் அழைத்தவுடன் ஓடிவந்து, இளைஞனின் கரத்தில் கட்டுப் போட உதவிய அந்த மனிதன், ''தம்பி! என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் நிகழ்த்திய அற்புதத்தைப் பற்றிய சிந்தனையி லேயே இருந்து விட்டேன். எங்களுக்காக உயிரைப் பணயம் வைத்துப் போரிட்டிருக்கிறீர்கள். குருதி சிந்தி நிற்கிறீர்கள். உங்க ளுக்கு நன்றி சொல்ல எனக்கு வார்த்தைகளே அகப்படவில்லை'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார்.

அவர்கள் அங்கிருந்து சத்திரத்தை நோக்கி நடக்கத் துவங்கி னர். இளைஞனும் நடந்தே வந்தான், ''ஐயா! இவர்கள் தங்களிடமி ருந்து எந்த ரகசியத்தை அறிய இத்தனை கொடுமைகள் புரிந்தனர்?'' என்று வினவினான்.



''தம்பி! நான் ஈழ அரசின் ரகசிய ஒற்றர்களில் ஒருவன். இங்கே சமீபத்தில் மக்கள் கலவரம் ஒன்று உருவாயிற்று. அதைத் தக்க தருணத்தில் சங்கிலி மன்னரின் செவிகளுக்கு எட்டும்படி எடுத்துரைத்தவன் நான்தான். ஒற்றுமையாக வாழும் தமிழர்களை யும் சிங்களவர்களையும் எதிர் எதிராக ஆக்க ஒரு மூன்றாவது சக்தி முயன்று கொண்டிருக்கிறது. பீதுறு பொட்டன்கொன் என் னும் போர்ச்சுக்கீசிய பாதிரி, வெளிப்படையாகவே மன்னருக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகிறார். இதெல்லாம், போர்ச்சுக்கீசியர்கள் எந்த விநாடியும் வெளிப்படையான போரைத் துவக்கி விடுவார்கள் என்பதன் அறிகுறி என்றுணர்ந்த மாமன்னர் சங்கிலி, அரசவையைக் கூட்டி இதுபற்றி விவாதித்தார். தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கரிடம் படை உதவி கோருவதென்று முடிவெடுக்கப்பட்டது...'' என்று அவர் கூறிக் கொண்டிருக்கும் போதே...

''சரி ஐயா... அதற்கும் இந்தப் பொல்லாதவர்கள் தங்களைத் துன்புறுத்தியதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று வினவினான் அந்த இளைஞன்.

ஞானவல்லி குறுக்கிட்டு, ''அப்பா! மழை வரும்போல் இருக்கிறது. தூறல் விழுகிறது பாருங்கள். சத்திரத்துக்குச் சென்று பேசலாம்; விரைவாக நடப்போம்'' என்றாள்.

''ஆகட்டுமம்மா'' என்ற அவர், ''தம்பி! மழை என்றதும் நினைவு வருகிறது. தஞ்சை மன்னரிடம் படை உதவி கேட்க சங்கிலி மன்னர் என்னைத்தான் அனுப்பினார். நானும் இரகுநாத நாயக்கரைச் சந்தித்து, சங்கிலி மன்னரின் திருமுகத்தைக் கொடுத்து நிலைமைகளை விவரித்தேன். தஞ்சை மன்னர், ஈழத்துக்கு உதவு வதாக வாக்களித்தார். 'அடுத்து வரும் அமாவாசையன்று சங்கிலி மன்னரின் அரண்மனையில் மழை பொழியும். அப்போது மற்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம்' என்று கூறி, என்னை அனுப்பி விட்டார். இதற்குச் சரியான அர்த்தம் எங்களுக்கே தெரியவில்லை. அமாவாசையன்றுதான் இந்தப் புதிர் விடுபடும். ஆனால் எப்படியோ எதிரிகளுக்கு நான் தஞ்சை சென்று வந்தது தெரிந்து விட்டது. வீடு புகுந்து என்னை இழுத்துச் சென்று விட்டார்கள். உண்மையைக் கூறும்படி அடித்துச் சித்திரவதை செய்தனர்'' என்று கூறிக் கொண்டே வந்தார்.

''பாவம், தஞ்சை மன்னர் கூறியதன் சரியான அர்த்தம் தெரிந்திருந்தால் நீங்கள் இத்தனை சிரமங்களை அநுபவித்திருக்க நேர்ந்திருக்காது. அப்படித்தானே ஐயா?''

''தம்பி! என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்? என் வருத்தம் அதுவல்ல... ஒரு ராஜ ரகசியத்தைக் காப்பதற்காக உயிரை விடுவது பெருமைக்குரியது. ஆனால் நான் தெரியாத ரகசியத்துக் காகவல்லவா உதை பட்டிருக்கிறேன் — உதை மட்டுமா? மனைவி உயிரிழந்தாள், மகள் மானம் இழக்கக் கூடிய கொடிய ஆபத்தினைச் சந்திக்க இருந்தாள். நல்ல வேளை நீங்கள் வந்து அவளைக் காப்பாற்றினீர்கள்.''

இளைஞன் சிலிர்த்துப் போனான். 'எத்தனை தேசப் பற்று! எத்தனை ராஜ பக்தி! ஒரு ரகசியம் தெரிந்திருந்து, அதை எதிரிகளி டம் சொல்ல மறுப்பதால் மரணம் வந்தாலும் பெருமை. என்று கூறும் இந்த ராஜ விசுவாசத்துக்கு இணை வேறேது?' என்று வியந்து போன அவன், ''ஐயா! கவலை வேண்டாம். நீங்கள் விடை தேடும் மழை இதோ பொழியத் துவங்கிவிட்டது. வருணப கவான் உங்களுக்காக மனம் கனிந்து உதவ எண்ணுகிறார் போல் இருக்கிறது!'' என்றான்.

ஞானவல்லியின் தந்தை காத்தவராயருக்கு ஒன்றும் புரிய வில்லை. நிஜமாகவே அப்போது தூறல் வலுக்கத் துவங்கியது. சத்திரம் சமீபித்து விட்டதால் விரைந்தடைய மூவரும் ஓடலானார் கள். அங்கே சென்றதும் ஞானவல்லியின் தந்தைக்குப் புரியாத புதிர்களெல்லாம் புரியத் துவங்கின.

# ஈழத்து இளவரசி

**ரா**ஜகாமினி, படம் விரித்தாடும் ராஜ நாகம் போல் சீறியெழுந்தாள். அவளால் அரைக் கணங்கூட ஆசனத்தில் அமர்ந் திருக்க முடியவில்லை.

எதிரே எம கிங்கரர்களைப் போல் நின்றிருந்த மனிதர்களைப் பார்த்து, ''பெருந்தீனித் தடியர்களே, நீங்களெல்லாம் ஆண்கள் தானா?'' என்று நெருப்பு வார்த்தைகளை வீசினாள்.

மதமதவென்று மாமிசக் குன்றுகளாய் நின்ற அந்த முரடர்கள், 'ராஜகாமினியின் சீற்றத்துக்கு ஆளாகிவிட்டோமே... எத்தனை விபரீத விளைவுகள் நிகழுமோ?'' என்று அஞ்சிக் கிடுகிடு வென்று நடுங்கினர்.

கொடிய புலி, சிங்கங்களை ஓர் அழகிய மான் நின்று மருட்டும் விந்தையல்லவா அங்கே நிகழ்ந்து கொண்டிருக்கிறது!

ஆம்; ராஜகாமினி அப்படிப் பட்டவள்தான். அவள் சீற்றம் கொடுமையான சூறாவளிக்குச் சமமானதுதான். பேரழிவுகளை நிகழ்த்தாமல் அந்த ஊழித்தாண்டவம் ஒருபோதும் ஓயாது. அவள் கொடிமலர் மேனியைப் பார்த்து மயங்கி நிற்பவர்களுக்கு முதலில் தெரியாது, அவள் அத்தகையவள் என்று அறிந்தவர்கள் நடுங்கித் தானே ஆகவேண்டும்...? நயந்துதானே ஆகவேண்டும்?

''நாங்கள் எவ்வளவோ எச்சரிக்கையோடுதான் இருந்தோம். காத்தவராயனும் அவன் மகள் ஞானவல்லியும் எப்படியோ தப்பி விட்டனர். ஒருமுறை மன்னித்தருளுங்கள். அவர்கள் இந்த இலங் கையில் எந்த மூலையிலிருந்தாலும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து உங்கள் முன் நிறுத்துகிறோம்'' என்று மண்டி யிட்டு மன்றாடினார்கள் அந்த முரடர்கள்.

''அறிவிலிகளே! வெறுஞ் சோற்று வீணர்களே! உங்களுக்கு மன்னிப்பே கிடையாது. நீங்கள் எதற்கும் பயனற்றவர்கள். யாரங்கே, இவர்களை இழுத்துச் சென்று இருட்டுச் சிறையில்

தள்ளுங்கள். என் கட்டளை வரும்வரை அன்ன ஆகாரம் எதுவும் தரக் கூடாது. தண்டனையைப் பிறகு சொல்கிறேன்'' என்றாள் ராஜகாமினி.

அந்த வன மாளிகைக் கூடத்தின் வரிசையான இருக்கைகளில் ஒன்றில், வெள்ளை வெளேர் முகமும் வெண்ணிற அங்கியும், கழுத்தில் கட்டிய பட்டுக் கயிற்றில் மார்புக்கு நேரே தொங்கும் சிலுவையுமாகக் காட்சியளித்த போர்ச்சுக்கீசிய பாதிரி டிமெல்லோ அமைதியான குரலில், ''மகளே! பொறுமையாக இரு. சீற்றத்தைத் தணித்துச் சாந்தமாக உரையாடு'' என்று கூறினார்.

அந்த அமைதியான வார்த்தைகள், உக்கிராவேசம் கொண்டு நிற்கும் ராஜகாமினியிடம் பழுக்கக் காய்ந்திருக்கும் இரும்பில் பட்ட நீராய்ப் பயனற்றுப் போயின! ''கோவாவிலிருந்து வருகை தந்திருக்கும் போர்ச்சுக்கீசியப் பாதிரி டிமெல்லோ அவர்களே, முதலில் நீங்கள் என் கோபத்தைக் கொழுந்து விட்டெரியச் செய்யாதிருங்கள். 'மகளே' என்று என்னை அழைக்காதீர்கள் என்று எத்தனை முறை கூறியிருக்கிறேன். ராஜிகா என்றுதான் கூற வேண்டும்...'' என்றபடியே விழிகளை உருட்டினாள் அவள்.

அந்த வெள்ளை இனத்து மதகுரு ஒரு கணம் காளி தரிசனம் கண்ட மாதிரி நடுங்கிப் போனார்.

''சரி, தாயே! அப்படியே அழைக்கிறேன்'' என்றார்.

ராஜகாமினி, ராஜாளிப் பறவையொன்று படபடவென்று தன் இறக்கைகளை அடித்து மேலெழுவது போன்று கைகளை வீசிய படி அவரருகே வந்து நின்றாள்.

''உங்களுக்குத் தமிழைக் கற்றுக் கொடுத்ததே தவறாகப் போய்விட்டது. எதற்கானாலும் 'தாயே', 'மகளே' என்று ஆரம் பித்து விடுகிறீர்கள். இந்த நாய்கள் செய்த தவறு ஒன்றா இரண்டா? இவர்கள் பிடியிலிருந்து ஒரு சாதாரண மனிதன் காத்தவராயன் தப்பிச் சென்றிருக்கிறான். ஒரு பெண் பிள்ளை கூட இந்த முரடர்களின் பிடியிலிருந்து தப்பிவிட்டாள். துரத்திச் சென்ற இவர்களை எவனோ ஒரு வழிப்போக்கன் அடித்து நொறுக்கியிருக் கிறான். இந்த முரடர்களுக்கு மகா பலசாலியான ஒரு தலைவன் வேறு — அவன் கொல்லப் பட்டிருக்கிறான். சோற்றுக்குக் கேடாக இவர்களை வைத்திருந்து என்ன செய்வது சொல்லுங்கள்?''

**இப்போது** அங்கிருந்த மற்றொரு மனிதன் இருக்கையிலி ருந்து எழுந்து நின்றவனாய், ''இளவரசி ராஜகாமினி தேவியார்

R



என்னை மன்னிக்க வேண்டும். நடந்த அனைத்துக்கும் நான்தான் பொறுப்பேற்க வேண்டும்; ஆட்களைக் குறை சொல்லிப் பய னில்லை. இந்தக் காட்டுக் கோட்டையின் காவல் பொறுப்பு முழுதும் என்னுடையதுதான். வன்னியத் தேவரிடமிருந்து அவசர அழைப்பு வந்ததால் நான் வெளியே செல்ல வேண்டி நேர்ந்து விட்டது. அந்த வேளையில் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்து விட் டன...'' என்றான்.

வன்னியத்தேவன் பெயரைக் கேட்டதும் மகுடி கேட்ட நாகம் போல் மயங்கி நின்றாள் ராஜகாமினி. சீற்றம் சற்று தணிந்தது. ஆனாலும் அவள் இந்தப் பிரச்னையை விட்டு விடவில்லை. ''ஓ! அவர் பெயரை இழுத்து விட்டீர்களா...? எந்த அஸ்திரத்தைப் பிரயோகித்தால் இவள் அடங்குவாள் என்று இத்தனை நேரம் யோசித்தீர்களா? *உதகம்பக உக்கிரசேனரே! உதைபட்டு வந்து நிற்கும் அவர்களைப் பாருங்கள். இன்னும் சிலர் கை, கால்கள் செயலிழந்து கிடக்கிறார்கள். உயிரிழப்பும் நேர்ந்திருக்கிறது. இதற் குத் தாங்கள் சொல்லப் போகும் பதில் என்ன?'' என்றாள்.

''அவ்வளவு வலிமையுள்ள எதிரி யாராக இருக்குமென்பது தான் புரியவில்லை இளவரசி... ஒரு சாதாரணவழிப்போக்கன்...''

என்ற உக்கிரசேனனை மேலே பேச விடாது தடுத்தாள் ராஜகா மினி.

''நிறுத்துங்கள். அவன் சாதாரண வழிப்போக்கனாக இருக்க முடியாது. தஞ்சைப்படைகள் சங்கிலி மன்னருக்கு ஆதரவாக வரப்போகின்றன என்பது நாம் அறிந்த உண்மை. என்று, எப்படி அவர்கள் வரப்போகிறார்கள் என்பதுதான் நமக்குப் புரியாத விஷயம். இந்த நிலையில் இவ்வளவு அபாயகரமான ஒரு வழிப் போக்கன் நம் கண்களில் படுகிறான். அவனை ஒரு சாதாரண மனிதன் என்று எப்படித் தீர்மானிப்பது?'' என்றாள்.

இப்போது டிமெல்லோ வாய் திறந்தார்: ''இளவரசி கூறுவ தில் நியாயமிருக்கிறது.அந்தப் புதிய இளைஞன் யாராயினும் சரி, அவனை இங்கே கொண்டு வந்து விசாரித்தாக வேண்டும். இல் லாது போனால் கொழும்பிலிருந்து வரவிருக்கும் போர்ச்சுக்கீசியத்

---

* ஈழத்து அரசர்கள் தங்கள் ராஜ்யத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியையும் நிர்வகித்து வரிவசூலிக்கும் பொறுப்பை 'திசாவை' என்ற அலுவலரிடம் ஒப்படைப்பர். அந்தத் திசாவைகளில் சிறந்த இருவரைத் தேர்ந்தெடுத்து, 'உதகம்பக', 'பலகம்பக' என்னும் கௌரவத்தினை அளிப்பார்கள்.(ஆதாரம்: அருள் செல்வ நாயகம் எழுதிய 'ஈழமும் தமிழரும்' என்னும் நூல்)

தளபதி பிலிப்—டி—ஒலிவேராவுக்கு நம்மால் பதில் சொல்ல முடியாது. இந்த யாழ்ப்பாணக் குடா நாட்டில் நம்மை மீறி எதுவும் நடந்து விடாது என்று அவர் உறுதியாக நம்புகிறார். ரகசியமாகத் தஞ்சைப் படைகள் ஈழத்துக்குள் புகுந்து விட்டால் அந்த நம்பிக்கை தகர்ந்து போகும்.''

ஆழ்ந்த கவலை தொனித்தது அவர் பேச்சில்.

''இல்லை. அந்த நம்பிக்கை வீண் போகாது. நம்மை மீறி எவனும் யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்துவிட இயலாது. இளவரசியாரும் புனிதத் தந்தை டிமெல்லோ அவர்களும் இது பற்றிக் கவலைப்பட வேண்டாம். நானே புறப்படுகிறேன். இந்தப் பகுதி கிராமங்கள் அனைத்தும் என் கட்டுப்பாட்டுக்குள் தான் இருக்கின்றன. அந்தப் புது மனிதன் எவ்வளவு பெரிய வீரனாயினும் சரி; உயிருடனோ அல்லது பிணமாகவோ கொண்டு வராமல் திரும்ப மாட்டேன்...'' என்று ஒரு சபதம் போல் கூறிப் புறப்பட்டான் உதகம்பக உக்கிரசேனன்.

**கொ**ட்டும் மழையில் அந்தச் சத்திரத்தை நோக்கி ஓடி வரும்போதே காத்தவராயனின் புத்தி தீவிரமாக அந்த உண்மையைத் தேடித் துருவியது. வெட்டும் மின்னல் ஒவ்வொன்றிலும் அந்த இளைஞனின் முகதரிசனத்துக்கு ஏங்கித் துழாவின அவர் விழிகள். 'எங்கோ பார்த்த முகம்' என்ற நினைவும் 'நீங்கள் விடை தேடிய மழை இதோ பெய்யத் துவங்கிவிட்டது' என்ற வார்த்தைகளும் இணைந்து அவர் புத்தியில் அந்த உண்மையை ஊகிக்க வைத்தன. ஊர்ஜிதப்படுத்தாமல் எப்படிக் கேட்பது?

தயக்கத்தோடு ஓடி வந்த அவர், சத்திரத்துக்குள் அடியெடுத்து வைத்ததுமே அதன் கணக்கனைக் கூவி அழைத்து, ''ஒரு தீபம் கொண்டுவா'' என்று பரபரத்தார்.

பக்கச் சுவர் ஒன்று இடிந்து பாழ்மண்டப நிலையை எட்டிக் கொண்டிருக்கும் அந்த இருட்டுச் சத்திரத்தின் கணக்கன், காத்தவராயனுக்கு மிகவும் பழக்கமானவன். அவன் ஓடிச் சென்று ஒரு தீபத்தைத் தூண்டிப் பிரகாசப்படுத்தி எடுத்து வந்தான். அதைத் தூக்கிப் பிடித்து இளைஞன் முகத்தில் ஒளி விழச்செய்து கூர்ந்து நோக்கிய காத்தவராயன், உற்சாகம் பீரிட ''ஐயா தாங்களா...!'' என்றார்.

அந்த இருட்டுச் சத்திரம் திடீரென்று சொர்க்கமாகி விட்டது போலிருந்தது காத்தவராயனுக்கு. அந்த இரவுப் போதில் எங்கும் இருளை ஒழித்துக்கட்டி, பிரகாசமான ஒளி வெள்ளத்தைப் பாய்ச்



சும் ஓர் அற்புத ஜோதி உதயமாகிவிட்டது போன்றிருந்தது அவருக்கு. 'இனி ஈழத் திருநாடு புதிய பொலிவும் வலிமையும் பெற்றுத் திகழும். அதை எந்த மிலேச்சர்களாலும் ஒன்றும் செய்து விட முடியாது' என்று அவர் உள்ளம் குதூகலித்துக் கூவியது. 'கதிரவன் பவனி துவங்கியதும், புல்லர்களுக்குக் கிரீட மயக்கமளித்து வீற்றிருக்கும் ஒவ்வொரு பனி மகுடமும் கரைந்து சிதறுவது போல் ஈழத்தின் எதிரிகள் செருக்கழிந்து சிதறியோடுவர்' என்று கைகொட்டி முழக்க வேண்டும் போல் இருந்தது அவருக்கு.

''இந்த ஈழத் திருநாட்டின் மானம் காக்க வந்த நாயகனே, எங்கள் நம்பிக்கை நட்சத்திரமே! தாங்கள் தானா என் மகளின் மானம் காத்தது? என் உயிர் காக்க இரத்தம் சிந்தி நிற்கிறீர்களே ஐயா, இப்போது என்ன செய்வேன்? இந்த இடிந்த சத்திரத்தில் உங்களுக்கு மருத்துவ உதவி செய்யக் கூட வழி இல்லையே ஐயா...'' என்று கலங்கிக் கதறினார்.

அவ்வருடைய தோளைப் பற்றி ஆறுதலாகத் தட்டிக் கொடுத்த இளைஞன், ''அமைதியாக இருங்கள், என்னிடம் அவசரத் தேவைக்கான வெட்டுக்காய மூலிகைக் களிம்பு, தைலம் எல்லாம் இருக்கின்றன. இப்போது காயத்தைக் கழுவி மருந்திட்டுக் கட்டி விடலாம். மற்றவற்றைப் பொழுது புலர்ந்ததும் பார்த்துக் கொள்வோம். முதலில் சொட்டச் சொட்ட நனைந்து போயிருக்கும் உங்கள் பெண்ணுக்கு மாற்றுடை தேவை. அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்றான்.

வௌவால்கள் மட்டுமல்ல, கணக்கனின் குடும்பமும் அந்த இடிந்த சத்திரத்தில் தான் தங்கியிருந்தது. காத்தவராயன் தன் மகள் ஞானவல்லியை உள்ளே சென்று உடைமாற்றிக் கொள்ளச் சொன்னார். கணக்கன் மனைவி வந்து அவளை அன்புடன் அழைத்துச் சென்றாள். திண்ணைகளிலும் தாழ்வாரங்களிலும் பிச்சைக்காரர்களும் வழிப்போக்கர்களும் உறங்கினர். உட்புறத்தில் ஒரேயொரு கூடம்தான் இருந்தது. அதிலும் ஆங்காங்கே ஒழுகல். அடுத்தது சமையலறை. அங்கே சென்று கணக்கன் மனைவி கொடுத்த உலர்ந்த புடைவையை உடுத்திக் கொண்டு ஞானவல்லி அடுப்புப் பற்ற வைத்து சுடுநீர் போட்டு எடுத்து வந்தாள்.

ஒழுகல் கூடத்தில் கிடந்த மரக்கட்டில் ஒன்றில் சாய்ந்து கொண்ட இளைஞன், ஈர உடைகளைப் பிழிந்து அணிந்து கொண்டான். சத்திரத்து ஏழைக் கணக்கனை அதிக உபத்திரவப்படுத்த அவன் விரும்பவில்லை.காத்தவராயனும் தம் ஈர உடைகளையே பிழிந்து அணிந்து கொண்டார். அவர் மிகவும் உணர்ச்சி வயப்பட்

டவராகவே இருந்தார். மழையும் குளிரும் மட்டுமல்லாத, விவரிக்க இயலாத அந்த உணர்ச்சிப் பரவசமும் சேர்ந்து அவர் கை, கால்களை நடுங்கச் செய்தது.

இளைஞன் தன்னைப் பற்றி அதிகம் கவலைப்பட்டவனாகவே தெரியவில்லை. ஞானவல்லி கொண்டுவந்த சுடுநீரில் காயத்தைக் கழுவி, தன் தோள்கோப்பிலிருந்த பச்சிலைக் களிம்பை எடுத்துத் தானே காயத்தில் வைத்து அழுத்தினான். அதனை தாங்கிக் கொள்ள இயலாத எரிச்சலால் அவன் முகம் இறுகியது.

தனக்கே அந்த உபாதை ஏற்பட்டாற்போல் காத்தவராயன் பதறிப் போனார். ஞானவல்லியாலும் அவன் படும் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தன் மானம் காத்தவன், தன் தந்தைக்கு மிகவும் வேண்டியவன் — மதிப்பிற்குரியவன் என்ற எண்ணம் இப்போது அந்த இளைஞனை அவள் இதய மாளிகையில் மிக உயரிய, உன்னதமான இடத்தில் அமரச் செய்து விட்டது. வழியில் அவள் அவனை உதறியெறிவது போல் பேசிய போதெல்லாமும் கூட அது ஒரு பாசாங்கு என்பதையும் — கட்டறுந்து ஓடி அவனிடம் ஒட்டிக் கொள்ளும் தன் மனத்தை இழுத்து ஓர் எல்லையில் நிறுத்த முயலும் முயற்சியே என்பதையும் அவள் நன்கு உணர்ந்திருந்தாள். இப்போது அருகில் ஓடி, அவன் தோள்களைத் தாங்கிப் பிடித்து, நெற்றியை வருடிவிட வேண்டும் போலிருந்தது அவளுக்கு. எப்படிச் செய்வது? அருகில் தந்தை இருக்கிறாரே?

''என் கையில் சிறிது துணியைக் கிழித்து ஒரு கட்டு மட்டும் போட்டு விடுங்கள் போதும்'' என்ற அந்த இளைஞன், அந்த நிலையிலும் தன் அசுவம் பற்றியே அதிகம் கவலைப்பட்டான். மழையில் நனையாதவாறு அதை இடம் பார்த்து நிறுத்துமாறும், அதற்குப் புல்லோ தீனியோ கொடுக்க முடியுமா என்று பார்க்குமாறும் அவன் காத்தவராயனிடம் வேண்டினான்.

காத்தவராயன் அந்த வேலைகளையெல்லாம் நொடிப் போதில் முடித்துவிட்டு அவனருகே ஓடிவந்து உட்கார்ந்து கொண்டார். நள்ளிரவைத் தாண்டிவிட்ட அந்த நேரத்திலும் அவர் எவ்வளவோ விஷயங்களை அவனிடம் சொல்லத் துடித்தார். அவனிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களும் ஏராளம் இருந்தன. முக்கியமாக, அவன் ஏன் இப்படித் தனியாக வந்து ஈழத்தின் உட்புறப் பிரதேசங்களில் அலைந்து கொண்டிருந்தான் என்பதை அறிந்து கொள்ள விரும்பினார் அவர்.

R



ஆனால் இளைஞனோ கல்லுளிமங்கனாக இருந்தான். அவர் சொல்கிற விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தானே தவிர, அவனிடமிருந்து எந்தத் தகவலும் வெளிவரவில்லை. 'உடல் நலிவோடு இருப்பவரைப் போட்டு தந்தை இப்படி உபத்திரவப் படுத்துகிறாரே?' என்று எண்ணிய ஞானவல்லி, தந்தை பேசும் விஷயங்கள் அனைத்தும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் அதில் தலையிட விரும்பாமல் ஓரிடத்தில் படுத்துக் கொண்டாள். நடந்த சம்பவங்களின் நினைவலைகள் மனசில் இரைச்சலிட்டதால் அவளுக்கு உறக்கம் வரவில்லை. வெளியே மழை விட்டிருந்தது.

காயம்பட்ட உடம்போடு மழையில் நனைந்திருந்ததாலும் ஈர உடையை மாற்றாததாலும் சிறிது நேரத்தில் இளைஞன் மீது அனல் வீசத் துவங்கியிருந்தது. கடுமையான காய்ச்சல் பாய்ந்து படர்ந்து பரவியதால் அவன் அனற்றத் துவங்கினான். உடல் நடுக்கத்தால் தூக்கித் தூக்கிப் போட்டது. மங்கலான வெளிச்சத்திலிருந்ததால், காத்தவராயன் நெடுநேரம் அவன் நிலையைக் கவனிக்காமல் இருந்து விட்டார். அவன் நடுங்கும் குரலில் அனற்றியதும்தான் பேச்சை நிறுத்திக் கவனித்தார். பதறிப் போனார். ஓடிப்போய் அவனுடைய பாதங்களைப் பற்றிச் சூடுபரவத் தேய்த்து விட்டார். ஞானவல்லியை எழுப்பி, அவனுடைய உள்ளங்கைகளைத் தேய்த்து உஷ்ணமேற்றும்படி கூறினார்.

அவள் ஒரு கணம் தயங்கி நின்ற வேளையில்தான் காத்தவராயன், அவளிடம் அவன் யார் என்ற உண்மையைக் கூறினார். ''இவருக்குப் பணிவிடை செய்வது பாக்கியமானது. இதில் நீ தயங்குவதுதான் தவறானது...'' என்றும் கூறினார்.

ஞானவல்லியின் விழிகள் வியப்பால் விரிந்தன. ஓரளவு அவளும் இந்த உண்மையை ஊகித்தே இருந்தாள். தந்தை அவனிடம் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் விஷயங்களைப் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டு தானே இருந்தாள்...!

நேரம் ஆக ஆக, கண் மூடிக் கிடந்த இளைஞன் சிரமப்படுவதும் அனற்றுவதும் அதிகமாயிற்று. அதற்குமேல் காத்தவராயன் அங்கே படுத்திருக்கவோ அல்லது உட்கார்ந்து கதை பேசவோ தயாராக இல்லை. என்னவாவது செய்து இளைஞனின் காய்ச்சலைத் தணியச் செய்தாக வேண்டும். அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அருகில் அரைக் காத தூரத்தில் உள்ள கிராமம் ஒன்றில் அவருக்குத் தெரிந்த பெருவணிகர் எட்டிச் சாத்தரின் மாளிகை இருக்கிறது. அங்கே சென்று விட்டால் சகல வசதிகளுட

னும் இளைஞனைத் தங்கச் செய்யலாம்; மருத்துவரை அழைத்து வந்து சிகிச்சையும் அளிக்கலாம். உடனடியாக ஒரு வண்டி மட்டும் கிடைத்தால் போதும்.

அவர் தம் மகளிடம், ''அம்மா, இவரைக் கவனமாகப் பார்த்துக் கொள். இதோ வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டு, மறுமொழி கூட எதிர்பாராமல் சரேலென்று வெளியேறினார்.

அவர் சென்று சிறிது நேரத்திற்கெல்லாம் இளைஞன் கண்களைத் திறந்தான். புத்தம் புதிய தாமரைப் பூ ஒன்று அருகில் மலர்ந்து கிடப்பது போல் ஞானவல்லியின் முகம் அவன் பார்வையில் பட்டது. அத்தனை அருகில் அந்த அழகிய முகத்தைப் பார்த்தவுடன் இளைஞனின் முகத்தில் ஓர் ஒளி பரவியது. இதழ்கள் மலர்ந்தன. அவன் சட்டென்று எழ முயன்றான். ஆனால் பலவீனமுற்றிருந்த அவனால் அது இயலவில்லை. பொத்தென்று மீண்டும் கட்டிலில் சரிந்தான். சட்டென்று ஞானவல்லி அவனைத் தாங்கிச் சரியாகப் படுக்க வைத்தாள்.

அந்த மென்கரங்களின் ஸ்பரிசம் அவனுக்கு இதமூட்டியது. அவள் அவன் நெற்றியை நீவிவிட்டாள். சிறிது நேரம் அப்படிச் செய்தவள், அவன் கண்கள் மூடியிருப்பதைப் பார்த்து, அயர்ந்திருக்கிறான் என்றெண்ணித் தன் கரங்களை அவன் மீதிருந்து எடுக்க முயன்றபோது, அவன் சட்டென்று தன் கரங்களால் அவற்றைப் பற்றிக் கொண்டான். அவனுடைய உதடுகள்,

''ஞானவல்லி! இன்னும் சற்று அப்படிச் செய்யேன். உன் கரங்களை அப்படியே வைத்துக் கொண்டிரேன்'' என்று முனகின.

மிகவும் நலிந்த குரலில் அவ்ன் இப்படிச் சொன்னது அவள் இதயத்தைத் தொட்டது.

காத்தவராயன் எங்கோ அலைந்து திரிந்து ஒரு வண்டியைப் பிடித்துக் கொண்டு வந்து சத்திரத்து வாசலில் நிறுத்திய போது, பொழுது புலரத் துவங்கியிருந்தது. உடனடியாக அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர்.

'வழிப் பயணத்தை முடித்துக் கொண்டு பாதுகாப்பான இடத்தை அடைகிறவரை எதிரிகளின் கண்ணில் பட்டு விடக் கூடாதே?' என்று மிகவும் கவலைப்பட்டார் காத்தவராயன். சமீபத்திய கலவரங்களில் அந்தப் பகுதியில் சில கிராமங்களே எரிந்து போயிருந்தன. போர்ச்சுக்கீசியர்களின் கையாட்களான சிங்களவர்கள் அதிகமாக உள்ள சில கிராமங்களை அவர்கள் கடக்க வேண்டியிருந்தது வேறு அவரை அச்சுறுத்தியது.



போர்ச்சுக்கீசியர்களின் ஆதிக்க வெறியைப் புரிந்து கொள்ளாத அப்பாவித் தமிழர்கள் சிலரும் சிங்களவர்கள் சிலரும் அவர்களின் கைப்பாவைகளாகி, காலம் காலமாக ஒன்றாக இணைந்து வாழும் உன்னத சமுதாய ஒற்றுமை உணர்வைக் குலைத்து வருவதை எண்ணி அவர் மனம் வேதனைப்பட்டது.

ஒரு வழியாக அவர்கள் பெருவணிகர் எட்டிச் சாத்தரின் மாளிகையை அடைந்தாயிற்று. வழிப் பயணம் பத்திரமானதாகவே இருந்தது. ஏதோ பாதுகாப்பான கோட்டைக்குள் நுழைந்து விட்டது போல், ''அப்பாடா'' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டார் காத்தவராயர்.

ஆனால் அந்த நிம்மதி நெடுநேரம் நிலைத்திருக்கவில்லை. அன்று மாலை அவர்களைப் பெரும் ஆபத்து சூழ்ந்தது.

# 6. உக்கிர வதம்!

பெரு வணிகர் எட்டிச் சாத்தரின் மாளிகைக்கு அந்த இளைஞனைப் பத்திரமாக அழைத்து வந்துவிட்டார் காத்தவ ராயர். அந்த மாளிகை எழில் மிக்கதாயிருந்தது. வாசலில் பெரிய மர மல்லிகை மரங்கள் இரண்டு இருந்தன. மாடமுகப்புகள் அழகிய சுதை வேலைப்பாடுகளுடன் காட்சியளித்தன. மாளிகை முன்றிலில் வண்டி சென்று நின்றதும், காத்தவராயரின் வரு கையை எட்டிச் சாத்தருக்கு அறிவித்தான் பணியாள் ஒருவன்.

அந்தப் பெருமகன் வாசல் வரை வந்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார்.

அந்த மாளிகையின் மேன்மாடத்திலிருந்த விசாலமான கூடத் தில் அவர்கள் தங்கினர். அரசரின் நம்பிக்கைக்குரிய ஒற்றர் காத்தவராயர் என்பதை எட்டிச் சாத்தர் நன்கறிவார். அத்துடன் காத்தவராயர், பெருவணிகரின் நண்பரும் கூட. அதனால், அவரு டன் வந்துள்ள இளைஞனின் உடல் நிலையைக் கவனிக்க உடனடி ஏற்பாடுகளைச் செய்தார், அந்த வணிகப் பெருமகனார். வைத்தியர் வரவழைக்கப்பட்டு இளைஞனுக்குச் சிகிச்சை அளிக் கப்பட்டது.

உயர்தர மருந்துக் குளிகைகள் சுறுசுறுப்பாக வேலை செய்து, இளைஞனின் காய்ச்சலை விரட்டியடித்தது. இடது புஜத்துக் காயத்திலும் சக்தி மிக்க மூலிகைப் பற்று இட்டு, புதிய கட்டு போடப்பட்டது.

மருந்து செய்த மாயம் பாதியென்றால், மலர்க்கொடியாள் ஞானவல்லி செய்த பணிவிடைகள் நிகழ்த்திய அற்புதமே மீதி என்று சொல்லத்தக்க அளவு, ஒன்றிரண்டு நாழிகைப் போதி லேயே அந்த இளைஞன் புதுவலிவும் பொலிவும் பெற்றுக் குணமடைந்து விட்டான். அவன் எவ்வளவு மனவலிமை மிக்க வன் என்பதை அப்போது நன்கு புரிந்து கொண்டாள் ஞானவல்லி.

R



ஆனால் அவனோ அத்தனைப் பெருமைகளையும் அவளுக்கே சமர்ப்பித்தான். கண் விழிக்கும்போதே,

''ஞானவல்லி, நீ ஒரு தேவதையாகத்தான் இருக்க வேண்டும். உன் கைகளில் ஏதோ மாயசக்தி இருக்கிறது. உனது ஒவ்வொரு ஸ்பரிசமும் என்னுள் அபூர்வ சக்தியைப் பாய்ச்சுகிறது. என்னால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து கூத்தாட வேண்டும் போலி ருக்கிறது...'' என்றான்.

அவனுடைய பாராட்டு மொழிகள் அவள் மனத்தில் ஆயிரம் புஷ்பங்களை மலரச் செய்தன. ஆயினும் அவள் அவனைப் படுக்கையை விட்டு எழவிடவில்லை. உணவளித்து, ''நன்றாக ஓய்வெடுக்க வேண்டும் தாங்கள்'' என்று கூறிவிட்டாள்.

காத்தவராயர், இளைஞனைக் கவனிக்கும் பொறுப்பை ஞானவல்லியிடம் விட்டு விட்டு, எட்டிச் சாத்தரிடம் உரையாடப் போய்விட்டார்.

''அது சரி, இந்தச் சண்டை விஷயமெல்லாம் என்னப்பா ஆச்சு. ஒன்றும் சொல்ல மாட்டேன் என்கிறாயே?'' என்று வினவி னார் பெரு வணிகர்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''நீ பெரிய ஒற்றன். உனக்குத் தெரியாத விஷயமா? தஞ்சைப் படைகள் வந்ததும் போர்ச்சுக்கீசியர்களோடு பெரும் போர் நிகழப் போகிறதாமே?'' — பெருவணிகர் ஆர்வமுடன் வினவினார்.

''அப்படியா...!''

''பூநகரியை நோக்கி ஏராளமான போர்ச்சுக்கீசியப் படைகள் வந்த வண்ணம் இருப்பதாகப் பேசிக் கொள்கிறார்கள். கொழும்பி லிருந்து பிலிப்—டி—ஒலிவேராவே புறப்பட்டு வருகிறான் என்று கேள்வி. இங்கே வன்னியத்தேவன் வேறு பெரும்படை திரட்டுகி றானாம். இந்த முறை பெரும் போர் மூண்டே தீருமென்று பேசிக் கொள்கிறார்கள். நமது சங்கிலி மன்னருக்கு ஆதரவாகத் தஞ்சைப் படைகள் வந்துவிட்டதாகச் சிலரும், வரவே இல்லை என்று சிலரும் கூறுகிறார்கள். உண்மை தெரியவில்லை. அமாவாசை யன்று யாழ்ப்பாண நல்லூரில் நம் சங்கிலி மன்னரின் அரண்மனை யில் பெரிய அற்புதமொன்று நிகழவிருப்பதாக யாரோ மகான் ஒருவர் கூறியிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். இது பற்றியெல் லாம் நீ ஏதாவது கூறுவாய் என்று பார்த்தால், நீ சரியான கல்லுளிமங்கனாக இருக்கிறாயே...''

காத்தவராயர் யோசித்துப் பார்த்தார், ஒரு விஷயம் எத்தனை விதமாகவெல்லாம் மக்கள் நடுவே உருமாறி உலவ ஆரம்பித்து விடுகிறது! எந்தச் செய்தியை அவர் வந்து மன்னரிடம் தெரிவித்திருந்தாரோ, அதே செய்தி ஒரு மகானின் அருள்வாக்காக — அற்புதச் செய்தியாக உருமாறி அவரிடமே வந்து நிற்பதை எண்ணிப் பார்த்ததும் அவரால் வாய்விட்டுச் சிரிக்காதிருக்க முடியவில்லை.

''என்ன, நான் சொல்வது உனக்குச் சிரிப்பாக இருக்கிறதா? போர் மூண்டால் என்னவெல்லாம் ஆகுமோ? நல்லூர் வீரமாகாளிதான் நம்மையெல்லாம் காக்க வேண்டும்.''

ஆழ்ந்த கவலையுடன்பேசினார் பெருவணிகர் எட்டிச் சாத்தர்.

''தஞ்சைப் படைகள் வந்துவிட்டதாகச் சிலர் பேசிக் கொள்கிறார்கள் என்றீர்களே, பிறகு ஏன் இவ்வளவு கவலை?''

''நான் அதை நம்பவில்லை. காத்தவராயா! சமீபத்தில் கூட என்னுடைய மரக்கலங்கள் சில தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ளன. வழியில் எங்கேயும் தஞ்சைப் படையின் யுத்த மரக்கலங்கள் எதுவும் கண்ணில் படவில்லை என்றார்கள். ஆயிரக்கணக்கான வீரர்கள் கடல் கடந்து வந்து சேருவதென்பது என்ன மாய வித்தையா? இது யாரும் அறியாத ரகசியமாக ஒரு போதும் இருக்க முடியாது. அது சரி, யார் இந்த இளைஞன்? எங்கிருந்து அழைத்து வருகிறாய்? என்ன ஆயிற்று? புஜத்தில் எப்படி ரண மேற்பட்டது... ஒன்றும் சொல்லவில்லையே?'' என்று விடாப்பிடியாகக் காத்தவராயரின் வாயைக் கிளறினார் பெருவணிகர்.

அப்போதுதான் அவர்கள் மேற்கொண்டு பேச்சில் கவனம் செலுத்த முடியாதவாறு மாளிகையின் வாசற் புறத்தில் ஏதோ பெருத்த ஆளரவம் கேட்கத் தொடங்கிற்று. மாளிகைப் பணியாள் ஒருவன், 'தடதட'வென்று சப்தம் எழ அந்த மேன்மாடத்திற்கு வரும் மரப்படிகளில் ஏறி ஓடிவந்தான்.

அப்படி ஓடி வந்தவன் பதற்றத்துடன், ''ஐயா!உதகம்பக உக்கிரசேனர் வந்து கொண்டிருக்கிறார்!'' என்று கூறினான்.

பெருவணிகர் எட்டிச் சாத்தரின் முகம் திடீரென்று இருண்டது. ''உக்கிரசேனன், வன்னியத்தேவனின் வலது கையாயிற்றே! அவன் கால் வைத்த இடம் கூடக் கருகிப் போய்விடுமே... இங்கு ஏன் வருகிறான்?'' என்று முனகிய படியே காத்தவராயரை ஏறிட்டு நோக்கி, ''நீ ஏதோ ஆபத்தை என் வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறாய். நாம் நெடு நேரமாகப் பேசியும் நீ எதையுமே சொல்லாதி



ருந்த மர்மம் இப்போது புரிகிறது. வாசலில் வந்து நிற்பவன் ஈவு, இரக்கமற்ற ராட்சதன். இந்த இளைஞனை ஒளித்து வைக்க என் மாளிகைதானா உனக்குக் கிடைத்தது?'' என்று சீற்றத்தோடு எழுந்து நின்ற அவர் உடல் நடுங்கியது.

''உடனே இந்த மாளிகையை விட்டுப் பின்புற வழியாக இறங்கி ஓடிப் போய் விடுங்கள். இனி ஒரு கணம் கூட உங்களில் யாரும் இங்கே இருக்கக் கூடாது...'' என்று உறுதி புலப்படக் கூறிவிட்டு, அவசர அவசரமாகத் தன் பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு படிகளில் இறங்கினார்.

காத்தவராயர் ஓடி வந்து நிலைமையைச் சொன்னதும் ஞான வல்லி பதறினாள். பீதியால் அவளுக்கு நெஞ்சடைத்தது.

''கடைசியில் அந்தக் கொடியவன் கையில் நாம் அனைவரும் சிக்க நேர்ந்துவிடும் போல் இருக்கிறதே... இப்போது என்ன செய்வது?'' என்று வினவினாள்.

காத்தவராயர் நிலை கொள்ளாமல் அந்த மேன் மாடக் கூடத்தின் சாளரத்தருகே ஓடிப்போய்ப் பார்த்துவிட்டுப் பதற்றத்துடன் வந்து, ''ஞானவல்லி, நாம் இங்கிருந்து ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றபடி, மஞ்சத்தில் கண்ணயர்ந்து கிடந்த இளைஞனைப் பிடித்து உலுக்கி எழுப்பினார்.

ஆனால், அந்த இளைஞன் மஞ்சத்தில் புரண்டு படுத்தவாறே, ''என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். நான் எழுந்திருப்பதாக இல்லை; இங்கிருந்து கொல்லைப் புறவழியாக உங்களுடன் ஓடி வருவதாகவும் இல்லை'' என்றான் தீர்மானமாக.

அவன் உண்மையில் உறங்கிக் கொண்டிருக்கவில்லை என்பதைப் புரிந்து கொண்ட காத்தவராயர், ''இது விளையாடும் நேரமல்ல. கீழே வாசலில் வந்து நிற்பவன் உதகம்பக உக்கிரசேனன். அரசு ஊழியன் என்ற போதும், எதிராளிகளின் கையாளாகப் போய்விட்டவன். கொலைகளுக்கு அஞ்சாத அந்தக் கொடியவன் பீரங்கி வண்டிகளைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறான். எப்படியோ அவனுக்குத் தங்களைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இல்லாது போனால் இத்தனை முன்னேற்பாடுகளுடன் அவனே இங்கு வந்திருக்க மாட்டான். இந்த வேளையில் நாம் தப்பி ஓடுவதைத் தவிர வேறு வழியே எனக்குப் புலப்படவில்லை'' என்று கூறினார்.

அதே சமயம் பெருவணிகர் எட்டிச் சாத்தர் தன் பருத்த உடலைத் தூக்கிக் கொண்டு, பெருமூச்சு பரிய மேன்மாடத்தின்

படிகளில் ஏறி வந்து கொண்டிருந்தார். அவருடன் இரண்டு வீரர்கள் நீண்ட ஈட்டிகளை ஏந்தி வந்து கொண்டிருந்தனர். வரும்போதே அந்தப் பெருவணிகர்,

''இன்னுமா அவன் படுக்கையில் கிடக்கிறான். ஒரேயடியாகப் படுத்துவிட வேண்டிய வேளை வந்து விட்டது அவனுக்கு...'' என்று இரைந்து கத்தினார். காத்தவராயரைப் பார்த்து, ''ஏனய்யா, ஒரு கொலைகாரனைக் கொண்டு வந்து என் வீட்டில் தங்க வைக்க உமக்கு என்ன துணிச்சல்?'' என்று சீறினார்.

காத்தவராயனுக்கு உதடுகள் துடித்தன. ஆனால்,அவரைப் பேச விடாது தடுத்த இளைஞன், ''எட்டிச் சாத்தர் வந்து எழுப்பட்டுமே என்றுதான் காத்திருந்தேன். உதகம்பக உக்கிரசேனன் என்ன சொன்னான்? என்ன வேண்டுமாம் அவனுக்கு?'' என்று வினவியபடியே அவன் மஞ்சத்தில் தன்னருகே கிடந்த வாளை உறையோடு எடுத்தபடி எழுந்தான்.

எட்டிச் சாத்தரோடு வந்த ஈட்டி வீரர்களில் ஒருவன், ''வாளைத் தொடாதே'' என்று எச்சரித்தான். இளைஞன் அதைப் பொருட்படுத்தவில்லை.

மற்றொரு ஈட்டி வீரன், ''வாளை எறிகிறாயா இல்லையா?'' என்றபடி பாய்ந்து வந்து இளைஞனின் தோளைப் பிடித்து அழுத்தி, கட்டிலில் தள்ள முனைந்தான்.

அவன் முயற்சி வீணானது. இளைஞன் அடித்து வைத்த சிலை போன்று அத்தனை உறுதியாக நின்றிருந்தான். ஈட்டி வீரன் அவமானத்துடன் சினமும் சேர, ஈட்டியை ஓங்கி இளைஞனைத் தாக்க முனைந்தான். மறுகணம் அவன் ஈட்டியை இழந்ததோடு தரையில் புரண்டான். இளைஞனின் மின்னல் வேகத் தாக்குதல், மற்றவனுக்கும் அதே கதியை உண்டு பண்ணியது. இத்தனைக்கும் அவன் வாளை உருவவே இல்லை. நீட்டிய ஈட்டியைப் பிடுங்கியே இரு எதிரிகளையும் நொடிப் போதில் தாக்கி வீழ்த்தியிருந்தான் அவன்.

தன் வாளை ஞானவல்லியிடம் கொடுத்து, ''இதை வைத்திரு. இது வீரர்களோடு போரிட மட்டுமே உறையிலிருந்து வெளிப்படும்; சோம்பேறிகளுடன் போரிட அல்ல'' என்ற இளைஞன், எட்டிச்சாத்தரை நோக்கி ''இன்னமும் தாங்கள் பதில் கூறவில்லையே...'' என்றான்.

பயத்தின் சாயல் படர்ந்து கிடந்த முகத்துடன் நின்றிருந்த அவர், ''ஒரு கொலைகாரனான உனக்கு அடைக்கலம் கொடுத்துள்



ளதாகக் கூறி, இந்த மாளிகையைப் பீரங்கிகளால் உடைத்து நொறுக்கப் போவதாகக் கூறுகிறார் உதகம்பகன். உன் காலில் விழுகிறேன். தயவு செய்து உடனே நீ உதகம்பகனிடம் சரணடைந்து விடு'' என்று, பருத்த உடலை மிகுந்த சிரமத்துடன் வளைத்துக் குனிந்து வணங்க முயன்றார்.

அவரைத் தடுத்த இளைஞன் அதற்குள் சுதாரித்து எழ முயன்ற எதிரி ஒருவன் முகத்தில் உதைவிட்டு, அவனைத் தோளில் தூக்கியபடி, ''எட்டிச்சாத்தாரே, உங்களுக்கோ மாளிகைக்கோ ஓர் ஆபத்தும் வராது. இந்த ஈட்டிகளை எடுத்துக் கொண்டு என்னுடன் வாருங்கள்'' என்றவாறு அந்த மேன்மாடத்தின் திறந்த வெளிச் சாளரம் ஒன்றை நோக்கி நடந்து, தன் தோளில் கிடந்தவனைச் சாளரத்தின் வழியே வீசியெறிந்தான். கீழே பதற்ற நிலை உருவாயிற்று. ரதத்திலிருந்து ஆவேசத்துடன் வெளிப்பட்ட உதகம்பகன், பீரங்கிகளைச் சுட உத்தரவிட்டான். அவை மாளிகையை நோக்கிச் சரியாகக் குறி பார்க்கப்பட்டன. அப்போது இளைஞன் உரத்த குரலில் எட்டிச் சாத்தரிடம் கூறுவது போன்று, ''தஞ்சைப் படைத் தலைவன் வருணகுலத்தான் எத்தனை ஆபத்தானவன் என்பதை உணராமல் அவனோடு விளையாட வேண்டாமென்று உங்கள் உதகம்பகனிடம் தெரிவியுங்கள்'' என்றான்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் எட்டிச்சாத்தர் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை.

'ஈழத் திருநாட்டின் மானம் காக்க வந்த மாவீரன் வருணகுலத்தானைப் பார்த்தா நாம் வீட்டை விட்டு வெளியேறு என்றோம்' — தவித்துப் போனார் அவர். உதகம்பக உக்கிரசேனனின் காதுகளிலும் அந்த வார்த்தைகள் நன்றாகவே விழுந்ததால், அவன் மாட முகப்பை நோக்கியவாறு சொன்னான்:

''நீ தஞ்சைப் படைத்தலைவன் என்பது நான் முன்பே ஊகித்த விஷயந்தான். தனியாகச் சிக்கியிருக்கும் நீ புத்திசாலித் தனத்துடன் சரணடைவதே நல்லது. உன்னை மிகுந்த மரியாதையுடன் எங்கள் தலைவர் வன்னியத் தேவரிடம் அழைத்துச் செல்கிறேன்.''

தஞ்சைப் படைத்தலைவன் தீர்மானமாக அறிவித்தான்:

''உக்கிரசேனா! நான் உன்னோடு வர இயலாது. துரோகிகளுடன் சகவாசம் வைத்துக் கொள்ள நான் விரும்புவதில்லை.''

''அத்தனை அலட்சியமாகவா எண்ணினாய். இதோ உனக்கு நேரப் போகும் கதியை பார்'' என்ற உதகம்பகன் இரண்டு பீரங்கி வண்டிகளையும் ஏக காலத்தில் இயங்கும்படி உத்தரவிட, இரண்டு கைகளையும் உயர்த்தி அசைத்தான். மறுகணம், அவனுடைய

வலக்கரத்தில் தஞ்சைப் படைத்தலைவன் வீசிய ஈட்டி பாய்ந்து செருகியது.

அதே வேளையில், பீரங்கி வீரர்கள் தங்கள் கைகளில் ஏந்திய தீப்பந்தங்களை பீரங்கிக் குழாயின் பின்புறத்திலுள்ள வெடிமருந்துத் துளையில் பற்ற வைக்க யத்தனித்தனர். தஞ்சைப் படைத்தலைவன், வில்லிலிருந்து புறப்பட்ட கணைபோல அந்த மாடமுகப்பிலிருந்து பாய்ந்து மண்ணில் குதித்தான். அவன் கைகளிலிருந்து நட்சத்திரங்கள் வெளிப்படுவது போன்று ஒளிச் சிதறல்கள் தோன்றின. இரண்டு பீரங்கி வீரர்களும் 'ஓ'வென்ற அலறலுடன் குருதி பீரிட மண்ணில் சாய்ந்தனர். அடுத்து ஆயுதங்களை ஏந்தி வந்த ஏழெட்டுப் பேர், தஞ்சைப் படைத் தலைவன் மீது பாய்ந்த வேகத்திலேயே மண்ணில் விழுந்து புரண்டனர். உதகம்பகன் வெறி கொண்ட நிலையில், தனது புஜத்தில் பதிந்து கிடந்த ஈட்டியைப் பிடுங்கி எறிந்துவிட்டு வாளை உருவி இடக் கரத்தால் சுழற்றியபடி ஆவேசமாகப் பாய்ந்தான். ஆனால், அந்த இறுதிப் பிரயத்தனமும் வீணாயிற்று. அவன் கழுத்திலும் மார்பிலும் வயிற்றிலுமாக மூன்று ஒளிநட்சத்திரங்கள் தஞ்சைப் படைத்தலைவனிடமிருந்து பறந்து வந்து பதிந்தன.

அரசுக்குத் துரோகம் செய்து அந்நியர்களுக்குத் துணை நின்று, வன்னியத் தேவனுக்கு வலக்கரமாகி ஈழ மக்களைக் கதிகலங்கச் செய்து கொண்டிருந்த அந்தக் குட்டி ராட்சதன், அதுவரை கண்டிராத அந்த அற்புத நட்சத்திர வடிவ ஆயுதத்தைக் கண்டு வியப்படைந்த படியே விழிகள் செருக, தள்ளாடித் தரையில் சரிந்தான். அவனுடைய வீரர்களில் சிலர் குதிகால் பிடரியில் இடிபட, தப்பியோடினர், இரண்டொருவர் சரணடைந்தனர்.

தஞ்சைப் படைத்தலைவன் அவர்களிடம், ''நான் உங்களைக் கொல்ல மாட்டேன். உங்கள் தலைவன் உடலையும் மற்றவர்கள் உடல்களையும் இந்த ரதத்தில் தூக்கிப் போட்டுக் கொண்டு நீங்கள் போகலாம்...'' என்று கூறி, இறந்தவர்கள் மீதிருந்த தன் அற்புத ஆயுதங்களை உருவி எடுத்துக் கொண்டு அவன் மாளிகையினுள் நுழைந்தான்.

அங்கே நடுங்கி நின்ற எட்டிச் சாத்தரிடம், ''ஐயா! உங்கள் மாளிகையை யாரும் இடித்து விடாதவாறு காப்பாற்றி விட்டேன். இந்த ஒரு இரவுப் போது மட்டும் நான் இங்கே தங்கலாமல்லவா?'' என்று வினவினான்.

''தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் ஈழ மாமன்னர் சங்கிலி குமாரரிடம் பெரிதும் விசுவாசம் கொண்டவன். தாங்கள் யாரென்று அறியாத நிலையில் தப்பிதமாகப் பேசிவிட்டேன்...'' என்று வருத்தம் தெரிவித்தார் பெருவணிகர்.



கலகலவென்று நகைத்த வருணகுலத்தான், ''பாதகமில்லை. நான் அதை மனத்தில் வைத்துக் கொள்ளவில்லை...'' என்று கூறிவிட்டு, காத்தவராயரை நோக்கி,

''ஐயா, சிறிது நீர் எடுத்து வாருங்கள். இவற்றைக் கழுவ வேண்டும்'' என்றான்.

உள்ளங் கைக்குள் அடக்கிவிடக் கூடிய அந்த அற்புத நட்சத்திரங்கள், அழுத்தமும் உறுதியும் நிறைந்தஇரும்பாலாக்கப் பட்டிருந்தன. அதன் அறுகோண முனைகள் மிகவும் கூர்மையோடிருந்தன.

''இவை என்ன புதுவித ஆயுதங்களா?'' என்று வியப்புடன் வினவினார் காத்தவராயர்.

''ஆமாம். இவை என்னுடைய சக்ராயுதங்கள். இவற்றைக் கையாள்வதில் மிகுந்த எச்சரிக்கை தேவை; தேர்ந்த பயிற்சி இல்லாதவர்கள் இதைப் பிரயோகிக்க முடியாது. சோனக யாத்திரிகர் ஒருவர் தஞ்சைக்கு வந்த போது, இந்தக் கலையை அவரிடம் பயின்றேன்'' என்ற தஞ்சைப் படைத்தலைவன், ''நீங்கள் உடனே செய்ய வேண்டிய காரியமொன்று இருக்கிறது'' என்றான்.

''ஆணையிடுங்கள், காத்திருக்கிறேன்...''

''நாளை என்ன தினம்?''

''ஓ! நாளை அமாவாசை, தாங்கள் யாழ்ப்பாண நல்லூர் அரண்மனைக்கு விஜயம் செய்தாக வேண்டிய தினம்...''

''ஆம்; மழையும் புயலும் சொல்லிக் கொண்டு வராது. ஆனால், இந்த வருணகுலத்தான் வருகை முன்னதாக அறிவிக்கப் பட்டு விடும். நீங்கள் மன்னருக்கு என் வருகையை அறிவிக்க உடனே புறப்பட வேண்டும். சிறிது ஓய்வு எடுத்தபின் விடியலில் நான் புறப்பட்டு வருகிறேன்.''

மறு பேச்சில்லாமல் காத்தவராயர் உடனே புறப்பட்டார்.

''உங்கள் மகள்'' என்றான் வருணகுலத்தான்.

''இந்த இரவுப் பயணத்தில் அவளை என்னுடன் அழைத்துச் செல்ல இயலாது. நாளை தங்களுடன் அழைத்து வாருங்கள்'' என்று கூறிவிட்டார் அவர்.

எட்டிச்சாத்தர் முன்பே கீழிறங்கிச் சென்று விட்டிருந்தார். இப்போது அந்த மேன்மாடத்தில் தஞ்சைப் படைத் தலைவனும் ஞானவல்லியும் தனித்து விடப்பட்ட நிலையிலிருந்தனர்.

# 7. வேல்மாறன் விதைத்த நம்பிக்கை

ஞானவல்லியின் கைகளில், தஞ்சைப் படைத்தலைவனின் நீண்ட வாள் இருந்தது. அதைச் சுமக்க முடியாமல் அவள் சுமந்திருந்தாள். 'எத்தனை கனம். இதைத் தூக்கிச் சுழற்றிப் போராட எவ்வளவு வலிமை தேவை. இவர் மிகுந்த பலசாலி — பயங்கர ஆசாமி' என்ற எண்ணங்களை மனத்தில் ஓடவிட்டு நின்றிருந்தாள் அவள்.

''நீ ஏன் இதை இன்னும் சுமந்து கொண்டிருக்கிறாய்?'' என்றான் அவன்.

''நீங்கள் தானே 'வைத்திரு, பிறகு பெற்றுக் கொள்கிறேன்' என்றீர்கள்?''

''பெற்றுக் கொள்ள ஆசைதான். அதற்கு உன்னைத் தொட வேண்டும். தொடட்டுமா?''

''எதற்காக என்னைத் தொட வேண்டும்?''

''தொடாமல் பெற்றுக் கொள்ள முடியாதே...''

''ஏன் முடியாது? கேட்டால் கொடுத்து விட்டுப் போகிறேன். இந்தாருங்கள் உங்கள் வாள்...''

''நான் இதைச் சொல்லவில்லை...'' தஞ்சைப் படைத்தலைவனின் குரலில் குறும்பு கொப்பளித்தது.

''வேறு எதைச் சொன்னீர்கள்...?''

''நீ முதலில் வாளை கொடுத்துவிடு, நான் சொல்வது பிடிக்காவிட்டால் கோபப்படுவாய். அப்போது இந்த வாள் உன்னிடமிருப்பது நல்லதல்ல.''

ஞானவல்லியின் கரங்களை உரிமையோடு பற்றி, அந்த வாளைத் தன் கரத்தில் வாங்கினான்.

அவன் ஸ்பரிசம் ஏற்படுத்திய விவரிக்க இயலாத உணர்வுடன் நின்றிருந்த அவள், ''மிகவும் கனம். என்னால் சுமக்கவே முடிய



வில்லை. எப்போதடா இதைத் திருப்பிக் கொடுப்போம் என்றிருந்தது...'' என்றாள்.

''அப்படித்தான் இருக்கும்.. ஆனால், சுமப்பதுதான் சுகம் என்பது பெண்குலம் ஒப்புக் கொண்ட நியதி...''

''நீங்கள் எதைச் சொல்கிறீர்கள்...?''

''ஒரு பெண் பெற்றுத் தர எதைச் சுமப்பாளோ அதை...''

ஞானவல்லியால் பதிலேதும் பேச முடியவில்லை. தஞ்சைப் படைத்தலைவன் எத்தனை குறும்புக்காரனாயிருக்கிறான் என்பதை உணர்ந்த அந்த வேளையில், வார்த்தைகள் அவள் நாவினடியிலேயே ஒட்டிக் கொண்டு விட்டன. அவன் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் மறைபொருளாக வேறோர் அர்த்தம் தொனித்து நின்றதை அவளால் நன்றாகவே உணர முடிந்தது. 'எத்தனை உரிமையோடு பேசுகிறார்' என்றெண்ணி அவள் பூரித்துப் புளகித்தாள்.

நாணச் செம்மை விகசிக்கும் அவள் முகம் அவனுடன் ஏதோ மௌன பாஷை பேசியது. அந்த விசாலமான அறையின் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த ஹாலந்து நாட்டுக் கண்ணாடி லாந்தர் மங்கலான ஒளி பரப்பியிருந்ததால், ஒரு மெல்லிய திரைக்குப் பின்னிருக்கும் செம்மெழுகுச் சிலை போலிருந்தாள் ஞானவல்லி. கரம் பற்றி அவளை மெதுவாகத் தன் பக்கம் இழுத்தான் தஞ்சைப் படைத்தலைவன்.

தாழ்வாக இருக்கிறதே என்று எக்கிப் பிடித்து இழுத்தால் நொடியில் விடுபட்டு மேலெழுந்தோடும் கனி மரக்கிளை, நாம் பிடி நழுவியதே என்று வேதனையுறும் அதே வேளையில், விடுபட்டு மேலெழுந்த அதிர்வில் கனிகளைத் தாமாகவே நம் காலடியில் உதிர்க்கும் விசித்திரம் போல்தான் ஞானவல்லியும் அப்போது செய்தாள். தஞ்சைப் படைத் தலைவன் தொட்டிழுத்ததும் உதறி விலகினாள். ஆனால், தன் வயமிழந்த அவள் மனமோ அவன் கைகளில் விழுந்துவிட்டது!

அடுத்த கணம், அவனது முரட்டுத் தழுவலில் அவள் முகைய விழ்ந்த பூங்குருத்துகள் அவன் மார்பில் மோதிக் குழைந்தன. அவசரத் தனத்தின் ஏக பிரதிநிதியாய் நின்ற அவனது குறுகிய பிடியுள், கரை மீறும் வலிமையற்ற தடாகத்தின் சிற்றலை போல் அவள் தளும்பிக் கொண்டிருந்தாள். அவனுடைய கரங்கள் கனி மரத்தில் குதிபோடும் இரட்டைக் குறும்பு அணில்களெனத் துழாவித் திரிந்தன.

புதிய உணர்வுகள் பொங்கிப் பிரவகிக்க, பூஞ்சிறகு விரிய மேக வீதியில் பறந்து மிதப்பது போலிருந்தது ஞானவல்லிக்கு. தன் மேனிச் சந்தன மேடு பள்ளங்களெங்கும் ஊர்ந்து திரியும் அவன் கரங்களைத் தடுக்க வேண்டுமென்ற பிரக்ஞை இன்றி, மனம் நெகிழ்ந்து அவனோடு உடல் இறுகிக் கிடந்தாள் அவள்.

**யா**ழ்ப்பாண நல்லூர் அன்று அடைந்திருந்த ஆர்வப் பரபரப்பைச் சங்கப் புலவர்கள் யாரேனும் காண நேர்ந்திருந்தால், 'பிள்ளைத் தமிழ்', 'உலா' போன்ற மாபெரும் இலக்கியங்கள் தமிழுக்குப் புதிதாகக் கிடைத்திருக்கும்.

ஈழத்தின் இணையற்ற ஒற்றர் தலைவன் காத்தவராயன், பொழுது புலரும் வேளையில் கொண்டு வந்திருந்த அந்தத் தகவல், அரண்மனை வட்டாரங்களில் பரவத் துவங்கி, புத்துணர்வூட்டும் புதுச் செய்தியாக நகர வீதிகளிலும் ஒலிக்கத் துவங்கி விட்டிருந்தது. 'தஞ்சைப் படைத் தலைவன் வருணகுலத்தான் தஞ்சைப் படைகளுடன் தலைநகர் நோக்கி வந்து கொண்டிருக்கிறான்' என்றே உற்சாகத்துடன் பேசினர் நகர மக்கள்.

வருண குலத்தானின் பெயர் ஏற்கெனவே ஈழ மக்கள் நடுவே பிரபலம். தமிழ் மண்ணில் பெரும் கீர்த்தி பெற்றிருந்த மாபெரும் வீரனான அவனை, ஒரு காவிய புருஷனுக்கு இணையாகப் போற்றிக் கொண்டாடினர். சிறுவர் சிறுமியருக்குச் சொல்லப்படும் வீர தீரக் கதைகளின் நாயகனாகவும் அவன் இருந்தான். வருணகுலத்தானின் அஷ்டமங்கலம் என்ற புரவிக்குச் சிறகுகள் உண்டு என்றும், எதிரிகள் அவனை நெருங்கித் தாக்க முனைந்தால் அவன் அப்படியே புரவியுடன் விண்ணில் தாவிப் பறந்து விடுவான் என்றும், அந்தப் புரவி பூமியில் விரைந்து ஓடும்பொழுது அதன் குளம்புகளின் உராய்வினால் தீச்சுவாலைகள் எழும் என்றும், இரவு நேரத்தில் அதைக்காணும் எதிரிகள் கொள்ளிவாய்ப் பேய் வருவதாக அஞ்சி நடுங்குவர் என்றும் விதவிதமான அதீத கற்பனைகள் கூட உலவின.

இப்படி நெடுநாளாய் கற்பனை செய்து வைத்திருந்த அந்த மாவீரன், அன்று தங்கள் நகர வீதிகளில் வரப் போகிறான் என்ற செய்தியைக் கேட்டதும் யாழ்ப்பாண நல்லூர் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. யாரும் கட்டளையிடாமலேயே ஆங்காங்கு நகர வீதிகளில் தோரணம் கட்டப்பட்டன. இளைஞர்கள் நகர எல்லைக்கே சென்று வழிமீது விழி புதைத்துக் கிடந்தனர்.



சங்கிலி மன்னர் சபா மண்டபத்தில் வீற்றிருந்தார். வருண குலத்தான் ஈழத்திற்கு வந்துவிட்டான் என்ற செய்தி கேட்டதுமே அவர், நூறு யானை பலம் கூடி விட்டதுபோல் நெஞ்சை அகல விரித்து, நிம்மதிப் பெருமூச்சை நிறையவே உள்ளுக்கிழுத்தார். அமாவாசையன்று தமது அரண்மனையில் பெய்யப் போகும் அதிசய மழை என்பது வருணகுலத்தான் வருகையைக் குறிப்பதே என்பதை அவர் முன்பே ஊகித்திருந்தார். அதை இப்போது காத்தவராயன் வந்து உறுதிப்படுத்தியதும் அவர் கடகடவென்று நகைத்தபடி கூறினார்:

''தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கர், விஜய நகரப் பேரரசின் பாரம்பரியமிக்க பழம்பெரும் அரச மரபினைச் சேர்ந்தவர். அந்த வம்சத்தின் ஆதவனாகச் சுடர் விட்டுப் பிரகாசித்த மாமன்னர் கிருஷ்ண தேவராயரைப் போன்றே இந்த இரகுநாத நாயக்கரும் மகாமேதை-வித்தைவல்ல விவேகி. தமிழும் வடமொழியும் தம் இனத்துச் சுந்தரத் தெலுங்கும் தாராளமாக வளம் பெற்றுச் செழித்து வளர ஏராளமான அறிஞர் பெருமக்களை ஆதரித்து, அவை நிறைய அறிவுச் சுடர்களுக்கு நடுவே அரியணைத் தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பவரல்லவா தஞ்சை மன்னர்... அதனால்தான் தமிழால் விளையாடி சொற்சிலம்பமாடியிருக்கிறார்.''

தஞ்சைப் படைத்தலைவனைச் சிறப்பான முறையில் வரவேற்கவென்றே அரசவை கூடியிருந்தது. காத்தவராயன் அதுவரை நிகழ்ந்த அனைத்தையும் விவரித்தார். வருணகுலத்தான், உதகம் பக உக்கிரசேனனைக் கொன்றது பற்றி அவர் கூறியதும் அவை பரபரப்படைந்தது. வன்னியத்தேவனின் வலது கையாகத் திகழ்ந்த உதகம்பகன் வீழ்த்தப்பட்டிருப்பது எதிரிகளைச் சினமடையச் செய்து விபரீதங்களை ஏற்படுத்துமே என்று கவலைப்பட்டனர்.

''காத்தவராயா! தஞ்சைப்படையினர் எப்படி ஈழத்துக்கு வந்தனர். இப்போது எங்கே தங்கியுள்ளனர் என்பதொன்றும் தெரியவில்லையே...?'' என்ற சங்கிலி மன்னர்,

''மதியப் போதாகியும் இன்னும் தஞ்சைப் படைத்தலைவர் வந்து சேரவில்லையே... ஒன்றரைக் காத தொலைவிலுள்ள எட்டிச் சாத்தரின் கிராமத்திலிருந்து இங்கு வந்து சேர இவ்வளவு நேரம் தேவையில்லையே...'' என்று வினவினார்.

காத்தவராயரால் உடனே மறுமொழி கூற இயலவில்லை. ஏன் இந்தத் தாமதம் என்பது அவருக்கும் புரியாததாயிருந்தது.

அந்த வேளையில்தான் ஆற்றொணா துயருடன் அரசவையினுள் பிரவேசித்தார் எட்டிச்சாத்தர்.அவரைத் தொடர்ந்து சோகம் கப்பிய முகத்தோடு ஞானவல்லியும் ஓர் இளைஞனும் வந்து கொண்டிருந் தனர்.

ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டிருக்கிறது என்பதை அவையோர் உடனே புரிந்து கொண்டனர்.

''வேந்தே, பெருத்த விபரீதம் நிகழ்ந்து விட்டது. தஞ்சைப் படைத்தலைவரை அழைத்துக் கொண்டு காலையில் ரதத்தில் புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். மரங்களடர்ந்த ஒரு தோப்பி னூடே ரதம் வந்து கொண்டிருந்த போது, திடீரென்று வன்னியத் தேவனின் ஆட்கள் இருபது, முப்பது பேர் சூழ்ந்து கொண்டு வழிமறித்தார்கள். கண்ணிமைக்கும் வேளையில் ரத சாரதியைக் கொன்று, புரவிகளை அவிழ்த்துவிட்டு, ரதத்தைக் குடை சாய்த்து விட்டார்கள். கீழே விழுந்து புரண்ட நாங்கள் சுதாரித்து எழுவதற் குள் ஈட்டியும் வாட்களும் ஏந்திய வீரர்கள் எங்களை எழவிடாமல் அழுத்திப் பிடித்தனர். பிறகு என்னை ஒரு மரத்திலும் காத்தவராய ரின் மகள் ஞானவல்லியை ஒரு மரத்திலும் கட்டிப் போட்டு விட்டு, தஞ்சைப் படைத்தலைவரை அவர்கள் சிறைப்பிடித்துச் சென்று விட்டனர். நெடுநேரம் கழித்து அந்த வழியே வந்து கொண்டிருந்த இந்த இளைஞர்தான் எங்கள் கட்டுகளை அவிழ்த்து விட்டார்...'' என்றார் எட்டிச்சாத்தர்.

''நீங்கள் யார்...?'' — அந்த இளைஞனை நோக்கி வினவி னார் மன்னர்.

''என் பெயர் வேல்மாறன். நான் தஞ்சைப் படைகளின் உபதலைவன்...'' என்று பதிலிறுத்தான் அந்த இளைஞன். அவை ஆர்வப் பரபரப்படைந்தது.

''என்ன, தஞ்சைப் படைகளின் உபதலைவரா...?''

''ஆம்; நாங்கள் ஒன்றாகவே புறப்பட்டு, ஒன்றாகவே ஈழ மண்ணில் வந்திறங்கினோம்.''

''பிறகு என்ன நடந்தது?... தஞ்சைப் படைத்தலைவர் ஏன் இப்படித் தனிப்பயணம் மேற்கொண்டார்... படை வீரர்கள் என்ன வானார்கள்?'' என்றார் சங்கிலி மன்னர்.

''ஈழத் திருநாடு முழுவதும் சுற்றித் திரிந்து நிலைமைகளை நேரில் கண்டறிய வேண்டும்; படை நடத்திச் செல்லும் பாதை களை மனத்தில் பதித்துக் கொள்ள வேண்டும் என்பது தஞ்சைப் படைத்தலைவரின் திட்டமாயிருந்தது...''

R



''எதற்காக இப்படியொரு ஆபத்தான முயற்சி? படை நடத் திச் செல்லும்போது நன்றாகப் பாதைகளை அறிந்த யாழ்ப்பாண வீரர்கள் சிலரை நாங்களே ஒவ்வொரு பிரிவினரோடும் அனுப்பு வோமே...?''

''உண்மைதான். ஆனால் ஒப்புக்கு உதவிப் படைகளுடன் வருகிற ஒரு சாதாரண மனிதரல்ல அவர். இந்த மண்ணின் பிரச்னைகளை மனத்தில் ஏந்திக் கொண்டு விட்டவர். 'தொட்டது தோற்றதில்லை; எடுத்ததை முடிக்காமல் விட்டதில்லை' என்னும் பெருமைகளை உடைய வெற்றி வீரர் அவர். அவரது எந்தத் திட்டத்தையும் யாரும் மறுத்துப் பேசுவது வழக்கமில்லை. தஞ்சை மன்னரும், 'வருணதேவா, சங்கிலி மன்னர் பாரம்பரியம் மிக்க பாண்டிய மரபில் வந்தவர். அவருக்கு நேர்ந்துள்ள சங்க டத்தை அகற்றும் பொறுப்பு உன்னுடையது. பணியை ஒப்ப டைத்து விட்டேன். திட்டம் வகுப்பதெல்லாம் உன் வேலை. அதில் நான் தலையிட மாட்டேன். வெற்றிச் செய்தியை மட்டும் என் காதில் விழச் செய்' என்று கூறிவிட்டார்... உடனே நாங்கள் புறப்பட்டு விட்டோம்...''

''நீங்கள் என்றால்... தஞ்சைப் படையினருடன் என்று நான் பொருள்கொள்ளலாமா?'' — மன்னர் இந்த வினாவை எழுப்பி விட்டு, வேல்மாறனை ஏறிட்டு நோக்கினார்.

''தஞ்சைப் படைத்தலைவர் ஒரு சிலரை மட்டுமே தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அவர்களில் நானும் ஒருவன். நாங்கள் வணிக மரக்கலங்கள் மூலமே ஈழமண்ணில் வந்திறங்கி னோம். தஞ்சையிலிருந்து ஐயாயிரம் வீரர்கள் ஈழம் வரவிருக்கின் றனர். எப்போது, எப்படி என்பதெல்லாம் எங்கள் தலைவர் மட்டுமே அறிவார்... ஏன், இப்போதே கூட ஏராளமானோர் இங்கு வந்திருக்கக் கூடும். படைத்தலைவர் மட்டுமே அவர்களை ஒன்று திரட்ட வல்லவர்...''

வேல் மாறனின் இந்தப் பேச்சு, சங்கிலி மன்னரை உவகை கொள்ள வைத்தது.

''பாராட்டத்தக்க ஒழுங்குணர்வு! கட்டுக்கோப்பான படை! உன் பேச்சு கேட்டு உள்ளம் பூரிக்கிறது வேல்மாறா... ஆனால், விபரீதம் நிகழ்ந்து விட்டதே... தஞ்சைப் படைத்தலைவனுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதே...'' என்றார் மன்னர்.

''பெருத்த விபரீதம் ஏதும் நிகழ்ந்து விடவில்லை வேந்தே! ஆபத்தான விளையாட்டுகளில் ஆர்வமுடையவர் தஞ்சைப்

படைத்தலைவர். அவரை யார் அழைத்துச் சென்றிருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் பெருத்த ஆபத்து.''

''வேல்மாறா! தஞ்சைப் படைத்தலைவனை வன்னியத்தேவனின் ஆட்கள் அழைத்துச் செல்லவில்லை; இழுத்துச் சென்றிருக்கிறார்கள். உதகம்பக உக்கிரசேனனை வருணகுலத்தான் கொன்றுவிட்டதால், அவர்கள் பழிவாங்கும் நோக்கத்தோடுதான் இப்படிச் செய்திருக்க வேண்டும். இப்போது அவரை எதிரியின் பிடியிலிருந்து மீட்க ஏதாவது செய்தாக வேண்டும்...'' என்ற சங்கிலி மன்னர், ஆழ்ந்த யோசனையோடு காத்தவராயரைப் பார்த்தார்.

ஆனால், வேல்மாறன், ''ஈழம் எந்த வேளையில் உதவி கோரியதோ அந்தக் கணம் முதல் ஈழத்தின் வெற்றிக்காக உழைக்கத் துவங்கிவிட்டவர் தஞ்சைப் படைத்தலைவர். இங்குள்ள அரசியல் நிலைமை அனைத்தும் அவர் அறிவார். வெற்றி அல்லது வீரமரணம் என்பதே அவர் கொள்கை. அவரை யாரும் இழுத்துச் சென்றிருக்க முடியாது. விளக்கின் ஜுவாலையைத் தேடி வந்து தாமாகவே விழுகின்ற விட்டில்கள் போல், எதிரிகளே அவர் பாதையில் தாமாக வந்து குறுக்கிட்டு, அழிவைத் தேடிக் கொள்வார்கள். அப்படியொரு ராசி அவருக்கு. இந்த அரண்மனைக்குள் ஒரு வெற்றி வீர்ராகவே அவர் விஜயம் செய்வார். முதற்கட்ட வெற்றியைச் சந்திக்க நாம் தயாராவோம்...'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் முழக்கமிட்டான்.

சிக்கலைத் தீர்க்கமுயலும் சிந்தனைகளால் சிக்கல் விழுந்து கிடந்த சங்கிலி மன்னரின் சிந்தனை நரம்புகளில், வேல்மாறனின் வீர முழக்கம் புது உஷ்ணம் பரவச் செய்தது.

ஆனால், அதே சமயம் வருணகுலத்தான் இருந்த நிலையோ.....

# 8. கடல் தாண்டி வந்த கலைத் தேவதைகள்!

''வரவேண்டும், வரவேண்டும். தஞ்சைப் படைத்தலைவரை இந்த அவை மகிழ்வுடனும் பெருமிதத்துடனும் வரவேற்கிறது...'' என்று கூறி வரவேற்ற* வன்னியன், ஓர் ஆசனத்தைக் காட்டி அதில் வருணகுலத்தானை அமரச் சொன்னான்.

அது ஓர் அரசனின் அவைக்கூடம் போலத்தான் இருந்தது. ஆனால், அது ஒரு சாதாரண விருந்தினர் மாளிகைதான். போர்ச்சுக்கீசிய வணிகர்களின் சுவாதீனத்தில் இருந்த அந்த மாளிகைதான் சதிகாரர்களின் ஆலோசனைக் கூடமாகப் பயன்பட்டது. வன்னியத்தேவன் அங்கு வந்துதான் போர்ச்சுக்கீசிய தளபதியை அல்லது ஒற்றர்களைச் சந்திப்பான். பூநகரியிலுள்ள அந்த மாளிகையில் நிர்ப்பயமாக எதிரிகள் கூடி, சதித் திட்டங்களை வகுக்க முடிவதன் காரணம், அந்தப் பிரதேசத்தில் போர்ச்சுக்கீசியர் நடமாட்டம் அதிகம் என்பதும் மன்னார்க்குடாக் கடலின் கரையை ஒட்டி இருக்கிறது என்பதும்தான். யாழ்ப்பாண நல்லூரிலிருந்து குடாக் கடலைத் தாண்டி இப்பகுதி இருப்பதால், சங்கிலி மன்னரின் பலத்த கண்காணிப்பு இங்கே இல்லை.

அலங்காரங்கள் நிறைந்த அந்தக் கூடத்தில் ஓர் உயரிய இருக்கையில் வீற்றிருந்தான் வன்னியன். 'கம்பீரமான மனிதன். ஒரு மன்னனுக்கு உரிய அத்தனை ராஜலட்சணங்களும் பொருந்தியவன். இவனை இதைச் சொல்லியே போர்ச்சுக்கீசியர்கள் தூண்டிவிட்டிருக்கக் கூடும்' என்றெண்ணினான் வருணகுலத்தான்.

வெள்ளைஇனத்தின் விவேகமெல்லாம் இதுபோன்ற சூது செறிந்த சூழ்ச்சிப் புகழ்ச்சிகளில் தானே அடங்கியிருக்கிறது.

* வரலாறு நெடுக இவன் காக்கை வன்னியன் என்றே குறிப்பிடப்படுகிறான். 'யாழ்ப்பாண வைபவ மாலை' என்ற நூலும் அப்படியே குறிப்பிடுகிறது. காரணப் பெயராகப் பின்னால் தோன்றி, வரலாற்றில் நிலைத்து விட்டதோ என்னவோ...ஆயினும் இவனை அத்தனை இழிவுபடுத்தாது வன்னியத்தேவன் என்றே இங்கே குறிப்பிடுகிறேன்.

கண்டியை ஆண்ட சிங்கள மன்னர்கள், வன்னியப் பிரதேச தமிழ் மக்களை அடக்கியாள முடியாத நிலையில் அதை ஏழு பிரிவுகளாக்கி, ஏழு தலைவர்களின் பொறுப்பில் ஆட்சி நிர்வாகத்தை விட்டு விட்டார்கள். யாழ்ப்பாணத்தை ஒட்டிய வட இலங்கை, கிழக்கிலங்கைப் பகுதிகளில் அமைந்துள்ள இந்த ஏழு பிரிவு வன்னியப் பகுதிகளும் ஒன்றோடொன்று ஓயாத சச்சரவுகளுடன் தான் காலம் தள்ளுகின்றன. உழக்குக்குள் கிழக்கு மேற்கு. இந்த வன்னி மண்டலத்தின் ஒரு பகுதிக்குத் தலைவன் தான் இந்த வன்னியத்தேவன். ஆனாலும் வன்னியப் பகுதிகள் அனைத்திலும் மட்டுமல்லாது ஏனைய தமிழர் வாழும் பகுதிகளிலும் இவன் கீர்த்தியும் செல்வாக்கும் பெற்றுத் திகழ்ந்தான்.

ஆசனத்தில் அமரும் போதே, அந்த ஆலோசனைக் கூடத்தில் உள்ள ஏனைய ஆசனங்களில் அமர்ந்திருப்பவர்களின் மீது விழிகளை ஓட்டிய தஞ்சைப் படைத்தலைவன், அங்கே சில போர்த்துக்கீசியர்களும் அமர்ந்திருப்பதைக் கவனித்தபடியே, ''வன்னியத்தேவரின் வரவேற்பு மரியாதைகளை நான் வழியிலேயே ஏற்றுக் கொண்டு விட்டேன். கட்டி இழுத்து வந்துவிட்டது உங்கள் அன்பு.....'' என்று குரலில் ஏளனம் தெரிவிக்கக் கூறினான்.

முரடர் தலைவன் விமலதம்மன், ''பிரபு! இவரை இங்கே கொண்டுவரும் முயற்சியில் நம் வீரர்கள் சிலர் உயிரிழக்க நேர்ந்தது. முதலில் அத்தனை எதிர்ப்பு காட்டாதிருந்த இவர், கட்டுகளை அறுத்துக் கொண்டு நடுவழியில் ஒரு யுத்தத்தையே உண்டு பண்ணி விட்டார். நம் வீரர்களில் காயம் படாதவரே இல்லை, நான் உட்பட. இவர் தப்பிச் செல்வதைத் தடுக்க முடியாது என்ற நிலையில் தாமாகவே எங்களுடன் வர இசைவு தெரிவித்தார். எனவே தஞ்சைப் படைத்தலைவரை நாங்கள் இழுத்து வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.....'' என்று வன்னியதேவனிடம் கூறினான். அதில் குற்றச்சாட்டும் தொனித்தது.

அந்தக் குற்றச்சாட்டைப் பொருட்படுத்தாத வன்னியன், ''தஞ்சைப் படைத்தலைவர் என்னை மன்னிக்க வேண்டும். வன்னிய ராஜ்யம் முறையாகத் தூது அனுப்பித் தஞ்சையோடு பேச்சு நடத்த இயலாது போயிற்று. என் உதகம்பகனைக் கொன்றவர் என்று தங்கள் மீது கடுஞ்சினம் எழுந்தது உண்மைதான். ஆனால், தஞ்சைப் படைத்தலைவர்தான் அதைச் செய்தது என்றறிந்த மறுகணமே என்சிந்தை மாறியது, சினம் அகன்றது. இப்போது நிகழ்ந்த உயிரிழப்புகளையும் நான் பொருட்படுத்தவில்லை. வரம் கேட்க வேண்டுமானால் பலிகள் இட்டுத் தானே ஆக வேண்டும்?'' என்றான்.



''துர்த்தேவதைகளை உபாசித்து வரம் கேட்க எண்ணுபவர்கள் தாம் பலிகள் இடுவது வழக்கம். தஞ்சை, சர்வேச்வரனான பிருகதீச்வரரின் புனிதபூமி. அங்கே பலிகள் இடுவது வழக்கமல்ல. விஷயத்திற்கு வாருங்கள் வன்னியத்தேவரே!''

'ஆ...! என்ன அகந்தை! என் பெயரை எத்துணை அலட்சியமாக உச்சரித்து விட்டான் இவன்' என்று உள்ளம் கொந்தளித்தது வன்னியனுக்கு. எனினும் பதறிச் சிதற விரும்பாதவனாக, ''நன்று சொன்னீர்கள் வருண தேவரே..... மன்னிக்கவும்..... வருணகுலத்தாரே... அதுதானே தங்கள் பெயர்?'' என்று வினவினான்.

''பாதகமில்லை. இரண்டு விதமாகவும் அழைக்கலாம். என் பெயர் முக்கியமில்லை. என் பணிச் சிறப்புதான் என்னை இங்கே அழைத்துவர உயிர்ப் பலிகளைக் கொடுக்குமளவு தங்களைத் தூண்டியுள்ளது. இல்லையா... எனவே, தஞ்சைப் படைத்தலைவன் என்று குறிப்பிட்டால் போதும். இன்னும் விஷயத்திற்கு வரவில்லையே, தாங்கள்...''

''தஞ்சைப் படைத்தலைவர் தன்னந்தனியாக ஈழமண்ணில் உலா வரத் துவங்கியது ஏனென்று நான் அறிந்து கொள்ளலாமா?''

''இதை அறிந்து கொள்ளவா இவ்வளவு சிரமப்பட்டு என்னை இங்குஅழைத்து வந்தீர்கள்? நேராக விஷயத்துக்கு வருவதுதான் எனக்குப் பிடிக்கும். நேரத்தை வீணடித்தபடி இங்கிருக்க என்னால் இயலாது. நான் உடனே புறப்பட்டாக வேண்டும்...''

''அது அத்தனை எளிதல்ல. அவசரம் எதற்கு...?''

''மேகங்களை அடைத்து வைப்பதும் அத்தனை எளிதல்ல. அவசியமானால் அதை வன்னிய தேவருக்கு நிரூபித்துக் காட்டுகிறேன்...''

''தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள் தஞ்சைப் படைத்தலைவரே! பேச வேண்டிய விஷயம் நிறைய இருக்கிறது. போர்ச்சுக்கீசியப் படைத்தலைவர் பிலிப்-டி-ஒலிவேராவின் உபதலைவர் இங்கே வரவிருக்கிறார். சில விஷயங்களை நாம் விவாதிக்க வேண்டியிருக்கிறது. நட்புணர்வோடு கேட்கிறேன். புரிந்து கொண்டு பொறுமை காட்டுங்களேன்...'' — இப்படிக் கூறிய வன்னியன், வருணகுலத்தான் மறுமொழி கூறுவதற்குள் அருகில் மற்றொரு ஆசனத்திலிருந்த ராஜகாமினியை நோக்கி,

R

''நண்பரை வரவேற்க நீ செய்திருக்கும் ஏற்பாடுகள் இவ்வளவுதானா...?'' என்று வினவி, எதையோ குறிப்பாய் உணர்த்தினான்.

''இதோ, கடல் தாண்டி வந்த கலைத் தேவதைகள் சித்தமாக இருக்கிறார்கள்...'' என்று மறுமொழியீந்த ராஜகாமினி, கைகளைத் தட்டினாள். மறுகணம், விதேசிகளின் வினோத சங்கீதம் முழக்கமிடத் துவங்கியது. அதைத் தொடர்ந்து அந்தக் கூடத்தில் வெண்ணிறச் சருமத்தை மேலும் வனப்புடையதாக்கும் செந்நிற மென்னாடைகள் அணிந்த பொன்மலர்கள் பூத்துக் குலுங்கின.

கடமையைச் சிந்திப்பதிலேயே உரமேறிக் கட்டாந்தரையாக இறுகிக் கிடந்த இதயத்தைப் பெற்றிருப்பவன்தான் வருணகுலத்தான் என்றாலும், கலை ரசனை என்னும் பூக்கொடிகளும் நிறையவே படர்ந்து கிடப்பது தான் அவன் இதயம். கட்டாந்தரை வேறு — ஏதும் விளையாத களர்நிலம் வேறல்லவா? வெண் பளிங்குச் சிலைகளைப் போன்ற போர்ச்சுக்கீசிய நங்கைகளின் நர்த்தனத்தைக் காண மறுக்குமளவு அவனால் கண்களைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

பெண்கள் என்றால், கறுப்பிலும் அழகுண்டு; சிவப்பிலும் அழகுண்டு; வெண்மையிலும் அழகுண்டு. தனித்தனியே ஆராயத் துவங்கினால் அழகில்லாத பெண்ணே இல்லையென்றும் சொல்லலாம். இலைகளின் நடுவே மலர் அழகு என்றால், மலர்களின் நடுவே இலைகூட அழகுதான். எந்த இடத்தில் எது விகசிக்க வேண்டுமென்று எண்ணுகிறோமோ அந்த இடத்தில் விகசிக்காதவையும் அவசியம் இருந்தாக வேண்டும். ஏழெட்டுப் போர்ச்சுக்கீசிய நங்கையர்களுடன் நாலைந்து கறுப்புப் பெண்களும் ஆடினர். செந்நிற ஆடைகள்அணிந்த வெண்ணிறப் பெண்கள் கறுப்புப் பெண்களோடு ஆடுவது, நீல வண்ண நீர்ப் பரப்பிடையே தலை நிமிர்த்தி அசையும் தாமரை மலர்களைப் போன்றிருந்தது.

நல்ல உயரமும் அதற்கேற்ற செழுமையும் நிறைந்த அந்த போர்ச்சுக்கீசியப் பெண்கள், தங்கள் மேனிச் சந்தன மேடு பள்ளங்களை அதிகம் மறைக்க விரும்பவில்லை என்பதை அடிக்கடி உணர்த்துவதுபோல் நெளிந்து, குழைந்து, குலுங்கிக் குனிந்து நிமிர்ந்து ஆடிக் கொண்டிருந்தனர்.

அந்த அழகுப் பதுமைகளின் ஆட்டத்தை ரசிப்பதில் வருணகுலத்தான் வஞ்சனை ஏதும் வைக்கவில்லை. ரோஜா இதழ்கள் உதிர்வதுபோல், சில போர்ச்சுக்கீசிய அழகிகள் ஆட்டத்தோடு ஆட்டமாக அவன் மடியில் வந்து விழுந்து எழுந்தனர். ஏற்கெனவே சில போர்ச்சுக்கீசியர்களும் வன்னியனின் ஆதிக்கத்திலுள்ள பிரமுகர்களும் அப்படி எழுந்து சென்று ஆடத் துவங்கியிருந்தனர். வன்னியனும் ஒரு போர்ச்சுக்கீசிய அழகியின் தந்தக் கரங்களோடு தன் முரட்டு கரங்களைக் கோர்த்து ஆட ஆரம்பித்தான். ராஜகாமினி சட்டென்று எழுந்து சென்று அந்த விதேசிப் பெண்ணை விலக்கிவிட்டு, வன்னியத்தேவன் கரம் பற்றி அசைந்து ஆடினாள். தான் மட்டும் எதற்காக ஒதுங்கியிருக்க வேண்டும் என்று எண்ணியவனாக அவனும் எழுந்து சென்று ஆடத் துவங்கினான்.



தன் தோள் தழுவி ஆடிய வெண்பளிங்குச் சிலையை அவனால் அலட்சியம் செய்துவிட இயலவில்லை. பண்பையும் மனக் கசப்பையும் அகற்றி மோகக்கிறக்கத்தை ஊட்டுவதாக இருந்தது அந்த மேனாட்டு இசை. தோற்கருவிகளும் துளைக்கருவிகளும் விதவிதமான நரம்புக் கருவிகளும் ஒன்றாக அதிர்ந்து இழைந்து, காமராகம் இசைப்பது போதாதென்று, ஆடும் பெண்கள் ஆடவர் சரீரத்தோடு தங்கள் சரீரம் இழைய ஒட்டி உரசி இசைக்கேற்ப மாறி மாறிக் குதித்தனர். மொத்தத்தில், கலைப் போர்வையில் காமக் கேளிக்கைக் கூடமாகவே அந்த இடம் காட்சியளித்தது.

வருணகுலத்தானை அணைத்துத் தழுவி ஆடிய போர்ச்சுக்கீசிய நங்கையின் மேனிப் பூரிப்புகள் சற்று அதிகச் செழுமையோடிருந்தன. அங்கிருந்த வெள்ளை அழகிகளிலேயே அவள் பேரழகியாக இருந்தாள். இசைத் துள்ளலோடு அவள் அவனை உரசி உரசிக் குதித்தபோது, அளவோடு வெட்டி விடப்பட்ட அவளது பொன் வண்ணக் கூந்தல் விரிந்து பரவி அவள் முகத்தை மூடி மூடி விலகுவது, செவ்வண்ண மேகங்கள் நடுவே நீந்தி விளையாடும் தங்க நிலாவை நினைவுபடுத்தியது. நெஞ்சணையை அவன் முரட்டு மார்பில் அழுத்தி ஒற்றி ஒற்றி, அவள் பஞ்சணை நினைவை அவனுள் தூண்டி விட்டுக் கொண்டிருந்தாள். பட்டுப் பட்டு விலகிக் கொண்டிருந்த அவள் பட்டு மேனியை அப்படியே இறுகத் தழுவிக் கொள்ள அவனுடைய ஒவ்வொரு புலனும் தவித்தது. அந்தத் தவிப்பை முற்றாகத் தூண்டிவிடுவதே போன்று திடீரென்று இசைக் குமிழ்கள் நின்றன; நடனம் நிறுத்தப்பட்டது.

வன்னியன் சிரித்த முகத்தோடு வந்து வருணகுலத்தானை ஒரு தனியறைக்கு அழைத்துச் சென்றான். மனம் விட்டுப் பேச விரும்புவதாகவும் சொன்னான்.

''தஞ்சைப் படைத்தலைவரே! தங்கள் வீரம் ஈழம் வரை புகழ்க்கொடி நாட்டியிருக்கிறது. உண்மையிலேயே தாங்கள் ஒரு

மகத்தான வீரர். தங்களைச் சிறைப்பிடிக்க நான் அனுப்பிய விமலதம்மனையும் உடன் வந்த வீரர்களையும் தாக்கிச் சேதப்படுத்தியதை அறிந்தபோது நான் உண்மையாகவே பெருமிதம் கொண்டேன். தாங்கள் என் வீரர்களால் கட்டப்பட்டு அழைத்து வரப்பட்டிருந்தால் நான் உங்களைச் சந்திக்கவோ, பேசவோ முன் வந்திருக்கவே மாட்டேன். சிறைப்பட்டு நிற்பவனிடம் பேச எனக்கு ஒரு விஷயமும் இல்லை. ஆனால், தாங்கள் வெற்றி வீரராக விஜயம் செய்திருக்கிறீர்கள். ஒரு சுத்த வீரனைத்தான் இரகுநாத நாயக்கர் தன் சேனாதிபதியாக நியமித்திருக்கிறார்...'' என்று புகழ்மொழிகளைப் பொல பொலவென்று உதிர்த்த வன்னியனை இடைமறித்த வருணகுலத்தான்,

''உங்கள் பாராட்டு மொழிகளுக்கு நன்றி. என்னோடு ஏதோ மனம் விட்டுப் பேச விரும்புவதாகச் சொன்னீர்கள்...'' என்று நினைவூட்டினான்.

''அது ஒன்றும் தாங்கள் ஊகிக்க முடியாத விஷயமாக இராது படைத்தலைவரே! தாங்கள் என் பங்கில் நிற்க வேண்டுமென்பது என் ஆவல். போர்ச்சுக்கீசியர்களும் இதையே ஒரு கோரிக்கையாகத் தங்கள் முன் வைக்க விரும்புகின்றனர்...''

''நான் உங்கள் பங்கில் இருந்து என்ன பயன்? தஞ்சைப் படைகள் உங்கள் பக்கம் வந்துவிட வேண்டுமென்று விரும்புகிறீர்கள்... அப்படித்தானே?''

''அப்படியும் சொல்லலாம்...''

''அது சாத்தியமற்றது என்பதைத் தாங்கள் ஏன் சிந்திக்க மறுக்கிறீர்கள்..... யாழ்ப்பாண மன்னர் சங்கிலி குமாரரின் அழைப்பை ஏற்று வந்திருப்பவன் நான். தமிழ் மன்னன் தரணியாளவே தஞ்சைப் படைகள்உழைக்கும். தாங்களோ விதேசிகளான போர்ச்சுக்கீசியர்களுக்கல்லவா ஆதரவு காட்டுகிறீர்கள்.....''

''தஞ்சைப் படைத்தலைவர் சில விஷயங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதாக எண்ணுகிறேன். தங்களிடம் ஆதரவு கோருவது போலவே நான் போர்ச்சுக்கீசியரின் ஆதரவையும் கோரிப் பெற்றிருக்கிறேன். அவ்வளவுதான். ஓர் ஆட்சியைப் பிடிப்பதென்றால் பலரது உதவியும் தேவைதானே...''

''எதற்காக ஆட்சியைப் பிடிக்க வேண்டும்...? ஒரு தமிழ் மன்னனை வீழ்த்த ஒரு தமிழனே கங்கணம் கட்டித்திரிவது காலத்தின் நகைப்புக்குரியதல்லவா? தமிழ்மண்ணிலே கூட முடி



மன்னர் மூவரின் ஆட்சி எப்போதோ முடிந்து போய்விட்டது. மூவேந்தர் ஞாபகமாகப் பாண்டிய மரபொன்று ஈழத்திலே வேர் விட்டு இத்தனை காலம் ஆட்சி பீடத்திலிருப்பது தமிழ் கூறும் நல்லுலகெல்லாம் பெருமை கொள்ளத்தக்கது. அந்த மரபையே அழிக்க எண்ணும் போர்ச்சுக்கீசியர்களுக்குத் தாங்கள் ஒரு கருவியாகப் பயன்படுவது வேதனைக்குரிய விஷயம்...''

''அப்பாவி மக்களை ஏமாற்றவே தமிழ் வேந்தன், பாண்டிய மரபு என்றெல்லாம் ஓலமிடுகிறான் சங்கிலி குமாரன். செய்த கொலை பாதகங்களை மூடி மறைக்கவே இந்த ஒப்பாரி...'' என்ற வன்னியதேவன் தன் கைகளைத் தட்டினான். அவ்வொலி கேட்டதும் ராஜகாமினி கம்பீரம் நிறைந்த நளினத்தோடு உள்ளே வந்தாள்.

''இதோ இந்தப் பெண்ணைப் பாருங்கள் தஞ்சைப் படைத் தலைவரே! இவள் பெயர் ராஜகாமினி. இவள்தான் ஈழத்தின் முறையான அரச வாரிசு. இவள் தந்தை எதிர்மன்ன சிங்கப் பரராச சேகரன் காலமானதும், அவரின் ஒரே புதல்வனான மூன்று வயது சிறுவனைக் கொன்று விட்டான் சங்கிலி. காலஞ்சென்ற மன்னரின் விருப்பப்படி ஆட்சிப் பொறுப்புகளை தற்காலிகமாக ஏற்று, இளவரசனைப் பாதுகாத்த அரசகேசரி என்பவனையும் அரச குடும்பத்தைச் சேர்ந்த வேறு சில ஆண் மக்களையும் கொன்று குவித்து விட்டுத்தான் சங்கிலி குமாரன் ஈழ வேந்தனாக முடிசூடினான். இந்தக் கொலைகாரத் தமிழ்வேந்தரை காக்கத்தான் தஞ்சைத் தெலுங்கு நாயக்கர் விரதம் பூண்டிருக்கிறாராக்கும்...'' என்று வெறுப்பும் ஏளனமும் தொனிக்கப் பேசினான் வன்னியத்தேவன்.

''தஞ்சை மன்னர், யாழ்ப்பாண மன்னர் பற்றிய தரக் குறைவான விமரிசனங்கள் என் முன் பேசப்படுவது நல்லதல்ல...'' என்றான் வருணகுலத்தான். அவன் வாய்தான் இப்படிச் சொன்னதே தவிர, மனம் பெரிதும் குழப்பத்தில்ாழ்ந்திருந்தது. வன்னியத்தேவன் பேசிய வார்த்தைகள் மட்டுமல்லாது, ராஜகாமினியின் பரிதாப முகம் வேறு சேர்ந்து அவனை என்னவோ செய்தது.

கம்பீரப் பொலிவுமிக்க அவள் தோற்றம் அவள் ஓர் இளவரசி என்பதை ஒப்புக்கொள்ள வைத்தது. சாகச விழிகளைச் சுழற்றி அவள் நோக்கிய விதமோ, 'ஒரு மன்னன் மகளான நான் ஆதரவின்றி நிற்கிறேன்' என்று அவனிடம் கெஞ்சுவது போலிருந்தது.

வன்னியத்தேவன், தஞ்சைப் படைத்தலைவனின் மன ஊச லாட்டத்தை நன்றாகவே கவனித்தான். ''தாங்கள் வீரத்தோடு விவேகமும் உள்ளவர். பதிலை இறுதியாகச் சொல்வதற்கு முன் நிறைய யோசிக்க அவகாசம் எடுத்துக் கொள்வது நலம்... சிறிது இளைப்பாறுங்கள். நான் பிறகு சந்திக்கிறேன்'' என்று கூறிய வாறே கைகளைத் தட்டினான்.

இப்போது தஞ்சைப் படைத்தலைவனோடு சற்றுமுன் ஆடிய போர்ச்சுக்கீசிய இளநங்கை உள்ளே வந்தாள். ''எது வேண்டுமா னாலும் இயல்பாகக் கேளுங்கள். இவள் தங்களை உபசரிப்பாள். இது உங்கள் நண்பனின் மாளிகையே தவிர, விரோதியின் இருப்பி டமல்ல...'' என்று கூறிவிட்டு வன்னியன் எழுந்தான். ராஜகாமினி யும் அவனும் வெளியேறினர்.

மனத்தில் குழப்ப ரேகைகள் படிந்ததால், அந்த அழகு வலையை அறுத்தெறிந்து விட்டு வெளியேற திராணியற்றவனாக வருணகுலத்தான் மஞ்சத்தில் போய்ப் பொத்தென்று வீழ்ந்தான். அந்தப் பனிமதி முகத்தாள் பழரசம் தந்தாள்; பாதங்களைப் பிடித்து விட்டாள். அவன் அங்கம் முழுவதும் தன் அங்கச் செழுமைகளால் ஒத்தடம் கொடுத்தாள். அவன் எதையும் ஆட்சே பிக்கவில்லை. சுக சொப்பனங்கள் இமைகளை அழுத்த அவன் அப்படியே உறங்கிப் போனான். மறுபடி அவன் கண் விழித்த போது, கடலில் மிதந்து கொண்டிருந்தான்.

ஆம்; ஒரு மரக்கலம் அவனைச் சுமந்தபடி எங்கோ விரைந்து கொண்டிருந்தது.

R

## 9. கடற் சூறாவளி

ஞானவல்லி ஊண் உறக்கமின்றித் தவித்தாள். அவளை உணவு உண்ணுமாறு காத்தவராயன் எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தார். பயன் இல்லை.

வழக்கமாகத் தங்கும் நல்லூர்க்கோட்டை ஊழியர் விடுதியில் இந்த முறை அவர் தங்கவில்லை. சங்கிலி மன்னர் தனி மாளிகை ஒன்றை ஒதுக்கி, அதில்தான் காத்தவராயரும் ஞானவல்லியும் தங்கவேண்டுமென்று கட்டளையிடுவது போல் கூறிவிட்டார்.

மாளிகையில் எல்லா வசதிகளும் இருந்தன. ஆனால், ஞான வல்லிதான் எதையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. வந்தது முதல் குளிக்கவில்லை, உடை மாற்றவில்லை, உணவருந்தவில்லை. ஞானவல்லிக்காகவே அனுப்பப்பட்டிருந்த பணிப் பெண்களின் எந்த உபசரிப்பையும் அவள் ஏற்கவில்லை.

''எதற்காக இந்த உண்ணா நோன்பு?... தஞ்சைப் படைத் தலைவர் எதிரிகள் கையில் சிக்கி விட்டாரே என்பதற்குத் தானே? நான் கவலைப்படவில்லையா என்ன? மன்னர் கூடத்தான் கவ லைப்படுகிறார். நீ அந்த உபதளபதி வேல்மாறன் பேச்சைக் கேட்டாயில்லையா? அதன் பிறகு எதற்கம்மா இப்படி உண்ணா நோன்பு?'' என்றார் காத்தவராயர்.

அவரைப் பொறுத்தவரை, தஞ்சைப் படைத்தலைவனுக்கு என்ன ஆயிற்றோ என்ற கவலை உள்ளூற வதைப்பது உண்மை தான் என்றாலும், ஞானவல்லி எந்த ஆபத்துமின்றி வந்து சேர்ந் தாளே என்றும் மகிழாமல் இருக்க முடியாது. கொடூரமான எதிரிகள் கையில் அழகுச் சிலையான அவள் சிக்கியும் அவர்கள், தஞ்சைப் படைத்தலைவன் அகப்பட்ட மகிழ்வில் ஞானவல்லி யையும் எட்டிச்சாத்தரையும் மரங்களில் கட்டிப் போட்டதோடு விட்டுவிட்டனர். நல்ல வேளையாக வேல்மாறன் அவ்வழியே

வந்தான். இவர்கள் கட்டவிழ்க்கப்பட்டு வந்து சேர்ந்தனர்! இறைவனுக்கு நன்றி சொன்னது காத்தவராயர் மனம்.

ஆனால், ஞானவல்லியால் அப்படி இருக்க முடியவில்லை. தனக்கு ஆபத்து எதுவும் நேரவில்லையே என்று சந்தோஷப்படுவதைவிட, தன்னையும் தஞ்சைப் படைத்தலைவனோடு கொண்டு போயிருக்கலாமே என்றே அவள் எண்ணினாள். 'அவருக்கு என்ன நேர்ந்ததோ என்று கலங்குவதை விட, இன்பமோ, துன்பமோ இரண்டு பேருக்கும் சேர்ந்தே நடந்திருந்தால் இத்தனை கவலைப் பட வேண்டியிருந்திருக்காதே' என்று அவள் மனம் கூவியது. இரவு — தனித்து விடப்பட்ட சூழலில், எட்டிச்சாத்தரின் மாளிகையில், தன் கரங்களைப் பற்றித் தஞ்சைப் படைத்தலைவன் பேசிய வார்த்தைகள் ஒவ்வொன்றாக அவள் நெஞ்சில் உலா வரத் துவங்கின.

"நீ என்னை மிகவும் இம்சிக்கிறாய்..." என்றான் அவன்.

"எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்?"

"பிறகு என்ன, அருகில் வந்து தொட முயன்றால் எட்டிச் செல்கிறாய். சரி என்று தொடாமல் விட்டு விட்டால் நீயாக வந்து தொடுகிறாய் — உணர்வுகளைத் தூண்டுகிறாய். அதை நம்பி மறுபடியும் தொட முயன்றால் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறுகிறது....."

"நான் வேதாளமா?"

"சரி, தேவதை, பிடி நழுவிப் போகிறது..."

"இழுத்த இழுப்புக்கு வந்தால் தேவதை; இல்லையென்றால் வேதாளம். அப்படித்தானே?"

"வார்த்தைகள் வழுக்குப் பாறை மாதிரி. நினைவுகளை நிமிர்ந்து நடக்க விடுவதில்லை. பேச்சை மாற்றாமல் பதில் சொல். நான் உன்னைத் தொடலாமா கூடாதா?"

"தவறான கேள்வி. தொட்டாயிற்று. இழுத்தும் வந்தாயிற்று. வேறு ஏதோ கேட்க நினைக்கிறீர்கள். கேள்வி தெளிவாக வந்தால் பதிலும் தெளிவாக இருக்கும்."

"நீ கோபக்காரி என்றுதான் நினைத்திருந்தேன். ரொம்பவும் குறும்புக்காரியும் கூட என்பது இப்போது தான் புரிகிறது."

"விடுங்கள் என்று சொன்னேன். அதைத் தவிர மற்றதெல்லாம் புரிகிறது உங்களுக்கு..."



"விடச் சொல்பவள் அருகில் ஏன் வந்தாய்...? பிடியில் சிக்கிய பிறகு சிணுங்குவதெல்லாம் என்ன மாய்மாலம்?"

"நன்றாக இருக்கிறது கதை. சிக்கியதை எல்லாம் ஜீரணம் பண்ணிவிடுகிற சிலந்தி வலை நீங்கள் என்பது எனக்குத் தெரியாமல் போயிற்று..."

"சரி, சங்கிலி மன்னரின் நம்பிக்கைக்குரிய சாமர்த்திய ஒற்றர் காத்தவராயரின் மகளோடு பேசி வெல்ல என்னால் இயலாது. வெளிப்படையாகச் சொல், விட்டுவிடத்தான் வேண்டுமா? நான் உன்னைத் தொட்டது தவறு என்று நீ உறுதியுடன் கூறிவிட்டால், நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அதன் பிறகு உன்னைத் தொட முயல மாட்டேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஒதுங்கியே நிற்பேன்..."

அவன் இப்படிச் சொல்லி முடிக்கு முன்பே, அவன் இதழ்களை ஞானவல்லியின் வலக்கரம் எழுந்து பொத்திற்று.

"என்ன பேச்சு இது... மன்னிப்பு அது இதுவென்று..."

"மழுப்பல் தேவையில்லை. நான் கேட்ட கேள்விக்கு நேரடியான பதில் தேவை..."

"என்ன கேட்டீர்கள்?"

"விட்டு விடத்தான் வேண்டுமா உன்னை?"

"அது எனக்குத் தெரியாது. ஆனால், நான் உங்களுக்குத் தமிழ் சொல்லித் தர உத்தேசித்திருக்கவில்லை."

"நீ குழப்புகிறாய். நான் பாண்டித்தியம் உடையவனல்ல; பாஷை கற்கவும் இங்கு நான் வரவில்லை. ஆனால், எனக்கு ஈழத்தமிழ் மிகவும் பிடிக்கும். இனிமையின் ஈரம் உலராத தமிழ் மொழி இந்த ஈழத்தில்தான் கொலுவிருக்கிறது. அதிலும் நீ பேசும்போது யாழ் மீட்டுவது போல் இருக்கிறது. ஆனால், பொருள்தான் புரியவில்லை..."

"இது பாராட்டா, இகழ்ச்சியா...? சரி, உங்களுக்குப் புரிவது போல் சொல்ல எனக்குத் தெரியவில்லை. விடுங்கள் என்றால், என்னைத் தொடக் கூடாது என்று பொருள் இல்லை. எதற்கோ அவசரப்படுகிறீர்களே, அந்த அவசரம்தான் வேண்டாம் என்றேன். மஞ்சத்தில் விழுந்து புரண்டால்தான் அன்போடிருப்பதாக அர்த்தமா?"

ஞானவல்லியின் இந்தப் பதில் தஞ்சைப் படைத்தலைவனின் நெஞ்சில் தேன் வார்த்தது. 'ஓஹோ...ஹோ'வென்று சிரித்தான்.

''நியாயந்தான். மஞ்சத்தில் புரள்வதுதான் தவறு. மார்போடு சேர்த்து அணைத்துத் தழுவுவது தவறில்லை, அப்படித்தானே...?'' என்றவாறே ஞானவல்லியை இழுத்தணைத்து இறுகத் தழுவி னான் அவன்.

தஞ்சைப் படைத்தலைவனின் இந்த அவசரமும் அவளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லைதான். ஆனால், குறும்புத்தனமான அவ னது விரல்களின் நர்த்தனம் அவளுள் விதவிதமான இன்ப ஊற்றுக் களைச் சுரக்கச் செய்தது. அந்த இதமான ஸ்பரிச சுகம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது; தேவையாயிருந்தது.

வாய் அவனை, 'விடுங்கள்', 'என்ன இது அவசரம்' என்று கண்டித்த போதும், மனம், 'விட்டு விடாதீர்கள்' என்று இறைஞ்சி யது.

அவனுடைய செய்கைகளில் எது பிடித்திருக்கிறது, எது பிடிக்கவில்லை; எதை ஆமோதிப்பது; எதை ஆட்சேபிப்பது என்று எதையும் அவளால் சரியாகத் தீர்மானிக்க முடியவில்லை.

மனம் பண்புக்கும் ஆசைக்கும் நடுவே போராடியது. ஆனால், இந்தப் போராட்டம்தானே காதலில் சுவை கூட்டுவது?

'இனிமேல் கவலைப்படாதே..... இன்பமோ, துன்பமோ எது வரினும் நான் உன்னைக் காப்பேன். நான் வேறு நீ வேறு அல்ல...' என்றெல்லாம் கூறிய அவர் இப்போது நம் அருகே இல்லையே? பூரணமாக ஒரு பகல் கழிவதற்குள் இத்தனை மாற்றமா? எதிரிகள் அவரைச் சும்மா விடுவார்களா?' என்றெல்லாம் எண்ணி எண்ணி மனம் சோர்ந்தாள் ஞானவல்லி.

**ரா**ஜகாமினி, அகன்ற வானத்து ஆயிரம் விண்மீன் அலங்கா ரத்தை நோக்கியபடி நின்றிருந்தாள், அந்த மரக்கலத்தின் மேல் தளத்தில் அங்கே ஆழ்கடல் பரப்பிலே நோக்கி ரசிப்பதற்கு வேறு என்ன இருக்கிறது? எங்கும் ஒரே அந்தகார இருள். பிரபஞ்சம் முழுவதற்கும் இருட்டு வண்ணம் பூச இதோ கறுப்பு மைக் கரைசல் என்பது போன்றிருந்தது கடல் பரப்பு. காற்றை வயிறு புடைக்க நிரப்பிக் கொண்டு பூத, பைசாசங்களைப் போல் கூத்த டித்தன, மரக்கலத்தின் ராட்சஸத் துவஜ ஸ்தம்பங்களிலுள்ள எண்ணற்ற பாய்கள். காற்றில் படபடத்து அவை எழுப்பும் ஒலி கடுரமாயிருந்தது.

கடல் நடுவே ஒரு செயற்கை வனத்தைச் சிருஷ்டித்தது போன்று கம்பீரமாக நின்றிருந்த உயர உயரமான அந்தப் பாய்மரங் களைத் தளத்தோடு இழுத்துப் பிடித்து இணைத்துக் கட்டப்பட்டி



ருந்த முறுக்குக் கயிறுகளில் ஒன்றைப் பற்றியபடி நின்றிருந்த அவள் பார்வைதான் நட்சத்திர மண்டலத்தில் லயித்துக் கிடந்ததே தவிர, அவள் எண்ணமெல்லாம் எங்கோ இருட் சுரங்கத்தில், இலட்சியப் புதையல் எப்போது பளிச்சிடும் என்று தேடியே ஊர்ந்து கொண்டிருந்தது.

வெளியே மட்டுமல்ல, அவள் இதயம் முழுக்க அப்போது இருள்தான் படர்ந்து கிடந்தது. அந்த அரக்குப் பூச்சு போன்ற இருள், தான் மேற்கொண்டிருக்கும் முயற்சியில் எதிர்ப்படக்கூடிய இடர் — இன்னல் எது பற்றியும் அவள் அஞ்சவில்லை. அச்சம் என்பதே அவளுக்கு மறந்து போயிருந்தது. ஆசைப்பட்டதை அடைந்தேயாக வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே ஒரு வெறி போல மூர்த்தண்யமாக அவள் இதயத்தைப் பற்றிக் கிடந்தது. இல்லாது போனால் எதையுமே இலட்சியம் செய்யாமல் இந்தக் கடற்பயணத்தை மேற்கொண்டிருப்பாளா என்ன?

'எப்படியாவது தஞ்சைப் படைத்தலைவனைக் கொழும்பு நகருக்குக் கொண்டு சென்று, போர்ச்சுக்கீசியப் பிரதம தளபதி கொன்ஸ்டாண்டின் டிசாவின் முன்னால் நிறுத்திவிட வேண்டும். இவனை மட்டும் நம் ஆதரவாளனாக இணங்கச் செய்துவிட்டால் போதும், சங்கிலி மன்னனை இந்த நாட்டை விட்டே விரட்டி விடலாம். தஞ்சைப் படைகளின் ஆதரவு இல்லை என்று அறிந்த மறுகணமே சங்கிலிகுமாரனின் தலைக்கனம் நொறுங்கிப் போகும்; வீம்பும் வீரமும் வாலைச் சுருட்டிக் கொண்டு விடும்...' என்றும் எண்ணினாள் ராஜகாமினி.

அவளுடைய இந்த நம்பிக்கை விருட்சத்தின் புதிய துளிர் போல, பூநகரி மாளிகையில் வன்னியத்தேவன் ராஜகாமினியைப் பற்றிச் சொன்னதும் தஞ்சைப் படைத்தலைவன் அவளை நோக் கிய விதம் கருணை கலந்ததாக இருந்தது. அதன் பிறகு அவன் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டவனாகக் காணப்பட்டான். கொழும்பு வரை எப்படியாவது அவனைக் கொண்டு சென்றுவிட்டால் போதும், இப்படி மயக்கமடையச் செய்து கொண்டு செல்ல நேர்ந்தமைக்காக அவனிடம் மன்னிப்புக் கோரலாம். கையில், காலில் விழுந்தேனும் கருணையை யாசிக்கலாம். மிஞ்சி அவன் வீரம் பேசினால் இருக்கவே இருக்கிறார்கள் போர்ச்சுக்கீசியர்கள். அவர்களிடம் சிக்கிய பிறகு இவன் பணிந்து போகாமல் உயிருடன் திரும்புவது ஒருபோதும் சாத்தியம் இல்லை...

''இளவரசி! இதோ அந்தப் போர்ச்சுக்கீசிய நங்கையை அழைத்து வந்து விட்டேன்...!'' என்ற குரல் கேட்டுத் தான் அவள்

சிந்தனையின் இறுக்கம் குலைந்தது. பார்வையைத் தளத்துக்குள் திருப்பினாள்.

விமலதம்மனோடு அந்தப் பெண் நின்றிருந்தாள். காற்றில் மென்கொடி நடுங்குவது போல், அந்த வெள்ளை இனத்து அழகிய இளம் பெண்ணின் மெல்லுடல் பதற்றத்தால் நடுங்கியது.

''கேத்தரின், என்ன இது? அவனை மயக்க உன்னை ஏவினால் நீயே அவனிடம் மயங்கிக் கிடக்கிறாய்?'' என்றாள் ராஜகாமினி. அவள் குரலில் தொனிப்பது ஏளனமா, சினமா என்பதை அந்தப் போர்ச்சுகீசியப் பெண்ணால் உணர முடியவில்லை.

''இல்லையம்மா... மயக்க மருந்து கலந்த அந்தப் பழரசத்தை அவரிடம் அருந்தக் கொடுத்தேன். அவரோ பாதியை என்னிடமே தந்து அருந்தச் சொல்லி வற்புறுத்தினார். மறுத்தால் சந்தேகப்படுவாரே என்பதால் நானும் அருந்த வேண்டியதாகிவிட்டது...'' என்றாள் அவள்.

''போதும்... விளக்கம் வேறு தேவையா உன் ஏமாளித்தனத்துக்கு? உன் சாகசத் திறனில் நான் சற்று அதிக நம்பிக்கை வைத்திருந்தேன். சரி, உன்னை இப்போது மயக்கம் தெளிய வைத்து இங்கே அழைத்து வந்தது எதற்காகத் தெரியுமா?''

''சொல்லுங்கள் தேவி...''

''தஞ்சைப் படைத்தலைவன் மயங்கி விழுந்து வெகு நேரமாகிறது. ஒருவேளை, இன்னும் சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்துவிடக்கூடும். நாம் இன்னும் நெடுநேரம் பயணம் செய்தாக வேண்டும். எனவே, கண் விழித்தால் அவனை எப்படியும் நீ கட்டுப்படுத்த வேண்டும். உன் கண்வீச்சு, நளினம், சாகசப் பேச்சு அனைத்தையும் முழுத் திறனோடு நீ பிரயோகிக்க வேண்டும். பழைய மயக்க மருந்து உத்தி இனி உபயோகப்படாது. உன் காம வலையைத்தான் நாங்கள் நம்பியிருக்கிறோம். ஓர் அழகிய இளம் பெண்ணின் நிர்வாணம் கண்டு, காட்டுச் சிங்கமே கண் மயங்கி நின்றதாகக் கதை உண்டு. உன் வெள்ளை மேனியின் நிர்வாண அழகு இந்த வருணகுலத்தானின் மனத்தைக் கொள்ளை கொள்ளாமல் விடாது. போ...அவன் கண் விழிக்கும்போது உன் வெண்பளிங்கு மேனியெழிலை நிர்வாணமாகத் தரிசிக்கட்டும். மறைக்காது காட்டி மயக்கு...'' என்றாள் ராஜகாமினி.

'பெண்ணைத் துகிலுரியும் பெண்!' சிங்கள வீரனான விமலதம்மன் தனக்குள் சிரித்துக் கொண்டான். கண்டோர் மயங்கும் காமப்பதுமையான ராஜகாமினியின் அரசியற் சதுரங்கம் எப்படிப்



பட்ட உத்திகளால் ஆடப்படும் என்பது அவன் அறியாததா என்ன?

இந்தச் சம்பாஷணைச் சதியை — வெட்கம் கெட்ட விரக உத்தியால் வீரனை வீழ்த்தும் விவஸ்தையற்ற ஆலோசனையை ராஜகாமினி அந்தப் போர்ச்சுகீசிய அழகியிடம் திருவாய் மலர்ந்து கொண்டிருந்தபோதே கேட்டுக் கொண்டுதான் இருந்தான் வருணகுலத்தான்!

விழிப்பு வந்ததும் அவன் கண்கள் சுற்றுமுற்றும் துழாவின. எதிரே ஒரு கண்ணாடி லாந்தர் தொங்கிக் கொண்டிருந்தது. எதனால் அது அப்படி ஆடுகிறது என்று யோசித்தான் அவன். அதன் அசைவு, அந்த அறையின் அமைப்பு அனைத்தையும் கூர்ந்து கவனித்த அவன் நொடிப் பொழுதில் அது ஒரு மரக் கலத்திலுள்ள அறை என்பதைப் புரிந்து கொண்டு விட்டான். மரக்கலத்தலைவன், வேறு விசேஷமான பயணிகள் தங்க இது போன்ற எல்லா வசதிகளும் நிறைந்த சிறிய அறைகள் மரக்கலத்தினுள் அமைக்கப்பட்டிருக்கும். அவன் காணாத மரக்கலங்களா என்ன?

'எப்படி வந்தோம் இந்த இடத்துக்கு...? ஏதோ சதி நடந்திருக்கிறது... பூநகரி மாளிகையில் வன்னியன் ஏதும் வஞ்சகம் செய்துவிடுவான் என்று சந்தேகப்பட்டது சரியாகி விட்டது...?' என்று எண்ணிய தஞ்சைப் படைத்தலைவன் சரேலென்று உதறி எழுந்தான். பாய்ந்து சென்று அறைக் கதவைத் தட்டினான். அது, தாளிடப் பட்டிருக்கவில்லை. கைபட்டவுடன் திறந்து கொண்டது. வெளியே வந்து எதிரே தெரிந்த படிகளில் ஏறத் துவங்கினான். பேச்சுக் குரல் கேட்கவே கால்கள் தயங்கின. மேல்தள முகப்பில் விமலதம்மன், போர்ச்சுக்கீசிய அழகி, ராஜகாமினி நிற்பதைக் கவனித்த அவன், அவர்கள் பேசுவதையும் கேட்டுக் கொண்டிருந்தான்.

இறுதியில் அப்போதுதான் வந்தவன் போல், ''விமலதம்மா! என்ன இது... நான் எப்படி இந்த மரக்கலத்துக்கு வந்தேன்...?'' என்று வினவினான்.

மூவரும் அவன் குரல் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார்கள். தன் திட்டம் இத்தனை சீக்கிரம் நொறுங்கிச் சிதறும் என்று ராஜகாமினி எண்ணவேயில்லை. விமலதம்மன் நிலைமையைச் சமாளிக்க முனைந்தவனாக, ''வாருங்கள், தஞ்சைப் படைத்தலைவரே, அறைக்குச் செல்வோம். தாங்கள் விழித்து எழுந்ததும் அனைத்தையும் விவரித்துக் கூறுமாறு வன்னியத்தேவர் கட்டளை

யிட்டிருந்தார். இதோ, நானே தங்களைக் காண வரவே புறப்பட்டுக் கொண்டிருந்தேன்...'' என்றவாறே ஓடி வந்தான்.

அவன் படிகளில் இறங்கத் துவங்கிவிட்டதால், வருணகுலத்தான் அறையினுள் திரும்பி நடந்தவாறே, ''மரக்கலம் எங்கே போகிறது?'' என்று வினவினான்.

''கொழும்புக்கு...''

''எதற்காக?''

''போர்ச்சுகீசியத் தளபதி கொன்ஸ்டாண்டின் டிசாவைச் சந்திப்பதற்காக. அவர்தான் தங்களைக் கொழும்புக்கு அழைத்துவரச் சொல்லியிருந்தார்...''

''நான் எதற்காக அவரைச் சந்திக்க வேண்டும்? நான் வந்திருப்பது கொழும்பு வரை தெரிந்துள்ளதா? அப்படியானால் எல்லாம் திட்டமிடப்பட்டுத்தான் நிகழ்கிறது... பெண்ணைக் காட்டி, வஞ்சகமாக மயங்க வைத்துத் தூக்கி வருமாறு போர்ச்சுகீசியத் தளபதி கட்டளையிட்டிருந்தானா?''

''எதைக் குறிப்பிடுகிறீர்கள்?''

''பூநகரி மாளிகையில் இதோ இந்த வெள்ளைத் தோல் பெண்ணைக் காட்டி எனக்கு மயக்க மருந்து கலந்த பழரசம் அளிக்கப்பட்ட வஞ்சகத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.'' — தஞ்சைப் படைத்தலைவனின் குரலில் சீற்றம் வெளிப்பட்டது.

''தவறுதான். ஆனால், இதில் தங்கள் பலவீனமும் சம்பந்தப்பட்டிருக்கிறது. எதிரியின் பலத்தை அறிந்து தாக்குவதும், பலவீனத்தை அறிந்து வீழ்த்துவதும் ராஜ தந்திரங்களுள் அடங்கும். இதில் ஒரே வித்தியாசம்... நாங்கள் உங்களை எதிரியாக எண்ணாமல் நண்பராக நினைத்து — அல்லது நண்பராக்க நினைத்துச் செயல்பட்டதுதான்...'' என்றான் விமலதம்மன்.

''ஓ! உன்னிடம் உபதேசங்கள் கேட்டுக் கொள்ளும் இழிவான நிலை எனக்கு வந்து விட்டதா...?'' — எரிமலையாகச் சின நெருப்பை வீசினான் தஞ்சைப் படைத்தலைவன்.

இப்போது ராஜகாமினி ஓடிவந்தாள்.

''தஞ்சைப் படைத்தலைவர் எங்களை மன்னிக்க வேண்டும். நடந்தவை அனைத்துக்கும் நானே பொறுப்பு. தங்களை ஏமாற்றவோ இழிவுபடுத்தவோ நாங்கள் ஒருபோதும் எண்ணவில்லை. வலிமை வாய்ந்த தங்கள் உதவியை நாடி நிற்கும் அபலை நான். என்னைப் பற்றிய விவரங்களை வன்னியத்தேவர் கூறும்போது,

R



தாங்கள் ஆழ்ந்த சிந்தனை வயப்பட்டீர்கள். அதை நான் எனக்குச் சாதகமானதாக எண்ணினேன். அந்த எண்ணம் மாறுவதற்குள் தங்களைக் கொழும்புக்கு அழைத்துச் சென்றால், போர்ச்சுகீசியர்கள் என்னைத்தான் உண்மையான அரச வாரிசு என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை அவர்கள் வாயிலாகவே தங்களுக்குச் சொல்ல வைக்கலாம் என்று எண்ணினேன். இத்தனையும் தங்கள் அன்பையும் ஆதரவையும் பெறும் நோக்கோடு தான்...'' என்று பதற்றமும் பணிவும் கெஞ்சலுமாய்ச் சொன்னாள் ராஜகாமினி.

தஞ்சைப் படைத்தலைவன் இடிஇடியென்று நகைத்தான்.

''நன்று. அதற்காகத் தாங்கள் இந்த அழகிய மிலேச்சப் பெண்ணை என் முன் ஆடையின்றி நிற்கச் சொல்லி ஆணையிட்டதையெல்லாம் நான் செவிமடுத்துக் கொண்டுதான் இருந்தேன். என்னைப் பற்றித் தங்களுக்கு எவ்வளவு உயர்வான எண்ணம்...'' என்று இகழ்ச்சியும் ஏளனமும் கொப்பளிக்கக் கூறிய தஞ்சைப் படைத்தலைவன், ''ஆனால், ஒரு சந்தேகம்'' என்றான்.

தாங்கள் பேசியதையெல்லாம் அவன் கேட்டுக் கொண்டிருந்து விட்டானே என்று தர்மசங்கடப்பட்ட அவள், ''என்ன?'' என்றாள்.

''ஓர் அழகான பெண்ணின் நிர்வாணம், காட்டுச் சிங்கத்தையும் கண் மயங்கச் செய்யும் என்பது உண்மைதான். என்னையும் அப்படி ஒரு பெண்ணின் நிர்வாணத்தைக் காட்டி மயக்கிவிடலாம் என்று தாங்கள் தீர்மானித்ததிலும் தவறில்லை. ஆனால், தாங்களும் கூட ஓர் அழகான பெண்தான் என்பதை மட்டும் ஏனோ தெரியவில்லை, மறந்து விட்டீர்கள்... தங்களை நான் ரசிக்க மாட்டேன் என்று எண்ணி விட்டீர்கள் போலும்...''

''தஞ்சைப் படைத்தலைவரே!'' என்று சினத்துடன் கத்தினான் விமலதம்மன். ''இது வரம்பு மீறிய வார்த்தையாடல். ராஜகாமினி தேவியாரை இழிவுபடுத்துவதை என்னால் அனுமதிக்க முடியாது...'' என்றும் கூறினான்.

''ராஜகாமினி தேவியார் ரசிக்கத்தக்க அழகுடையவர் என்று நான் கூறியதா அவரை இழிவுபடுத்துகிறது.....? அப்படியானால் என்னை ஒரு பெண்பித்தன் என்று நீங்கள் தீர்மானித்ததற்கு என்ன பொருள்...? கொஞ்சம் யோசித்த ஒரே காரணத்துக்காக என்னைக் கட்சி மாறியவனாக எண்ணிவிட்டீர்களே, அதற்கு என்ன பொருள்? அசதியோடு சிறிது ஓய்வெடுக்க வேண்டிய நிலையிலி

ருந்த எனக்கு நட்புணர்வோடுதான் மயக்க மருந்து கலந்த பழரசம் அளிக்கப்பட்டதா...?'' என்று வினவினான் வருணகுலத்தான்.

''நடந்து போனவை பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை. அமைதியாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். கொழும்பு சென்ற பின் மற்றவற்றை உரையாடலாம். அதைத் தவிர இப்போது வேறு வழியில்லை...'' என்றான் விமலதம்மன்.

''ஏன் இல்லை...? கடல் நடுவே என்னைக் கொண்டு வந்துவிட்டதால் நான் பணிந்து விடுவேன் என்று எண்ணுகிறாயா விமலதம்மா?''

''அப்படி நான் சொல்லவில்லை. தஞ்சைப் படைத்தலைவர் எந்த அளவு வீரரோ, அந்த அளவு புத்திசாலியும் கூட என்பது என் எண்ணம். வீரம் பேசுவதை விட, சூழ்நிலை உணர்ந்து அமைதியாக இருப்பதே நல்லது என்றுதான் நான் கூறுகிறேன்...''

''முட்டாள்! நான் கடல் சுறா. என்னிடமா கடலைக் காட்டி அச்சுறுத்துகிறாய்? இந்த வருணகுலத்தான் மனம் வைத்தால் கடற்சூறாவளியையே சிருஷ்டிக்க முடியும். கொந்தளிக்கும் கடலில் குதித்து விளையாடுபவன் நான்... திருப்படா மரக்கலத்தை, யாழ்ப்பாணக் கரை நோக்கி...'' என்று சீறிய தஞ்சைப் படைத்தலைவன், ராஜகாமினியை நோக்கி, ''பெண்ணே! உன்மீது இரக்கம் சுரந்தது உண்மைதான். அதற்காகவா என் இதயத்தில் ஈட்டி பாய்ச்சி மகிழ நினைத்தாய். நான் உன்னோடு விரிவாகப் பேச விரும்பினேன். ஆனால் அது கொழும்பில் அல்ல. என் சம்மதமில்லாமல் என்னைக் கொழும்பு கொண்டு செல்ல நினைத்த உன் முட்டாள் தனத்தை என்னவென்பது... திருப்பச் சொல் மரக்கலத்தை, யாழ்ப்பாணத்துக்கு. வீண் விளையாட்டு உனக்குப் பெரும் விபரீதமாக முடியும்...'' என்றான்.

ராஜகாமினி பதில் கூற வாய் திறக்கு முன்பே குறுக்கிட்ட விமலதம்மன், ''இளவரசி! நீங்கள் உங்கள் அறைக்குச் செல்லுங்கள். என்ன ஆனாலும் சரி, நான் மரக்கலத்தைத் திருப்ப மாட்டேன். அதைத் தஞ்சைப் படைத்தலைவருக்கு உணர்த்த வேண்டியது என் பொறுப்பு...'' என்று கூறியபடியே வாளை உருவினான்.

அப்போது தஞ்சைப் படைத்தலைவன் கரத்தில் வாள் இல்லை என்பதனாலோ, மரக்கலம் நிறைய தன் ஆட்கள் இருக்கிறார்கள் என்ற துணிவினாலோ விமலதம்மன் அந்தக் கடல் விளையாட்டை நடத்தத் துணிந்தான். ஆனால், அதே சமயம் அந்த மரக்கலம் திடீரென்று சூழ்ந்து கொண்ட கடற்கொள்ளையர்களின்



தாக்குதலைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குள்ளாகிக் கொண்டிருந்தது. வருணகுலத்தானை நோக்கி விமலதம்மன் வாளை உருவிய மறுகணமே மேல்தளத்திலிருந்த ஆட்கள் ஓடிவந்து ''ஆபத்து, ஆபத்து!'' என்ற அலறலுடன் அந்தத் தகவலைக் கூறினார்கள்.

''விமலதம்மா, இதோ என் வாக்குப் பலித்து விட்டது பார். உருவாகிவிட்டது கடற் சூறாவளி! ஓடு... எனக்கு எதிராக உருவிய வாளுடன் கொள்ளையர்களை எதிர்த்துப் போரிடு. வெற்றி பெற்றால் திரும்பி வா. பிறகு நம் வழக்கை வைத்துக் கொள்ளலாம்...'' என்று கூறி, இடி இடியென நகைக்கத் தொடங்கினான், தஞ்சைப் படைத்தலைவன்.

கடல் நடுவே பெரிய பெரிய பாறைகள் முளைத்தெழுந்தது போல் இரண்டு மூன்று கலங்கள் வழிமறித்து நிற்பதைக் கண்டு திடுக்கிட்ட வன்னியனின் மரக்கல ஊழியர்கள் என்ன செய்வதென்று அறியாது திகைத்தனர். வெட்டியெடுப்பது போல் அடர்த்தியான கறுத்த இருள் படர்ந்து கிடந்ததாலும், எதிரே நின்ற மரக்கலங்கள் பாய்களைச் சுருட்டிக் கட்டிவிட்டு விளக்கு வெளிச்சம் எதுவுமே புலப்படாமல் நின்றிருந்ததாலும் அருகே செல்லும் வரை அவை நிற்பதைக் கவனிக்க இயலவில்லை. அம்பெறி தூரத்துக்குள் வந்த பிறகுதான் கவனிக்க முடிந்தது. உடனே மரக்கலம் பரபரப்படைந்தது.

விமலதம்மனுக்குத் தகவல் கிடைத்து அவன் மேல் தளத்துக்கு வந்து சேருவதற்குள் அங்கே யுத்தம் மூண்டு விட்டது. கொள்ளையர்களின் எரி அம்புகள் சீறி வரத் துவங்கியிருந்தன. 'இந்த யுத்தத்தை நிறுத்துவதா, தொடர்ந்து நடத்துவதா?' என்று முடிவு செய்ய முடியாமல் விமலதம்மன் குழம்பிக் கொண்டிருந்த போதே பத்துப் பதினைந்து கொள்ளையர்கள் உருவிய வாட்களுடன் மேல் தளத்தில் வந்து குதித்து விட்டனர். நொடிப்போதில் அவர்கள் ஏழெட்டு வீரர்களை வெட்டிச் சாய்த்தும் விட்டனர். இருளில் மூண்டுவிட்ட அந்தத் திட்டமிடப்படாத போரில் வெற்றி பெற வாய்ப்பில்லை என்பதை நன்றாக உணர்ந்திருந்த போதும் விமலதம்மன் தன்னுடைய வாளை அந்தக் கொள்ளையர்மீது ஓங்கிப் பாய்ச்சியபடி பாய்ந்து எதிர்த் தாக்குதலை நிகழ்த்தினான். எனினும் ஏராளமான கொள்ளையர் உள்ளே வந்து சூழ்ந்ததால் விமலதம்மன் முயற்சி பயனற்றுப் போனதுடன் அவன் சிறைப்படவும் நேர்ந்தது.

அவர்களை எதிர்ப்பது பயனற்றது என்பதை உணர்ந்தவனாக அவனே வாளைக் கீழே எறிந்துவிட்டு அவர்களிடம் சரணடைந்

தான். தலைவனைத் தொடர்ந்து ஏனைய சிங்கள வீரர்களும் மரக்கலத்திலிருந்த இரண்டொரு போர்ச்சுக்கீசியர்களும் கொள்ளையர்களிடம் சரணடைந்தனர். மரக்கலம் இழுக்கப்பட்டு, அவர்கள் கலம் ஒன்றுடன் பிணைக்கப்பட்டது.

இவ்வளவு அமளியிலும் தனக்கு எதுவுமே சம்பந்தமில்லாதது போல் மரக்கல அறையிலேயே இருந்தான் வருணகுலத்தான். பொருள்களைத் தேடி எல்லா அறைகளிலும் புகுந்து புறப்பட்ட கொள்ளையர் அவனையும் பிடித்திழுத்துச் சென்று மற்றவர்களோடு சேர்த்துத் தங்கள் கலத்தில் இறங்கச் செய்தனர். பிறகு பிடிபட்ட மரக்கலத்திற்குத் தீ வைத்தனர்.

வன்னியனின் மரக்கலம் திகுதிகுவென்று கடல் நடுவே எழுந்த பெரியதோர் ஜோதி மலையாய் தீக்கங்குகளை விண்ணில் வீசியபடி எரியத் துவங்கியபோது, கொள்ளையரின் மூன்று கலங்களும் நங்கூரத்தை எடுத்து விட்டுப் பாய்களை இறக்கிக் கட்டியபடி விலகி வெகு தூரத்தில் சென்று கொண்டிருந்தன.

விமலதம்மனால் இதைச் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. அவன் கொள்ளையர் தலைவன் போன்றிருந்த ஒருவனிடம், "பொன், வைரம், ரத்தினக் கற்கள் போன்ற விலை உயர்ந்த பொருள்களையோ மற்றுமுள்ள வாணிபப் பொருள்களையோ ஏற்றிச் செல்லும் மரக்கலங்களைத்தான் கொள்ளையர்கள் வழிமறித்துத் தாக்குவார்கள். இந்த ஒன்றுமில்லாத மரக்கலத்தை வழிமறித்துத் தாக்கி, தீயும் வைத்து விட்டீர்களே, இதில் என்ன சந்தோஷம் உங்களுக்கு?" என்றான்.

"இதற்கெல்லாம் காரணம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எங்கள் மரக்கலங்களுக்குச் சில அடிமை ஊழியர்கள் தேவை. அதற்கு உங்களைப் பயன்படுத்தக் கூடும். இப்போது அடித்தளத்தில் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். மற்றவற்றை நாளை எங்கள் தலைவர் முன் பேசிக் கொள்ளலாம்..." என்று கூறியவாறே அவர்களை அந்த மரக்கலத்தின் அடித்தளத்திற்கு அழைத்துச் சென்றான் அந்தக் கொள்ளைக்காரன்.

விமலதம்மன் வெறுப்பாலும் சினத்தாலும் எரிமலையாகக் கனன்று கொண்டிருந்தான். எவ்வளவு பெரிய வீரன் — எத்தனை வீர விளையாட்டுக்களில் வெற்றி வாகை சூடியவன் — கண்டி ராஜ்யமும் வன்னியப் பிரதேசங்களும் கொண்டாடும் வீர புருஷன் — வன்னியத்தேவனின் நம்பிக்கைக்குரிய மெய்க்காவலன்... எத்தனையோ வீரர்களிருக்க வருணகுலத்தானைப் போர்ச்சுகீசியரிடம்

R



ஒப்படைக்கும் பணியை நம்மிடம் தானே ஒப்படைத்தார்கள்... அப்படிப்பட்ட நாம் கொள்ளையரிடம் அகப்பட்டு அடிமையாவதா? இளவரசி ராஜகாமினி தேவியாருமல்லவா இந்தப் பாவிகளின் கையில் சிக்கி விட்டார்... எப்படியாவது இங்கிருந்து தப்பிச் சென்றாக வேண்டும். எப்படிச் செல்வது?

விமலதம்மன் மன உளைச்சலோடு வருணகுலத்தானை நோக்கினான். 'இவன் அதிநுட்பமான ஆற்றலுள்ளவன். இவனை நாமே ஒழுங்காகக் கொண்டு சேர்ப்பது கடினம் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தோம். தேவனைப் போன்ற தோற்றமுள்ள இவன், அசுரனைப் போன்ற ஆற்றலுள்ளவன். புயங்களில் புயல் குடி கொண்டுள்ளதோ எனும் வேகத்துடன் வாள் வீசும் வலிமையுள்ள இவன் மனம் வைத்தால் தப்ப வழியிருக்கிறது. புயல் எழும், கடல் கொந்தளிக்கும் என்று வாய் திறந்தான். நொடிப் பொழுதில் மந்திரச்சொல் போல் அது பலித்து விட்டது. ஆனால், இப்போது அவன் மனம் வைக்க வேண்டுமே... அவனை எப்படித் தூண்டி விடுவது?' என்று சிந்தித்தான்.

ஆனால், தானும்தான் கொள்ளையரிடம் அடிமைப்பட இருக்கிறோம் என்ற எண்ணமோ, அங்கிருந்து தப்பியாக வேண்டுமே என்ற பிரக்ஞையோ இல்லாதவன் போன்று அமைதியாக ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தான் தஞ்சைப் படைத்தலைவன்.

# 10. விபரீத விருந்து

**யா**ழ்ப்பாணத்து நல்லூர்க் கோட்டை. ஈழ மாமன்னர் சங்கிலிகுமாரர், அரண்மனையின் மேன்மாடக் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருக்கிறார். இரவுப் போது ஏறிக்கொண்டே இருந்தது. மன்னர் இன்னும் உறங்கச் செல்லவில்லை. மன்னர் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார் என்பதை அவரது புருவ நெரிப்புகளே புலப்படுத்திக் கொண்டிருந்தன. அரசமாதேவிக்குப் பெரிதும் அறத்துன்பமாக இருந்தது. மன்னரைச் சயனக் கூடத்துக்கு அழைப்பதா வேண்டாமா என்று அவள் யோசித்துப் பார்த்தாள். சாதாரணமாக அரசி அந்தக் கூடத்தினுள் தலைகாட்டிய உடனேயே மன்னரின் கவனம் திரும்பும். கண்கள் அந்தப் பேரழகுப் பொக்கிஷத்தின் மீது பாய்ந்தோடி வந்து தழுவும். ஆனால், இன்று அவர் அரசியார் வந்து நிற்பதைக் கூடக் கவனிக்காதவராய் உலவிக் கொண்டிருக்கிறார்.

அரசமாதேவியார், மன்னரின் அருகே வந்து, ''பிரபு! தாங்கள் மனச் சஞ்சலத்தோடு காணப்படுகிறீர்கள். சிறிது நேரம் வீணையைக் கொண்டுவந்து வாசிக்கட்டுமா?'' என்று கனிவு சிறக்க வினவினாள்.

சங்கிலி மன்னர், அரசியாரை ஒருகணம் ஏறிட்டு நோக்கினார். எத்தனை குழப்பங்கள் இருந்தால்தான் என்ன, இந்த அழகான — தெளிந்த முகத்தைப் பார்த்த பிறகு மனம் சிக்கல்களைப் பற்றியா சிந்திக்கும்? மன்னரின் முரட்டு இதழ்களில் முறுவல் படர்ந்தது. ''வேண்டாம் தேவி! பொன் வீணையில் உன் பூந்தளிர் விரல்கள் நர்த்தனம் செய்து, நாத அலைகளைப் பொங்கிப் பிரவகிக்கச் செய்து விடும். பிறகு நான் அந்தக் கீத மஞ்சத்தில் கிறங்கிச் சாய்ந்து விடுவேன். அதற்கு இது தருணமல்ல. நீ சென்று ஓய்வெடுத்துக் கொள்...'' என்றார்.

''உறக்கம் உங்கள் கண்களைத் தழுவாதவரை நான் என்றுமே ஓய்வெடுத்துக் கொள்வதில்லை பிரபு!'' என்றாள் அரசமாதேவி.



''தேவி, என் மனநிலை புரியாமல் பேசாதே. என் நெஞ்சம் எரிதழலாய் வேகின்றது. இப்போது எனக்குத் தனிமை தேவை...''

''மனநிலை எதுவானால் என்ன? புரியவையுங்களேன். என்னிடம் மனம் விட்டுப் பேசக் கூடாதா? எந்தப் பிரச்னையானாலும் தனித்து நின்று தவிப்பதை விட, இன்னொருவரோடு கலந்து பேசுவதே சிலாக்கியமானது. அதற்கு நான் தகுதியற்றவளா?''

ஓ...! அரசமாதேவி ஊடல் போரையல்லவா துவக்குகிறாள்! மன்னருக்கும் அது புரியாமல் இல்லை.

''நீ இந்த ஆயுதத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்து விட்டாயா? இனி நீ என்னை வீழ்த்தாமல் விடமாட்டாய். ஒன்று நான் அரசவையில் பேசிக் கொண்டிருக்க வேண்டும்... அல்லது அந்தப் புரத்தில் உன்னோடு பேசிக் கொண்டிருக்க வேண்டும். அப்படித் தானே? சிறிது தனியே யோசிக்க விடமாட்டீர்கள்...''

மன்னர் இப்படிச் சொல்லியவாறே இதழ்களில் நகை படர விடுகிறார். அது போதுமே தேவிக்கு! தாவிப் படர்கிறாள் மன்னரின் பரந்த மார்பில். மன்னரின் செப்புத் திருமேனியில் சித்திரப் பொன்னாடை ஒன்று புரள்வதுபோல் அந்த மங்கை நல்லாள் ஒட்டிச் சரிந்ததும் சங்கிலி மன்னர், சந்தோஷத் திணறலில் திக்குமுக்காடுகிறார். எவ்வளவு கோபம் நிறைந்த பேச்சால், இந்தப் பெண்களை இரண்டடி எட்டி நிற்கச் செய்தாலும் ஒரு புன்னகை இப்படி உடனே ஒட்டிக் கொள்ள வைத்துவிடும் போலும்!

''தங்களை வீழ்த்துவதா என் நோக்கம்? மஞ்சத்தில்தானே விழச் சொல்கிறேன். யோசிக்க வேண்டாமென்றும் கூறவில்லையே..... மஞ்சத்தில் கிடந்தவாறும் யோசிக்கலாம் என்றுதானே கூறுகிறேன்!'' மார்பில் குழைந்தபடியே மகாராணி, வார்த்தைப் பூக்களை வசிய மணத்தோடு உதிரவிட்டாள்.

மன்னர் கடகடவென்று நகையொலி எழுப்பினார். ''சரிதான், மஞ்சத்தில் உன்னருகே கிடந்தபடி மதன காவியங்களைப் பற்றிச் சிந்திக்கலாம். தஞ்சைப் படைகள் வந்து சேருமா, சேராதா என்பது பற்றியோ — தஞ்சைப் படைத்தலைவன் தனியனாக எதிரிகளிடம் சிக்கி விட்டானே, அவனுக்கு என்ன ஆகுமோ தெரியவில்லையே; அவனை எப்படி எதிரிகளிடமிருந்து மீட்பது என்பது பற்றியெல்லாமா சிந்திக்க முடியும்?''

''பிரபு! தஞ்சைப் படைத்தலைவன் எதிரிகளிடம் சிக்கியிருப்பது தங்களை மிகவும் ஆழமாகப் பாதித்து விட்டதா?''

''என்ன தேவி இப்படிக் கேட்கிறாய்? இருக்காதா பின்னே? நானாவது அரசியல் நிலவரம் புரிந்தவன் — தஞ்சைப் படைத் தலைவனை எதிரிகள் ஒன்றும் செய்துவிட முடியாது. அவன் உயிருக்கு அபாயமில்லை என்று உறுதியாக நம்புகிறேன் — எதிரிகளால் கரைக்கக்கூடிய அளவு பலவீனமான இதயம் உள்ளவனுமல்ல வருணகுலத்தான் என்பது எனக்குத் தெரியும். ஆனால், பாவம் அந்தச் சின்னஞ்சிறு பெண் ஞானவல்லி, எப்படித் துடிக்கிறாள் தெரியுமா? அவளை எப்படிச் சமாதானப் படுத்துவது என்பது புரியாமல்தான் நான் இவ்வளவு வேதனைப்படுகிறேன்.'' என்று கூறிய மன்னர் சட்டென்று 'அதிகம் பேசிவிட்டோமோ' என்று எண்ணியவர் போன்று பேச்சை அத்துடன் நிறுத்தினார்.

காத்தவராயன் தங்கியிருக்கும் மாளிகைக்கு அவரே அல்லவா நேரில் சென்று அந்தப் பெண் படும் வேதனையைக் கண்டு வந்தார்.

திடீரென்று, தான் தங்கியிருக்கும் மாளிகைக்குச் சங்கிலி மன்னர் விஜயம் செய்ததும் காத்தவராயரே திகைத்துப் போனார். உனக்கு இங்கே எல்லா வசதிகளும் குறைவற இருக்கின்றனவா என்று கண்டு செல்லவே நான் வந்தேன் என்று மன்னர் கூறியதைக் கேட்டு, காத்தவராயர் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டார். அவருக்குத் தெரியாதா என்ன மன்னரின் உள்ளக்கிடக்கை!

எங்கே உன் மகளைக் காணவில்லை? சபா மண்டபத்தில் திடீரென்று அவள் தோன்றியதும் ஒருகணம் நான் ஆடிப் போய் விட்டேன். நல்லவேளை, அவள் ஆபத்தில்லாமல் தப்பி வந்தாள்... நல்லூர் வீரமாகாளி அருள்தான் அது என்று மன்னர் கூறியதும், காத்தவராயர், தஞ்சைப் படைத்தலைவருக்கு என்ன ஆயிற்றோ ஏதாயிற்றோ என்று அழுது புலம்புகிறாள் ஞானவல்லி. உணவே வேண்டாமாம்...' என்று கூறினார்.

அதைக் கேட்டு பதறிப்போன மன்னர் ஞானவல்லியைத் தேடிக் கொண்டு அந்த மாளிகையின் உட்புறக் கூடத்தினுள் ஓடினார். மன்னரைக் கண்டவுடன் மரியாதை காட்டினாளே தவிர, ஞானவல்லி மனச்சமாதானம் அடையவே இல்லை. மன்னரே வந்து நெடுநேரம் வார்த்தையாடிய பின்னும் உண்ண மறுத்து அடம்பிடித்து நின்ற ஞானவல்லியைக் கண்டு காத்தவராயருக்கே சினமாக இருந்தது. எனினும் அவர் ஞானவல்லிக்கு நேர்ந்த இன்னல்களையும் — தஞ்சைப் படைத்தலைவன் யாரோ ஒரு வழிப்போக்கனைப் போல் வந்து அவளை எதிரிகளிடமிருந்து காப்பாற்றியதையும் — தாய் தற்கொலை செய்து கொண்டதையும் ஒன்று விடாமல் மன்னரிடம் எடுத்துரைத்தார்.



அந்தச் சின்னஞ்சிறு இளம்பெண்ணின் சோக உணர்வினை நன்குணர்ந்த மன்னர், அவள் மனசில் தஞ்சைப் படைத்தலைவன் எத்தகு உன்னத இடம் பிடித்திருக்கிறான் என்பதையும் புரிந்து கொண்டார். பிறகு, 'கவலைப்படாதே ஞானவல்லி. நீ என் மகள் மாதிரி. உண்டு உறங்கி இளைப்பாறு. இன்னும் இரண்டு நாட்களில் தஞ்சைப் படைத்தலைவனை உன்முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன். எதிரிகள் அவனை எந்தக் கோட்டைக்குள் ஒளித்து வைத்திருந்தாலும் சரி, ஏழு கடலுக்கு அப்பால் கொண்டு சென்றிருந்தாலும் சரி. அவனைப் பத்திரமாக உன் முன் கொண்டு வந்து நிறுத்துவது இந்த ஈழ மாமன்னன் பொறுப்பு. ஒரு தந்தையின் பேச்சாக என் பேச்சை மதித்து நீ உணவை ஏற்றுக்கொள்...' என்று கூறினார்.

மன்னரின் இந்த அன்பு கனிந்த பேச்சு அவள் இதயத்தில் ஆயிரம் நம்பிக்கைகளை மலரச் செய்ததால், ஞானவல்லி ஒரு வழியாக உணவுண்ணச் சம்மதித்தாள்.

அதையெல்லாம் இங்கே அந்தப்புர மஞ்சத்தில் அரசமாதேவியிடம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியது அவசியந்தானா என்று எண்ணியதும் அவரால் மேற்கொண்டு பேச முடியவில்லை.

ஆனால், அரசியார் அந்தப் பேச்சை அத்துடன் விடாமல் கிளறினாள்.

''நானும் கேள்வியுற்றேன். காத்தவராயரின் மகள் தஞ்சைப் படைத்தலைவனிடம் மனசைப் பறிகொடுத்து விட்டிருப்பாள் என்றே எனக்குத் தோன்றுகிறது. அவனுக்கு ஆபத்து நேர்ந்ததென்று இவள் உண்ண மறுத்து அடம்பிடிக்கிறாள் என்றால் வேறு என்ன அர்த்தம்? பாவம், பார்ப்பதெல்லாம் சொந்தம் — பழகுவதெல்லாம் காதல் என்று எண்ணும் பேதைப் பெண்... என் கவலையெல்லாம் இப்படி வந்தவுடனே பொறுப்பில்லாமல் அஜாக்கிரதையாக எதிரிகளிடம் போய்ச் சிக்கிக் கொண்டு விட்ட தஞ்சைப் படைத்தலைவனால் நமக்கு என்ன உபயோகம் என்பது தான். இங்குள்ள நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டு வரக் கூடிய ஆற்றல் மிக்க ஒரு வீரனை அனுப்பியிருக்கக் கூடாதா தஞ்சை இரகுநாத நயக்கர்...?''

''அப்படிச் சொல்லாதே தேவி. வருணகுலத்தான் திறமை வாய்ந்த திண்தோள் மறவன். செயல் வீரன். அவன் வருகை தஞ்சை மன்னரே ஈழத்துக்கு வந்திருப்பதற்குச் சமம்...''

''அப்படியா சொல்கிறீர்கள்... அந்த வீரருக்கு இத்தனைச் சிறப்பு உண்டா?''

''தேவி! பழம் பெருமை மிக்க — வரலாற்றுப் பாரம்பரியமுடைய பேரரசுகளைக் காக்கும் பண்பு மனம் கொண்டவர் தஞ்சை மன்னர். நீதான் அறிவாயே, சில ஆண்டுகள் முன் — நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் துணிந்தபோது, என்னை ஆட்சி பீடத்தில் அமரவிடக் கூடாதென்று சதிகாரர்கள் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டனர். அவர்களின் பின்புலமாக நின்று போர்ச்சுக்கீசியர்கள் எவ்வளவு கலவரங்களைத் தூண்டி விட்டனர்! அப்போது தஞ்சை நாயக்கர்தான் படைகளை அனுப்பி நமக்குப் பக்க பலமாக இருந்தார். நானும் வீணர்களை விரட்டியடித்துவிட்டு ஈழத்தின் இணையற்ற மன்னனாக மகுடம் சூடினேன். அப்போது, விஜய நகரப் பேரரசிலும்பெரும் குழப்பம் நிலவியது.

''மாமன்னர் [1]வேங்கடராயர் காலமானதும், பட்டத்துக்கு வந்திருந்த [2]ஸ்ரீரங்கனை, வேலூர்ச் சிற்றரசன் ஜக்கராயன் கொன்று விட்டான். பேரரசன் ஸ்ரீரங்கனுடைய மகன் இராமதேவனைச் சில ராஜ விசுவாசிகள் எடுத்துச் சென்று தலைமறைவாக வளர்த்தனர். அவனைக் கொண்டு வந்து விஜயநகரப் பேரரசின் மன்னனாக அமர்த்தினான் யச்சம நாயக்கன் என்பவன். இதை மறுத்து, காலஞ்சென்ற மாமன்னர் வேங்கடரின் புதல்வன் என்று யாரோ ஒருவனைக் கொண்டு வந்து, அவனே மன்னன் என்று கூறி ஜக்கராயன் கலவரம்செய்தான். யச்சம நாயக்கனுக்கும், ஜக்கராயனுக்கும் பெரும்போர் மூண்டது. தோற்றோடிய ஜக்கராயன், மதுரை மன்னர் [3]முத்துவீரப்பரின் படை உதவியுடன் மீண்டும் கலவரங்களைத் தோற்றுவித்தான். செஞ்சி மன்னனும் அவனுக்குப் படை உதவி அளித்தான். யச்சம நாயக்கனின் பக்கமே நியாயம் இருந்ததால், அவனுக்குத் தஞ்சை இரகுநாத நாயக்கர் படை உதவி அளித்தார். அதற்காக, ஈழம் வந்திருந்த தஞ்சைப் படையினரும் தமிழகம் திரும்பி விட்டனர்...

''தஞ்சைப் படையினர் இங்கிருந்து அகன்றதுமே, விஷமிகள் இங்கே நமக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கத் துவங்கி விட்டனர். மிலேச்சர்களான போர்ச்சுகீசியர்கள் நமக்கு அளித்து வரும் தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. தமிழகத்தில் ஜக்கராயன் படைகளுக்கும் யச்சம நாயக்கன் படைகளுக்கும் காவிரிக் கரையில் [4]தோப்பூர் என்னுமிடத்தில் மாபெரும் போர் நிகழ்ந்தது

1. இரண்டாம் வேங்கடர்
2. இரண்டாம் ஸ்ரீரங்கன்
3. திருமலை நாயக்கரின் மூத்த சகோதரர்.
4. கல்லணைக்கு அருகிலுள்ள இன்றைய தோகூர்.



தேவி. அந்தப் போரில் இந்த வருணகுலத்தான் நிகழ்த்திய வீர சாகசங்களைப் பற்றியெல்லாம் நான் முன்பே காது குளிரக் கேட்டிருக்கிறேன். கரிகாலன் கட்டிய கல்லணையையே உடைத்து நொறுக்க எதிரிகள் தீட்டிய சதியையெல்லாம் முறியடித்து, மாபெரும் வீர சாகசங்கள் நிகழ்த்தியிருக்கிறான், இந்த வருணகுலத்தான். அப்படிப்பட்ட மாவீரனைத்தான் இந்த முறை ஈழம் அனுப்ப வேண்டுமென்று தஞ்சை நாயக்கர் முடிவெடுத்தார் என்றால் அது சாதாரண விஷயமல்ல...'' என்று சங்கிலி மன்னர் கூறிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்டாள் அரசமாதேவி.

''அப்படியானால் விஜயநகரப் பேரரசின் ஆட்சி உரிமைப் போரில் மாபெரும் வெற்றி தேடித் தந்த மாவீரர் வருணகுலத்தாரே இங்கு ஈழத்தின் ஆட்சி உரிமைப் போரிலும் பங்கு கொள்கிறார் என்று சொல்லுங்கள்...'' என்றாள்.

''ஆம் தேவி! இங்கு நான் முறையற்ற வகையில் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றி விட்டதாக ஒரு புல்லர் கூட்டம் தொடர்ந்து பொய்க் கூச்சலிட்டு வருகிறதல்லவா? அவர்கள் வாயை வருணகுலத்தானின் வருகைதான் அடைக்கும். விஜயநகரப் பேரரசு விஷயத்தில், தஞ்சை மன்னர் நியாயம் காக்கப் போரிட்டார் என்பதை அரசியல் அறிவு படைத்த அனைவரும் அறிவர். அவரது படைத்தலைவன் இங்கே அநீதிக்கா ஆதரவாளனாக வருவான்...? நீ வேண்டுமானால் பார், அவன் எதிரிகளின் சதி வலைகளை அறுத்தெறிந்து விட்டு இங்கு வந்து சேருவான். அன்னை வீரமாகாளி, தஞ்சைப் படைத் தலைவனை யாழ்ப்பாண நல்லூருக்குப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பாள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது'' என்றார் சங்கிலி மன்னர்.

கடற் கொள்ளையர்களின் மரக்கலத்திலிருந்து தப்பிச் செல்ல ஏதேனும் உபாயம் இருக்கிறதா என்று விமலதம்மன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே நட்சத்திர மண்டலங்கள் சோபை இழக்கத் தொடங்கி, உதயவேளை சமீபித்துக் கொண்டிருக்கும் அடையாளங்கள் தோன்றத் தொடங்கி விட்டிருந்தன. ஆனால், எப்படித் தப்புவது என்பதுதான் புரியவில்லை. வருணகுலத்தானிடம் பேசி இதுபற்றி ஒரு முடிவெடுக்கலாமென்று நினைத்து அவனை நோக்கினான். அவன் நிச்சிந்தையாக, துருத்திக் கொண்டிருந்த பலகை ஒன்றில் சாய்ந்து, கைகளைத் தலைக்கு அடியில் அணைப்பாக மடித்து வைத்துக் கொண்டு கண்களை மூடியிருந்தான்.

பொழுது நன்றாகப் புலர்ந்தபின், அவர்கள் அனைவரும் கரங்கள் பின்னால் இணைத்துக் கட்டப்பட்ட நிலையில் மேல்

தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கண்காணிப்பாளன் கசையை உருவி, 'சுளீர்...சுளீ'ரென்று சொடுக்கியபடி வரிசையில் நிற்குமாறு கட்டளையிட்டான். வரிசையாக நிறுத்தும் முயற்சியில் சிலரது முதுகில் கசையடி விழவும் செய்தது. காலை வெயில் சுள்ளென்று முகத்தில் அடித்தது.

விமலதம்மன், வருணகுலத்தானை நோக்கி, ''நீ பொங்கி எழுவாய் என்று எண்ணினேன்...'' என்றான்.

''எதற்காக...?'

''உன்னைப் பற்றிய அதீதமான கற்பனைகளை நானும் நிறையக் கேட்டிருக்கிறேன். உன் வீரத்தை நேரில் கண்ட பிறகு அவை உண்மைதான் என்பதை உணரவும் செய்தேன். ஆனால் கொள்ளையர்களிடம் அகப்பட நேர்ந்த நிலையில் நீ எதிர்ப்புக் காட்டாததையும், இப்போது கரங்கள் கட்டப்பட்டபோது கூட நீ பொங்கி யெழாததையும் பார்க்கும் போது, உன்னைப் பற்றி என்னால் சரியாக எதுவும் புரிந்து கொள்ள முடியவில்லை என்றே தோன்றுகிறது'' என்றான் விமலதம்மன்.

வருணகுலத்தான் இதழ்களில் ஓர் வறட்டுப் புன்னகை நெளிந்தது. அதே சமயம் கசையை உருவிச் சுளீரென்று சொடுக்கி ஓசையெழுப்பிய கண்காணிப்பாளன், ''தலைவர் வருகிறார். யாரும் பேசக் கூடாது. மூச்சு விடுகிற சத்தம் கூடக் கேட்கக் கூடாது.....'' என்று எச்சரித்தான்.

திடீரென்று கொம்புகள் ஊதப்படும் சப்தம், பறையொலி, ஏராளமானவர்கள் ஒன்றிணைந்து முழங்கும் 'ஜூம்...ஜூம்ரா' என்பன போன்ற ஒலிகள் அந்தக் கடற் பிராந்தியத்தையே உலுக்கத் துவங்கின. சிறிது தூரம் தள்ளி நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு மரக்கலத்திலிருந்து தான் இத்தனை ஆர்ப்பாட்டங்களும் கேட்டன. ஒரு கோட்டை நகர்வதுபோல் அந்தக் கலம் அசைந்து இந்தக் கலத்தின் அருகில் வந்து நின்றது.

இரண்டு கலங்களும் மிக அருகில் இணைத்து நிறுத்தப்பட்டு, மரப்பலகைகளால் ஒரு திடீர்ப் பாலம் அமைக்கப்பட்டது. அதன் மீது செவ்வண்ணக் கயிற்றுப் பாய் ஒன்றினை விரித்தார்கள். இப்போது இரண்டு கலங்களும் ஒன்றிணைந்து ஓர் அழகிய விசாலப் பரப்பு உருவாகி விட்டது. அடுத்த சில விநாடிகளில் பாதுகாவலர்கள் புடைசூழக் கம்பீரமானதொரு மனிதன் அந்தச் செவ்வண்ணக் கயிற்றுப் பாயின்மீது நடந்து வந்தான்.



அவன்தான் 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேலைக் கடலில் கோழிக் கோட்டிலிருந்து கோவா வரை கடற்பயணிகளை நடுநடுங்கச் செய்து கொண்டிருந்த டொம்பீதுறு ரொட்றிகஸ். போர்ச்சுகீசியர்களுக்கு அவன் பெயரைக் கேட்டாலே அஸ்தியில் ஜுரம் அடிக்கும்.

கடற்கொள்ளைக்காரன் என்ற போதும் டொம்பீதுறு ரொட்றிகஸ், ஒரு பிரதேச மன்னனுக்குரிய சகல ஆடம்பரங்களுடனும் காட்சியளித்தான்.அவன் அந்த மரக்கலத்தினுள் பிரவேசித்ததும் கசை ஏந்திய கண்காணிப்பாளன், ''அனைவரும் மண்டியிட்டு வணங்கி நில்லுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

விமலதம்மனும் மற்றவர்களும் அப்படியே செய்தனர். விமலதம்மன், வருணகுலத்தானை நோக்கினான். அவனும் மற்றவர்களைப் போல் மண்டியிட்டு நிற்பதைப் பார்த்ததும் விமலதம்மனுக்கு வியப்புக்கு மேல் வியப்பாகவும் சங்கடமாகவும் இருந்தது. 'ஒரு சூறைக்காற்று எதனாலோ வீரியம் இழந்து சுருண்டு கிடக்கிறது' என்று எண்ணினான் அவன்.

அவன் இப்படிக் கலங்கிக் கொண்டிருக்கும் போதே அருகே வந்து நின்ற கொள்ளையர் தலைவன் அவர்கள் மீது ஆராய்ச்சிப் பார்வையை ஓட்டினான். பிறகு கண்காணிப்பாளனை அழைத்து, ''இவர்களில் யாரோ ஓர் அரசியல் குற்றவாளியை போர்ச்சுகீசியர்களிடம் ஒப்படைக்கப் போவதாக இவர்கள் கூறியதாகச் சொன்னாயே... யார் அந்தக் குற்றவாளி?'' என்று வினவினான்.

''அதை நான் இன்னும் விசாரிக்கவில்லை. இவன்தான் இவர்களுக்குத் தலைவன்...'' என்று விமலதம்மனைச் சுட்டிக்காட்டிய கண்காணிப்பாளன், ''சொல்... யார் அந்த அரசியல் குற்றவாளி?'' என்று வினவினான்.

விமலதம்மன் வருணகுலத்தானை அடையாளம் காட்டினான். அவன் அருகே வந்து நின்ற கண்காணிப்பாளன், ''யார் நீ? உன் பெயர் என்ன?'' என்று வினவினான்.

இதைக் கேட்கும்போது அவன் ஒரு காரியம் செய்திருந்தான். சுருட்டிப் பிடித்திருந்த கசையை, மண்டியிட்டு அமர்ந்திருந்த வருணகுலத்தானின் முகவாயில் அழுத்தி அவன் முகத்தை முரட்டுத்தனமாக நிமிர்த்தியபடி அவனிடம் கேள்வி கேட்டான். தன் முகவாயை முரட்டுத்தனமாக நிமிர்த்தியவனைச் சினத்துடன் ஏறிட்டு நோக்கினான் வருணகுலத்தான். ஆனால் பதில் எதுவும் கூறவில்லை.

''என்னடா கேட்கிறேன், பதிலே கூறாதிருக்கிறாய்...?'' என்று சினத்துடன் கேட்ட அந்தக் கண்காணிப்பாளன் கசையை ஓங்கி உதறினான்.

விமலதம்மன், ''நான் கூறுகிறேன்'' என்று குரல் கொடுத்தான். ஆனால், கொள்ளையர் தலைவன், ''தேவையில்லை. இங்கே ஒருவனுக்காக இன்னொருவன் பதில் சொல்லக்கூடாது. அவனைப் பேச வைக்கவும் அவன் வாயிலிருந்தே பதிலை வரவழைக்கவும் எனக்குத் தெரியும்...'' என்று கூறினான். பிறகு கண்காணிப்பாளனை நோக்கி, ''காளிநாயர்! அவனை விடு. கொசுவை அடிப்பதற்கெல்லாம் கோபத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கக் கூடாது. அவன் இந்த இடத்தின் அருமையை சிறிது நேரத்தில் உணர்வான். பிறகு கேட்ட கேள்விக்கு மட்டுமல்ல, கேட்காதவற்றுக்கும் தானாகப் பதில் வரும். முதலில் விருந்துக்கு யார் யார் என்று தேர்ந்தெடுக்கலாம் வா...'' என்று அவனை அருகே அழைத்தான்.

காளிநாயர், எரிதழலை இறைப்பதைப் போல் வருணகுலத்தான் மீது பார்வையை வீசிவிட்டுத் திரும்பி நடந்து, தலைவனை வணங்கி நின்றான்.

**டொ**ம்பீதுறு ரொட்றிகஸ் இப்போது ராஜகாமினி மீதும் கேத்தரின்மீதும் பார்வையைப் பதித்திருந்தான். அவனது செவ்வரிகள் படர்ந்த பெரிய உருட்டு விழிகளின் உக்கிரமான பார்வையில் அந்தப் பெண்கள் அச்சமுற்றார்கள் என்றால், அடுத்து அவன், 'விருந்துக்கு என்று தேர்ந்தெடுக்கலாம் என்று கூறியதைக் கேட்டதும் நடுநடுங்கி நின்றார்கள்.

'இந்தக் கொடூரமான கொள்ளையன் கையில் சிக்கி என்ன கதி ஆகப் போகிறோமோ?' என்ற எண்ணம் ராஜகாமினியை மூர்ச்சையடையவே செய்துவிடும் போல் இருந்தது.

ஆனால், டொம்பீதுறு திடீரென்று பார்வையை விலக்கி, விமலதம்மனின் ஆட்களோடு நின்றிருந்த இரண்டு மூன்று போர்ச்சுகீசியர்களைச் சுட்டிக்காட்டி, ''காளிநாயர், அந்த வெள்ளைப் பெருச்சாளிகளை அழைத்து வா. தூக்குமேடை ஆயத்தமாகட்டும்...'' என்றான்.

அடுத்த சில விநாடிகளில் அங்கே ஒரு திடீர்த் தூக்குமேடை தயாராயிற்று. மரக்கலத்தின் மற்றொரு விளிம்பில் இருந்த இரும்பு வளையங்களில் பலமான மூங்கில் கழிகளைத் தூக்கி நிறுத்தி,

R



தூக்குக் கயிறும் அதில் தொங்க விடப்பட்டு, அடியில் மரப்பலகையினால் ஆன மேடை ஒன்றும் நகர்த்தி வைக்கப்பட்டது.

போர்ச்சுகீசியர்களில் ஒருவனுடைய கால் விலங்கைக் கழற்றினார்கள். அவனை இழுத்துச் சென்று அந்த மேடைமீது ஏற்றி, தூக்குக் கயிற்றை அவன் கழுத்தில் மாட்டி விட்டுக் கீழிறங்கிய கொள்ளையர்களில் ஒருவன், கையில் ஒரு நீண்ட வாளை ஏந்தி நின்றான்.

தலைவன் கையசைத்ததும் அந்தப் போர்ச்சுகீசியன் நின்றிருந்த மேடை இரண்டு கொள்ளையர்களால் இழுத்து அப்புறப்படுத்தப்பட்டது. போர்ச்சுகீசியன் மரண ஓலம் எழுப்பியபடி கயிற்றில் ஊசலாடினான். ஒன்றிரண்டு விநாடி தாமதத்துக்குப் பிறகு அவன் இடுப்பில் எட்டி உதைத்த வாளேந்தி நின்ற கொள்ளையன், ஊசலாடும் அந்த உடல் மரக்கல விளிம்பைத் தாண்டிக் கடற்பகுதியை நோக்கிச் செல்லும் போது, சரேலென்று கயிற்றை அறுத்துவிட்டான். அந்த வெள்ளைச் சடலம் கடலின் நீலநீரில் விழுந்தது. மூழ்கிய விநாடிப் போதில் அந்தப் பிரதேசமே குருதிக் கலப்பால் செந்நிறச் சிற்றலைகளால் பரவியது.

இந்தக் கொடூரமான காட்சியைக் கண்டு காலைக்கதிரொளியின் வெம்மையையும் மீறி உடம்பையும் நெஞ்சையும் சில்லென்று ஏதோ ஒன்று தாக்க, உறைந்து போய் நின்ற அந்த அடிமைகளைப் பார்த்துக் கடகடவென்று இடிமுழக்கம் போல் சிரித்த டொம்பீதுறு, ''இந்தப் பகுதியில் சுறாமீன்கள் அதிகம். கடற் சுறாக்களை நாங்கள் தெய்வமாக வழிபடுவது வழக்கம். நீரில் இல்லாது நிலத்தில் இருக்கும் காலத்திலும் கூட நாங்கள் சுறாமீனின் எலும்பை நட்டு வைத்துப் பலி பூஜைகள் இட்டு வணங்குவோம். எங்கள் விரோதிகளை — அல்லது எங்களுக்கு உபயோகமற்ற அடிமைகளை இப்படித்தான் நாங்கள் பலியிடுவது வழக்கம். பொதுவாக நாங்கள் போர்ச்சுகீசியர்களை மட்டுமே எதிரிகளாக எண்ணுகிறோம். மற்றவர்களைக் கொல்வதில் அத்தனை ஆர்வமில்லை. புத்திசாலிகள் இங்கே பிழைத்துக் கொள்ளலாம். ஆனால், அடிமைகளாகத்தான் வாழ வேண்டும்...'' என்று கூறியபடியே மீதமுள்ள இரண்டு போர்ச்சுகீசியர்களையும் தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்லுமாறு கட்டளையிட்டான்.

இப்போது அங்கே இரண்டு கயிற்றுச் சுருக்குகள் தொங்கிக் கொண்டிருந்தன. விமலதம்மன் டொம்பீதுறுவை நோக்கி, ''வீரர்களை வீணாகப் பலியிடுவது உனக்கு அழகல்ல. கொடியவனாக

இருப்பினும் நீ வீரத்தை மதிப்பாய் என்று எண்ணினேன். போர்ச்சுகீசியர்கள் உனக்குப் பகைவர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களுடைய வீரத்துக்கு ஒரு வாய்ப்பை அளித்த பிறகு நீ தண்டித்திருக்கலாம்'' என்றான்.

''ஓ! நீ அப்படிச் சொல்வதானால் அதையும் செய்து பார்த்து விடலாம். நீ ஒரு வீரன் தானே?'' என்று கேட்டு நிறுத்திய டொம்பீதுறு, ''நீயே அவர்களுடன் மோது. யார் வெற்றி பெறுகிறீர்கள் என்பதைப் பார்க்கலாம்'' என்று கூறி, போர்ச்சுகீசியர்களைக் கட்டவிழ்த்து அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

''எங்களையே மோத விடுகிறாயா? ஏன் உங்களில் யாரும் அவர்களோடு போட்டியிடத் துணிந்தவர்கள் இல்லையா?'' என்று வினவினான் விமலதம்மன்.

''பேசாதே, நீ முதலில் உன் வீரத்தை நிரூபி. பிறகு என் ஆட்களுடன் மோதலாம்.....'' என்று கூறிய டொம்பீதுறு, ஒருவனை அழைத்து ஆயுதங்களை எடுத்து வரப் பணித்தான்.

தூக்குமேடைக்குக் கொண்டு செல்லப்பட்ட போர்ச்சுகீசியர்கள் இருவரும் கட்டுகள் அவிழ்க்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர். அவர்களிடம் வாட்கள் தரப்பட்டன. விமலதம்மனுக்கு ஒரு வாளும் கேடயமும் தரப்பட்டன.

கசையேந்தி நின்ற கண்காணிப்பாளன் போர்ச்சுகீசியர்களைப் பார்த்து இப்படிச் சொன்னான்:

''போர்ச்சுகீசியர்களைக் கொல்லாது விடுவது எங்கள் வழக்கம் இல்லை. ஆனால் இன்று விதியைத் தளர்த்தி இந்த வீர விளையாட்டை ஏற்படுத்தியுள்ளோம். விமலதம்மனோடு நீங்கள் தாராளமாக மோதி உங்கள் வீரத்தை வெளிப்படுத்தலாம். வெற்றி பெற்றால் உங்களைக் கரையில் இறக்கிவிட்டு விடுகிறோம்.....''

**வா**ட்போர் துவங்கியது. போர்ச்சுகீசியர்கள், உயிர் தப்ப ஒரேவழி அதுதான் என்ற நிலையில் வாட்களைச் சுழற்றியதால், ஆவேசம் கடுமையாக இருந்தது. விமலதம்மன், 'இவர்கள் நம் நண்பர்கள். நாம் தற்காப்பு முறையில் மட்டும் வாளைச் சுழற்றினால் போதும்' என்று எண்ணியதால் சற்று மெத்தனமாக இருந்து விட்டான். அதன் பலன், வேனிற்காலத்தில் வெடிக்கும் வெள்ளரிப் பழம் போல் ஆனது அவன் மேனி. போர்ச்சுகீசியர்களில் ஒருவனது வாள் விமலதம்மனின் விலாப்புறத்தைச் சற்று ஆழமாகவே பதம் பார்த்துவிட்டது. அடுத்த கணம், அந்த மரக்கலமே அதிரும்படி வீரிட்டுக் கதறியபடி விமலதம்மன் சாய்ந்தான்.

R



டொம்பீதுறு அந்தப் போர்ச்சுகீசியர்களைப் பார்த்து, ''அவனைக் கொன்றுவிடுங்கள்.....'' என்று கட்டளையிட்டான்.

அவர்கள், ''வேண்டாம். நாங்கள் விரும்பவில்லை. வெற்றி பெற வேண்டும் என்பதுதானே நிபந்தனை?'' என்றனர்.

''உங்கள் விருப்பம் இங்கு முக்கியமில்லை. தோற்றவனை முதலில் கொல்ல வேண்டும். பிறகு உங்களுக்குச் சமமான நான்கு வீரர்களுடன் போரிட வேண்டும். அதன் பிறகுதான் வெற்றி தோல்வி கணிக்கப் படும்.''

போர்ச்சுகீசியர் இருவரும் திகைத்தனர். ''இது ஆரம்பத்தில் கூறப் படாத நிபந்தனை...''. என்றனர்.

''இருக்கலாம். உங்கள் இருவரோடு அவன் ஒருவன் போரிட்டிருக்கிறான். அதை நியாயம் என்று நீங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். அதே நியாயத்தின் பேரால் தான் இந்தக் கட்டளை...'' என்று உறுதி புலப்படக் கூறி விட்டான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

'சாத்தானின் நியாயம் இப்படித்தான் அமையும்; மறுத்துப் பயன் இல்லை' என்று எண்ணிய போர்ச்சுகீசியர்கள், விமலதம்மனை வெட்டியெறியத் துணிந்தனர். ஒருவன் தன் வாளைஓங்கியபடி விமலதம்மனை நெருங்கினான். அப்போது ராஜகாமினி மிகுந்த துணிச்சலுடன் பாய்ந்து வந்து, ''இந்த அநீதியை என்னால் அனுமதிக்க முடியாது'' என்று கூறினாள். அந்தப் போர்ச்சுகீசியர்களைப் பார்த்து, ''நன்றி கெட்ட ஈனப் பிறவிகளே... விமலதம்மனைக் கொல்ல எப்படி மனம் துணிந்தீர்கள்?'' என்று கூக்குரலிட்டாள்.

அவளை மேலே பேசவிடாமல் தடுத்த டொம்பீதுறு ரொட்றிகஸ், ''பெண்ணே! ஒதுங்கி நில். என் கட்டளையை நிறைவேற்றத் துவங்கும் அவர்களைத் தடுப்பது குற்றம். மீறினால், மூன்று நாள் கழித்து உனக்குத் தரவிருக்கும் தண்டனையை இப்போதே அளிக்க நேரும்...'' என்றான்.

''என்ன தண்டனை...?''

''மூன்று நாட்கள் நீ என் காமப் பதுமை. அதுவரை உனக்கு ராஜோபசாரம். அதன் பிறகு நாய்கள் நடுவே வீசியெறியப்பட்ட இறைச்சிதான் நீ. ஆடை களைந்து உன் அழகுருவை இந்த மரக்கலப் பணியாளர்கள் நடுவே விட்டு விடுவேன். உன்னை அடைவதற்காக அவர்கள் தங்களுக்குள் இரவு முழுக்க விதவிதமான யுத்தப் போட்டிகளை நிகழ்த்துவர். வெற்றி பெற்றவன் ஒரு

சாமநேரம் உன்னைத் தனியறைக்கு அழைத்துச் செல்வான். மறுபடியும் நீ அவர்கள் முன் நிர்வாண சுந்தரியாக நிற்பாய். மீண்டும் போட்டி நிகழும். அநேகமாகப் பொழுது விடியும்போது உன் உயிர்ப் பறவை விடுதலை அடைந்து, இந்த வேடிக்கைகளை வானத்தில் இருந்தபடி கண்டுகளிக்கும். சூரியோதயத்துக்குப் பின் உன் சரீரத்தைக் கடல் மீன்கள் முத்தமிடுவதைக் கூடக் காணலாம்...''

ராஜகாமினி அப்படியே உறைந்து போனாள். கொடூரமான கொள்ளையர் முன் நிர்வாணமாகத் தான் நிறுத்தப்படும் பயங்கரத்தை நினைக்கவே நெஞ்சு நடுங்கியது. வருணகுலத்தானை மயக்க, கேத்தரினை நிர்வாணமாக்கி நிறுத்த நினைத்த கயமைக்குத் தண்டனையா இது என்று அவள் நெஞ்சே வினா எழுப்பியது.

அவள் அச்சம் ததும்ப ஓர் அபலைப் பெண் போல் வருணகுலத்தானை நோக்கினாள். அதே சமயம் காளி நாயர் பாய்ந்து வந்து அவளைப் பிடித்திழுத்து ஓரம் தள்ளியதுடன், வாளை உயர்த்தி நின்ற போர்ச்சுகீசியனைப் பார்த்து, ''ம்... வெட்டியெறி விமலதம்மனை'' என்று கத்தினான்.

பலத்த காயங்களுடன் பலவீனமுற்று விழுந்து கிடந்த விமலதம்மன், சாவைச் சந்தித்துக் கொண்டிருந்த அந்த நிலையில் மிகுந்த பிரயத்தனத்தோடு தலையைத் திருப்பி, ஏதோ சொல்லத் துடிக்கும் தவிப்போடு வருணகுலத்தானை நோக்கினான்.

வருணகுலத்தானும், ''அவன் என்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறான்...'' என்று குரலெழுப்பியவாறே போர்ச்சுகீசியனை நோக்கி, 'அதுவரை சும்மா இரு' என்பதுபோல் கண்ணால் எச்சரித்தபடி நடக்கத் துவங்கினான்.

''அசையாதே...'' என்ற காளிநாயர் எச்சரிக்கையையோ, ''போர்ச்சுகீசியர்களே, இந்த முரடன் மீதும் உங்கள் வாட்கள் தாராளமாகப் பாயட்டும். கட்டுப்பாட்டை மீறிய இவனை நிராயுத பாணி என்றும் பாராமல் வெட்டியெறியுங்கள்'' என்று டொம்பீதுறு கட்டளை இடுவதையோ சற்றேனும் பொருட்படுத்தாத வருணகுலத்தான், ''என்ன விமலதம்மா! என்னிடம் என்ன கூற விரும்புகிறாய்?'' என்று வினவியவாறு அவன் அருகே குனிந்து நின்றான்.

இரண்டாவது போர்ச்சுகீசியனின் வாள் வருணகுலத்தானின் கழுத்தை நோக்கி நீண்டது.

R

## 11. கடற்போர்

அது கொள்ளையர் மரக்கலம் என்பதையோ, கொடூரமான மனிதன் என்று மேலை கடற்பயணிகளால் வருணிக்கப்படும் டொம்பீதுறு ரொட்ரிகஸ் நின்று கொண்டிருக்கிறான் என்பதையோ, பின்னால் தன் கழுத்தை நோக்கி ஒரு போர்ச்சுகீசியன் வாளை நீட்டிக் கொண்டிருக்கிறான் என்பதைப் பற்றியோ லவலேசமும் சிந்தனை அற்றவனாக விமலதம்மனை நோக்கிக் குனிந்து, 'என்ன கூற விரும்புகிறாய் என்னிடம்?' என்று வருணகுலத்தான் வினவியதும், அவனுடைய துணிவு மிகுந்த இந்தச் செயலை மனத்துள் போற்றிய விமலதம்மன், தன் மரணாவஸ்தைகளைச் சற்று மறந்தவனாகச் சொன்னான்:

''நீ இப்படித் துணிவு கொண்டு எழ வேண்டும் என்றுதான் கூற ஆசைப்பட்டேன். நிறைவேற்றிவிட்டாய். நன்றி. நான் ஒரு சிங்களவன் என்பதும் உன் எதிரியான வன்னியத்தேவனிடம் ஊழியம் புரிபவன் என்பதும் உண்மைதான். ஆனாலும் நான் உன் வீரத்தை நன்கு உணர்ந்தவன். அத்துடன், போர்ச்சுகீசிய ஆதிக்கம் இலங்கையில் பரவுவதில் எனக்கு ஒரு போதும் உடன்பாடு கிடையாது. தமிழன், சிங்களவன் என்றெல்லாம் போர்ச்சுகீசியன் பார்க்க மாட்டான். அவனுக்குத் தேவை இலங்கை மண் முழுவதுமே. இதை நான் வன்னியனிடமே பலமுறை எடுத்துரைத்ததுண்டு... இதோ பார்த்தாயல்லவா, இந்த விசுவாசம் கெட்ட வெள்ளை நாய்கள் என்மீது விழுந்து குதறிவிட்டதை...!

''இவர்களை நீ சும்மா விடக்கூடாது. அதோ பார்... இளவரசி ராஜகாமினி நடுங்குவதை. பாவம், அந்தப் பெண் இந்தக் கொள்ளையர் மரக்கலத்தில் அவமானப்பட்டு மடிய நேராமல் நீதான் காப்பாற்ற வேண்டும். எழுந்து நில், உன் வீரத்தை வெளிப்படுத்து. நீ மனம் வைத்தால், இந்த ஆபத்தான நிலையைத் தலைகீழாக மாற்றிவிட முடியும்...'' என்று கூறினான்.

அதே சமயம், தன் கழுத்தை ஒரு வாள் முனை உரசுவதை உணர்ந்த வருணகுலத்தான், சடாரென்று கீழே சரிந்து மீண்டும் எழுந்து நின்றான். இப்போது அவனுடைய கரங்களைப் பின்னால் இணைத்துக் கட்டியிருந்த கயிற்றைக் காணவில்லை. அதை அவன் எப்படி அறுத்து அகற்றினான் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. அவனுடைய இரும்புக் கரங்களுக்கு முன் இந்தக் கயிறு வெறும் பஞ்சுத் திரிக்குச் சமம் என்பதை எதிரிகள் அறிந்திருக்கவில்லை.

டொம்பீதுறு ரொட்றிகஸ் அறிவித்த தண்டனையைக் கேட்ட விநாடியிலேயே பாதி செத்துப் போன ராஜகாமினி, பரிதாபமாக வருணகுலத்தானை நோக்கிப் பார்வை மன்றாடல் விடுத்திருந்த போதும், கைகள் கட்டப்பட்ட நிலையில் — இத்தனை எதிரிகள் நடுவே அவனால் பெரிதாக எதையும் சாதித்துவிட முடியும் என்று நம்பவில்லை. இப்போது அவன் கட்டறுத்துக் கொண்டு பிடரி சிலிர்த்த சிங்கமென நின்றதும், அவள் கொஞ்சம் நம்பிக்கை வசப்பட்டாள்.

இலக்குத் தவறிய சினத்தாலும், விமலதம்மனோடு சேர்த்து அவன்மீதும் வாளைப் பாய்ச்சலாம் என்று காளிநாயரே கட்டளை யிட்டிருந்ததாலும் அந்த இரண்டு போர்ச்சுகீசியர்களும் ஏக காலத் தில் வாட்களைச் சுழற்றியபடி வருணகுலத்தான் மீது பாய்ந்தனர்.

ஆனால், நொடிப் போதில் அவர்கள் வாட்களை இழக்க நேர்ந்தது. அத்துடன் இடியும் மின்னலும் தங்களைத் தாக்கி நரம்பு மண்டலங்களை அதிரச் செய்வதைப் போல உணர்ந்தனர் — கணப் போதில் கண்கள் இருண்டு, கருத்து மயங்க மரக்கல தளத்தில் சரிந்தனர். அவர்களின் வாள் வீச்சுகளை வெறுங் கையாலேயே தடுத்த வருணகுலத்தானின் அதிநுட்பம் வாய்ந்த போர் முறை — எவ்வளவு சீற்றத்தோடு எதிரி பாய்ந்த போதும், ஆயுத வீச்சை வெகு லாகவமாகத் தவிர்த்துவிட்டு எதிரியின் மணிக்கட்டு மீது அவன் அதிரடிகளைப் பிரயோகித்த விதம் — வாட்களைப் பறித்து எறிந்துவிட்டு அவர்களை மரண மூர்ச்சை அடையச் செய்து வீழ்த்திய விநோதம் — அனைத்தையும் கண்டு பிரமித்துப் போய் நின்றான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

காளிநாயரால் அப்படிப் பிரமிக்கவோ ஓர் அடிமையின் ஆற்றலைச் சிலாகிக்கவோ இயலவில்லை. அவன் சினத்துடன் வருணகுலத்தானின் பின்புறமாகப் பாய்ந்து, கழுத்தில் கசையை வளைத்துப் போட்டு இழுத்தபடி முதுகில் தன் முழங்காலை அழுத்தி, ''மண்டியிட்டு உட்கார். எங்கள் தலைவர் கட்டளையிடா



மல் நீ இங்கே இவர்களுடன் போரிட்டது குற்றம்...'', என்று கூறியபடி மூர்க்கத்தனமாக அவன் தோளைப் பிடித்து அழுத்தி னான்.

அந்த முயற்சி பயனற்றுப் போயிற்று. அவ்வளவு ஆற்றலை யும் அழுத்தத்தையும் ஒரு பாறை மீது காட்டியிருந்தால் கூட, அது பூமிக்குள் புதைந்து போயிருக்கும். ஆனால், வருணகுலத் தான் அசையாமல் நின்றிருந்தான். காளிநாயர் அவனை மண்டியி டச் செய்ய முயன்று தோற்றபின் அவமானமும் சினமும் மேலிட, கசையை உருவிச் சுழற்றிச் சொடுக்க முயன்றான். ஆனால், ஓங்கிய கரம் அப்படியே நின்றுவிட்டது. காரணம், பிடி விலகியதும் வருணகுலத்தான் சுழன்றான். அவனது இடது கால் நொடிப் போதில் உயர்ந்து காளிநாயரின் வலது புஜத்தைத் தேக்கி நிறுத்தியி ருந்தது. அப்படியே மின்னல்வேகத்தில் அது இடம் மாறிச் சுழன்று இடப்புற விலாவிலும் பாய்ந்து இறங்கியது. அடுத்த கணம், டொம்பீதுறுவின் காலடியில் போய் காளிநாயர், பொத்தென்று சுருண்டு விழுந்தான்.

அப்படி விழும்போதே, ''எதிரி அபாயகரமானவன். உடனே அவன் மீது பாய்ந்து வெட்டி வீழ்த்துங்களடா'' என்று அவன் அலறியதால், நாலைந்து கொள்ளையர்கள் சரேலென்று வாட் களை உருவிப் பாய்ந்தனர்.

கொலை ஆவேசத்தோடு பாய்ந்த அந்தக் கொள்ளையர் நடுவே, வருணகுலத்தான் வெற்றுக்கரங்களோடு வீரவேங்கை போல் சிலிர்த்து நின்றான். அவனுடைய புலன் உணர்வுகள் கூர்மையுற்றன. ஓங்கிய வாளோடு அவனைச் சூழ்ந்து வியூகம் வகுத்த கொள்ளையர், 'இத்தனை பேர் இணைந்து தாக்கும் போது இவனால் என்ன செய்துவிட இயலும்... ஒரு வெள்ளாட்டை அறுத்தெறிவது போல் இவன் அங்கங்களை அறுத்தெறிந்து விட லாம்...' என்று எண்ணினர்.

எதிரி பலியாவது நிச்சயம் என்று அவர்கள் நம்பியதால், கொஞ்சம் தங்கள் வீரத்தை வெளிப்படுத்தி மகிழலாம் என்று எண்ணி, அலங்காரமாக வாட்களைச் சுழற்றி வித்தை காட்டியபடி அவன்மீது பாய்ந்தனர். ஆனால், வருணகுலத்தானின் இரண்டு கரங்களும் அதைவிட வித்தை காட்டின. கருநாகங்கள் போல் சீறிச் சுழலும் அந்த நெளிவு சுளிவுகள், பாம்பின் பாய்ச்சலுக்கே இலக்கணம் வகுப்பது போலிருந்தன.

நீண்ட வாட்களை — அவற்றின் கூரிய வீச்சுகளைச் சிறிதும் லட்சியம் செய்யவில்லை அவன்.வாளேந்திய கரங்களின் மணிக் கட்டு, முழங்கை, தோள் என்று குறி பார்த்துக் கொத்தின அவனது மின்னல் நாகக் கரங்கள். பாய்ந்து வரும் வாளுக்கு உறை மாட்டுவது போல் தன் இரண்டு விரல்களைத் தூக்கிக் காட்டு வான். அந்த விரல்களைத் துண்டாக்கிவிடும் வேகத்தில் எதிரி கவனம் செலுத்துகையில் அவனது இடது தோளில், விலாவில் என்று இடிகள் இறங்கும். இதெல்லாம் சொற்ப நேரமே நிகழ்ந் தன. அற்பர்களோடு அதிக விளையாட்டு எதற்கு என்றெண்ணிய வருணகுலத்தான், தடுமாறி விழுந்தவர்களின் தலை மீதும் தோள் மீதும் பாதங்கள் பதியப் பாய்ந்து பாய்ந்து ஒரு விசித்திரக் காளிங்க மர்த்தனம் நிகழ்த்தினான். அந்தப் பாத வித்தையில் எதிரிகளின் வாட்கள் பறந்து பறந்து கடலுக்குள் விழுந்தன. ஒவ்வொருவர் மீதும் ஏறி நரம்புகளை நசுக்கி மிதித்தபடி அவன் குதித்த வேகத் தில் மரக்கல தளம் 'தொம்' 'தொம்' என்று அதிர்ந்தது. ஏழெட்டுப் பேரும் மரண மூர்ச்சையுடன் சரிந்தனர்.

டொம்பீதுறு ரொட்றிகஸ், இந்த அற்புத ஆற்றலைக் கண்டு வியந்து போனவனாக, 'இனி யுத்தம் வேண்டாம்' என்று அறி வித்து, அந்த மாவீரன் யாரென்று விசாரித்தறிய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே காளிநாயர், இரண்டு மூன்று வில் வீரர்களை அழைத்து அம்பு எய்யச் சொன்னான். முதலில் பாய்ந்த இரண்டு அம்புகளை வெகுலாகவமாகப் பிடித்து ஒடித்தெ றிந்த வருணகுலத்தான், அடுத்த அம்புகளை எதிரிகள் வில்லில் பூட்டும் முன் சரேலெனக் குனிந்து, மூர்ச்சையுற்றுக் கிடந்த இரண்டு போர்ச்சுகீசியர்களையும் தூக்கித் தன் முன் நிறுத்தினான். சரமாரியாகப் பாய்ந்த அம்புகள் அனைத்தும் அவ்விரு போர்ச்சுகீசி யர் மீதே செருகின.

இரண்டு கரங்களிலும் மனிதர்களையே கேடயங்களாக்கிச் சுழற்றி, பாயும் அம்புகளைத் தடுக்கும் அந்த விநோதம் டொம்பீது றுவின் விழிகளை எல்லையற்ற வியப்புடன் மேலும் விரியச் செய்த அதே கணம், கீழே சவம்போல் விழுந்து கிடந்த ஒரு கொள்ளையன் திடீரென்று எழுந்து வாளை ஓங்கி, வருணகுலத்தா னின் முதுகில் பாய்ச்ச முயன்றான். நொடிப் போதில் இந்த அசம்பாவிதத்தைக் கவனித்து விட்ட விமலதம்மன், ராஜகாமினி இருவரும் ஒரே குரலில், ''தஞ்சைப் படைத்தலைவரே, பின்னால் பாருங்கள்... ஆபத்து...'' என்று கூவினர்.



இரண்டு கரங்களிலும் பிடித்திருந்த அம்புகள் பதிந்து கிடந்த போர்ச்சுகீசியர்களை அப்படியே தூக்கிச் சுழற்றியபடி வீசியெ றிந்து விட்டு, பின்னால் வாளை ஓங்கியவனின் கரத்தைப் பற்றி இழுத்து அந்த வாளையே பறித்து அவன் மார்பில் ஆழப் பாய்ச்சினான் வருண குலத்தான். அந்தக் கொள்ளையன் எழுப்பிய மரண ஓலம் அதிபயங்கரமாக இருந்தது. அவன் மார்பில் செருகிய வாளை உருவியபடி, ''இதுவரை நான் இங்கு வாள் ஏந்தவில்லை. இதோ வருணகுலத்தான் கையில் வாள் ஆரோகணித்து விட்டது. எத்தனை பேர் வேண்டுமானாலும் வந்து குருதிக் காணிக்கை செலுத்தலாம் — அவர்களை நமனுலகு அனுப்ப நான் சித்தமாக இருக்கிறேன். ஏன் திடீரென்று அனைவரும் சாதுக்களாகி விட் டாற் போன்று நிற்கிறீர்கள்.....?'' என்று குரல் கொடுத்தான் வருணகுலத்தான்.

''நான்தான் அவர்களைத் தடுத்துள்ளேன். போர் நின்றுவிட் டது...'' என்றான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

''இங்கு நடந்து போரே அல்ல. விட்டில் பூச்சிகள் விளக் கோடு யுத்தம் நிகழ்த்த முடியாது. அறியாமையால் அவை தீக்கொ ழுந்தில் விழுந்து மாய்கின்றன. வாள் பிடித்து வருவதாலேயே மனித மந்தைகள் வீரர் கூட்டமாகிவிட முடியாது டொம்பீதுறு ரொட்றிகஸ்...'' என்றான் வருணகுலத்தான்.

''எங்கள் தலைவர் பெயரை இத்தனை நிர்ப்பயமாக உச்சரித்த ஒரே காரணத்துக்கே உன்னை நாங்கள் பீரங்கி முன் நிறுத்திச் சுட்டுப் பொசுக்கிவிடுவோம் ஜாக்கிரதை...'' என்று கூவினான் காளிநாயர்.

அவனைச் சுட்டெரிப்பதுபோல் நோக்கிய டொம்பீதுறு ரொட்றிகஸ், ''காளி! நீ எல்லை மீறுகிறாய். தஞ்சைப் படைத்த லைவர் என் நண்பர். நண்பரோடு நான் உரையாடும்போது மரியாதையின்றி நீ வார்த்தையாடுவதும் கூடத் தண்டனைக்குரிய துதான். முதலில் நடந்த தவறுகளுக்கும், உன் அதிகப் பிரசங்கித்த னமான வார்த்தையாடலுக்கும் நம் நண்பரிடம் மன்னிப்புக் கேள்.....ம்...'' என்று அதட்டினான்.

காளிநாயர் அந்த மரக்கல சட்ட விதிகளுக்கு உட்பட்டு, தலைவன் வருணகுலத்தான் முன் மண்டியிட்டு மன்னிப்புக் கோரினான். திடீரென்று அந்தச் சூழ்நிலை இப்படி மாறியதை ராஜகாமினியால் நம்பவே முடியவில்லை. வருணகுலத்தானும் வியப்பு வசப்பட்டவனாய், ''இதென்ன நாடகம்? நான் எப்போது உனக்கு நண்பனானேன்?'' என்று டொம்பீதுறுவைப் பார்த்து வினவினான்.

''தாங்கள் தஞ்சைப் படைத்தலைவர் என்று அறிந்த மறுகணமே நான் உங்கள் நண்பனாகிவிட்டேன். ஆரம்பத்திலேயே தாங்கள் யார், என்ன என்ற விவரங்களைச் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லாததால் தான் இந்த அசம்பாவிதங்கள்... நடந்தவற்றுக்கு நானும் கூட வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை மன்னர் எந்த அளவு ஈழ மாமன்னர் சங்கிலி குமாரருக்கு ஆதரவாளரோ, அதே அளவு நானும் ஆதரவாளன். போர்ச்சுகீசியர்களை எதிர்த்துப் போரிடும் நிலை வந்தால், சங்கிலி மன்னருக்கு இந்த மேலைக் கடல் பரப்பில் நான் உருவாக்கி வைத்திருக்கும் மாபெரும் கடற்படை பெரிதும் உதவும். வாருங்கள் நண்பரே, மற்ற விவரங்களை என் அறைக்குச் சென்று பேசலாம்'' என்று கூறி, வருணகுலத்தானின் தோளில் கை போட்டு அழைத்துச் சென்றான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

**ரா**ஜகாமினி, நெஞ்சில் நெருப்பு மழை பொழிவது போல் துடித்துக் கொண்டிருந்தாள். எத்தனை கொடூரமான ரணகளம் உருவாகியிருந்தது. எல்லாம் நொடிப் போதில் தலைகீழாக மாறி விட்டதே...! என்று எண்ணி யெண்ணி மனம் மாழ்கினாள் அவள். கொள்ளையர்கள் கையில் சிக்கி என்ன அவமானங்களெல்லாம் படநேருமோ என்று அஞ்சியிருந்த அவள், இப்போது தனி அறை ஒன்றிலே மிகுந்த மரியாதையுடன் கொண்டு வந்து விடப் பட்டிருந்ததால் நிர்ப்பயமாக இருந்தாள். ஆனால், 'டொம்பீதுறு ரொட்றிகஸ் தஞ்சை படைத் தலைவனுக்கு நண்பனாகி விட்டானே! அவனுடைய கடற்படை சங்கிலி மன்னனுக்கு உதவப் போகிறதாமே... கதை இப்படி முற்றிலும் புதிய கோணத்தில் திரும்பிவிட்டதே..... என்ன செய்யலாம்?' என்று அரசியல் கவலைகளால் மிகுந்த ஆயாசமடைந்தாள்.

கேத்தரின் கூட அதே அறையில்தான் விடப்பட்டிருந்தாள். ஏற்கெனவே போர்ச்சுகீசிய ஆடவர்களுக்கு நேர்ந்த கதியைப் பார்த்துத் தன் நிலை என்ன ஆகப் போகிறதோ என்ற பயத்தாலேயே பாதி செத்துப் போயிருந்தாள் அவள். இப்போதுதான் அவள் நெஞ்சில் நிம்மதி மூச்சு இழைந்தது. ஆனால் ராஜகாமினி மட்டும் ஏன் இத்தனை குழப்பத்தோடும், கடுகடுப்போடும் இருக்கிறாள் என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை.

அவர்களுக்கு நல்ல உணவுகள் அளிக்கப்பட்டன. பணியாளர்கள் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டனர். ஆனால் அவர்களிடமிருந்து தகவல் மட்டும் எதுவும் கேட்டறிய முடியவில்லை. ஓய்வெடுத்துக் கொள்ள மென்மையான பஞ்சணை பரப்பிய



மஞ்சங்கள் அந்த அறையில் கிடந்தன. நேரம் போய்க் கொண்டேயிருந்தது. அவர்கள் உண்டு, உறங்கி இளைப்பாறினர். மாலைப் போதானதும் ஒரு பணியாள் வந்து ராஜகாமினியை வருணகுலத்தான் அழைப்பதாகக் கூறி, இணைப்புப் பாலம் வழியாக அடுத்த மரக்கலத்துக்கு அழைத்துச் சென்றான். அது டொம்பீதுறு ரொட்றிகஸின் பிரத்யேக மரக்கலம். அங்கே, தஞ்சைப் படைத்தலைவன், விசேஷ அறையில் புத்தாடை அணிந்து, புதிய பொலிவுடன் கம்பீரமாக அலங்கார ஆசனமொன்றில் அமர்ந்திருந்தான். அரியணை என்றே சொல்லத்தக்க மற்றோர் ஆசனத்தில் டொம்பீதுறு ரொட்றிகஸ் வீற்றிருந்தான். அந்த அறையின் சூழல் ஓர் அரண்மனையின் கொலு மண்டபத்துக்கு இணையானதாக இருந்தது. கடலில், மிதக்கும் அரண்மனை ஒன்றையேதான் நிர்மாணித்துக் கொண்டிருந்தான் டொம்பீதுறு ரொட்றிகஸ். அங்கே பல்வேறு நாடுகளைச் சேர்ந்த இளம் பெண்கள் கூட பணிபுரிந்து கொண்டிருந்தனர்.

''பெண்ணே! உன் பெயர் என்ன என்று கூறினாய்?'' என வினவினான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

''ராஜகாமினி, நான் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளவரசி'' என்று கூறி, தன்னைப் பற்றிச் சிறிது விரிவாக அறிமுகம் செய்து கொள்ள முயன்றாள் அவள். தஞ்சைப் படைத்தலைவன் யார் என்ற விவரம் தெரிந்ததும் அவனுக்கு மரியாதைகள் கிடைத்தது போன்று, தான் யார் என்பதை அறிந்தவுடன் டொம்பீதுறு ஒரு வேளை மரியாதை காட்டக் கூடும் என்பது அவள் எண்ணமாயிருந்தது.

ஆனால், டொம்பீதுறு ரொட்றிகஸ் தன் இடக்கரத்தை உயர்த்தி, அவளை மேலே பேசவிடாது தடுத்தான். பிறகு, ''உன் குடும்ப வரலாறு எனக்குத் தேவையில்லை. நீ அந்த முட்டாள் வன்னியத்தேவனின் கைப்பாவை. நான் கொழும்புக் கடல் பிரதேசத்தில் பிரவேசிக்காது இருந்திருந்தால், நீ இந்த மாவீரரை போர்ச்சுகீசியர்களிடம் கொண்டுபோய் ஒப்படைத்திருப்பாய். அந்த வெறிபிடித்த மிலேச்சர்கள் இந்த மாவீரரை வேட்டையாடத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நல்லவேளை, தெய்வம் அவரை என் கரங்களில் ஒப்படைத்துள்ளது. நான் இது பற்றிப் பேசவல்ல உன்னை இங்கே அழைத்தது...'' என்றான்.

ராஜகாமினி அச்சத்தை உதறிவிட்டுக் கலகலவென நகைத்தாள். பிறகு, ''நீ அழைத்தல்ல நான் இங்கு வந்திருப்பது. தஞ்சைப்படைத்தலைவர் அழைத்து வரச் சொன்னதாகவே என்னி

டம் கூறப்பட்டது. காலையில் நீயே கொல்லத் துணிந்தாய் இந்த மாவீரரை, இப்போது என்னென்னவோ புகழுகிறாய்...'' என்று இறுமாப்புடன் கூறினாள்.

''அப்போது நடந்தது அவர் யாரென்பது தெரியாததால் நிழ்ந்த தவறு. அவர் ஒன்றும் உன்னைப் போல் சுய தம்பட்டம் அடித்துக் கொள்ளவில்லை. ஒரு வகையில் நடந்ததனைத்தும் நல்லதே. அதனால்தான், மேலைக் கடலில் திரியும் நான், எந்த மாவீரருடைய வீர சாகசங்களைச் செவி குளிரக் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தேனோ அந்த மாவீரரின் அற்புத ஆற்றலைக் கண்குளிரவும் இன்று கண்டு மகிழ முடிந்தது. அவருக்கு நீ இழைத்த வஞ்சகம் பற்றி அறிந்ததும், உனக்கு இந்த மரக்கல வழக்கப்படியான தண்டனையை அளிக்கத் தீர்மானித்தேன். ஆனால், அவர்தான் அதைத் தடுத்து விட்டார். அத்துடன் உன்னை அழைத்து, விமல தம்மன் இறந்து போன தகவலையும் தெரிவிக்க விரும்பினார்...'' என்று கூறினான் டொம்பீதுறு.

''என்ன...விமலதம்மன் இறந்துவிட்டானா?'' என்று வீரிட்டாள் ராஜகாமினி.

''ஆமாம். மருத்துவ முயற்சிகள் பலனளிக்கவில்லை. போர்ச்சுகீசியர்களின் வாட்கள் விமலதம்மனின் விலாப்புறத்தில் ஆழமாகப் பாய்ந்திருந்ததால், ரத்த சேதாரம் அதிகமாகிவிட்டது. மூர்ச்சித்த நிலையிலேயே நெடுநேரம் கிடந்த அவன் சற்று நேரம் முன்புதான் இறந்து போனான்...'' என்றான் வருணகுலத்தான்.

''இப்போது என் நிலை...'' என்று சந்தேகம் எழுப்பினாள் ராஜகாமினி.

''அதை நீதான் தெரிவிக்க வேண்டும் பெண்ணே. கடற்கொள்ளையர்களாகிய எங்களிடம் சிக்கிய பிறகு யாரும் தப்ப முடியாது. உன் மரக்கலம் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டாயிற்று. விமலதம்மனும் போர்ச்சுகீசியர்களும் உயிருடன் இல்லை. ஏனைய ஊழியர்கள் இப்போது எங்கள் அடிமைகளாக்கப்பட்டு விட்டனர். இந்த நிலையில் நீ என்ன செய்யப் போகிறாய் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள ஆவலாயிருக்கிறோம். தஞ்சைப் படைத்தலைவரை மட்டும் நாங்கள் இன்றிரவு யாழ்ப்பாணக் கரைக்கு அனுப்ப முடிவு செய்தாயிற்று...'' என்றான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

''அப்படியானால் என்னையும் அவருடன் அனுப்ப ஏற்பாடு செய்யலாமே...?'' என்ற ராஜகாமினி, 'கொஞ்சம் நீங்களும்



எனக்காகப் பரிந்து பேசுங்களேன்' என்பதுபோல் வருணகுலத்தானை நோக்கிப் பார்வையால் மன்றாடினாள்.

''அவரும் அப்படித்தான் சொல்கிறார். ஆனால், வெறும் இரக்க சிந்தை கொண்டு உன்னை விட்டுவிட நான் விரும்பவில்லை. தஞ்சைப் படைத்தலைவரை நீ தந்திரமாகச் சிறைப்பிடித்துச் சென்றாய்; போர்ச்சுகீசியர்களிடம் அவரை ஒப்படைத்து மிரட்டிப் பணிய வைக்க எண்ணினாய். ஆனால், அது எதுவும் நிறைவேறவில்லை. இப்போது உன் விடுதலைக்கே அவர் வந்து என்னிடம் பரிந்து பேச வேண்டிய நிலை உருவாகிவிட்டது.

''இதையெல்லாம் நீ உணர வேண்டும். எந்த நிலையிலும் தஞ்சைப் படைத்தலைவருக்கு எதிரான காரியங்களை நீ செய்யக் கூடாது. இதற்கான உறுதி மொழியை நீ எனக்குத் தருவதானால்தான் உனக்கு விடுதலை. கரை இறங்கிய பிறகு காலை வாரினால் இவனுக்கு எங்கே தெரியப் போகிறது என்று எண்ணாதே. நான் நீரிலும் நிலத்திலும் வாழ்கிற ராட்சஸன். என்ஆட்கள் இலங்கை மண்ணில் ஏராளம். உன் நடவடிக்கைகள் எனக்கு அவ்வப்போது தெரிந்துவிடும் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு சத்தியம் செய்...'' என்றான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

அந்தக் கடல் ராட்சஸனிடமிருந்து விடுதலை பெற ஒரு மார்க்கம் கிடைத்ததே என்ற மகிழ்வுடன் ராஜகாமினி சத்தியம் செய்து தந்தாள்:

அவள் பூநகரி மாளிகைக்கே செல்லக்கூடாது; வன்னியத்தேவனுடன் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது. யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருக்க வேண்டும் என்றெல்லாம் கடுமையான நிபந்தனைகள் விதித்தபின் டொம்பீதுறு ரொட்றிகஸ் அவளை வருணகுலத்தானுடன் அனுப்ப இசைவு தெரிவித்தான்.

ஆனால், அன்று பின்னரவில் யாழ்ப்பாணக் கரையோரம் அவர்கள் வந்திறங்கியதும் அங்கே நிலைமை வேறாக இருந்தது. வருணகுலத்தான், அந்த நிபந்தனைகள் எதையும் வலியுறுத்தாமல் ராஜகாமினியை அவள் இஷ்டம்போல் செல்ல அனுமதித்தான். அவளோ, காதல் வலையைக் கையிலேந்தி நின்றாள்.

# 12. வன மோகினி!

**யா**ழ்ப்பாண தீபகற்பம் முழுவதும் ஒரு செய்தி பரவியிருந்தது. அது, 'தஞ்சைப் படைத்தலைவன் இறந்துவிட்டான்' என்பதுதான்.

பூநகரியிலிருந்து வன்னியன் அனுப்பிய மரக்கலம் கொழும்புக்குப் போய்ச் சேரவில்லை என்பதும், கடற்கொள்ளையர்கள் அதைத் தாக்கித் தீவைத்து அழித்து விட்டனர் என்பதும் பரதவர்கள் மூலம் கரையோரங்களில் விசேஷச் செய்தியாகப் பரவி, வன்னியன் செவிகளை எட்டியது.

பூநகரியிலிருந்து கடலில் ஒன்றரைக் காத தூரத்தில்தான் இந்த அசம்பாவிதம் நிகழ்ந்திருந்ததால், உடனே வன்னியனின் கடற்படை வீரர்கள் விரைந்து சென்று சம்பவம் நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்டு வந்திருந்தனர். எரிந்து கருகி உடைந்து போன சில மரப் பலகைகளையும், சேதமடைந்து மிதக்கும் பாய்மரத் துண்டுகளையும் தான் அவர்களால் பார்க்க முடிந்திருந்தது.

அடியோடு அந்த மரக்கலம் அழிந்து போய் விட்டிருந்ததால், யாரும் தப்பியிருக்க வாய்ப்பில்லை என்றும், பொன் — பொருள் — வாணிபச் சரக்குகள் ஏதுமில்லாததால் எரிச்சலுற்ற கொள்ளையர் தீவைத்து விட்டுச் சென்றிருக்கக்கூடும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

யாழ்ப்பாணக் கரையோரக் கடலில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் அடிக்கடி நிகழ்வதில்லை. கடற் கொள்ளையர், கேரளக் கடற்பகுதியில்தான் கோவாவிலிருந்து வரும் மரக்கலங்களைத் தாக்குவது வழக்கம். அவர்கள் மன்னார் குடாக் கடலில் பிரவேசிப்பதில்லை என்று கூடச் சொல்லலாம். என்னும் டொம்பீதுறு ரொட்றிகஸ் ஒரு கடல் ராட்சஸன். அவன் சில சமயங்களில் கொழும்பு வரை வந்து கடலோர ஊர்களில் திடீர்ப் பிரவேசமும், தீவட்டிக் கொள்ளையும் நிகழ்த்துவது உண்டுதான். அவன் தான்



இந்த மரக்கலத்தையும் தாக்கி நெருப்பிட்டிருப்பான் என்று அனைவரும் ஊகித்தனர்.

வன்னியனின் ஒரே கவலை, இளவரசி ராஜகாமினியும் இந்த விபத்தில் மாண்டு போயிருப்பாளே என்பதுதான். அவள் பெயரைச் சொல்லி இனி போர்ச்சுகீசியர் தயவை நாட முடியாது போய்விடுமோ என்ற அச்சம் அவனை வதைத்தது. ஆட்சி பீடக் கனவுகள் அவனை மிகவும் அலைக்கழித்தன. நெடுநேர யோசனைக்குப்பின், 'ஒழிந்தான் தஞ்சைப் படைத்தலைவன். அது போதும் நமக்கு. இனி தஞ்சைப் படையினர் எத்தனை ஆயிரம் பேர் நேராகவோ அல்லது ரகசியமாகவோ யாழ்ப்பாணத்துக்கு வந்தாலும் ஒரு பயனும் இல்லை. சங்கிலி மன்னரே இன்னும் காணாத வருணகுலத்தானை நான் கண்டு உரையாடிவிட்டேன்; ஒழித்தும் கட்டிவிட்டேன். இதை வைத்தே எத்தனை கதை வேண்டுமானாலும் கட்டி விடலாம்...' என்று எண்ணிய அவன், 'தஞ்சைப் படைத்தலைவன் மாண்டு போனான்' என்ற செய்தியை நாலா புறங்களிலும் பரவவிட்டான். இதற்கென்றே அவன் ஏவிய ஆட்கள் கிராமம் கிராமமாகச் செய்தி பரப்ப ஓடினர்.

மற்றொரு புறம் வன்னியத்தேவன் கலவரத்தையும் தூண்டிவிட்டிருந்தான். அவனுடைய ஆட்களை ஏவி எங்கும் கொள்ளையடிப்பு, தீ வைத்தல், ஆடு — மாடுகளைக் கவர்தல் என்று செய்ய வைத்துவிட்டு, அவற்றைத் தஞ்சைப் படையினர்தாம் செய்வதாகச் சேதி பரப்பினான். தலைவன் மாண்டு போன ஆத்திரத்தில் தஞ்சைப் படையினர் தகாத காரியங்கள் செய்வதாகக் கூறி, உடனே மக்கள் திரண்டு சென்று, 'சங்கிலி மன்னரே, தஞ்சைப் படையினரை யாழ்ப்பாணத்திலிருந்து உடனே விரட்டியடிக்க வேண்டும்' என்று கோஷம் எழுப்ப வேண்டும் எனவும் தூண்டி விட்டான்.

யாழ்ப்பாண நல்லூர் கோட்டையில் சங்கிலி மன்னருமே கூட மிகுந்த விசனமடைந்தவராகக் காணப்பட்டார். காதில் விழுந்த செய்திகளெல்லாம் அவரைக் கவலைக் கடலில்தான் தள்ளிக் கொண்டிருந்தன. அவர் அரசவைக்கு வேல்மாறனை அழைத்து வரச் செய்து, மிகவும் கடுமையாகக் கோபித்துக் கொண்டார்.

''தஞ்சைப் படைகளே இன்னும் வந்து சேர்ந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், தஞ்சைப் படையினர் தகாத செயல்கள் புரிவதாகச் செய்தி வந்த வண்ணமிருக்கின்றன. இதை முகாந்தரமாகக் கொண்டு, கலவரத்தை அடக்க நாங்கள் உதவுகிறோம் என்று கூறிக் கொண்டு போர்ச்சுகீசியப் படை வந்து

நின்றால் என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை. தஞ்சைப் படைத்தலைவன் மாண்டு போனதாக வேறு தகவல். இதற்கெல்லாம் நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் வேல் மாறா...?'' என்றார் சங்கிலி மன்னர்.

''தஞ்சைப் படை என்பது வெறும் ஆட்டு மந்தையல்ல; வீரப் புலிகளின் கூட்டம் அது. அந்தத் தியாக மறவர்கள் இது போன்ற ஈனச் செயல்களில் ஒருபோதும் ஈடுபட மாட்டார்கள். உலகத்தின் எந்த மூலைக்குச் சென்றிருந்தாலும் சரி, தஞ்சைப் படைத்தலைவர் நாளைக் காலையில் இந்த ஈழ மண்ணில் இருப்பார். அவர் மாண்டு போனதாக நான் கருதவில்லை. நரிகள் வலைவிரித்து அந்த நாயகனை வீழ்த்த முடியும் என்று நம்புவதற்கு நான் ஒன்றும் அவரை அறியாதவனல்ல. அவருடைய ஆற்றல் என்ன என்பதை நாளையே இந்த அரசவை அறியத்தான் போகிறது. வருகிறேன்'' என்று கூறிவிட்டு அவன் கம்பீரமாக நடந்து அந்த அரசவையை விட்டு வெளியேறினான்.

''அப்பா! என்னவொரு அழுத்தம் திருத்தமான நம்பிக்கை சுடர் விடும் பேச்சு! ஒரு வேளை அந்த வருணகுலத்தான் பெரிய மாயாவியாக இருப்பானோ!'

அரசரும், அவையும் வருணகுலத்தான் எப்படியேனும் வந்து சேர்ந்தால் சரி என்று நம்புவதைத் தவிர வேறு வழியிருக்க வில்லை. அவை கலைந்தது. சங்கிலி மன்னர் தனியறை நாடிச் சென்று நெடிய யோசனையில் மூழ்கினார்.

நெடுநேரப் பயணத்துக்குப்பின், இரவு துவங்கும் வேளையில் வேல்மாறன் யாழ்ப்பாண நகருக்கு அப்பாலுள்ள அடர்ந்த வனப்பகுதி ஒன்றை அடைந்திருந்தான். முட்புதர்கள் மண்டிய ஓர் ஒற்றையடித் தடத்தில் சிறிது நேரம் பயணம் செய்தபின், வனத்தின் மையப் பகுதியிலிருந்த காடுகிழாள் கோவிலின் முன் மண்டபத்தில் போய் அமர்ந்து வெகு நேரம் யாருக்காகவோ காத்திருந்தான்.

**ம**னித சஞ்சாரமற்ற அந்தப் பிரதேசத்தில் காடு கிழாள் கோவிலின் முன்னுள்ள திடல் வெளியில் சமீபத்தில் நிறையப் பேர் வந்து பொங்கலிட்டுப் பூஜை செய்ததற்கு அடையாளமாக மூன்று கல் கூட்டி மூட்டிய அடுப்புகள் நிறைந்து கிடந்தன.

அன்றும் முன்னிரவு கடந்ததும் அந்த ஆளரவமற்ற காட்டில் திடீரென்று இரண்டு மூன்று பைராகிகள் வந்து கல்லடுப்பு கூட்டித் தீமூட்டிப் பொங்கல் பொங்கும் காரியங்களில் ஈடுபட்டனர்.



அதற்கு வசதியாக நீர் நிறைந்த பெரிய தடாகம் ஒன்றும் அருகிலேயே இருந்தது.

கோவில் மண்டபத்தின் ஒரு மூலையில் தூணில் சாய்ந்து, கால்களை நீட்டிக் கொண்டு, உட்கார்ந்திருக்கிறானா படுத்திருக்கிறானா என்பது புரியாத நிலையில் இருந்த வேல்மாறன் கண்களை மூடிக் கொண்டிருந்தான். உறங்குகிறானா, விழித்திருக்கிறானா என்பதை மற்றவர் புரிந்து கொள்ள முடியாத ஒரு நிலை அது. ஆனால், வந்தவர்களோ அங்கே அப்படியொருவன் இருப்பதையே கவனியாதவர்கள் போலத் தங்கள் காரியங்களில் மும்முரமாயிருந்தனர். நேரம் செல்லச் செல்ல மேலும் பலர் இருவராக, நால்வராக சின்னச் சின்னக் குழுவாக வந்து குவிந்து கொண்டேயிருந்தனர். ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே பொங்கலிட்டு முடித்ததும் காளிக்கு முன் படையலிட்டு நிவேதனம் செய்துவிட்டு, அங்கேயே ஓர் ஓரமாக உட்கார்ந்து உண்டு முடித்தனர்.

ஒரு குழுவுக்கும் இன்னொரு குழுவுக்கும் எந்தச் சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளவும் இல்லை. ஆனால், நள்ளிரவுக்குள் எல்லாக் குழுவினரும் பொங்கல் பூஜை போஜனங்கள் முடித்துக் கொண்டு விட்டதால், காளி கோவில் மண்டபத்தில் எல்லோரும் ஒன்றாக வந்து அமர்ந்தனர். அதில் ஏதோ ஓர் ஒழுங்கு புலப்பட்டது. யாருமே கட்டளை எதுவும் இடவில்லை என்ற போதும். அவர்கள் ஒரு பொதுவான கட்டளையின் கீழ் செயல்படுவது போலவே இருந்தது.

ஒன்றாகக் கூடிப் பிரார்த்தனை புரிவதற்கு அமர்வது போல் அவர்கள் அமர்ந்ததும் ஒருத்தன் கோயிலினுள் சென்று, ஓர் அகல் தீபத்தை எடுத்து வந்து மண்டபத்தின் தூண் ஒன்றில் தீபம் வைக்க வாகாக இருந்த ஓரிடத்தில் வைத்துத் தூண்டிப் பிரகாசப்படுத்தினான். அப்போது, அதுவரை மண்டபத்தின் ஒரு மூலையில் உறங்குவது போல் சாய்ந்து கொண்டிருந்த வேல்மாறன் எழுந்து வந்து அந்த அகலின் வெளிச்சத்தில் நின்றான். இப்போது அவனை அனைவராலும் நன்கு பார்க்க முடிந்தது.

''நண்பர்களே! நாம் ஏற்கெனவே திட்டமிட்டபடி நீங்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களை நன்கு அறிந்து வந்திருப்பீர்கள் என்றெண்ணுகிறேன். கிராமங்கள் தோறும் யாத்திரிகர்கள் போல் நடந்து சென்று, உண்மையான நிலவரங்களை அறிந்து கொள்ளவும், வழித்தடங்கள் — எதிரிகளின் நடமாட்டம் — அவர்களின் விஷம உத்திகள் — அவர்களின்

இருப்பிடங்கள் பற்றிய தகவல்கள் — போர் துவங்கினால் நாம் என்ன செய்ய வேண்டும் — எப்படி எதிரிகளைச் செயலிழக்கச் செய்வது போன்ற விவரங்களையெல்லாம் நம் படைத்தலைவர் கட்டளைப்படி சேகரித்திருப்பீர்கள்.

"சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் இந்தக் காடுகிழாள் கோயிலையே நாம் சந்திக்குமிடமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அவர்தான் கூறியிருந்தார். முன்பே நாம் இப்படி இங்கே சந்தித்துப் பல செய்திகளையும் பரிமாறிக் கொண்டிருந்தோம். இப்படி நாம் நிதானமாகவும் அழுத்தமாகவும் முன்னெச்சரிக்கையுடனும் பல காரியங்களை நம் படைத்தலைவர் கட்டளைப்படி செய்து கொண்டிருந்தும் ஈழவேந்தர் சங்கிலிகுமாரர் நம்மை நம்ப மறுக்கும் சூழ்நிலைகள் உருவாகிவிட்டன. தஞ்சைப் படைகளால் தமக்கு எந்த உதவியும் கிடைக்கப் போவதில்லை என்ற முடிவுக்கே வந்துவிட்டார். அத்துடன், தஞ்சைப் படைத்தலைவர் மாண்டு போனதாகவும், படை வீரர்கள் முறைகேடாக மக்கள் நடுவே கலவரம் நிகழ்த்துவதாகவும் கூறப்படும் வதந்திகளையும் அவர் நம்பத் துவங்கிவிட்டார்.

"இதற்கெல்லாம் ஒரே காரணம், நமது படைத்தலைவர்தான். இணையற்ற வீரராகவும் போர்த் தந்திரங்களில் மேதையாகவும் உள்ள அவர் இப்படி எதிரிகளின் குகையில் போய்த் தன்னந்தனியராக நுழைந்தது நமது துரதிர்ஷ்டம் என்பதைத் தவிர வேறென்ன சொல்வது? சங்கிலி மன்னரின் பரம எதிரியான வன்னியத்தேவன் அவரை என்ன செய்தான் என்றே தெரியவில்லை. என்ன ஆனாலும் சரி, நாளை அவர் நம்மிடம் வந்து சேருவார் என்று நான் மன்னரிடம் வீரம் பேசிவிட்டு வந்து விட்டேன். கலவரங்கள் நிகழும் இந்த வேளையில் நாம் மறைந்திருந்தும் பயனில்லை. வெளிப்படையாகத் தோன்றி, எதிரிகளை முறியடிக்கலாமென்றால் நமது படைத்தலைவர் இங்கு இல்லை. என்ன செய்யலாம் என்பது குறித்து நாம் இன்று பேசி முடிவெடுத்தாக வேண்டும்." பேசி முடித்தான் வேல்மாறன்.

அவனுடைய இந்த நீண்ட பேச்சை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அவர்களுள் ஒருவன் எழுந்து, "உப தலைவரே! இதில் யோசிக்க என்ன இருக்கிறது? தலைவர் ஸ்தானத்தில் நீங்கள் இருந்து உத்தரவிடுங்கள். இனி நாம் மறைந்திருந்து பயனில்லை. போர் என்று துவங்கி விட்டால் நாம் அதை எதிர்கொண்டுதானே ஆகவேண்டும். அதைத்தானே நமது படைத்தலைவரும் விரும்புவார்" என்றான்.



"நீ சொல்வது நியாயந்தான். ஆனால், இப்போது நடப்பது போரல்ல; கலவரம். அதுவும் திட்டமிட்டு நடத்தப்படுகிறது. இதில் நம்மால் என்ன செய்ய முடியுமென்று என்னால் தீர்மானிக்க இயலவில்லை. நமது படைத்தலைவர் வந்து சேர்ந்தாலன்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அவர் இட்டிருந்த கட்டளைப்படி தஞ்சைப் படைவீரர்கள் ஐயாயிரம் பேரும் காரைத் தீவு வழியாகவும், முல்லைத் தீவு வழியாகவும் கடலோரக் காடுகள் மூலமாகவும் யாழ்ப்பாண நாட்டிற்குள் ஊடுருவியிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தலைவர் கட்டளையில்லாமல் அவர்கள் வெளிப்படவே மாட்டார்கள். அவர்கள் இங்கே எப்படி, எந்தச் சமயத்தில் ஒன்று கூடப் போகிறார்கள் என்பதைப் பெரிய மர்மமாகவே வைத்துவிட்டார் நமது படைத்தலைவர். போர்த் திட்டங்கள் முழுவதும் அவர் இங்கு வந்து சங்கிலி மன்னரோடு ஆலோசித்த பிறகே வகுத்து அறிவிப்பதாக இருந்தது. இதனாலெல்லாம்தான் நான் இப்போது பெரிதும் குழம்பித் தவிக்கிறேன். என்ன செய்து தஞ்சைப் படைகளுக்கு நேர்ந்த அவப்பழியைத் துடைப்பது, எப்படி நம் வீரத்தை வெளிப்படுத்துவது என்பதொன்றும் எனக்குப் புரியவில்லை. இந்தக் காடுகிழாளான காளிமாதாதான் அருள வேண்டும்..." என்று வேதனை மிகுந்த குரலில் கூறினான் வேல்மாறன்.

அவர்கள் நெடுநேரம் விவாதித்துக் கொண்டிருந்து விட்டு, ஒரு வழியும் புலப்படாமல் குழம்பிய மனத்தோடு சோர்ந்து கண்களை மூடி, சொச்ச இரவுப் போதைக் கழிக்க முயன்றனர்.

வேல்மாறன், அந்தக் காடுகிழாள் கோவில் மண்டபத்தின் ஒரு புறத்தே தூணில் சாய்ந்தவாறு விழிகளை மூடினான். உடலையும் உள்ளத்தையும் அசதி அழுத்திய அந்த வேளையில், உறக்கமா விழிப்பா என்று புரியாத ஒரு நிலையில் அவனது மூடிய கண்களினுள்ளே முணுக் முணுக்கென்று ஒரு வெளிச்சம் புலப்படவாரம்பித்தது. அதைத் தொடர்ந்து ஒரு கம்பீரமான இளைஞன் கையில் வாளேந்தி நடந்து வருவதும்...அவன் முன்னால் ஒரு மோகினிப் பேய் தோன்றி வசியவலை விரிப்பது போலும் காட்சிகள்!

கொஞ்சம் கூர்ந்து நோக்கினால், அந்த இளைஞன் வேறு யாருமல்ல, வருணகுலத்தானேதான்!

அவன் பின்னாலும் முன்னாலும் வளைந்து வளைந்து, ஆடை விலகிக் குலைய அழகு மேனி வனப்பெல்லாம் காட்டி, குழைந்தும் நெளிந்தும் கூத்தாடும் அந்த மயக்கு மோகினி யார்?

'சே! சிறிது கூட வெட்கம் என்பதே அறியாத வளாகவல்லவா தோன்றுகிறாள் அந்தப் பெண். ஓ! மோகினிப் பேய்கள் வெட்கப் பட முடியாதுதான். ஆனால், அந்த மாய மேனியாள் காட்டும் மோக ஜாலங்களில் தஞ்சைப் படைத்தலைவர் மயங்கி விடு வாரோ!' சட்டென்று கலக்கத்துடன் கண் திறந்தான் வேல்மாறன். 'நல்லவேளை, எல்லாம் கனவு!' என்று பெருமூச்செறிந்தன அவன் உதடுகள்.

அதே சமயந்தான் வருணகுலத்தான் ராஜகாமினியோடு அந் தக் காட்டின் மறுமுனையில் — கடலோரம் வந்து கரையிறங்கி னான்.

கரையை நன்றாகக் குடைந்து, நெடுந்தூரம் வளைந்து கிடந் தது பாக்குத் தொடுவாய் எனப்படும் தென்கடல். மன்னார் வளைகுடாவிலிருந்து டொம்பீதுறு ரொட்றிகஸின் பிரம்மாண்ட மான மரக்கலம், திடீரென்று பாக்குத் தொடுவாய் எனப்படும் யாழ்ப்பாணத்தின் வடகரைக் கடலில் பிரவேசிப்பது என்பது சாத்தியமற்ற விஷயம். கலங்கள் செல்வதற்கு ஏற்ற அளவு ஆழமற்ற பகுதி அது. ஒரு காலத்தில் கடற் கோள்களால் அமிழ்ந்து போனதாகச் சொல்லப்படும் குமரி மலைகள் அங்கே புதைந்து கிடப்பதாலோ என்னவோ அப்பகுதியில் பாறைகள் அதிகம். ராமன் அணை எனப்படும் சேது பந்தனம் வேறு காலடியில் நீண்டு கிடக்கும் பகுதி அது.

வருணகுலத்தானோ உடனடியாக யாழ்ப்பாணத்துக்குச் சென் றாக வேண்டுமென்று கூறினான். முழு இலங்கையையும் சுற்றிக் கொண்டு, திரிகோண மலை, முல்லைத் தீவு வழியாக யாழ்ப்பா ணம் செல்ல, அப்போது அவகாசமில்லை. எனவே சிறிய மரக்க லம் என்றே சொல்லத்தக்க அளவு — சகல வசதிகளும் நிறைந்த பாய்மரப் படகு ஒன்றிலேற்றி வருணகுலத்தானையும் ராஜகாமினி யையும் அனுப்பி வைத்தான் டொம்பீதுறு ரொட்றிகஸ்.

**யா**ழ்ப்பாண தீபகற்பத்தின் கரையோரத்தில் அவர்கள் வந்தி றங்கும் போது, நள்ளிரவு கடந்திருந்தது. அந்த அகால வேளையி லும் கூட, டொம்பீதுறு அனுப்பியிருந்த ஆட்கள் படகிலிருந்து இறங்கி, அருகிலிருந்த மீனவர் குடியிருப்பு ஒன்றினுள் சென்று வந்து யாழ்ப்பாண நிலவரம் பற்றிய அனைத்துத் தகவல்களையும் வருணகுலத்தானிடம் எடுத்துரைத்தனர்.

வருணகுலத்தான், உடனடியாக வேல்மாறனைச் சந்திக்க விரும்பினான். அதனால் ராஜகாமினியை நோக்கி, ''இளவரசி! எனக்கு அவசர அலுவல் இருக்கிறது. நீங்கள் படகிலேயே சொச்ச இரவைக்கழித்துவிட்டு, காலையில் உங்கள் வழியேசெல்லலாம்'' என்றான்.



''நள்ளிரவில், நடுவழியில் என்னை விட்டு விட்டுச் சென்று விடாதீர்கள். என்னைஉங்களுடனேயே அழைத்துச் செல்லுங்கள்'' என்றாள் ராஜகாமினி.

''அது சாத்தியமில்லை. இனி நீங்கள் உங்கள் வழியில் செல்வதே நல்லது'' என்றான் வருணகுலத்தான்.

''நான் அவ்வாறு என் இஷ்டம்போல் எங்கும் சென்றுவிடக் கூடாது என்பது டொம்பீதுறுவின் கட்டளை. யாழ்ப்பாணம் சென்று, அங்கேயே தங்கியிருக்கவேண்டுமென்றும் வேறெங்கும் செல்லக் கூடாதென்றும் டொம்பீதுறு ஆணையிட்டுள்ளார். தாங் கள் என்னைப் பத்திரமாக யாழ்ப்பாணம் கொண்டு சேர்ப்பதாகக் கூறியுள்ளீர்கள். இவற்றையெல்லாம் மறந்து விட்டவர் போன்று பேசுகிறீர்களே?'' என்றாள் ராஜகாமினி.

தஞ்சைப் படைத்தலைவன் மிகுந்த அறத்துன்பத்துக்கு உள் ளானான். என்னதான் சதிகாரர்களோடு சேர்ந்தவள் என்ற போதும், அவளை நள்ளிரவில் அப்படி அங்கே தனியே விட்டுச் செல்வது நியாயமல்ல. அதே சமயம், தஞ்சை வீரர்கள் நிறைந்துள்ள ரகசிய இடத்திற்கு அவளை அப்போது தன்னுடன் அழைத்துச் செல்வ தும் உசிதமில்லை. யோசித்துப் பார்த்து, ஒரு வழியும் புலப்படாது போகவே அவன் அவளைத் தன்னுடன் அழைத்துச் செல்வ தென்றே முடிவு செய்தான்.

அடர்ந்த காட்டினூடே ஒற்றையடித் தடத்தில் நெடுந்தூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. வெட்டியெடுப்பது போல் எங்கும் இருள் பரவிக் கிடந்தது என்றாலும், டொம்பீதுறு அனுப் பிய படகோட்டிகள், யவன தேசத்துக் கண்ணாடி விளக்கொன்றை ஏற்றிக் கொடுத்திருந்தனர். அதை இடக்கரத்திலும், வலக்கரத்தில் நீண்ட ஈட்டி ஒன்றையும் ஏந்தியபடி முன்னே நடந்தான் வருணகு லத்தான். அவன் பின்னே நடந்தாள் ராஜகாமினி. டொம்பீதுறு வின் ஆட்களில் சிலர் அவனோடு பாதுகாப்பாக வர விரும்பிய போது, வேண்டாமென்று மறுத்து விட்டிருந்தான் வருணகுலத் தான்.

பின்னிரவின் துவக்கத்தில் ஏராளமான காட்டு மலர்கள் புஷ்பிக்கத் துவங்கியிருந்ததால், வழிநெடுக விதவிதமான நறும ணங்கள் நாசியை நிறைத்தன. ஆளரவம் கேட்டதும் ஒன்றிரண்டு

குழி முயல்கள் பாதையில் இங்குமங்குமாக விழுந்தடித்து ஓடின. காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது. இதனாலெல்லாம் காடு இரவிலும் அழகாக இருப்பதாகவே எண்ணினாள் ராஜகாமினி.

'எதற்காக எல்லோரும் இரவுப்போதில் காட்டு வழியில் பயணம் செய்வது என்றாலே அஞ்சி நடுங்குகிறார்கள்? இதை விடவும் மனோகரமான அநுபவம் வேறொன்று உண்டா என்ன?'' என்று எண்ணியது அவள் மனம்.

ஒரு கம்பீரமான இளைஞன் தன் முன்னே நடப்பது தான் அந்தத் துணிவுக்குக் காரணம். அதனால்தான் காட்டின் அபாயங்களைத் தன் மனம் எண்ணிப் பார்க்கவே இல்லை என்பதை ராஜகாமினி உணர்வதற்காகத் தானோ என்னவோ திடீரென்று அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

பாதையோரம் இருந்த ஒரு மரத்தின் கிளை தாழ்வாக நீண்டு வளைந்திருந்தது. அதற்கு நேரே அவள் வரும் போது, பொத்தென்று ஒரு மலைப்பாம்பு விழுந்து தொங்கியது. அதன் பாதி உடல் மேலே மரக்கிளையில் சுற்றிக் கொண்டிருக்க, தலை அவள் முகத்துக்கு நேரே தொங்கியது. ராஜகாமினி வீலென்று அலறிவிட்டாள். இரண்டடி முன்னால் நடந்து கொண்டிருந்த வருணகுலத்தான் சரேலென்று திரும்பி நோக்கினான். அந்த மலைப்பாம்பு அத்தனை நெருக்கத்தில் ராஜகாமினியின் முகத்துக்கு நேரே தொங்கியபடி இருந்தது அவனையே துணுக்குறச் செய்தது.உடனே வலக்கரத்திலிருந்த ஈட்டியை இடக்கரத்துக்கு மாற்றிக் கொண்டு, வலக்கரத்தால் இடையிலிருந்த வாளை உருவி நொடிப் போதில் அந்த மலைப்பாம்பை வெட்டித் தள்ளினான்.

அச்சத்தால் நடுநடுங்கி நின்றிருந்த ராஜகாமினி, மறுகணம் பாய்ந்து வந்து வருணகுலத்தானைத் தழுவிக் கொண்டாள். வெட வெடவென்று உடல் நடுங்கியவாறு நின்றிருந்த ராஜகாமினியை அணைத்துத் தேற்றுவதைத் தவிர வேறு வழியில்லாத நிலையில் சங்கடப்பட்டான் வருணகுலத்தான்.

''இதற்காகத்தான் என்னுடன் வர வேண்டாமென்று அப்போதே சொன்னேன். தாங்கள்தான் கேட்கவில்லை. அஞ்சாமல் இருங்கள். உங்களைப் பாதுகாப்பது என் பொறுப்பு'' என்றான்.

அதே சமயம், அங்கே ரத்தவாடை வீசியதாலோ என்னவோ நாலைந்து ஓநாய்கள் வேறு ஓடிவந்து நின்றன. நர மாமிசம் சுவைக்கவும் வாய்ப்பிருப்பதாக எண்ணியதும் அவை, அந்த வனப் பிரதேசம் முழுக்க எதிரொலிப்பதுபோல் 'வள்...வள்'



ளென்று கொடூரமாகக் குரைக்கத் துவங்கின. கண்ணாடி விளக்கின் வெளிச்சத்தில் அந்த ஓநாய்களின் கண்கள் கொலை வெறி மின்னும் நெருப்புத் துண்டுகள் போல் இருப்பதைக் கண்டு ராஜகாமினி நெஞ்சம் பதைக்க மேலும் அவனை இறுகத் தழுவி நின்றாள்.

வருணகுலத்தான் அவளைத் தேற்றியவாறே ஈட்டியை நீட்டிச் சுழற்றி, அந்த ஓநாய்களை விரட்ட முயன்றான். ஆனால் அவை வியூகம் வகுப்பதுபோல் அவர்களை வளைத்து, மேலும் நெருங்கினவே தவிர, பின்வாங்கி நகரவில்லை. ஈட்டியை ராஜகாமினியிடம் கொடுத்து விட்டு வாளை உருவிக் கொண்ட வருணகுலத்தான். ''இளவரசி! சிறிதும் அஞ்ச வேண்டாம். உங்கள் சீலைத் துணியில் சிறிது கிழித்து ஈட்டி முனையில் சுற்றுங்கள். கண்ணாடி விளக்கிலுள்ள எண்ணெயை அதில் கொட்டிப் பற்ற வையுங்கள். தீப்பந்தம் போல அதை எரிய விட்டுச் சுழற்றினால்தான் இந்த ஓநாய்கள் அஞ்சி விலகும். சீக்கிரமாகச் செய்யுங்கள்'' என்று கூறியபடியே வாளை ஓங்கிச் சுழற்றியவாறு பாய்ந்து ஒன்றிரண்டு ஓநாய்களை வெட்டிச் சாய்த்தான்.

அவன் கூறியவாறே நொடிப்போதில் ராஜகாமினி தீப்பந்தம் செய்து கொளுத்தினாள். அதை வீசிச் சுழற்றியதும் மீதமிருந்த ஓநாய்கள் ஓட்டம் பிடித்தன.

''நல்ல யோசனை சொன்னீர்கள். நெருப்பு ஒரு வலிமை வாய்ந்த ஆயுதமாகவும் பயன்படுகிறது. ஆனால், இது எவ்வளவு நேரம் எரியும் என்று தெரியவில்லையே'' என்றாள் ராஜகாமினி.

''விசனம் வேண்டாம் இளவரசி. நாம் அடைய வேண்டிய இடம் அதிகத் தொலைவிலில்லை. அநேகமாக நெருங்கி விட்டோம் என்றே சொல்லலாம். இருந்தாலும் நெருப்பு மிக அவசியம். தீச்சுவாலையைக் கண்டால் தான் வனவிலங்குகள் அஞ்சும். அதற்கு ஒரு வழி செய்கிறேன்'' என்று கூறிய வருணகுலத்தான், பந்தம்போல் எரியும் ஈட்டியை அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு, பாதையை விட்டு விலகிக் கொடிகளும் புதர்களும் மண்டிய பகுதியில் புகுந்து எதையோ தேடினான். பிறகு ஒன்றிரண்டு சுள்ளிகளை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்.

''என்ன இது? வெறும் குச்சிகள், இவற்றை எதற்கு எடுத்து வந்தீர்கள்?'' என்றாள் ராஜகாமினி.

''இவை வெறும் குச்சிகளல்ல. சுளுந்து கொளுத்துவதற்குப் பயன்படும் அபூர்வமான சுள்ளிகள் இவை. பற்ற வைத்தால் நின்று நிதானமாக எரியும். அடர்ந்த காடுகளிலும் மலைகளிலும் வாழ்ப வர்கள் இந்தக் குச்சிகளையே தீப்பந்தங்கள் போல் உபயோகிப் பார்கள். இதில் ஒன்றைக் கொளுத்திப் பிடித்துக் கொண்டு வாருங்கள்'' என்றபடியே நடந்தான் வருணகுலத்தான்.

'அதிக தூரமில்லை', 'நெருங்கி விட்டோம்' என்று அவன் கூறிக் கொண்டிருந்தானே தவிர, பயணம் நீண்டு கொண்டேதான் இருந்தது. அவளால் நடக்க முடியவில்லை. ''சிறிது ஓய்வெடுத் தால் தேவலை'' என்று ஏழெட்டு முறை கூறிவிட்டாள்.

''இதற்குத்தான் என்னோடு வர வேண்டாம் என்று கூறினேன். வீண் பிடிவாதம் பிடித்தீர்கள். ஓடுவதற்கும், இடர் வந்தால் எதிர்த்துச் சாடுவதற்கும், நெடுந்தூரம் நடப்பதற்கும் உரமேறிய உடலும் உறுதி நிறைந்த மனமும் அவசியம். வீரர்கள் வாழ்வு என்பது, அரண்மனைச் சுகங்களில் கிடந்து ஆகாசக் கோட்டை கட்டுபவர்களால் உணர முடியாத ஒன்று. மதி இழக்கச் செய்யும் மதுவாலும், நிர்வாண சுந்தரிகளின் மோக வலையாலும் வீரர் களை வீழ்த்த நினைப்பவர்களுக்கு இதெல்லாம் புரிந்து கொள்ள அவகாசம் கூடக் கிடைப்பதில்லை. இப்போது உங்களுக்கு அந்த வாய்ப்பு கிட்டியிருக்கிறது.....'' என்றான் வருணகுலத்தான்.

''குத்திக் காட்டுகிறீர்களா தஞ்சைப் படைத்தலைவரே!'' என்றாள் ராஜகாமினி.

''குத்திக்காட்டவில்லை இளவரசி. குற்றமுள்ள நெஞ்சு தானாகவே குறுகுறுக்கிறது போலும். இப்படி அவசரமாக நெடுந் தூரம் நடக்கும்போது, இடையில் திடீரென்று ஓய்வு எடுத்தல் கூடாது. உட்கார்ந்தவுடன் நடந்த களைப்பு அதிகமாகத் தோன்றி ஆளை அசத்தும். கொஞ்சம் காலை வீசிப் போட்டு நடந்தால், விரைவாகச் சென்று விடலாம்.....''

''இல்லை, என்னால் இனி ஓர் அடி கூட நடக்க முடியாது. இப்போதே நான் உங்கள் நடைக்குச் சமமாக ஓடி வர வேண்டியி ருக்கிறது. இதற்குமேல் வேகமாக எப்படி நடப்பது? வேண்டுமா னால் நீங்கள் செல்லுங்கள். என் தலையெழுத்துப்படி ஆகட்டும். நான் இனி நடக்க மாட்டேன்'' என்று கூறியபடி ராஜகாமினி பாதையோரம் உட்கார்ந்து விட்டாள்.



வருணகுலத்தான் யோசித்தான். 'விடிய இன்னும் நேரம் இருக்கிறது. தோழர்களும் அங்கு தூங்கிக் கொண்டிருப்பார்கள். பொழுது புலரும் வேளையில் அவர்களைச் சந்தித்தால் போதும். சிறிது ஓய்வெடுப்பதில் தவறில்லை' என்று எண்ணியவனாய் அருகில் இருந்த ஒரு மேடான பகுதிக்கு இளவரசியை அழைத்துச் சென்று, ஒரு பாறை மீது அவளைப்படுத்துக் கொள்ளச் சொல்லி, பாதுகாப்புக்கு இரண்டொரு சுள்ளிகளைக் கொளுத்திச் செருகி விட்டு, மற்றொரு பாறை மீது அவன் சாய்ந்து கொண்டான்.

இரண்டு பாறைகளுக்கும் சிறிது இடைவெளி இருந்தது. களைப்பு மிகுதியால் கண்ணயர்ந்து போன அவன், சிறிது விழிப்பு வந்து விழிகளைத் திறந்தபோது, சுளுந்து கொளுத்திய சுள்ளிகள் அணைந்து போயிருப்பதையும், உதயப்போது நெருங்கி விட்டதை யும், அடுத்த பாறையில் படுத்திருந்த ராஜகாமினி எழுந்து வந்து தன்னருகில் படுத்துத் தன்னை அணைத்துக் கொண்டிருப்பதை யுமே கண்டான். உடனே திடுக்கிட்டு எழவும் செய்தான்.

## 13. ராஜகாமினியின் காதல்

இரவின் இருள் வண்ணம் எங்கும் குலைந்து, பகலவனின் வருகைக்காக வான வீட்டைக் கூட்டி மெழுகிக் கோலமிட்டு அலங்கரிக்கும் குளிர்காலை வேளை அது.

வான் வெளியில் யாரோ தெளித்த நீர்த்துளிகள் மண்ணிலும் சிதறித் தெறித்தாற்போல், காட்டுப் புல் வெளியில் பனித்துளிகள் பரவிக் கிடந்தன.

கண்ணுக்குத் தெரியாத கன்னியர்கள், கழுவித் துடைத்த வான் பரப்பில் செம்மண் தீற்றுவது போலும், கோலப் புள்ளிகள் வைக்கத் துவங்குவது போலும் காட்சிகள் மனம் கவர்ந்தன.

புள்ளினங்கள் ஒரு புனித வரவுக்குப் பூபாளம் இசைத்தன. இரவெல்லாம் கொடூரம் கொட்டி முழக்கிய அந்தக் கொடுங் கானகத்தில் இப்போது இங்குமங்கும் புள்ளிமான்கள் துள்ளித் திரிந்தன. இரண்டொரு கலைமான்கள் அந்தப் பாறையருகே வந்து நின்று, ஏதோ விசித்திரம் கண்டாற்போல் தங்களுக்குள் பேசிக் கொண்ட அரவம் கேட்டதாலோ என்னவோ சட்டென்று கண் விழித்தான் வருணகுலத்தான்.

ராஜகாமினி அவனை அணைத்தபடி உறங்கிக் கொண்டிருந் தாள்.

'என்ன விபரீதம் இது!' என்று ஒரு கணம் கூசித் துடித்துப் போனான் அவன்.

இரண்டு மலர்ச் செண்டுகள் அவன் மார்பில் அழுந்திக் குழைய, வலக்கரம் அவனது இடது புஜத்திலும் இடக்கரம் அவனுடைய வலப்புற விலாவிலும் பதிந்து கிடக்க, முகத்தை அவன் மார்பில் சாய்த்து உறங்கிக் கொண்டிருந்தாள் அவள். அந்த மென்மையான உடலின் வெம்மையும், அவளுடைய நாசியிலி ருந்து சீராக வெளி வந்து கொண்டிருந்த மூச்சுக் காற்றின் உஷ்ண மும் அவனை விவரிக்க இயலாத உணர்வுகளில் தளைப்படுத்த



முயன்றாலும் அவன் மிகுந்த சிரமப்பட்டு அந்த உணர்வுகளை உதறித் தள்ளியவனாய், ''இளவரசி...!'' என்று உரத்த குரலெ ழுப்பி அவளை உசுப்பினான்.

அப்படியொன்றும் அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. 'நீ குரல் கொடுத்த பிறகு கண்விழிக்கலாமென்று தான் காத்திருந்தேன்' என்பது போல் மிகுந்த நிதானத்தோடும் இயல்போடும் கண்களை மலர்த்திய ராஜகாமினி, ''என்ன...ஓ... பொழுது புலரத் துவங்கிவிட்டதா?'' என்றாள்.

''என்ன இப்படிச் செய்து விட்டீர்கள்...?''

''ஏன், என்ன ஆயிற்று?''

''உங்களை அந்தப் பாறையில் தானே படுக்கச் செய்திருந் தேன்! இங்கே ஏன் வந்தீர்கள்? அதுவும் இப்படியா படுத்திருப்ப து?''

''நீங்கள் பாட்டுக்குப் படுத்தவுடன் உறங்கிவிட்டீர்கள். என் னால் அப்படி உறங்க முடியவில்லை. அடர்ந்த காடு, கவிந்து கிடக்கும் அந்தகார இருள், தனிமை... இலைச்சருகுகள் காற்றில் புரண்டு எழுப்பும் 'சரசர' ஓசை கூட இதயத்தை இழுத்துப் பிடிப்பது போன்ற அச்சம்... என்னால் அங்கே தனியே கிடக்க முடியவில்லை...''

''சரி, என்னை எழுப்பலாமே...?''

''எழுப்புவதா... கொலை செய்தால் கூடச் சலனப்பட்டிருக்க மாட்டீர்கள் போலல்லவா இருந்தது. இப்படியா படுத்தவுடன் ஒரு மனிதர் ஜடமாகிப் போவது...?''

''அது ஒரு வரம் இளவரசி. கள்ளமில்லாத இதயமுடையவர் களுக்குத்தான் இப்படி நிச்சிந்தையாக உறங்க இயலும். நீங்கள் கொன்றுவிடுவீர்களோ என்ற அச்சம் என்னுள் சிறிதமில்லை. ஏனென்றால் நான் உங்களை எதிரியாக எண்ணிப் பார்க்கவே இல்லை. நீங்கள் இப்படிச் செய்வீர்கள் என்பதையும் கூட நான் எண்ணிப் பார்க்கவில்லை.''

''அப்படியொன்றும் இங்கே மாபாதகம் நிகழ்ந்து விட வில்லை. ஓர் இளம் வயது ஆடவனும் இளம் வயது யுவதியும் நட்புரீதியில் பழகும்போது, இது போன்ற சம்பவங்கள் நிகழ்வ தும், ஒருவர் உள்ளக் கிடக்கையை இன்னொருவருக்கு வெளிப்ப டுத்த நேருவதும் அப்படியொன்றும் உலகம் காணாத அதிசயமு மல்ல; உலகம் ஒப்புக்கொள்ள மறுக்கும் அநீதியுமல்ல...''

''நீங்கள் உங்கள் உள்ளக் கிடக்கையை இதன் மூலம் எனக்கு உணர்த்துவதாக நான் பொருள் கொள்ளலாமா?''

''தாராளமாக...''

''இளவரசி! இதென்ன பேச்சு? இதற்காகவா இந்தத் தனி வழியில் என்னுடன் பயணம் செய்தீர்கள்?''

''உங்கள் மார்பில் உரிமையோடு சயனம் செய்ய இந்த இரவும் இந்த ஆரண்யமும் உதவி புரிந்துள்ளன. மற்றபடி இந்த அவா எனக்கு, 'இளவரசியின் அழகைக் கூட நான் ரசிக்கிறேன்' என்று தாங்கள் கூறியபோதே தோன்றிவிட்டது.''

''வெறொரு வெள்ளை இனத்து அழகியைக் காட்டி என்னை மயக்க முயன்றீர்கள் தாங்கள். அந்தச் சினத்தில் அப்படிச் சொன்னேன்...''

''இப்போது என்னையே — தாங்கள் கூறிய விதத்தில் ஒப்படைக்க எண்ணுகிறேன். எதனால் ஏற்க மறுக்கிறீர்கள் என்பது தான் புரியவில்லை.''

''இளவரசி! தாங்கள் அந்தப் போர்ச்சுகீசிய அழகியை என் முன் நிர்வாணமாக நிற்கச் சொல்லிக் கட்டளையிட்டீர்கள். ஒரு பெண்ணின் நிர்வாணம் என்னை மயக்குமென்று, என்னைப் பற்றி இழிவாக எடை போட்டு விட்டீர்களே என்ற கோபத்தில், 'நீங்களும் கூட அழகுதான்...' என்று கூறி, உங்களை வருத்தமும் சினமும் கொள்ளச் செய்தேன். அதெல்லாம் இப்போது எதற்கு...?''

''நீங்கள் என்ன நினைத்துச் சொன்னீர்களோ... எனக்கு அதில் சினமில்லை, வருத்தமுமில்லை. அவளுக்குப் பதிலாக இப்போது நான் இருக்கிறேன். அவளை என்ன விதமாய் நிற்கச் சொன்னேனோ, அதே விதமாய் இப்போது தங்கள் முன் நிற்பதில் எனக்கு ஓர் ஆட்சேபமும் இல்லை...'' என்றாள் ராஜகாமினி.

''இந்த ஆபாச உரையாடல் இதற்கு மேல் தொடர்வதில் எனக்கு இஷ்டமில்லை. இதை விடவும் என்னை அவமானப்படுத்துகிற விஷயம் வேறொன்று இருக்க முடியாது...'' என்று சீற்றத்தோடு கூறினான் வருணகுலத்தான்.

''என் காதலை ஏற்றுக் கொள்ளுங்கள். என்னை முழுவதுமாகத் தங்களிடம் அர்ப்பணித்து விடுகிறேன் என்று கூறுவது ஒரு தவறா? இதில் ஆபாசம் எங்கிருந்து வந்தது?'' என்றவாறே அவனை நெருங்கி, கரங்களைப் பற்ற முயன்றாள் ராஜகாமினி.



அதை உதறிவிட்டவாறே, ''தாங்கள் வன்னியத்தேவனின் காதலி என்றல்லவா எனக்குச் சொல்லப்பட்டது... தங்கள் பேச்சும் நடத்தையும் திடீரென்று தடம் மாறக் காரணம்...?'' என்று வினவினான் வருணகுலத்தான்.

''அவர் அப்படிப் பிரசாரம் செய்து வந்தால் அதற்கு நானா பொறுப்பு? தந்தைக்கு நிகரான வயதுள்ள அவரைக் காதலிக்க எனக்கென்ன பைத்தியமா? அரசியல், பிரச்னைகள் என்னை அலைக்கழிக்கின்றன. ஒரே ஆதரவு அவர்தான் என்பதால் நெருங்கிப் பழக வேண்டிய நிர்ப்பந்தம். அவரோ பெண்களைக் கிள்ளுக் கீரையாக — இரவுக்கு ஒன்றாக இதழ் உதிர்த்தெறியவென்றே சிருஷ்டிக்கப்பட்ட இழி பிறவிகளாக எண்ணுபவர். ஒரு காமாந்தகாரனிடம் கண்ணியமான காதலையா எதிர்பார்க்க முடியும்? அரச மகளாகப் பிறந்து இன்று அநாதை போலத் திரியும் என்மீது தாங்களாவது இரக்கம் காட்டுவீர்கள் என்று எண்ணுகிறேன்...'' என்று இறைஞ்சும் குரலில் கூறியபடி தாபம் மேலிட, அவனை நோக்கினாள் ராஜகாமினி.

ஆனால், நிச்சலனமாக நின்றிருந்த தஞ்சைப் படைத்தலைவனோ, ''இளவரசி! தங்கள் கதை பரிதாபத்திற்குரியதுதான்.தாங்கள் இந்த வனத்திலே என்னிடம் நடந்து கொண்ட முறையையும் பேசிய விதத்தையும் வைத்து நான் தங்களை இழிவாக எண்ண மாட்டேன். இவற்றை இத்துடன் இங்கேயே மறந்து விடுவோம். நேரமாகிவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் சூரியன் உதித்து விடுவான். நான் என் நண்பர்களை விரைவாகச் சென்று சந்திக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் கலைந்து சென்று விடுவார்கள். என்னைப் பற்றி ஒரு விஷயம் நீங்கள் அறிந்து கொள்வது நல்லது. நான் நல்ல ரசிகன். அழகு என்னை மிகவும் பரவசப்படுத்தி விடும். அழகிய பெண்கள் அனைவரையும் நேசிப்பவன் தான் நான். அதற்காக நான் அழகாக இருப்பதையெல்லாம் அடைந்து விட வேண்டுமென்று துடிப்பவனல்ல. அது குரூரமான மனப்பான்மை. அந்த மனம் எனக்கு இல்லை. புறப்படுங்கள், நடப்போம்...'' என்று கூறியவாறே நடக்கத் துவங்கி விட்டான்.

கல்லில் மோதி உதிரும் மலர்களைப் போல் காதல் வயப்பட்ட எண்ணங்கள் வாடி உதிர, அவன் பின்னே நடக்கலானாள் ராஜகாமினி.

**வே**ல்மாறன், அந்த விடியல் போது அத்தனை ஆனந்தத்தை அள்ளி வரும் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை. காடுகிழாள்

கோவில் மண்டபத் தூணில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டி ருந்த அவன், விழிகளைத் திறந்தால் எதிரே தஞ்சைப் படைத்தலை வன் நின்றிருக்கிறான்!

'நிஜம்தானே — கனவில்லையே...!' என்று தனக்குள் கேட்ட படி, மறுபடி தன் விழிகளை ஒருமுறை கசக்கி விட்டவாறே நோக்கினான் அவன்.

அங்கே நின்றிருப்பது தஞ்சைப் படைத்தலைவனே தான்.

''தலைவரே! வந்துவிட்டீர்களா நீங்கள்...?' என்று வியப்பு டன் விழிகளை விரியவிட்டு வினவினான் அவன்.

''ஏன் வேல்மாறா... நான் வரவே மாட்டேன் என்றா எண்ணி யிருந்தாய்...?''

''எங்களை மிகவும் துடிக்க வைத்து விட்டீர்கள் தலைவரே!'' என்றவாறே தோழமை உணர்வு மேலிட எழுந்தோடி வந்து, தஞ்சைப் படைத்தலைவனை இறுகத் தழுவினான் அவன்.

''நான் நடுக்கடலில் இறந்து போய்விட்டேன் என்றொரு வதந்திஎங்கும் பரப்பப்பட்டிருப்பதை நான் அறிவேன் வேல் மாறா... ஆனால், அது உன்னைக் கூடவா பாதிக்கச் செய்துவிட் டது?''

''இல்லை தலைவரே! ஆனால் ஈழ மாமன்னர் சங்கிலிகுமா ரர் மிகவும் வேதனைக் கடலில் விழுந்து கிடக்கிறார். வதந்திகளும் கலவரங்களும் அவரை ஒருபுறம் வதைக்கின்றன. இன்னொரு புறம் போர்ச்சுகீசிய ஆதிக்கம் விஷம் பரவுவது போல் எங்கும் பரவி அவரை அச்சுறுத்துகிறது. தாங்களோ இன்னும் ஒருமுறை கூட மன்னர் முன் தோன்றவில்லை. தஞ்சைப் படைத்தலைவர் எப்படி இருப்பார் என்பது கூட அறியாத நிலையில், தங்களைப் பற்றிய வதந்திகளை நம்பாதிருக்க முடியாத சங்கடம் ஈழவேந்த ருக்கு. தஞ்சைப் படைகளே தாறு மாறாக நடப்பதாகவும் கிராமங் களைச் சூறையாடுவதாகவும் கூறப்படும் வதந்திகளால் மனம் குழம்பிப் போன மன்னர் மிக வருத்தத்துடன் பேசிவிட்டார். நானும் தாங்கள் உடனே தோன்றி நிலைமைகளைச் சரிப்படுத்தி விடுவீர்கள் என்று சூளுரைத்து விட்டு இங்கே வந்து விட்டேன்...



''நேற்றிரவு நெடுநேரம் நண்பர்களோடு அடுத்த நடவடிக்கை பற்றி உரையாடி விட்டு, இன்று காலையும் தாங்கள் வராவிட்டால் என்ன செய்வதென்றே புரியாத குழப்பத்தோடு கண்ணயர்ந்தேன். என் கனவு முழுக்க தாங்கள் எங்கிருந்தோ நடந்து வருவது போல் இருந்தது. விடியலில் எழுந்தும் தங்களைக் காணாத குழப்பத் தோடு, காலைக்கடன்களை முடித்து விட்டு இங்கே வந்தமர்ந் தேன். நண்பர்கள் குளியலை முடித்து வரச் சென்றுள்ளனர். யோசனையோடு கண்களை மூடியிருந்த நேரத்தில் தாங்கள் மிகச் சமீபத்தில் வந்து விட்டது போல் தோன்றியது. எழுந்து எதிர்நோக் கிச் சிறிது தூரம் நடந்து சென்று பார்ப்போமா என்றெண்ணிய வாறே விழிகளைத் திறந்தால், தாங்கள் தெய்வப் பிரத்யட்சம் போல் காட்சி தருகிறீர்கள். இந்த விந்தையை என்னென்பது...?'' பரவசப்பட்டான் வேல்மாறன்.

''இதில் விந்தை ஒன்றுமில்லை வேல்மாறா! உணர்வுகளால் என்னுடன் ஒன்றிப் போனவன் நீ. எப்போதும் உன் நினைவுகள் என்னைத் தொடர்ந்து நிற்கின்றன. எதிர்பாராத சம்பவங்களால் நான் சிறிது தொலைவு உன்னை விட்டுப் பிரிந்து செல்ல நேர்ந்தாலும் கூட, உன் எண்ண அலைகளின் வட்டத்துக்குள் வந்ததும் அது ஒரு கனவுபோல உன் கண்களுக்குள் புலப்படத் துவங்கி விடுகிறது. நீ எப்போது கண்களை மூடி, கனவில் என்னைக் கண்டாயோ அதே வேளையில் நான் இந்தக் காட்டினுள் பிரவேசித்தாயிற்று...'' என்றான் தஞ்சைப் படைத்தலைவன்.

இப்போதுதான் வேல்மாறன் பார்வையில் ராஜகாமினி தென் பட்டாள். தஞ்சைப் படைத் தலைவனின் பின்னால் சற்றுத் தள்ளி நின்றிருந்த அவளை நோக்கிய வேல்மாறன் சட்டென்று துணுக்குற் றான்.

'யார் இவள்...? இரவு நம் கனவில் தோன்றிய அதே மோகினிப் பேய் போலல்லவா இருக்கிறாள்! இது பேயா, பெண்ணா?' சட்டென்று அவன் கண்கள், அவளுக்குக் கால்கள் இருக்கின்றனவா என்று தேடின.

'இருக்கின்றன! பெண்தான்...!' என்று உறுதி செய்தது அவன் மனம்.

அடுத்து அவன் மனத்தில் எழுந்தது பெரிய கேள்விக்குறி — 'ரகசிய இருப்பிடத்துக்கு ஓர் அந்நியப் பெண்ணைத் தலை வனே அழைத்து வந்துவிட்டானே... விதியை உருவாக்கியவனே விதியை மீறுவதா?'

வேல்மாறன், இலட்சுமண கோபம் கொண்டவன் என்பதை நன்கு அறிந்த தஞ்சைப் படைத்தலைவன், அவன் ராஜகாமினியை நோக்கிய உடனேயே அவனது சிந்தைப் போக்கை ஊகித்தவனாய் — சூர்ப்பனகைக்கு நேர்ந்த கதி அங்கே ராஜகாமினிக்கு நேர்ந்துவிடக் கூடாதென்ற நினைவுடன், ''வேல்மாறா! இவர்கள் பெயர் ராஜகாமினி. இவர்களை மிகவும் பத்திரமாக யாழ்ப்பாணம் கொண்டு சேர்க்கும் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன். இப்போது அந்தப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்க எண்ணுகிறேன்...'' என்றான்.

''தலைவரே! நாம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அதையெல்லாம் விட்டு விட்டு இதென்ன புதிய பொறுப்பு! தேவைதானா இது? யார் இவர், இந்தப் பெண்ணை நான் யாழ்ப்பாணம் கொண்டு சேர்க்க வேண்டிய அவசியம் என்ன?''

''ஈழ மாமன்னர் சங்கிலிகுமாரரின் எதிரிகள் கையிலிருந்த மிகப் பெரிய ஆயுதம் இந்தப் பெண்மணி. இதற்குமேல் இப்போது இவரைப் பற்றி அதிகமாக நாம் அறிந்து கொள்ள ஒன்றுமில்லை...''

''அப்படியானால் இந்தப் பெண்ணைச் சிறைப்பிடித்து வந்துள்ளீர்களா?''

''இல்லை வேல்மாறா! இவர்தான் என்னைச் சிறைப்படுத்தி எங்கோ அழைத்துச் சென்றார். நான் இப்போது இவரைச் சிறை மீட்டு வந்துள்ளேன். நடந்த விவரங்களைப் பிறகு சொல்கிறேன் உனக்கு. நீ இவரை யாழ்ப்பாணம் கொண்டு சேர்த்தால் போதும். நகர எல்லையில் விடுவதோடு உன் பணி முடிந்தது. இவரைச் சிறைப்படுத்துவது நம் வேலையல்ல. வதந்திகளைப் பரப்பி, கலவரங்களைத் தூண்டிவிடும், வன்னியத் தேவனைச் சிறைப்படுத்துவதுதான் இப்போது மிக அவசியம். அதைச் செய்ய நான் உடனே புறப்படுகிறேன்.''

''தலைவரே! நான் யாழ்ப்பாணம் சென்று வேறு என்னதான் செய்வது? வெற்று ஆளாக மன்னரைச் சந்திப்பதில் அர்த்தமே இல்லை. தஞ்சைப் படைகள் எப்போது வந்து சேரும் என்று மன்னர் கேட்டால் நான் என்ன பதில் கூறுவது? தாங்கள் எப்போது தான் மன்னரை நேரில் சந்திக்கப் போகிறீர்கள்?'' என்று வினவினான் வேல்மாறன்.



''தஞ்சைப் படைத்தலைவன் எப்போது விரும்புகிறானோ அப்போது இந்த மண்ணில் தஞ்சை வீரர்கள் ஐயாயிரம் பேர் தோன்றி அணிவகுத்து நிற்பார்கள் என்று கூறு. நாளையே நான் யாழ்ப்பாண நல்லூருக்குள் பிரவேசித்து மன்னர் முன் நிற்பேன் என்பதையும் கூறு...'' என்றான் வருணகுலத்தான்.

''எல்லாம் ஏதோ அற்புதம் நிகழ்த்தப் போவதுபோல் இருக்கிறது, தங்கள் பேச்சு. தஞ்சைப் படைகளின் உபதலைவன் என்று எனக்கு ஒரு பதவி. தஞ்சைப் படையினர் ஈழத்துக்குள் எப்போது வருவார்கள் என்பதுகூட எனக்குத் தெரியாத நிலை. தாங்கள் ஒரு மாயாவி போல் எங்கிருந்தோ வருகிறீர்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை...'' என்று சலிப்பு மிகுந்த குரலில் கூறினான் வேல்மாறன்.

'தலைவனை எதிர்த்துப் பேசுகிற அளவு உபதலைவன் துணிந்து விட்டானே, என்ன ஆகப்போகிறதோ தெரியவில்லையே' என்று திகைத்துப் போய் நின்றார்கள், அப்போதுதான் அங்கே வந்து குழுமிய இதர வீரர்கள். பிச்சைக்காரர்கள் போலவும், குடுகுடுப்பை முழக்கி-வருமுன்னர் உரைப்பவர்கள் போலும், யாத்திரிகர்கள் போலவும், இறையடியார்கள் போலவும் கோலம் புனைந்து அங்கே வந்து குழுமிய நூறு வீரர்களையும் நோக்கிய வருணகுலத்தான், அவர்களது திகைப்பை நீக்க எண்ணம் கொண்டவனாய்க் கலகலவென்று நகையொலி எழுப்பினான். பிறகு அவர்களை நோக்கி நடந்தவனாய், ''நண்பர்களே, அனைவரும் நலமாக இருக்கிறீர்களா?'' என்று வினவினான்.

தலைவன் தங்களோடு உரையாடுகிறான் என்ற பூரிப்பில் அவர்கள் உற்சாக முழக்கமிட்டு, ''நலம்தான் தலைவரே...?'' என்றனர். சிலர், தலைவனையே நலம் விசாரித்தனர். இந்நிலையைக் கலகலப்பாக்கிய இந்தப் பரஸ்பரக் குசல விசாரிப்புகளுக்குப் பின் உபதலைவன் முன் வந்து நின்ற வருணகுலத்தான், ''வேல்மாறா! என்னுடைய அஷ்டமங்கலப் புரவி இப்போது எங்கே இருக்கிறது?'' என்று வெகு இயல்பாகக் கேட்டான்.

தலைவன் சினமில்லாமல் தன்னுடன் உரையாடுகிறான் என்று உணர்ந்த வேல்மாறன், ''யாழ்ப்பாண நல்லூர் அரண்மனையில் உள்ள புரவிக் கொட்டிலில் பத்திரமாக இருக்கிறது தலைவரே!'' என்று பதிலிறுத்தான்.

''இப்போது அஷ்டமங்கலம் இங்கே வரவேண்டும். அப்போதுதான் என் பணிகளை விரைவாகக் கவனிக்க இயலும். இதோ ஓர் அற்புதம் நிகழ்த்துகிறேன் பார்...'' என்று கூறிய வருணகுலத்தான், சிறிது மண்ணை எடுத்து ஏதோ மந்திரம் சொல்லியவாறே கீழே எறிந்தான். பிறகு அருகில் இறையடியார் கோலத்திலிருந்த ஒருவனுடைய கையிலிருந்த கமண்டலத்தைப் பிடுங்கிச் சிறிது நீரை வலக்கரத்தில் விட்டுத் தெளித்தவாறே, ''அஷ்டமங்கலமே, என் அருமை அசுவத் தோழனே... உடனே வா...'' என்று உரத்த குரலில் கூறினான்.

என்ன ஆச்சரியம்! அடுத்த கணம் எங்கிருந்தோ ஓடிவந்த அஷ்டமங்கலப் புரவி அவன் முன்னே நின்றது. ஆர்வத்தோடு அவனை ஒட்டி உரசி நின்ற அதை அனைவரும் வியப்பு மேலிட நோக்கினர்.

''இப்போது என்ன சொல்கிறாய் வேல்மாறா... என்னால் அற்புதம் நிகழ்த்த முடியும் என்பதை ஒப்புக் கொள்கிறாயா?'' என்று நகைத்த படியே வினவினான் வருணகுலத்தான்.

வேல்மாறன் பதில் சொல்ல இயலாமல் வாயடைத்து நின்றான்.

அவன் தோளில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்த வருணகுலத்தான், ''நான் மாயாவியும் அல்ல; அற்புதம் நிகழ்த்தவும் இல்லை வேல்மாறா! எதை எப்படி நடத்த வேண்டும்; எதை எப்போது அறிவிக்க வேண்டுமென்பதில் தெளிவான திட்டங்கள் உள்ளவன் — அவ்வளவே. என் வீரவாள் வாய் திறந்து, 'எப்போது என்னை உபயோகிப்பாய், எங்கே போரே காணவில்லை?' என்றெல்லாம் கேள்வி எழுப்பக் கூடாது. உருவப்படும்வரை உறைக்குள் உறங்க வேண்டியதுதான் அதன் கடமை. இந்தப் புரவி நேற்று நீ அரண்மனையிலிருந்து ஆவேசமாக வெளியேறிய போது, கட்டறுத்துக் கொண்டு உன்னைத் தொடர்ந்து தான் இங்கே வந்திருக்க வேண்டும். என்னைக் காணாது தவித்துக் கிடந்த அஷ்டமங்கலம் இங்கேயும் நான் இல்லை என்றறிந்ததும் இரவெல்லாம் இந்தக் காட்டில் — உங்கள் கண்களில் படாமல் — ஒதுங்கி இருந்திருக்கிறது. நீங்கள் அனைவரும் என்னைக் கவனித்துக் கொண்டிருந்த போது நான் தொலைவில் நின்ற இந்த அசுவத்தைக் கவனிக்க நேர்ந்தது. அதன் விளைவே நான் நிகழ்த்திய அற்புதம்!



''நிஜமாக என்னால் அற்புதம் நிகழ்த்த முடியுமென்றால், இரவு முழுக்க இந்தக் காட்டில் கால் நோக நடந்துதானே வந்தேன்... அப்போதே இந்த அசுவத்தை வரவழைத்துக் கொண்டிருக்கலாமே...? புறப்படு வேல்மாறா — ராஜகாமினி தேவியாரை அழைத்துச் செல். நான் நமது நண்பர்களுடன் பூநகரி நோக்கிச் செல்கிறேன்...'' என்றான்.

அதன்படி வேல்மாறன் பின்னால் நடப்பது தவிர வேறு வழியில்லாத நிலையில் அவனுடன் புறப்பட்டாள் ராஜகாமினி. திறமை வாய்ந்த அந்த நூறு வீரர்களையும் அழைத்துக் கொண்டு அந்த வனப் பிரதேசத்தை விட்டு வெளியேறி, வதந்திகள் பரவிக் கிடந்த கிராமங்களினூடே ஒரு சூறைக் காற்றைப் போல் பிரவேசம் நிகழ்த்தினான் வருணகுலத்தான்.

R

## 14. ஞானவல்லியின் தவிப்பு!

ஒரே நாள் — காட்டுத் தீ போல் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கொழுந்து விட்டெரிந்த கலவரத் தீ, பேய் மழையால் பொசுக்கென்று அவிந்தது போல் இருந்த இடம் தெரியாமல் ஆயிற்று. மக்கள் வீடுகளில் அச்சமின்றி நடமாடத் துவங்கினர். கலவரக்காரர்களுக்குப் பயந்து கொண்டு கிராமங்களைக் காலி செய்து விட்டு எங்கெங்கோ ஓடிப்போய்த் தலைமறைவாக வசித்த மக்கள், தஞ்சைப் படைத்தலைவனின் பிரவேசம் பற்றி அறிந்ததும் துணிவு வரப்பெற்றவர்களாய் மகிழ்வுடன் கிராமங்களுக்குத் திரும்பினர்.

எங்கும் — எவர் வாயிலும் — ஒரே பேச்சு... தஞ்சைப் படைத்தலைவனைப் பற்றித்தான். பாரதம் தன் சேய் நாடான ஈழத்தை மறக்கவில்லை; ஈழ மக்கள் படும் இன்னல்களை அறிந்ததும் சற்றும் தயங்காமல் ஆயிரக்கணக்கான போர் வீரர்களை அனுப்பி, ஈழ மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கத் துணிந்தது என்ற செய்திகளைக் கேட்டபோதே அவர்கள் புதியதோர் மனவலிவு வரப் பெற்றவர்களாக இருந்தார்கள். வருணகுலத்தான் என்ற பெயரை உச்சரிக்கும்போது அவர்களுக்கு, வலிமை தரும் மந்திரம் ஒன்றை உச்சரிப்பது போன்றிருந்தது.

இப்போது ஒரு வீர காவியத்தின் நாயகனுக்கு இணையாக அவன் புகழ் பேசப்பட்டது. அவனுடைய வீர தீரங்களை விமரிசித்து, கற்பனைச் சுவை கலந்து மெருகேற்றி, வியந்து விழி மலர விதந்தோதிக் கொண்டிருந்தனர்.

வன்னியன், வருணகுலத்தானுக்கு எதிராக என்ன என்ன வதந்திகளைப் பரவ விட்டானோ, அவை அனைத்தும் இப்போது வருணகுலத்தானின் சாகசங்களுக்கு மெருகூட்டவே பயன்பட்டன. உண்மையில் நடந்த நிகழ்ச்சிகளும் வதந்திகளும் தஞ்சைப் படைத்தலைவனின் இப்போதைய புகழ் வெளிச்சத்தில் ஒன்றாகக்



கலந்து ஒரு புது வடிவம் பெற்று, அவனை அமானுஷ்ய ஆற்றல்கள் நிரம்பிய ஒரு புராண கால வீரனாகவே ஆக்கி விட்டிருந்தது.

தஞ்சைப் படைத்தலைவனை வன்னியத் தேவன் சிறைப்பிடித்து, மரக்கலத்திலேற்றி கோவாவுக்கு அனுப்பி வைத்தபோது, வழியில் நடுக்கடலில் அவன் தப்ப முயன்றதால் வெட்டிக் கொல்லப்பட்டான் என்பது — வன்னியன் பரப்பிய வதந்திகளில் ஒன்று.

இப்போது அது பற்றி மக்கள் இவ்வாறு பேசினர்:

'வருணகுலத்தான் மீது வாளை வீசியதுமே அவன் மாயமாக மறைந்து விட்டான். அந்த மரக்கலம் அப்படியே தீப்பிடித்து எரிந்து அழிந்தது (இதில் மரக்கலம் அழிந்தது நிஜந்தானே?) வருணகுலத்தான் எந்த ஆபத்துமின்றி நல்லூர் வீரமாகாளி அருளால் கரைக்கு வந்து விட்டான்.

'தஞ்சைப் படைத்தலைவனை யாராலும் வெல்லவே முடியாது. அவன் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு மரக்கலத்திலிருந்து கடலில் குதித்து, நெடுந்தொலைவு நீந்தியே கரைக்கு வந்து விட்டான்.'

'வருணகுலத்தானிடம் ஓர் அதிசயப் புரவி இருக்கிறது. அது ஒவ்வொரு பாய்ச்சலிலும் வெகு தூரம் பறந்து வந்து கீழிறங்கக் கூடியது. அதனால் வருணகுலத்தான் நொடிப் போதில் பல இடங்களுக்கு விஜயம் செய்து விடுவான். கலவரம் மூண்ட எல்லா ஊர்களிலும் அவன் தோன்றிப் போரிட்டதாலேயே இவ்வளவு விரைவாகக் கலவரத்தை ஒடுக்க முடிந்தது.'

—இப்படி விதவிதமான கதைகளால் மக்கள் தஞ்சைப் படைத் தலைவனது வீரத்தை மிகைப்படுத்திப் பேசி மகிழ்ந்தார்கள் என்றால் அதற்கு ஒரே காரணம், அவன்தான் அப்போதைய மாபெரும் நட்சத்திரம் என்பதுதான்.

அஷ்டமங்கலத்தின் மீது ஆரோகணித்து, காட்டினின்று வெளிப்பட்ட வருணகுலத்தான், நூற்றுக்கணக்கான வீரர்கள் புடைசூழ — ஏதோ திக்விஜயம் செய்பவனே போன்று — ஈழத் திருநாட்டின் கிராமங்களினூடே புகுந்து மக்களை நம்பிக்கையிலும் மகிழ்ச்சியிலும் திளைக்கச் செய்தவாறு சென்று கொண்டிருந்தான்.

உடனுக்குடன் எல்லாச் செய்திகளும் மன்னர் சங்கிலியின் காதுகளை எட்டிக் கொண்டுதானிருந்தன. அவர் மகிழ்ச்சியும்

மாபெரும் வியப்புமாய் அந்த மாவீரனை உடனே சந்திக்க ஆவல் கொண்டிருந்தார். 'வேல்மாறன் எத்தனை ஆழமான நம்பிக்கையுடன் சொன்னான்-தஞ்சைப் படைத்தலைவன் தக்க தருணத்தில் தோன்றுவானென்றும், அவனை வெல்லவோ வீழ்த்தவோ எந்தசக்தியாலும் இயலாதென்றும்! அது நிஜமென்றாகி விட்டதே... வருணகுலத்தான் நிச்சயம் சாமான்யப் பட்டவனல்ல. அமானுஷ்ய ஆற்றல் பெற்றவனாகத்தான் இருக்க வேண்டும்' என்று அவரே எண்ணத் தொடங்கி விட்டார்.

பூநகரி மாளிகையில் வன்னியத்தேவனோ, பெருத்த மனக் கிலேசத்தோடு உலவிக் கொண்டிருந்தான். தஞ்சைப் படைத்தலைவனின் புயல் வேகப் பிரவேசம் பற்றிய சகல தகவல்களும் அவன் செவிக்கும் எட்டிக் கொண்டுதானிருந்தன. அத்துடன், அவன் பூநகரியை நோக்கித்தான் வந்து கொண்டிருக்கிறான் என்ற தகவலும் வன்னியன் செவியில் விழுந்ததால்தான் அவன் மிகுந்த கலக்கத்திற்குள்ளானான்.

அடிபட்ட நாகத்திற்குச் சீற்றம் அதிகம். காயம்பட்ட புலி கடுமையான சினத்தோடு எதிரியின் மீது பாய்ந்து குதறும். தஞ்சைப் படைத் தலைவன் ஒரு சூறாவளிச் சுழற்சியோடு வந்து கொண்டிருக்கிறான். இப்போது என்ன செய்வது? இந்த வேளை பார்த்து, போர்ச்சுகீசிய வீரர்களும் இங்கே இல்லை. இருந்த சிலரும் போர்ச்சுகீசிய தளபதி பிலிப்-டி-ஒலிவேராவின் வருகைக்காக வழிப்பயண வசதிகளை ஏற்பாடு செய்ய எதிர் கொண்டு சென்றுள்ளனர். எத்தனையோ முன்னேற் பாடுகளுடன் திட்டங்களை வகுத்தும், சந்தர்ப்பம் சதி செய்கிறதே! வருகிற சண்டாளன் வருணகுலத்தான் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழித்து இங்கு வருமாறு தெய்வம் வழி செய்யாதா? வழியில் மழை—வெள்ளம் என்று ஏதாவது வந்து அவன் பயணம் தடைப்பட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? இரண்டு மூன்று நாட்கள் கழித்து வந்தால், அந்தச் சோழ நாட்டுப் புலியைக் கண்ணி வலையில் கால் தடுக்கி விழச் செய்து பிடித்து விடலாம். போர்ச்சுகீசியப் படை வந்து விட்டபின் இந்தப் புல்லனை — இவனது தஞ்சைப் படைகளைக் கண்டு நான் அஞ்ச வேண்டியதே இல்லை.

— இப்படியெல்லாம் பலவாறாகச் சிந்தித்து மன உளைச்சலோடு இருந்தான் வன்னியத்தேவன்.

புயல் வரும்போது ஓடிந்து ஒப்பாரி வைப்பதால் என்ன பயன்? தீயவர்களின் பிரார்த்தனை அத்தனை எளிதில் பலித்து விடுமா என்ன?



ஜெயகோஷங்கள் அவன் செவிகளைப் பிளந்தன. மாளிகைக் கூடத்தில், வெறி பிடித்த மிருகம் போல் மன உளைச்சலோடு உலவிக் கொண்டிருந்த வன்னியன் சாளரத்தருகே வந்து நின்று கீழே எட்டிப் பார்த்தான்.

அங்கே, மாளிகை முன்றிலில் விரிந்து கிடந்த விசாலமான பரப்பில், சோழ நாட்டுப் புலிகள்-தஞ்சை வீரர்கள் — அவர்களைத் தொடர்ந்து வந்த ஈழத்தின் வீரமிக்க இளஞ் சிங்கங்கள்... நடுநாயகமாக அஷ்டமங்கலப் புரவி மீது ஆரோகணித்திருந்த தஞ்சைப் படைத்தலைவன்.

இந்தக் காட்சியைப் பார்த்தவுடன் ஒரு கணம் வன்னியனுக்கு பயப் பந்து நெஞ்சை மிதித்து உருண்டது. அவனும் வீரன்தான்; வாள் சுழற்றும் வல்லமையை அவன் கரம் இன்னும் இழந்து விடவில்லைதான். ஆனால், செய்த வஞ்சகம் எழுந்து சிந்தையை மருட்டியது. வஞ்சக வலையை அறுத்தெறிந்து, அடிபட்ட வேங்கையின் சீற்றத்தோடல்லவா வாளேந்தி ஆர்ப்பரித்து வந்து நிற்கிறாள் வருணகுலத்தான்.

'வீரவேல், வெற்றிவேல்!' என்றும—

'ஜெய் வீரமாகாளி!' என்றும்—

'ஈழமாமன்னர் சங்கிலிகுமாரர் வாழ்க, வாழ்க' என்றும்—

'தஞ்சைப் படைத்தலைவர் வெல்க, வெல்க!' என்றும் ஜெய கோஷம் விண்ணதிர, ஆர்த்தெழுந்த கடல் போல நிற்கும் இந்த மக்கள் படையை வெல்வது எளிதான செயலாகத் தோன்றவில்லைதான் வன்னியனுக்கு.

ஆனாலும் அகந்தை மேலெழும்போது அறிவு பின்னோக்கிச் சரிந்துதானே ஆகவேண்டும்? அவன் தயக்கத்தை உதறியெறிந்து விட்டு, தன் வீரர்களை அழைத்து வெறிக் கூச்சலில் கட்டளைகளை இட்டான்.

''இந்த வெள்ளாட்டு மந்தைகளை வீரப் புலிகளின் கூட்டம் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். நாம் நடுங்க ஒன்றுமேயில்லை. வெறும் வில்லும் வாளும் வேலும் மட்டுமே அவர்களின் ஆயுதங்கள். நம்மிடம் வலிமை வாய்ந்த பீரங்கிகள் உள்ளன. ஓடுங்கள்... பீரங்கி வண்டிகளை வாசலுக்கு உருட்டிச் சென்று சுட்டுப் பொசுக்குங்கள் இந்த வீணர் கூட்டத்தை...''

துவங்கியது போர். பீரங்கிகள் சுடத் தயாராயின. ஆனால், வாசல் புற வெளியின் இரண்டு பக்கங்களிலிருந்தும் உருட்டி

வரப்பட்டு, சுடத் தயாரான இரண்டு பீரங்கிகளின் அருகிருந்த வீரர்களும் வருணகுலத்தானின் கையசைவிலிருந்து எழுந்த அம்பு களால் தாக்கப்பட்டு மண்ணில் சரிந்தனர். வில் வீரர்களை ஏவி அவன் அந்த பீரங்கிகளைக் கைப்பற்ற முயன்றபோது வன்னிய னின் கண்ணசைவையே கட்டளையாக ஏற்ற காவல் கோபுர வீரர்கள், எரி அம்புகளை எந்திர வில்லில் பூட்டி ஏய்ய முனைந்த னர்.அடுத்த கணமே அவர்கள் நாகம் தீண்டியதுபோல் துடித்துக் கோபுர முகட்டிலிருந்து தலைகுப்புற வீழ்ந்தனர். அப்படி மண் ணில் விழுந்த ஏழெட்டு வீரர்கள் எழுப்பிய மரண ஓலம் வன்னிய னையே கதிகலங்கச் செய்து விட்டது.

கண்ணிமைக்கும் நேரத்தில், வெகு உயரத்திலிருந்து அந்த வில் வீரர்கள் மீது வருணகுலத்தான் நிகழ்த்திய தாக்குதலை வன்னியன் நன்றாகவே கவனித்திருந்தான். நெருப்புச் சக்கரங்க ளைப் போல் அவன் வீசியெறிந்த அந்த நட்சத்திர ஆயுதங்கள் மூலைக்கு மூலை மின்னல் வேகத்தில் பறந்து வீரர்களின் நெஞ்சி லும் கழுத்திலும் பதிந்ததைக் கண்ட அவன், 'என்ன அற்புதமான ஆற்றல்! இப்படிக் கூட ஒரு திறமை இருக்க முடியுமா? கணப் போதில் மூலைக்கு மூலை இலக்குகளைத் தீர்மானித்துச் செயல்ப டுகிறானே இவன்! ஒவ்வொருவர் அசைவும் அவனால் கவனிக்கப் படுகிறதே... அடுத்த நடவடிக்கையை நம் வீரர்கள் தீர்மானிப்ப தற்கு முன்பே அவன் எதிர்த் தாக்குதலை நிகழ்த்தி விடுகிறானே!' என்று எண்ணி வியந்து கொண்டிருந்தான்.

இப்படி வன்னியன், மேன்மாடச் சாளரத்தினருகே சற்று மறைவாக நின்று கவனித்துக் கொண்டிருக்கையிலேயே இருபது இருபத்தைந்து வீரர்கள் குற்றுயிரோடு மண்ணில் சாய்ந்து விட்ட னர். வன்னியன் இனி அந்த மாளிகையை நம்பிப் பயனில்லை என்பதை உணர்ந்தான். அவனுடைய பீரங்கிகளைக் கொண்டே அந்த மாளிகையின் ஒரு பக்கச் சுவரை இடித்துக் கொண்டிருந்தான் வருணகுலத்தான். இன்னொரு பக்கம் தஞ்சை வீரர்கள் துணிந்து முன்னேறி மாளிகைக்குத் தீ வைக்கவும் செய்தனர்.

அடுத்த சில கணங்களில், தப்பியோடும் முயற்சியில் தோற்று — வருணகுலத்தானிடம் சிறைப்பட்டான் வன்னியன். அவன் கண்ணெதிரேயே அந்த லங்கா தகனம் நிகழ்ந்தது; அவன் மாளிகை மீது உயர உயரத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது.

**யா**ழ்ப்பாண மன்னர் சங்கிலிகுமாரர், சபை நடுவே நின்ற மனிதனைப் பார்த்து வியப்பால் விரிந்த விழிகளை இமைக்கவும் மறந்தவராகப் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தார் அரியணை



யில். அரசவை நிரம்பி வழிந்தது, பிரமுகர்களால். சபா மண்டபத் துக்கு வெளியே மக்கள் கூட்டம் கட்டுப்பாடுகளையெல்லாம் மீறித் தகர்த்தபடி அலை மோதிற்று.

தஞ்சைப் படைத்தலைவன் நூற்றுக்கணக்கான வீரர்களுடன் யாழ் நகருக்குள் பிரவேசித்த மறுகணமே நகரம் பரபரப்புக்குள்ளா கியிருந்தது. நல்லூர் அரண்மனைக்கும் செய்தி எட்டிற்று. அந்தச் செய்தி எந்த அளவுக்குச் சங்கிலி மன்னரை குதூகலத்தில் ஆழ்த்தி யதோ அதே அளவு அச்சத்தையும் கவலையையும் அளிக்கும் மற்றொரு செய்தியும் அவர் செவிகளில் ஒரே சமயத்தில் விழுந்தது.

வன்னியன் சிறைப்பட்ட செய்திதான் அது.

கம்பீரமான இரண்டு காளைகள் பூட்டப்பட்ட ஒரு திறந்த வண்டியில், கை, கால்கள் தளையிட்ட நிலையில், உயர்ந்த துவஜமொன்றில் — நின்ற நிலையில் — கட்டப்பட்டுக் கொண்டு வரப்பட்டான் வன்னியன்.

தஞ்சைப் படைத்தலைவனைப் பார்த்த மகிழ்வில் உற்சாகம் கரை புரண்டோட, வெறிக்கூச்சலே போன்று வாழ்த்துக் கோஷங் களை முழக்கிய மக்கள், சிறைப்பட்ட வன்னியனைப் பார்த்து ஏளனச் சொற்களை வீசவும் தவறவில்லை.

தஞ்சை வீரர்கள் மட்டும் கடுமையாக நடந்து கொள்ளவில் லையென்றால், வன்னியனை அன்று கல்லால் அடித்தே கொன்றி ருப்பார்கள் ஈழ மக்கள்.

தஞ்சைப் படைத்தலைவன், தன்னைப்பார்த்து ஆனந்தத் துள்ளலுடன் வாழ்த்துக்களை முழக்கும் ஈழ மக்கள் நடுவே சிறிதும் புகழ் மயக்கம் கொண்டு விடவில்லை. மாறாக, கண்டிப்பு காட்டும் கடமை வீரனாகவே நடந்து கொண்டான். அவன் கட்டளைப்படி தஞ்சை வீரர்கள் கூட்டத்தை விலக்கியபடி விரைந்து வந்து அரண்மனையை அடைந்தனர்.

முன்பே செய்தி அறிந்து அரசவையும் கூடியிருந்தது.

இதோ, சபா மண்டபத்தின் நடுவே வந்து நிற்கிறான், தஞ் சைப் படைத்தலைவன். எந்த மாவீரனைக் காண ஈழ மன்னர் பெருத்த ஆர்வத்தோடிருந்தாரோ அந்த மாவீரன் இதோ அவர் கண்ணெதிரே நின்று கொண்டிருக்கிறான். நியாயமாக அவன் வருகை அறிந்ததுமே நகரெல்லைக்கு ஓடோடிச் சென்று வரவேற் றிருக்க வேண்டும். ஆனால், அப்படிச் செய்ய முடியாத ஒரு தர்மசங்கடத்தை உண்டாக்கி விட்டிருந்தான் வருணகுலத்தான்.

அதுதான் வன்னியனைச் சிறைப்பிடித்து வருவது. யாழ்ப்பாண மன்னருக்குப் பெரும் அரசியல் சிக்கலை உண்டு பண்ணுகிற செயல் இது. போர்ச்சுகீசியர்கள் என்னதான் ஈழ மன்னரை ஒழித்துக்கட்ட சதி வேலைகளைச் செய்தாலும், இன்னும் அவர்கள் வெளிப்படையான எதிரிகளாக ஆகிவிடவில்லை. அவர்களுடைய பெரும் ஆதரவு பெற்றவன் வன்னியன். அவனை வெளிப்படையாகச் சிறைப்படுத்தி, நடு வீதியில் மக்கள் கண் முன்னே கொண்டு வருவது ஆபத்தான செயல். வன்னியனுக்கு இதைவிட அவமானம் வேறொன்றும் இருக்க முடியாது. அவனை அவ்வளவு எளிதில் சிறையில் தள்ளி விடுவதும் இயலாத காரியம். உடனே அவனுக்குப் பரிந்து போர்ச்சுகீசியர் வந்து நிற்பர். விடுதலை செய்தாலும் வன்னியனின் பழிவாங்கும் வேகமும் வெறியும் அதிகரிக்குமே தவிர, குறையாது. இந்த நிலையில் என்ன செய்வது என்று புரியாத குழப்பத்தோடு இருந்தார் சங்கிலிமன்னர்.

சபா மண்டபத்தின் நடுவே வந்து நின்ற வருணகுலத்தான், கம்பீரமாக ஈழ மன்னருக்கு வணக்கம் செலுத்தினான். பிறகு—

''ஈழ மன்னர் என்னை மன்னிக்க வேண்டும். தங்கள் கோரிக்கையை ஏற்று தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கர், என்னை ஈழத்தின் பாதுகாவல் பொறுப்பை ஏற்குமாறு கட்டளையிட்டு இங்கு அனுப்பி வைத்தார். ஆனால், குறித்த தினத்தில் நான் தங்களைச் சந்திக்க இயலாது போயிற்று. என் வருகை பற்றி எப்படியோ முன்கூட்டியே தெரிந்து கொண்டு விட்ட இந்த வன்னியன், ஈழ மண்ணில் நான் வந்து இறங்கியது முதலே எனக்கு இன்னல் பல இழைக்கத் துவங்கி விட்டான். என்னை வழி மறித்து அழைத்துச் சென்று, தனக்கு ஆதரவாக நடந்து கொள்ளுமாறு வேண்டினான்; மறுத்ததால் என் உயிருக்கு ஆபத்து உண்டாக்குமளவு துணிந்து விட்டான். சதிகளை முறியடித்தேன் — இவனை எதிர்த்துப் போரிடவும் செய்தேன். இதோ, தங்கள் முன் சிறைப்பிடித்து இழுத்து வந்து நிறுத்தியிருக்கிறேன். விசாரணை நடத்துமாறு தங்களை வேண்டுகிறேன்...'' என்று கூறினான்.

சங்கிலி மன்னரின் மனத்திலிருந்த குழப்பமும் தயக்கமும் சற்று விலகியது. எப்படி இந்தப் பிரச்னையை அணுகுவது என யோசித்துக் கொண்டிருந்த அவர், சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

''இந்த அவை இப்போது தஞ்சைப் படைத்தலைவரை வரவேற்பதற்காக மட்டுமே கூடியிருக்கிறது; வேறு எந்த விசாரணைக்காகவும் அன்று. குற்றம் சாட்டப்பட்ட நிலையில் கொண்டு



வரப்பட்டிருக்கும் வன்னியத்தேவரை மாளிகைக் காவலில் வைக்குமாறு கட்டளையிடுகிறேன். அவருக்கு விலங்குகளை அவிழ்த்து விடலாம். விசாரணை எப்போது என்பது பின்னர் அறிவிக்கப்படும். நமது சிறப்பு அழைப்பின் பேரில் வருகை தந்திருக்கும் தஞ்சைப் படைத்தலைவரை இப்போது நாம் முறைப்படி வரவேற்று உபசரிப்போம்...'' என்று கூறினார்.

உடனே அந்த இடத்திலிருந்து வன்னியன் அகற்றப்பட்டு, விலங்குகள் அவிழ்க்கப்பட்டு, மாளிகைச் சிறையில் வைக்கப்பட்டான்.

மன்னர் அரியணையிலிருந்து எழுந்து வந்து தஞ்சைப் படைத் தலைவனை மலர்ந்த முகத்தோடு நோக்கி மார்புறத் தழுவி மகிழ்ந்தவராய் அழைத்துச் சென்று தம் அருகே அரியாசனத்துக்குச் சரியாசனமான இருக்கை ஒன்றில் அமரச் செய்தார்.

அரசைப் பாதுகாக்க வந்த அந்த வீரத் தலைவனை வரவேற்றுக் களிப்படையச் செய்யும் முகமாகக் கலை நிகழ்ச்சிகள் துவங்கின. அரங்கு நடுவே அழகிய அணங்குகள் வந்து சதங்கை குலுங்க — சங்கீதம் முழங்க, தென்றலில் ஆடும் மலர்களைப் போல் தேக நளினங்களால் தேன்கவிதை எழுதுவது போல் நர்த்தன விருந்து படைத்தனர்.

இதையெல்லாம் நோக்கியபடி அந்த சபா மண்டபத்தின் மேன் மாடச் சாளரமொன்றில், அரச குடும்பத்து அணங்குகள் அமருமிடத்தில் அமர்ந்திருந்த ஞானவல்லிக்கோ இதயம் படபடவென அடித்துக் கொண்டிருந்தது. 'எப்போது இந்தக் கலைநிகழ்ச்சிகள் முடிவடையும்... இன்னும் எத்தனை அரச மரபு உபசரிப்புகள் மீதமுள்ளன... எப்போது இவர் நம்மருகே வந்து சேருவார்...? அல்லது நாம்தான் தேடிச் சென்று இவரருகே நிற்கும் தருணம் எப்போது வரும்?' என்றெல்லாம் பலவாறாக எண்ணி மனம் தவித்துக் கிடந்தாள்.

கண்கள் அவன் மீதே பதிந்து கிடந்தன. வேறு காட்சிகளை நோக்க அவள் நயனங்கள் விரும்பவில்லை. கண்ணும் கருத்தும் ஒன்றாய்ப் பரபரக்க அவள் கை பிசைந்து தவிப்பதைச் சற்றும் தஞ்சைப் படைத் தலைவன் கவனிக்கவே இல்லை. ஏனெனில், அவள் உயரமானதோர் இடத்தில் இருந்தாள். ஆனால், ஈழ மாமன்னர் சங்கிலிகுமாரரின் பார்வைக்கு இந்த அரிய காட்சி தென்படவே செய்தது. எதிர்பாராத விதமாகத்தான் அவர் தமது பார்வையை ஒரு கணம் மேல் நோக்கி உயர்த்தினார். அந்த ஒரு கணத்தில் அங்கே ஓர் மாகாவியத்தையே அல்லவா அவர் படிக்க நேர்ந்தது!

# 15. தழுவல் காவியம்

மாலை நேரத்துக்கு மட்டும் அப்படியென்ன ஒரு தனிச் சிறப்போ தெரியவில்லை. காதலுக்கும் மாலைப்போதிற்கும் உள்ள நெருக்கம் வேறு எப்போதுக்கும் இல்லையென்றே சொல்ல லாம். இதுபற்றிய ரகசியங்களை யாரேனும் அறிந்து சொன்னால் நன்றாயிருக்கும்.

இயற்கைகூடத் தன் இன்பப் பொக்கிஷங்களை மாலையில் தான் கடை விரிப்பதாக எனக்குத் தோன்றுகிறது. காலை அழகைப் பற்றிய காவிய வர்ணனைகளை விட மாலை அழகு பற்றிய வர்ணனைகளே அதிகம் என்றும் - சுவையானவை என்றும்கூடத் தோன்றுகிறது. மாலை, மனோகரமானது; சுகமயக்கம் தரக்கூடி யது. இல்லை என்கிறீர்களா? மாலைப் போதின் சிறப்புகளை மறுத்து, காலைப் போதிற்காகக் கட்சி கட்டத் துடிக்கிறீர்களா?

தயவுசெய்து முதலில் அதோ, யாழ்ப்பாண நல்லூர் அரண் மனை நந்தவனத்தினுள், ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்த படி - மலர்க்கணை மாறன் தனுசுக்குத் தங்களையே நாணாகத் திரித்துத் தர எண்ணியவர்களே போன்று இறுகப் புல்கி நிற்கும் அந்த இளம் காதலர்களைப் பாருங்கள். பிறகு பேசலாம்.

என்ன, அந்த இளைஞனைப் பார்த்தால் வருணகுலத்தான் போன்று தோன்றுகிறதா? அவனேதான்! அந்த இளம்பெண் வேறு யாருமில்லை, ஞானவல்லியே தான்!

அரசவையில் நிகழ்ந்த சம்பிரதாய ரீதியிலான வரவேற்பு வைபவங்கள் - உரையாடல்கள் முடிந்த பின்பு சங்கிலிமன்னர் அவனை விருந்து மண்டபத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார். அவனுக்கு அறுசுவை உணவுகள் பரிமாறப்பட்டன. மன்னரும் உடனிருந்து உணவருந்தினார். அங்கே வேல்மாறனும் காத்தவரா யரும் அழைத்து வரப்பட்டிருந்தனர். மன்னர் ஆயிரம் தகவல் களை அவனிடமிருந்து அறிந்து கொள்ளும் ஆர்வத்தோடு உரை



யாடிக் கொண்டே இருந்தார். வருணகுலத்தானும் அவற்றுக்கெல் லாம் பதில் அளித்துக் கொண்டிருந்தான். ஆனாலும் அவன் கண்கள்... விருந்து பரிமாற வந்திருந்த ஞானவல்லியின் மீதே லயித்திருந்தன. அவன் நினைவெல்லாம் அவள் பின்னாலேயே வளைய வந்து கொண்டிருந்தன. வாய் மட்டுமே மன்னரின் வினாக்களுக்கெல்லாம் பதிலிறுத்துக் கொண்டிருந்தது.

மன்னர் இதையெல்லாம் உணராமல் இல்லை. கண்ணெதிரே நிகழும் அந்தக் காதல் நாடகத்தை அதிகம் கவனியாதவர் போன்று அவர் கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய சந்தேகமெல் லாம் காத்தவராயன் இதுபற்றி என்ன நினைக்கிறானோ தெரிய வில்லையே என்பதுதான். மெல்ல, பேச்சின் நடுவே அவர் காத்தவராயனைப் பார்த்து, ''பார்த்தாயா, உன் மகள் ஞானவல்லி இன்றுதான் உற்சாகமாக நடமாடுகிறாள்... அவள் முகத்தில் இன்றுதான் ஜீவகளை தென்படுகிறது. பேசாமடந்தை போல், அடித்துவைத்த சிலைபோல முடங்கிக் கிடந்தவளுக்கு இன்று மட்டும் எங்கிருந்து வந்தது இத்தனை உற்சாகம்?'' என்று வினவி னார். பிறகு பதிலையும் அவரே கூறுவதுபோல், 'எனக்கென்ன தெரியும். தஞ்சைப் படைத்தலைவரைத்தான் கேட்க வேண்டும்' என்கிறாயா? அதுவும் சரிதான்...'' என்றார்.

மன்னர் கலகலப்பாகப் பேசி, கடகடவென்று நகைத்ததும் காத்தவராயரும் அதில் கலந்துகொண்டு சிறிது சிரித்தாரே தவிர, வாய் திறந்து கருத்து எதுவும் கூறவில்லை. தஞ்சைப் படைத்தலை வன் கூறினான்:

''மன்னர் கூறுவது உண்மை என்று எனக்குத் தோன்ற வில்லை. என் வருகை ஞானவல்லியை நிச்சயம் உற்சாகப்படுத்தி யிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், என் வருகை பற்றிய விவகா ரத்தால்தான் அவள் தன் தாயை இழக்க நேர்ந்தது. அந்தச் சோகம் இன்னமும் அவள் இதயத்தினின்று நீங்கியிருக்க இயலாது. 'முதன் முதலில் இவனைப் பார்த்தோம் தாயை இழந்தோம் - இப்போது மறுபடியும் இவனை இங்கே பார்த்துவிட்டோம்; தந்தையை இழக்க நேருமோ என்னவோ' என்று அவள் நினைக்கலாம். தந்தைக்கு எந்த ஆபத்தும் நேராதிருக்க வேண்டும் என்று பிரார்த் தித்துக் கொண்டிருப்பாள் மனத்தினுள்...''

அவன் இப்படிக் கூறி முடிப்பதற்குள் காத்தவராயன் கடுஞ்சி னத்துடன் அவனை நோக்கி, ''தஞ்சைப் படைத்தலைவரே...!'' என்று கத்தினான். ''போதும் நிறுத்துங்கள். மேற்கொண்டு எதுவும் உளற வேண்டாம்'' என்று எச்சரிக்கவும் செய்தான்.

வருணகுலத்தான் ஏதும் புரியாதவனாக வியப்பின் வசப்பட்டவனாய் காத்தவராயனை ஏறிட்டான். அதேசமயம் ஞானவல்லியின் விழிகளில் இரு அருவி கொப்பளிப்பதையும் அவன் நோக்கத் தவறவில்லை. மன்னர் காத்தவராயனைக் கடிந்துகொண்டார்.

''எதற்காக இப்படிக் கூச்சலிட்டாய்? தஞ்சைப் படைத்தலைவர் அப்படி என்ன தவறாகக் கூறிவிட்டார்...?''

''மன்னிக்கவேண்டும் பிரபு! சற்று உணர்ச்சி வயப்பட்டுவிட்டேன். அப்படியொரு அவச்சொல்லை அவர் உபயோகிக்காமல் இருந்திருக்கலாம்'' என்றான் காத்தவராயன்.

தஞ்சைப் படைத்தலைவன் காத்தவராயனைப் பார்த்து, ''ஐயா, சற்று விவரமாக எனக்குப் புரிவதுபோல் சொன்னால், தாங்களே சினவயப்படுகிற அளவுக்கு நான் என்ன தவறிழைத்தேன் என்பதை உணர உதவியாக இருக்கும்...'' என்று வினவினான்.

''ஞானவல்லி தன் தந்தையை இழக்க நேரலாம் என்று கவலைப் படுவதாக நீங்கள் பேசியதை என்னால் சகித்துக் கொள்ள இயலவில்லை. விளையாட்டாகக் கூட இனி அவ்வாறு பேசாதீர்கள். மற்றபடி உங்கள் மீது எனக்கு ஒரு சினமும் இல்லை'' என்றான் காத்தவராயன்.

''நீங்கள் செத்துப் போகவேண்டும் என்பதோ, ஞானவல்லி தாய் - தந்தையை இழந்து அநாதையாக நிற்கவேண்டுமென்பதோ, என் விருப்பமல்லவே, காத்தவராயரே! அப்படியொரு பொருள் தொனிப்பது போல் நான் பேசவில்லையே...?'' என்றான் வருணகுலத்தான்.

''நான் செத்துப்போக நேர்வது பற்றி எனக்கு ஒரு வருத்தம் இல்லை. ராஜகாரியத்தில் எதுவும் நிகழலாம். அதனாலெல்லாம் ஞானவல்லி ஒன்றும் அநாதையாகி விடமாட்டாள்...'' என்று கூறிக்கொண்டிருந்த காத்தவராயனை மேற்கொண்டு பேசவிடாமல் தடுத்த மன்னர், ''நீ தேவையில்லாமல் பேச்சை வளர்த்துகிறாய். இந்தப் பேச்சு இத்துடன் நிற்கட்டும். நாம் தஞ்சைப் படைத்தலைவரிடம் எத்தனையோ விஷயங்கள் பேச வேண்டியிருக்கும்போது இது அவசியமற்றதல்லவா...'' என்று கூறினார்.

ஞானவல்லியைச் சீண்டிப் பார்க்க வேண்டுமென்று அவன் ஏதோ கூறப்போக, கடைசியில் அது இவ்வாறு முடிந்தது. மன்னர் கடிந்து கொண்டதும் காத்தவராயன் ஏதோ காரணம் கூறி அங்கிருந்து எழுந்து சென்று விட்டார். சிறிது நேரமே பேசிக் கொண்டி



ருந்த மன்னரும், ''சரி... நீங்கள் சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் தஞ்சைப் படைத்தலைவரே! நாம் பிறகு பேசுவோம்... என்று கூறிச் சென்றுவிட்டார்.

ஓய்வாவது ஒன்றாவது...? அதன் பிறகு ஞானவல்லியோடு பேசிக் கொண்டிருக்கத்தான் அவனுக்கு நேரம் சரியாக இருந்தது. மாலை நேரமானதும் அவர்கள் அரண்மனை நந்தவனத்தினுள் நுழைந்து, மல்லிகைக் கொடிகளும், ராமபாண முல்லைக் கொடிகளும் படர்ந்து கிடந்த, அந்த அழகிய கொடி வீட்டினுள் சென்றமர்ந்து நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர் - வாய்ச் சொற்கள் அல்ல. கண்கள் கண்களோடு பேச, கைகள் கைகளோடு உறவுமொழி பேசிப் பின்னற் கோலம் போட, ஈருடலும் ஒருடலாக முனையும் தழுவல் காவியம் அங்கே எழுதப்பட்டுக் கொண்டிருந்தது.

அந்த இன்ப முயக்கமான இனிய வேளையில் தேவையே இல்லாமல் ஞானவல்லி, ''மதியம் என் தந்தை திடீரென்று அத்தனை கடுமையாகத் தங்களிடம் பேசுவார் என்று நான் எண்ணவேயில்லை. அதுபற்றி ஒன்றும் மனத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள்'' என்று கூறினாள்.

''இல்லை ஞானவல்லி... அதை அவ்வளவு சுலபத்தில் மறந்துவிட முடியாது. அதில் நிறைய யோசிக்க வேண்டியதிருக்கிறது...'' என்றான் வருணகுலத்தான்.

''பார்த்தீர்களா... மறந்து விடுங்கள் என்றால், அந்தப் பேச்சை இவ்வளவு பெரிதாக எடுத்துக் கொள்கிறீர்களே...'' சிணுங்கினாள் ஞானவல்லி. பிறகு அவளே சொன்னாள்:

''நீங்களும் தான் அவ்வாறு பேசாதிருந்திருக்கலாம். ஆபத்து எதுவும் இல்லாமல் நீங்கள் பத்திரமாக வந்து சேர வேண்டுமே என்று நான் எவ்வளவு துடித்துக் கொண்டிருந்தேன் தெரியுமா? வேண்டாத தெய்வங்கள் இல்லை. நீங்கள் என்னவென்றால், ஏதோ உங்கள் வருகையே எனக்குப் பிடிக்காதது போலவும் உங்களால் எனக்கு உபத்திரவமும் துன்பமுமே வருவதாக நான் எண்ணுவது போலவும் பேசி விட்டீர்களே...?''

''ஞானவல்லி, அது வெறுமே உன்னைச் சீண்டி வேடிக்கை பார்க்க எண்ணிப் பேசியது. ஆனால், அது இவ்வளவு பெரிய புதிரை என் முன்னால் எடுத்து வைக்கும் என்பதுதான் நான் எதிர்பாராதது...''

''என்ன புதிர்...?''

''உன் தந்தை யார் என்பது பற்றிய புதிர்...''

''என்ன சொல்கிறீர்கள்? காத்தவராயர்தான் என் தந்தை என்பதை ஒப்புக் கொள்ளவில்லையா தாங்கள்? எதனால் இந்தச் சந்தேகம்...?''

மெல்ல ஒரு பதற்றம் பரவியது அவளிடம்.

''பொறுமையாக இரு ஞானவல்லி. காரணம் இல்லாமல் நான் சந்தேகப்படவில்லை. காத்தவராயர் என்னிடம் அப்படிச் சினந்து கொள்ளக் கூடியவரே அல்ல. அதுவும் நான் விளையாட்டாகச் சொன்ன ஒரு விஷயத்துக்கு அவர் அவ்வளவு சீற்றம் காட்டியது, இதில் ஏதோ உட்புதிர் இருப்பதாகவே என்னை எண்ண வைக்கிறது. மன்னர் அவரை அடக்கிய விதமும்கூட என் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துகிறது. 'எதுவும் உளறித் தொலைத்து விடாதே...' என்பது போலவே இருந்தது அவர் கண்டிப்பு...'' என்றான் வருணகுலத்தான்.

தஞ்சைப் படைத்தலைவனின் பேச்சு ஞானவல்லியை மிகவும் குழப்பியது. 'என்ன சொல்கிறார் இவர்... என் தாயும் தந்தையும் என்மீது உயிரையே வைத்திருந்தனரே. அவர்களின் பாசப்பொழிவு என்னுள் காவியப் பசுமையாய் பதிந்து கிடக்கிறதே. இறுதியில்கூட எனக்கொரு ஆபத்து - அவமானம் என்ற மறுகணமே என் தாய் உயிரை மாய்த்துக் கொண்டு விட்டாளே... இத்தனை இருந்தும் இவர் இப்படியொரு புதுக் குழப்பத்தை சிருஷ்டிக்கிறாரே...' என்று உளம் நலிந்து போனாள் அவள்.

அவளுடைய இந்தக் குழப்பத்துக்கும், தஞ்சைப் படைத்தலைவனுடைய சந்தேகத்திற்கும் அவ்வளவு சீக்கிரம் - மறுநாளே விடை கிடைக்கும் என்று அந்த இருவருமே கிஞ்சித்தும் எண்ணவில்லை.

ஆனால், அந்தப் புதிர் விடுபட்டபோது...

இரவு நெடுநேரம் சங்கிலிமன்னர் தஞ்சைப் படைத்தலைவனோடு ஆலோசனை நிகழ்த்தினார். தஞ்சைப் படைவீரர்கள் ஐயாயிரம் பேர் வரப்போவதாகச் சொல்லப்பட்டதே! அந்தப் படை என்னவாயிற்று, எப்போது அவர்கள் வந்து சேருவர் என்ற தன் ஐயத்தைத் தீர்த்துக் கொள்வதிலேயே மன்னர் ஆர்வமாயிருந்தார். அவரது பேச்சு அதை மையமாக வைத்தே விரிந்தது.

முன்பு வேல்மாறனிடம் இதுபற்றி எத்தனையோ முறை விசாரித்தும் தெளிவான விடை கிடைக்கவே இல்லையே!



படைவரும்,

வரப்போகிறது,

வந்திருக்கலாம்,

வந்து விட்டது...

தஞ்சைப் படைத்தலைவர்தான் முழுத் திட்டமும் என்ன என்று அறிவார். அவரைத் தவிர இதற்கு உண்மையான விடையை வேறு யாராலும் சொல்லவியலாது -

இப்படிப்பட்ட பதில்களையே கேட்டு அலுத்துப் போயிருந்தார் மன்னர்.

'தஞ்சைப் படைகள் வந்து குவிந்து விட்டன. தலைவன் உயிருக்கு ஆபத்து என்று அறிந்ததும் அந்தப் படைவீரர்கள் ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவி - கிராமங்களில் புகுந்து சூறையாடுகின்றனர், தீ வைக்கின்றனர், பெண்களைப் பலாத்காரம் செய்கின்றனர்' என்று ஏகப்பட்ட வதந்திகள் ஒருபுறம் —

'தஞ்சைப் படை ஈழத்திற்கு வரவே இல்லை; தென் கடலில் எந்தவொரு மரக்கலமும் தமிழக வீரர்களுடன் வந்ததற்கான அடையாளமே இல்லை. ஆயிரக்கணக்கான வீரர்கள் எவர் கண்ணிலும் படாமல் கடல் பிரதேசத்தைக் கடந்து ஈழத்துக்குள் புகுவது என்பது சாத்தியமற்ற விஷயம். எனவே தஞ்சைப் படை வரவில்லை என்பதே உண்மை' என்று வாதிடுவோர் ஒரு புறம்...

இந்தக் குழப்பத்தைத் தீர்க்கவும் — புதிரை அவிழ்க்கவும் வருணகுலத்தான் ஒருவனாலேயே முடியும் என்பதால், சங்கிலி மன்னர் அவனிடம் அதற்கான பதிலை எதிர்பார்த்தார்.

வருணகுலத்தான் கூறினான்:

''ஒரு படை என்பது சக்தி வாய்ந்த ஆயுதங்களுக்குச் சமம். அது எவ்வளவு வலிமை வாய்ந்த ஆயுதமானாலும் சரி, அதை எடுத்துக் கையாளுகிற வீரன்தான் பிரதானம். ஒரு தலைவன் கீழ் எத்தனை அதிகபட்ச எண்ணிக்கையில் வீரர்கள் அணிவகுத்திருந்த போதும் அவர்களைக் கையாளுகிற தலைவன்தான் பிரதான கவனத்துக்குரியவனாகிறான். ஈழமண்ணைக் காக்க — தங்கள் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து — தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கர் என்னை அனுப்பியிருக்கிறார். எனக்கு உதவியாக ஐயாயிரம் வீரர்கள் உண்டு, அவ்வளவே. நான் தான் உங்கள் முன் இதோ வந்தாயிற்றே... பிறகு ஏன் தஞ்சைப் படை பற்றியே கவலையுடன் வினா எழுப்புகிறீர்கள்?''

'என்ன இது... இவன் புதிரை மேலும் சிக்கலாக்குகிறான்...' என்று எண்ணிய மன்னர்,

''நீங்கள்சொல்வது எனக்குப் புரிகிறது. ஒரு புத்தி சாலியான தலைவன்தான் பிரதானம்; அவன் பின்னால் மந்தையாடுகள் போல் எண்ணிக்கையில் அதிகமாக எத்தனைபேர் இருக்கிறார்கள் என்பதல்ல. ஆனாலும் அரசியலில் வெளிப்படையாகப் படை பலம் என்பது எண்ணிக்கையால் மட்டுமே கணக்கிடப்படுகிறது. தவிர, உங்கள் பின்னால் வந்திருக்கும் தஞ்சை வீரர்களுக்கு உணவு, உறைவிடம் போன்ற வசதிகளைச் செய்துதர வேண்டிய கடமை வேறு எனக்கு இருக்கிறதே! எனவே, இதுபற்றி உண்மை விவரம் எனக்குத் தெரிந்தாக வேண்டும்...'' என்று கூறினார்.

தஞ்சைப் படைத்தலைவன் கடகடவென்று சிரித்தான். பிறகு, ''சங்கிலி மன்னர் என்னை மன்னிக்க வேண்டும். தஞ்சைப் படையினருக்கு உணவும் உபசரிப்புகளும் ஏற்பாடு செய்துதர விரும்பும் தங்கள் நல்ல மனம், கருணை உள்ளம் பாராட்டத்தக்கது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், தஞ்சைப்படை என்பது வெறும் சோற்றுப் பட்டாளமல்ல. அவர்கள் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வல்லமையும் அவர்களுக்குக் கற்பிக்கப் பட்டிருக்கிறது. ஒரு மைதானத்தில் கொண்டு வந்து தஞ்சை வீரர்களைச் சந்தை கூட்டுவதுபோல் கூட்டிக் குவித்து, கூடாரங்கள் பரப்பித் தங்க வைப்பதோ — காட்சிப் பொருளாக்குவதோ என்னால் இயலாது. நான் ஈழ மண்ணில் நுழையும் போதே போரும் துவங்கிவிட்டது. போர் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, என் வீரர்களைத் தனியே ஓரிடத்தில் கொண்டு வந்து குவித்துக் காட்டுவது சாத்தியமற்றதும் கூட

''எனினும் தஞ்சை வீரர்கள் ஐயாயிரம் பேரும் வந்தாயிற்று; களத்தில் அவர்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து, எதிரிகளின் விஷமக்கரம் நீளுகிற இடங்களிலெல்லாம் எதிர் நடவடிக்கைக ளில் ஈடுபட்ட வண்ணம் இருக்கிறார்கள் என்பதை நான் தங்களுக் குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''வெறும் அணிவகுப்பு போல அவர்களை ஓரிடத்தில் குவித்து நிறுத்தினால்தான் நமது படைபலத்தை உணர இயலும் என்று தாங்கள் கருதினால், அதைச் செய்ய எனக்கு ஓர் ஆட்சேப மும் இல்லை. வெளிப்படையாக ஈழப்படைகளும் போர்ச்சுகீசி யப் படைகளும் அணி திரண்டு நின்றுமோதிக் கொள்ளும் கட்டம் எப்போது வந்துவிட்டது என்று தாங்கள் கருதுகிறீர்களோ, அப் போது ஒரு வெள்ளிக்கிழமை நல்லூர் வீரமாகாளியம்மனுக்கு



விசேஷ பூஜை ஒன்று ஏற்பாடு செய்யுங்கள். ஈழத்தின் வெற்றிக்கா கப் பிரார்த்தனை செய்யும் அந்த விசேஷ பூஜையில் ஈழ மக்கள் அனைவருமே கலந்து கொள்ள வேண்டுமென்று தாங்கள் விரும்பு வதாகவும், அம்பாளின் பாதங்களில் வைத்து பூஜித்த வீரவாளை அன்று மன்னர் தம் திருக்கரத்தால் வருணகுலத்தானுக்கு வழங்கு வார் என்றும் யாழ்ப்பாண நகர வீதிகள் தோறும் பறை அறிவிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

''வருணகுலத்தானுக்கு வாள்வழங்கும் விழா'' என்று குறிப் பிட்டு அறிவிக்க வேண்டும். மறுநாள் காலையிலேயே தஞ்சை வீரர் ஐயாயிரவரும் யாழ்ப்பாணத்தில் வந்து குவிந்து விடுவர். பூஜை முடிந்தவுடன் கோவில் மைதானத்தில் தமிழக வீரர்களை அணிவகுத்து நிறுத்துகிறேன். போதுமா?'' என்றான் வருணகுலத் தான்.

மன்னர் திருப்தி நிறைந்த நெஞ்சுடன் பெருமூச்சு பரப்புபவ ராய் புன்னகை தவழ வருணகுலத்தான் தோள்களைப் பரிவுடன் தட்டிக் கொடுத்தார்.

''தஞ்சைப் படைத்தலைவரே! தங்கள் திட்டம் எதுவாயினும் அது மிகச் சிறப்பானதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. தங்கள் மீது மலையளவு நம்பிக்கை கொண்டிருக்கிறது ஈழத்திரு நாடு. தாங்கள் கூறுவது போன்று, திட்டமிட்ட இரண்டு நாடுகளின் படையினர் நாள் குறித்து — களம் கண்டு தர்மயுத்தம் நடத்தும் பண்டைய தமிழ் மன்னர்களின் போர்முறை எதுவும் இப்போது இங்கே கடைப்பிடிக்கப் படவில்லை என்பது உண்மைதான்...

''வர்த்தக வேடம் பூண்டு இந்த மண்ணில் நுழைந்து, நாடு பிடிக்கும் வெறியுடன் நடந்து கொள்ளும் வெள்ளை இனத்துக் குள்ள நரிகளின் கூட்டத்தோடு தான் நாம் மோத வேண்டியிருக்கி றது. பதுங்கிப் பதுங்கி நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவி — அந்தக் கயவர் கூட்டம் கலவரங்களை நிகழ்த்திக் கொண்டிருக் கும் வேளையில் தான், தாய் மண்ணாம் தமிழ் மண்ணிலிருந்து தங்கள் உதவியைக் கோரினோம். எனவே, தங்கள் திட்டம் எதுவாயினும் எனக்குச் சம்மதமே. அதை மறுப்பதோ எதிர்ப் பதோ என் நோக்கமே அல்ல...'' என்றும் கூறினார் சங்கிலி மன்னர்.

''தங்கள் பாராட்டுக்கும் என் திட்டங்களுக்கான இசைவுக்கும் நன்றி வேந்தே! மாளிகைச் சிறையில் வைத்திருக்கும் வன்னியத்

தேவனுக்கு என்ன தண்டனை அளிக்க போகிறீர்கள் என்று நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று வினவினான் வருணகுலத்தான்.

''வன்னியன் மீது இன்னும் நாம் விசாரணையே நிகழ்த்தவில்லையே..... அதற்குள் எப்படித் தண்டனை விதிப்பது? முதலில் அவனோடு சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது. அவனும் தமிழன், நாமும் தமிழர்கள். நமக்குள் வீண் பகை எதற்கு என்று அவனிடம் கேட்க வேண்டும். போர்ச்சுக்கீசியர்களின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி அவன் ஈழத்தின் அரசியலில் புயல் வீசச் செய்து வருகிறான். இதைவிட, வன்னியன் என்னோடு தனியே ஒரு துவந்தயுத்தம் நடத்தலாம். நாங்கள் இருவரும் ஒரு களத்தில் தனியே நின்று வாட்போரிடுவது; நான் தோற்றுப் போனால் இந்த ஈழத்தின்ஆட்சி உரிமையை அவனே ஏற்கட்டும். யாழ்ப்பாண நல்லூரின் அரண்மனை வாசம், அரியணைக் கொலு எதுவும் எனக்குத் தேவையில்லை. ஒரு மோசமான கால கட்டத்தை நோக்கித் தேசம் தள்ளப்படுவதாலேயே நான் அரிணையில் அமர்ந்தேன். எனக்கு மகுட மயக்கம் கிடையாது. வன்னியன் என்னோடு போரில் தோற்றால், நான் அவனை மன்னித்து — மரியாதையோடு அனுப்புகிறேன். அவன் எப்போதும் என்னோடு நட்புரிமை கொண்டு பழகலாம். விதேசிகளிடம் விழுந்து கிடக்கும் மயக்கத்தை மட்டும் அவன் உதறிவிட்டால்போதும்.

இவையெல்லாம் அவனிடம் எடுத்துரைத்து விவாதிக்க காத்தவராயன்தான் தகுதியானவன். ஆரம்பம் முதல் ஈழத்தில் அரசியல் நிலவரங்களை ஒன்றுவிடாமல் உற்றுநோக்கி வரும் என் அந்தரங்க ஒற்றன் அவனே. அவன் தான் வன்னியனின் இதயத்தில் புகுந்து அங்கே புதைந்து கிடக்கும் ரகசியங்களை அறியும் ஆற்றலுடையவன். இதோ நான் தங்களோடு பேசிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், காத்தவராயன் வன்னியனோடு அமர்ந்து உரையாடிக் கொண்டிருப்பான். இந்த இரவு முழுக்க விவாதித்தாலும் சரி, நாளைய பொழுது நல்ல முடிவோடு விடிய வேண்டும் என்று காத்தவராயனிடம் கூறியுள்ளேன். ஏனெனில், நாம் ஒரு நாழிகை நேரம் கூட இதில் தாமதம் செய்ய இது சமயமல்ல. வன்னியனைக் காக்க போர்ச்சுக்கீசியர்கள் எதையும் செய்யத் தயங்கமாட்டார்கள். வெளிப்படையான யுத்தமே கூட மூளலாம். ஒருவேளை, வன்னியன் தமிழுணர்வால் மனம் மாறி, நம் பங்கில்



இணைந்தால், ஈழத்தின் அரசியலே தலைகீழாக மாறும். பார்ப்போம் அந்த அற்புதம் நிகழுகிறதாவென்று...?'' என்றார் சங்கிலி மன்னர்.

ஈழத்திலாவது தமிழர் தலைவர்கள் ஒன்றாக இணைவதாவது... அப்படி நடக்கக் கூடாது என்றுதான் எந்தத் துர்தேவதையோ சபித்து விட்டது போல் இருக்கிறதே!

மறுநாள் பொழுது தமிழுணர்வு வெற்றி பெற்ற மகிழ்ச்சிச் செய்தியுடன் விடியும் என்று சங்கிலிமன்னர் எதிர்பார்த்துக் காத்திருந்த அந்த வேளையில்தான் அந்த விபரீதச் செய்தி அவர் செவிகளில் வந்து விழுந்தது.

## 16. ஆட்சிபீடம் என்றொரு பலிபீடம்!

**த**ஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான், மிகுந்த துணிச்சலோடு அந்தக் கேள்வியைக் கேட்டான், சங்கிலி மன்னரிடம்.

''அரச குடும்பத்தவர்களையெல்லாம் நெறியற்ற முறையில் படுகொலை செய்துவிட்டுத்தான் தாங்கள்ஆட்சி பீடத்தைக் கைப் பற்றியதாக அனைவரும் பேசிக் கொள்கிறார்களே... தங்கள்மீது சுமத்தப்படும் இந்தக் குற்றச்சாட்டையும் களங்கத்தையும் கேட்க நேரும் போதெல்லாம் என் உள்ளம் கூசிப் போகிறதே... 'சங்கிலி மன்னர் கொடூரமானவர் என்பது உண்மையானால், அவருக்கு ஆதரவாக நாம் வந்திருப்பது ஒரு வரலாற்றுக் களங்கம் போலாகி விடுமே' என்று என் மனம் வேதனையடைகிறதே... உண்மையில் என்னதான் நடந்தது? ஒருவேளை நான் கேள்விப்பட்டதெல்லாம் பொய்யான தகவல்களாக இருக்குமோ?'' என்று வினவினான் வருணகுலத்தான்.

அவன் இந்தக் கேள்வியைக் கேட்டதும் ஈழவேந்தர் சங்கிலி குமாரர் எள்ளளவு கூடச் சினம் கொள்ளவில்லை.

''உண்மைதான். தஞ்சைப் படைத்தலைவரே! மூன்றாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது அது. ஆட்சிபீடத்தில் நான் அமர்வதை விரும்பாத சில ஒட்டுண்ணிகள் இருந்தன. அவற்றை நசுக்குவதோ ஒடுக்குவதோ அத்துணை எளிதானதல்ல என்பதால் தீயிட்டுப் பொசுக்கி விட்டேன்...'' என்றார். அவர் குரலில் சிறிதும் பதற்றமில்லை; குற்ற உணர்வின் குறுகுறுப்பு ஒரு சிறிதும் தொனிக்கவில்லை. ஆனாலும் ஒருவித சோகம் மண்டிக் கிடந்ததை வருணகுலத்தான் ஊன்றிக் கவனித்தான்.

''எதற்காக அப்படிச் செய்தீர்கள்? அது தங்களுக்கு இழிவு தரக்கூடியது என்பதை உணரவில்லையா? ஆட்சி பீடம் என்பதே ஒரு சமாதி மேடையாகத்தான் இருக்க வேண்டுமா?'' என்று



வினவினான் அவன். தஞ்சைப் படைத்தலைவனின் குரலில் சற்று உஷ்ணம் தலைகாட்டிற்று.

ஈழவேந்தர் சங்கிலிகுமாரர் புன்முறுவல் பூத்த முகத்தோடு அவனை நோக்கி, வாஞ்சை கலந்த குரலில், ''வருண்...'' என்று அழைத்தார். அவரது வலக்கரம் மிகுந்த ஆதுரத்தோடு அவனது தோளில் பதிந்தது.

''நீ என்னைப் பற்றிக் கேள்விப்பட்ட அவதூறுகளெல்லாம் நிஜமாகப் போய் விட்டதே என்றெண்ணி வருந்துகிறாய். கொடியவனும் கொலைகாரனும் பதவி வெறியனுமான ஒருவனுக்காக நாம் எதற்கு வாள் தூக்கிப் போரிட்டு, வரலாற்றுக் களங்கமாக வேண்டும் என்று வேதனைப்படுகிறாய். எனக்குப் புரிகிறது. ஆனால் அமைதியாக இரு... நான் கூறும் விளக்கங்களைக் கேள். அதன் பிறகும் நீ என்னை வெறுப்பதானால் தாராளமாக உன் உசிதப்படி நடந்து கொள்ளலாம். தஞ்சைப் படைகள் எங்கே, எங்கே என்று கேட்டு நான் உன்னை வற்புறுத்த மாட்டேன். தஞ்சை இரகுநாத நாயக்கரிடம் மறு ஓலை அனுப்பி,வேறு தலைவனின் கீழ் படை உதவி அனுப்புமாறும் கோர மாட்டேன். சற்று எழுந்து என் பின்னால் வா...'' என்று கூறிய சங்கிலி மன்னர் எழுந்து, அந்த மேன்மாடக் கூடத்தின் மற்றோர் உள்வாசலை நோக்கி நடந்தார்.

அது ஒரு பிரம்மாண்டமான சித்திரக்கூடம். இயற்கைக் காட்சிகளும்,அழகிய இளநங்கையர் பலரின் நர்த்தனக் கோலங்களும், தெய்வத் திரு உருவங்களும், புராணக் காட்சிகள் பலவும் அங்கே அற்புதச் சித்திரங்களாக சுவர் முழுக்க ஆரோகணித்திருந்தன. பிரதானமாகப் பல அரசர்களின் தைலவண்ண ஓவியங்கள் ஆள் உயரத்துக்கு அங்கங்கே மாட்டப்பட்டிருந்தன. ஒவ்வோர் ஓவியமும் மிக அழகிய சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த — பொன் முலாம் பூசப்பட்ட மரச்சட்டங்களோடு காட்சியளித்தன. ஐரோப்பியரின் வருகைக்குப் பின் கலைகளில் ஏற்பட்டிருந்த மாற்றங்களில் இதுவும் ஒன்று. பண்டைய முறைப்படி வெறுமே சுவர்களில் தீற்றிய ஓவியங்களாக இல்லாமல், யாழ்ப்பாணத்தின் முந்தைய மன்னர் பலரும் அங்கே அலங்காரச் சட்டங்களின் நடுவே அரச கம்பீரத்தோடு அப்படி அப்படியே சபா மண்டபத்தில் கொலுவிருப்பதே போன்று காட்சியளித்தனர்.

சங்கிலி மன்னர், வருணகுலத்தானின் தோள்மீது தம் கரத்தைப் போட்டவாறு — அணைத்தாற்போல் அவனை அந்த ஓவியங்களின் அருகே அழைத்துச் சென்று, ''வருண், நீ சொன்

னாயே, அதுபோல் ஆட்சிபீடம் என்பதே சவங்களைப் புதைத்து எழுப்பிய சமாதி மேடைதான் என்று சொல்வதை விட, அது ஒரு பலிபீடம் என்று சொல்வதே சிறப்பாக இருக்கும்.

''நீதி காக்க, நெறி காக்க மக்களின் நலன் ஒன்றே குறியாய்க் கருதிய எத்தனையோ மாமன்னர்கள் இந்த ஆட்சி பீடத்தில் தங்கள் இன்னுயிர் நீத்திருக்கின்றனர். ஆட்சி பீடத்தில் அமர்வது என்பதே ஒரு புனித பலிபீடத்தில் கழுத்தை வைத்துக் குனிந்து கிடப்பதற் குச் சமம்தான். தியாக சீலர்களாகப் பலர் அரியணை காக்கத் தன் ஆத்ம நிவேதனம் நிகழ்த்தியதும் உண்டு; பிறரால் — பதவி வெறியர்களால் — பகைவர்களால் வெட்டிப் பலி கொள்ளப்பட் டதும் உண்டு. எப்படிப் பார்த்தாலும் ஆட்சிபீடம் என்பது ஒரு பலி பீடம்தான் என்பதில் சந்தேகமில்லை.

''இதோ இந்த ஓவியத்தில் நீ காண்பதுதான் மூன்றாண்டுக ளுக்கு முன்பு யாழ்ப்பாண மன்னராக இருந்த எதிர்மன்ன சிங்கப் பரராஜ சேகரன். இவரை நான் கொல்லவில்லை; உடல் நலம் குன்றிய நிலையிலிருந்த இவர் இயற்கை மரணமே எய்தினார். வயது, அப்படியொன்றும் சாகிற வயதல்ல. ஆனால், போர்ச்சுகீசி யரின் நட்பு ஏராள துர்ப்பழக்கங்களை மன்னரிடம் ஏற்படுத்தியி ருந்தது. சிறந்த வெளிநாட்டு மதுக் குப்பிகளை நிறைய அளித்துக் கொண்டேயிருந்தனர் போர்ச்சுகீசியர். மிக அழகிய சித்திர நுணுக் கங்கள் வாய்ந்த அந்த வெளிநாட்டு வண்ண வண்ணக் கண்ணாடிக் குப்பிகளைப் பார்த்துக் கொண்டேயிருப்பதில் எதிர்மன்ன சிங்கப் பரராஜ சேகரருக்கு மிகுந்த விருப்பம். அதனுள்ளே இருப்பது குடலை எரித்துக் குலத்தை அழிக்கும் கொடூர குணம் வாய்ந்த திரவம் என்பதை அவர் சிறிதும் உணரவில்லை. அரசர் சுய உணர்வோடு இருக்கக் கூடாதென்று தானே போர்ச்சுகீசியர் அவற் றையே அனுப்பிக் கொண்டிருந்தனர்...

''அந்த மது அரக்கன்தான் மன்னரை மரணப் படுகுழியில் தள்ளியது. சுய உணர்வோடு இருந்த பல நேரங்களில் எதிர்மன்ன சிங்கப் பரராஜ சேகரர், போர்ச்சுகீசியரின் அடாத செயல்களைக் கண்டித்ததுண்டு.எதிர்க்கவோ, நட்பை இழக்கவோ விரும்பியவ ரல்ல என்ற போதும் தர்ம — நியாயங்களை, தமிழ்வேந்தர் மரபின் தனித் தன்மையை அவர் உணர்ந்திருந்தார். அதைப் போர்ச்சுகீசியர் சிறிதும் விரும்பவில்லை. ஆதிக்க வெறி பிடித்து, இந்த ஈழத் திருநாட்டை முற்றிலுமாக விழுங்கி விடத் துடிக்க அந்த மிலேச்ச வெள்ளை நரிகள் ஒரு பொய் அரசையே — பொம்மை அரசையே எதிர்பார்த்தனர்...



''மன்னர் நோயுற்று மாண்டதும் அவருடைய மூன்று வயது மகனான சின்ன மீகாப் பிள்ளை ஆராய்ச்சி என்பவனை அரிய ணையில் அமர்த்தி — முடிசூட்டி மன்னரின் ஒன்று விட்ட தம்பி அரசகேசரி பண்டாரம் என்பவரைப் பொறுப்பேற்று நடத்தும் புரவலராக நியமித்தனர் போர்ச்சுகீசியர். இப்படி நடக்க வேண்டு மென்று அரசரே சாசனம் எழுதி வைத்ததாகவும் கதைத்தனர்.

''மரபு ரீதியில் மன்னருக்குப் பின் அவர் மகனே இளவரச னாக அரியணையில் அமர்வதையோ, காலஞ் சென்ற மன்னரின் தம்பியே அரசப் பொறுப்புகளை ஏற்று நடத்துவதையோ மக்கள் எதிர்க்க விரும்பவில்லை; அங்கீகரித்தனர்.

''ஆனால், அரசகேசரி பண்டாரம் அத்தனை நல்லவனல்ல. உள்ளுக்குள் ஆட்சிபீடக்கனவோடுதான் இருந்தான் அவன். பெண் பித்தனும் கூட. அவனுடைய பலவீனங்களை அறிந்து, முன்பே தங்கள் கையாளாக அவனை மாற்றி வைத்திருந்தனர் போர்ச்சுகீசியர். காலஞ்சென்ற மன்னர் எனக்குத் தாய் மாமன். அரண்மனைக்குள் உறவு முறையில் வலிமை வாய்ந்த வீரனாக நான் இருப்பதை அரசகேசரி விரும்பவில்லை. அத்துடன் போர்ச்சு கீசியர்களின் ஆதிக்கம் இந்த ஈழ மண்ணில் ஒருபோதும் நிகழக் கூடாதென்ற கொள்கை முழக்கமிடுபவனாக வேறு நான் இருந் தேன். எனவே, என்னை ஒழிக்க அல்லது விரட்ட சதி உருவாயிற்று.

''குழந்தை இளவரசன் தூங்கும்போதே பாம்பால் கடிபட்டு மடிந்தான். தொட்டிலிலிருந்து பாம்பு கீழிறங்கி ஊர்ந்ததை அரண் மனை ஊழியர்கள் பார்த்திருக்கின்றனர். அந்த அறைக்குள் நான் வந்து சென்றதாகவும் அதன் பிறகே குழந்தை பாம்புக் கடியால் அலறி மடிந்ததாகவும் ஊர்ஜிதமாகத் தகவல்கள் கூறப்பட்டன. என்னை ஒழிக்கச் சதிவலை விரிக்கப்பட்ட இந்த வேளையில்தான் நான் சீறியெழுந்தேன்.

''காலஞ்சென்ற மன்னர் சுயநினைவோடு தம் அரச வாரிசை நியமிக்க முனைந்திருந்தால் என்னையே தேர்ந்தெடுத்திருப்பார் என்பதை உணர்ந்திருந்த பிரமுகர் பலர் என்னை ஆதரித்ததால் நான் துணிந்து என் எதிரியைக் கொன்றேன்; அரசகேசரி பண்டாரத் தின் மாளிகைக்குத் தீ வைத்து விட்டேன். அந்தத் தீயில்தான் அவனும் அவனைச் சார்ந்த சிலரும் மடிந்தனர். ஆட்சி பீடத்தை நான் கைப்பற்றினேன். போர்ச்சுகீசியர்கள் ஏதோ பெரிய தர்ம ரட்சகர்கள் போல என்னை எதிர்த்துக் கூக்குரல் போட்டனர். பீதுறுபொட்டன்கொன் என்ற மத போதகன் தலைமையில் மக்கள் நடுவே துஷ்பிரசாரம் நடந்தது...

''இதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை வருண்... ஆனால், நீ என்மீது சந்தேகம் கொண்டு விடக் கூடாது என்பதுதான் என் கவலை...'' என்று விவரமாக அனைத்து உண்மைகளையும் எடுத்துக் கூறினார்.

கடைசியில் அவர் குரல் தழுதழுப்பதைத் தஞ்சைப் படைத்த லைவன் கவனித்தான். கம்பீரமான சங்கிலி மன்னரின் உள்ளத்தி லும் கூடக் கலக்கத்தின் நிழல் படியும் என்பதை அவன் நினைத் தும் பார்த்ததில்லை. தான் நிர்த்தாட்சண்யமாக அப்படி அவரை விசாரித்திருக்கக் கூடாதோ என்று கூட எண்ணினான் அவன்.

''ஈழ மன்னா! இணையற்ற பெருவீரரான தங்கள் மீது ஈனத்தனமாகப் புழுதிவாரித் தூற்றுவோரின் கூச்சலுக்கு நான் செவி கொடுத்ததே தவறு. அதைவிடப் பெயருந் தவறிழைத்து விட்டேன், அற்பர்களின் குற்றச்சாட்டைத் தங்களிடமே வினவிய தன் மூலம்.அரச பாரம்பரியம் என்பது மன்னருக்குப்பின் அவர் மகன் அரியணை ஏறுவது என்பது மட்டுமல்ல; தோள் வலிவும் வாள் வலிவும் பெற்ற ஒருவன் அரியணையில் இருந்து அரச நெறிகளைக் கடைப்பிடித்து அறம் காக்க வேண்டும் என்பதுதான் நிஜமான மரபு. இன்றைய சூழ்நிலையில் தாங்கள்தான் ஈழத்தின் அரியணைக்குத் தகுதி வாய்ந்தவர் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை. காலத்தில் தீர்ப்பாகவும் அதுவே இருந்திருக்கிறது-

''ராஜகாமினியை வெளியே விட்டு வைத்திருப்பதிலிருந்தே தாங்கள் அரச குடும்பத்தார் அனைவரையும் கொல்லும் நோக்கத் தோடு இருந்தவரல்ல என்பதை என்னால் உணர முடிகிறது. தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கர்மீது கூட அவர் அரச குடும்பத் தாரைக் கொன்று விட்டு, முறை தவறி ஆட்சிபீடத்தைக் கைப்பற் றியவர் என்ற குற்றச்சாட்டு குறைமதியாளர் சிலரால் கூறப்படுவ துண்டு. நாங்கள் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை. என் எண்ண மெல்லாம் தாங்கள் அந்த ராஜகாமினியை மணந்து கொண்டிருக்க லாமே என்பதுதான். அப்படிச் செய்திருந்தால் அது மிகச் சிறந்த ராஜ தந்திரமாகவும் இருந்திருக்குமே... காலஞ்சென்ற மன்னரின் புதல்வியை மணந்தவர் என்ற முறையில் இந்த ராஜபீடம் தங்க ளுக்குரியதாகியிருக்குமே...? அதை போர்ச்சுகீசியரும் ஆட்சே பிக்க முடியாதே...?'' என்றான் வருணகுலத்தான்.

''இல்லை வருண், எனக்கு அப்படியோர் எண்ணம் ஏற்பட்ட தில்லை. தந்திர வழிகளில் இந்த அரியணையைப் பெறும் எவ்வித முயற்சியிலும் எனக்குச் சம்மதமில்லை. தவிர, அவள் காலஞ் சென்ற மன்னரின் காமக் கிழத்திக்குப் பிறந்தவள். அவளை



இளவரசி என்று பெரியோர் எவரும் ஒப்புக் கொண்டதில்லை. ராஜகாமினி ஓர் அழகுப் பிசாசு. மேனிச் செழுமை மட்டுமே நிஜ அழகு எனக் கருதும் மோகாவேசம் கொண்டவனல்ல நான். போர்ச்சுகீசியர்கள் பரப்பிவரும் விஷமத்தனமான நாகரித்தில் விழுந்து கிடக்கும் விட்டில் பூச்சி அவள். ஆடவர்களை ஆட்டிப் படைத்து, அடிபணிய வைக்கும் ஆற்றல் தனக்கிருப்பதாக எண் ணும் அழகுத் திமிர் பிடித்த அவள், என்னைக் கண் வலை வீசி, காதல் பொறியில் சிக்க வைக்க எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டதுண்டு. ஏன், போர்ச்சுகீசியர்களே கூட அவனை நான் மணந்து கொண்டு விட்டால் பிரச்னைகள் சற்றுக் குறையும் என்று கூறி, என்னைக் கட்டாயப் படுத்தியதுண்டு. நான் அதை ஒரு போதும் ஏற்க முடியாதென்று மறுத்து விட்டேன்.

''வருண், ஓர் அரசன் எத்தனையோ பெண்களை எத்த னையோ காரணங்களுக்காக மணந்து கொள்வது அங்கீகரிக்கப் பட்ட விஷயந்தான். ஆனால், நான் அப்படிப்பட்டவனல்ல. என் சொந்த வாழ்வு பற்றியோ — ராஜபோக சுகங்கள் பற்றியோ சிந்திக்க எனக்கு அவகாசமில்லை. இந்தப் பேச்சை இத்துடன் விடுவோம். நாம் அலசி ஆராய வேண்டிய அரசியல் விஷயங்கள் அநேகம் இருக்கின்றன...'' என்றார் சங்கிலி மன்னர்.

அவர்கள் அதன் பிறகு நெடுநேரம் வரை முக்கியமான பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அயர்வு மிகுதி யால் சங்கிலி மன்னர் சிறிது கண்ணயர்ந்தார். அங்கேயே ஓர் ஆசனத்தில்உட்கார்ந்தவாறே கண்ணயர்ந்தான் வருணகுலத்தா னும்.

விடிய இன்னும் சிறிது நேரமே இருக்கும்போது இருவரும் ஏகதேசமாகக் கண்விழித்தனர். சங்கிலி மன்னர், மீதமுள்ள தம் வாழ்க்கை வரலாற்றையும் அவனிடம் அப்போதே சொல்லி முடித்துவிட வேண்டுமென்ற எண்ணமுடன் மற்றொரு தைல வண்ண ஓவியத்தின் அருகே அவனை அழைத்துச் சென்று, 'இதுதான் முதலாம் சங்கிலி' என்று கூறி, பேசிக் கொண்டிருந்தார்.

அப்போதுதான், வன்னியன் மாளிகைச் சிறையினின்றும் காத்தவராயனைக் குறுவாளால் குத்திவிட்டுத் தப்பியோடி விட்ட தாகச் செய்தி வந்தது.

ஈழத்தின் மிகச் சிறந்த ஒற்றனாகவும் ஈழவேந்தர் சங்கிலி குமாரரின் நெருங்கிய நண்பனாகவும் திகழ்ந்த காத்தவராயன், மன்னரின் கட்டளைப்படி வன்னியத்தேவனை அந்த மாளிகைச்

சிறையினுள் சென்று சந்தித்தான். இரவு நெடுநேரம் வரை அவர்கள் விவாதித்தனர்.

சங்கிலி மன்னரின் தகவல் அனைத்தையும் காத்தவராயன் எடுத்துரைத்தான்.

பிறகு, ''வன்னியத் தேவரே! நன்றாக யோசித்து முடிவு கூறுங்கள். தனிப்பெரும் தகைமை சான்ற தமிழர் தலைவர்கள் ஒருவரோடொருவர் மனக்கசப்பு கொண்டு பகைமையோடு இருப்பது எதிரிகளுக்கல்லவா கொண்டாட்டமாக முடியும்...? நாம் கடந்த கால வரலாறு கற்பிக்கும் பாடத்தை உணர்ந்து, எதிர்கால வரலாற்றின் ஏற்றம் கருதி — ஒற்றுமை மனப்பான்மையோடு தோழமை உறவு கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்...'' என்று தன் கருத்தையும் கூறினான்.

''கடந்த கால வரலாறு பற்றி என்னிடம் வந்து பேசுகிறாய்... நான் ஒன்றும் இழிவான செயல்களைச் செய்து அரசனாகத் துடிக்கவில்லையே... இந்த வன்னியன் பரம்பரைச் சிறப்புமிக்க சிற்றரசு ஒன்றின் ஆட்சி உரிமையை மரபு வழியிலேயே பெற்றிருப்பவன் என்பதை உணராது அறிவிலி போல் உளறுகிறாயே..... சங்கிலி குமாரனை ஒருபோதும் சிறப்புமிக்க தமிழ் மன்னனாக என்னால் கருதவே இயலாது. அவன் எனக்கு இணையானவனே அல்ல; அவன் என்னை ஒன்றும்செய்ய முடியாது. என் பலம் அறியாமல் அவன் விளையாடுகிறான்...'' என்று இறுமாப்புத் தொனிக்க கூக்குரலிட்டான் வன்னியன்.

''வீண் கூச்சலிடாதீர்கள் வன்னியரே! இங்கே நீங்கள் இரைந்து பேசுவது சங்கிலி மன்னரின் செவிகளுக்கு எட்டாது. அப்படி எட்ட வேண்டுமானால் அது என் மூலமாகத்தான் முடியும். நான் உங்கள் நலன் கருதியும் தமிழ் மக்களின் நலன் கருதியுமே இங்கே வந்திருக்கிறேன். நிலைமைகளைச் சீர்தூக்கிப் பாருங்கள். போலித்தனமான — வறட்டுத் தனமான வாதங்களை விட்டொழியுங்கள்.

''இன்று சிறப்பு மிக்கத் தமிழ் மன்னர் ஒருவர் உண்டென்றால், அது சங்கிலி மன்னர் தவிர வேறு யாருமே அல்ல. வரலாறு தெரியாதவரல்ல தாங்கள். தாய் மண்ணாம் தமிழ் மண்ணிலிருந்து இன்றைக்கு முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் குலசேகர பாண்டியர் மாபெரும் படை ஒன்றை அனுப்பி ஈழத்தை வெற்றி கொண்டதிலிருந்து ஈழத்தின் தமிழ் மன்னர் வரலாறு துவங்குகி[illegible] பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்திலேயே



பாண்டிய மரபின் கீர்த்திகள் குலைந்து போயின. ஏன், மூவேந்தர் மரபுகளே அங்கு முடிந்து போயிற்று. இன்று போலவே அன்றும் தமிழகத்தில் மிலேச்சர்கள் ஆதிக்கம் பரவியது.

''ஆனால் இலங்கையிலோ தமிழ் ஈழம் மலர்ந்து மணம் பரப்பியது. பாண்டிய மன்னரின் பிரதிநிதிகளாக இங்கிருந்த படைத் தலைவர்கள் புதிய தமிழ் வேந்தர் பரம்பரையைத் தோற்றுவித்தனர். முடிமன்னர் ஒருவரிடம் பாடிப் பரிசு பெற வேண்டுமென்று எந்தத் தமிழ்ப் புலவர் விரும்பினாலும் முத்தமிழ் நாட்டிலிருந்து ஈழம் நோக்கியே வந்தனர். ஈழவேந்தர் பரம்பரையின் இந்த இணையற்ற வரலாற்றை நெடுகச் சொல்லிக் கொண்டிருக்க இது சமயமல்ல. எனினும் நமது சங்கிலி மன்னரின் மூதாதையர் ஓரிருவர் பற்றி இப்போது உமக்கு எடுத்துக் கூறுவது அவசியமாகிறது.

''முன்னம் ஒருபோது-கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரம பாகு, யாழ்ப்பாணத்தின் தமிழ் மன்னராட்சியை நசுக்கியே தீருவதென்று கங்கணம் கட்டி நின்றான். தன் வளர்ப்பு மகன் செண்பகப் பெருமாளை ஏவி, 'தமிழராட்சியை ஒழித்துவா' என்று கட்டளையிட்டான். செண்பகப் பெருமாள் உம்மைப் போன்று இடம் மாறி விசுவாசம் காட்டிய ஒருவன். யாழ்ப்பாணத்தை வென்று— வெற்றிப் பரிசாக அதை அவனே ஆளவும் துவங்கி, நல்லூர் கந்தசாமி கோயிலையும் கட்டி வைத்தான்.

''தோற்றோடிய தமிழ் மன்னன், தமிழகத்திலிருந்து படை திரட்டி வந்து செண்பகப் பெருமாளை விரட்டி, மீண்டும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினான். அவன் மகனே கி.பி. 1478-இல் அரியணை ஏறிய சிங்கைப் பரராஜ சேகரன். அவன் கட்டிய ஆலயங்களே இந்த நல்லூர் வீரமாகாளி ஆலயம், கைலாய நாதர் ஆலயம் போன்றவை. யமுனாரி என்னும் ஏரியைத் தோற்றுவித்தவனும் அவனே.

''இந்தச் சிங்கைப் பரராஜ சேகரனுக்குச் சிங்கவாகு, பண்டாரன், பரநிருப சிங்கன், சங்கிலி என்று நான்கு புதல்வர்கள். சிங்கவாகு அரியணை அமர்ந்தபோது, போர்ச்சுகீசியரின் வருகை அதிகமாயிற்று. வர்த்தகர்கள் என்ற போர்வையில் ஏராள மரக்கலங்களில் வந்து இறங்கி, ஈழத்தின் நாலா திசைகளிலும் பரவிய இந்த வெள்ளைப் பெருச்சாளிகள், தமிழர் வாழ்வைச் சீர்குலைக்கும் நாசகார இனம் என்பதை அன்றே தீர்க்க தரிசனத்தோடு

உணர்ந்தார் முதலாம் சங்கிலி. அண்ணனை வென்று ஆட்சியைக் கைப்பற்றிய அவர், 'சங்கிலி ஜெகராஜ சேகரன்' என்ற விருதுப் பெயருடன் மன்னரானார்.

''போர்ச்சுகீசியரை எதிர்த்துத் தம் வாழ்நாளெல்லாம் போராடிய இந்த இணையற்ற தமிழ் மன்னர் இனமானம் காக்கக் கங்கணம் கட்டிய தீரர் — இறந்ததும் புவிராச பண்டாரன் பரராஜ சேகரன் என்னும் விருதுப் பெயருடன் அரியணை ஏறினான். முதலாம் சங்கிலியால் யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்தே விரட்டியடிக்கப்பட்ட போர்ச்சுகீசியர் மீண்டும் விஷம் போல் பரவலாயினர். முதலாம் சங்கிலியின் மரபில் வந்த இரண்டாம் சங்கிலி தான் இப்போது மீண்டும் மிலேச்சரை விரட்டியடிக்க அரியணையில் வீற்றிருந்து அறப்போர் நிகழ்த்துகிறார்.

''காலஞ்சென்ற எதிர்மன்ன சிங்கப் பரராஜ சேகரனின் மூன்று வயதுக் குழந்தையை வைத்துக்கொண்டு அரியணையில் பொம்மை விளையாட்டு விளையாட இது ஏற்றநேரமல்ல. எப்படியோ அதுவும் செத்துப் போய் விட்டது. மன்னர் மரபில் வந்த சங்கிலி குமாரர்மீது வீண் புழுதியை அள்ளி வீசிக் கொண்டிருப்பதை விட, அவரோடு இணைந்து மிலேச்சரை விரட்டப் பாடுபடுவதே ஒரு சுத்தமான தமிழன் இப்போது செய்ய வேண்டிய தலையாய பணி...'' என்று பண்போடும் பணிவோடும் பழைய வரலாறுகளை எடுத்துரைத்தான் காத்தவராயன்.

ஆனால் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. காரணமே இல்லாமல் வன்னியன் சினம் கனல, விழி சிவந்து நின்றான். ''யாழ்ப்பாண மன்னர்கள் தங்களை ஆரியச் சக்கரவர்த்திகள் என்று அழைத்துக் கொள்கின்றனர். சங்கிலிகுமாரன் அந்தமரபில் வந்தவன். சுத்த தமிழன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எனக்கு நீ ஒன்றும் புத்தி சொல்லத் தேவையில்லை...'' என்று உரத்த குரலில் கத்தியவாறே தன் உடையினூடே மறைத்து வைத்திருந்த குறுவாளை எடுத்து, சற்றும் எதிர்பாராத விதமாகக் காத்தவராயன் மார்பில் அழுந்தப் பதித்தவாறு, அவனைத் தாவிப் பிடித்துக் கொண்டு, ''எந்த எதிர்ப்பும் காட்டாதே. என் பிடி இரும்புப் பிடி. உன்னை வைத்தே நான் தப்பியாக வேண்டும். இடக்கு செய்தால் என் குறுவாள் உன் மார்பு எலும்புகளை உடைத்து நொறுக்கி உட்புகுந்துவிடும்...'' என்று எச்சரித்தவாறே அவனை முன் தள்ளிப் பின் நடந்தான் வன்னியன்.

மாளிகையின் காவல் வீரர்கள் செயலற்று நின்றனர். கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தக் கயமை நடந்து முடிந்தது. தூது பேச



வந்தவனை ஈவிரக்கமில்லாமல் வாசலுக்குத் தள்ளிவந்து — குறுவாளால் வயிற்றைக் குத்திக் கிழித்துவிட்டு இருளில் தப்பியோடிவிட்டான் வன்னியத்தேவன்.

காத்தவராயனைக் காயப்படுத்தினால்தான் மாளிகையிலுள்ள காவல் வீரர்களின் கவனத்தைக் குலைத்துத் தப்ப முடியும் என்று வன்னியத்தேவன் எண்ணிச் செயல்பட்டதில் கூட ஓரளவு நியாயம் இருக்கலாம். அது தப்பிச்செல்ல முயல்பவனின் இயல்பு. ஆனால், அவன் ஏன் குறுவாளை அத்தனை ஆழமாகக் காத்தவராயனின் வயிற்றில் பாய்ச்சினான் என்பதுதான் புரியவில்லை. அதில் எவ்வித நியாயமும் இருக்க வழியே இல்லை. கொல்லும் நோக்கம் நன்றாகவே புலப்படும் விதத்தில்தான் அவன் அந்தச் செயலைச் செய்திருந்தான்.

செய்தி கிடைத்ததும் பதறிப் போனார் சங்கிலி மன்னர். உடனே புறப்பட்டுவிட்டார் அவர். வருணகுலத்தான் அவரைத் தேற்றி, ''தாங்கள் இப்போது வர வேண்டாம். மறைவிலிருந்து எதிரிகள் குறுவாள் வீச வாய்ப்பு இருப்பதால் நானே சென்று பார்க்கிறேன். காத்தவராயருக்கு ஒன்றும் அசம்பாவிதம் நேராது. அவரை நானே இங்கு தூக்கி வருகிறேன். சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யுங்கள். எப்படியும் பிழைக்க வைத்து விடலாம்...'' என்றெல்லாம் கூறித்தான் அவன் புறப்பட்டு ஓடோடி வந்தான்.

ஆனால், ஏராளமான இரத்த சேதாரத்தோடு இறுதி விடை பெற மட்டுமே காத்தவராயர் காத்திருந்தார். அவர் கடைசி மூச்சு பிரியும் போதுதான் அவர் ஞானவல்லி பற்றிய அந்த மகத்தான உண்மையைச் சொன்னார்.

அது கேட்டு வருணகுலத்தான் பிரமை பிடித்தவன் போலானான்.

## 17. காத்தவராயன் கூறிய ராஜ ரகசியம்!

ஈழத்தின் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து போய் விட்டது போலவும்,அன்றைய இரவு முடிந்து பொழுது புலரும்போது, புதுப் பொலிவோடும் புதிய வலிவோடும் ஈழம் விளங்கப் போகிறது என்றும் எண்ணியெண்ணி இதயம் களித்துக் கொண்டிருந்தார் சங்கிலி மன்னர். பொல்லா மனம் படைத்தோர் கட்டிவிட்ட பொய்க் கதைகள் பற்றியும், போர்ச்சுகீசியர் எழுப்பியிருந்த ஐயப்பாடுகள் — குற்றச்சாட்டுகள் — வதந்திகள் பற்றியெல்லாம் அந்த இரவு நெடுநேரம் விவாதித்து, சங்கிலி மன்னரும் தஞ்சைப் படைத்தலைவனும் மனச் சிக்கல் எதுவுமில்லாத வலிமை வாய்ந்த நட்பு நிலையை அடைந்திருந்தனர். இதோ, இன்னும் சிறிது நேரத்தில் இருள் முழுக்க அகன்று புதிய உதயம் நிகழப் போகிறது... ஈழம் தன் எதிரிகளைப் புறங்காண வீறுகொண்டு எழப் போகிறது. இந்த வேளை பார்த்தா அப்படியொரு அசம்பாவிதம் நிகழ வேண்டும்? அப்போது பார்த்துத்தானா காத்தவராயனுக்கு ஆபத்து சம்பவிக்க வேண்டும்...!

விரைந்தோடி வந்த தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான், அந்தக் கொடூரம் கண்டு நெஞ்சம் பதறி நின்றான். வன்னியனைச் சிறை வைத்திருந்த விருந்தினர் மாளிகையின் வாசலில் காத்தவராயன் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தார். ஆடை முழுவதும் பீறிட்ட குருதியில் நனைந்து, கீழே மண்ணையும் குழைத்து, குருதிச் சேறாக்கியிருந்தது. குடல் வெளியே சரிந்துவிடாதிருக்க தம் இடக்கரத்தால் வயிற்றை அவர் அழுந்தப் பற்றியிருந்ததால் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்ததே தவிர, மற்றப்படி அவர் மரண மயக்க நிலையையே எட்டியிருந்தார். குருதிச் சேதாரம் ஏராளம்.

தப்பிச் செல்லும் முயற்சியில் குறுவாளை அவர் கழுத்தில் புதைத்து, காவலர்களை மிரட்டி மாளிகைச் சிறையினின்றும்



வெளியே வந்த வன்னியன், சற்றும் எதிர்பாராத விதமாக அந்தப் படுபாதகச் செயலைப் புரிந்திருக்கிறான்.

காத்தவராயனின் வயிற்றில் குறுவாளைப்பாய்ச்சி ஆழமாகக் கிழித்து, அவரை மண்ணில் தள்ளிவிட்டு ஓடியிருக்கிறான் அவன். மாளிகையினுள் காவலர்களை 'அசையக்கூடாது' என்று வன்னியன் மிரட்டியிருந்ததால் அவர்கள் காத்தவராயன் உயிருக்கு ஆபத்து நேரிட்டு விடுமே என்ற அச்சத்தால் அடித்து வைத்த சிலைபோல் நின்றிருந்தனர். வெளியே இவ்வளவு பெரிய விபரீதம் நிகழும் என்று அவர்கள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. 'வன்னியன் தப்பிச் செல்லும் நோக்கோடு மிரட்டுகிறானே தவிர, காத்தவராயனைக் கொல்லும் நோக்கம் அவனுக்கு இருக்க நியாயமில்லை' என்றே காவலர்கள் கருதினர்.

ஆனால், கயவர்களிடம் நியாய நோக்கம் ஒருபோதும் எதிர்பார்ப்பதற்கில்லை என்பதை நிரூபிப்பதே போல் வன்னியன் அந்தப் பாதகத்தை நிகழ்த்திவிட்டு ஓடி விட்டான். காத்தவராயனின் அலறல் கேட்டு வெளியே ஓடிவந்த வீரர்கள் அவர் பொங்கிப் பீறிடும் குருதியுடன் மண்ணில் கிடப்பதைப் பார்த்ததும், பதறிப் போனவர்களாக அவரைத் தூக்க முனைந்தனர்.காத்தவராயன் அவர்களைத் தடுத்து,

''குடல் சரிந்துவிடும் போலிருப்பதால் என்னால் எழுந்து நடக்க முடியாது. தூக்கிச் செல்வதும் வீண் முயற்சி; இப்படியே விட்டு விடுங்கள். உடனே மன்னருக்கும், தஞ்சைப் படைத்தலைவருக்கும் தகவல் அனுப்புங்கள்...'' என்று கூறியிருந்தார்.

வருணகுலத்தான் அவரருகே ஓடிவந்து மண்டியிட்டு அமர்ந்தவாறு, ''மருத்துவரை அழைத்துவரச் சொல்லியிருக்கிறேன்'' என்றான்.

''தேவையில்லை, மருத்துவர் வந்து இனி என்னைப் பிழைக்க வைப்பது இயலாத காரியம். நீங்கள் வர வேண்டும் என்றுதான் என் இறுதி மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தேன்...'' என்றார் காத்தவராயன்.

''உங்களை நான் மன்னரிடம் தூக்கிச் செல்ல எண்ணுகிறேன். அவரும் இங்கே வருவதாகக் கூறிப் புறப்பட்ட போது நான்தான் வேண்டாமென்று தடுத்து விட்டேன். நீங்கள் எதுவும் மன்னரிடம் சொல்ல விரும்புகிறீர்களா...?''

''இல்லை. என்னை எங்கும் தூக்கிச் செல்ல வேண்டாம். என் இறுதி மூச்சு இனி அதிக நேரம் நிலைக்காது. உங்களைத்தான்

பார்க்க எண்ணினேன். உங்களிடம் பேச வேண்டிய விஷயம்தான் மீதமுள்ளது. நீங்கள் கூறியவாறே ஞானவல்லிக்கு மற்றொரு கொடிய சோகம் — இழப்பு நேர்ந்துவிட்டது...''

பதற்றத்துடன் குறுக்கிட்ட வருணகுலத்தான், ''நான் இவ்வளவு மோசமான அர்த்தத்தில் அதைப் பேசவில்லை. அவளை நேசிப்பவன் நான். ஞானவல்லி தன் தந்தையை இழக்க வேண்டுமென்பது என் ஆசையாக எப்படி இருக்க முடியும்? வேடிக்கையாக அவளை ஏதோ நான் சீண்டினேன். அதை நீங்கள் நிஜ அர்த்தமாக எடுத்துக் கொண்டு விட்டீர்களே...'' என்றான். அவன் குரல் தழுதழுத்தது.

அவன் கைகளைப் பற்றிய காத்தவராயன், ''தஞ்சைப் படைத் தலைவரே! நீங்கள் வருந்த வேண்டாம். ஞானவல்லியின் தந்தை நானல்ல. என் இழப்பின் மூலம் அவள் அநாதையாகிவிட மாட்டாள். வளர்ப்புத் தந்தையை இழந்த சோகமும் சாதாரணமானதல்லதான். நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் நேசிப்பதை நானறிவேன். சங்கிலி மன்னரும் இதை அறிந்திருக்கிறார். அவருக்கும் இதில் சம்மதமே. தாங்கள் சங்கிலி மன்னரின் மருமகனாவதில் ஈழம் பெருமைப் படவே செய்யும்...?'' என்றார்.

''காத்தவராயரே! தாங்கள் என்ன சொல்கிறீர்கள் — ஞானவல்லி மன்னரின் புதல்வியா... இது அந்தப் பெண்ணுக்குத் தெரியுமா...?'' என்றான் வருணகுலத்தான்.

''தெரியாது. அவள் பிறந்தவுடனேயே என்னிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டாள். மற்ற விஷயங்களை மன்னரிடமே நீங்கள் கேட்டறியலாம். நான் தங்களிடம் சொல்ல வேண்டிய விஷயம் என்று இது ஒன்றுதான் மீதமிருந்தது. அதையும் சொல்லிவிட்டேன். ஈழத்தைப் பாதுகாப்பதும் ஈழமன்னன் மகளைப் பாதுகாப்பதும் இனி உங்கள் கைகளில்...'' என்று கூறிய காத்தவராயனின் உயிர் அத்துடன் பிரிந்தது.

ஈழத்துக்காக உழைப்பதில் தன் சுக துக்கங்களைப் பொருட்படுத்தாது, இறுதி மூச்சு வரை பாடுபட்ட அந்தக் கடமை வீரனைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து நின்றான் வருணகுலத்தான். தஞ்சை மண்ணுக்கு வந்திருந்த காத்தவராயன், இரகுநாத நாயக்கரின் அரசவையில் கம்பீரமாக எழுந்து நின்று ஈழத்தின் அரசியல் நிலைகளை எடுத்துரைத்து வாதாடியதையும், தஞ்சை மன்னர் படை உதவி அளித்தே தீர வேண்டுமென்று வாதாடியதையும்



அவனால் மறக்கவே முடியாது. இதோ இப்போது கூட அந்தக் காட்சி அவன் கண் முன்னே விரிகிறது.

''பொல்லாத் தனம் கொண்ட போர்ச்சுகீசியர் இன்றைக்கு ஈழத்தில் தானே பேயாட்டம் ஆடுகின்றனர் என்று மெத்தனமாக இருந்து விடாதீர்கள் இரகுநாத நாயக்கரே! நாளை இந்தத் தஞ்சைக்கும்... ஏன், தமிழ் மண்ணுக்கும் இதே கதிதான் நேரப் போகிறது. மிலேச்ச விரோதிகளை வெகு தூரத்திற்கு முன்பே தடுத்து நிறுத்திப் போரிடுவதும் — விரட்டியடிக்க முயலுவதும்தான் சிறந்த ராஜதந்திரமாக இருக்க முடியும். அண்டை நாடு வரை வரவிட்டு விட்டு, நம்மைத் தொடும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருப்பது அத்தனை விவேகமானதல்ல'' என்றெல்லாம் பலவாறாக அரசியல் நுட்பங்களை எடுத்து வாதாடிய காத்தவராயனை வெறும் ராஜ தூதனாக மட்டுமே கருதாமல், இணையற்ற ராஜ தந்திரி என்றே வாய்விட்டுப் பாராட்டினார், தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கர்.

அப்படிப்பட்ட சான்றோன் — அறிவு நலம் மிக்க அரச ஊழியன், இதோ மாபாதகன் ஒருவனால் வஞ்சகமாகக் கொல்லப்பட்டு மண்ணில் சரிந்து கிடக்கும் கொடுமையை என்னென்பது என்று எண்ணியெண்ணி மனம் சோர்ந்து போனான் தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான். அவன் கைகள் பரபரத்தன. உடனே அந்த வன்னியனைத் தேடிப்பிடித்துப் பழி தீர்க்க வேண்டுமென்று அவன் உள்ளம் குமுறியது.

சிறிது நேரத்திற்குள் ஈழ மன்னர் சங்கிலி குமாரரும் அங்கே வந்து சேர்ந்தார். வருணகுலத்தான் தான் பார்த்து வருகிறேன் என்று கூறிவிட்டுப் போயிருக்கிறானே என்று அவரால் மெத்தனமாக இருக்க இயலவில்லை. காத்தவராயனுக்கு ஆபத்து என்றதுமே அவர் கலங்கிப் போயிருந்தார். 'காத்தவராயன் உயிருக்கு எந்த ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது தாயே' என்று அவர் உள்ளம் நல்லூர் வீரமாகாளியைத் துதித்தது.

மருத்துவன் வந்து சேர்ந்ததும் அவனையும் அழைத்துக் கொண்டு விருந்தினர் வாயிலை நோக்கிப் பரபரப்புடன் வந்து சேர்ந்தார். ஆனால், அதுவரைதான் காத்தவராயனின் உயிர் காத்திருக்கவில்லையே!

மிகச் சிறந்த ஒற்றனும் — அவசியமான வேளைகளில் ராஜதூதனாகப் பணிபுரிந்தவனும் அரசரின் அந்தரங்கமான ஊழியனும் எல்லாவற்றுக்கும் மேலாய் சங்கிலி மன்னரின் நட்பைப்

பெற்றிருந்தவனுமான காத்தவராயனின் ஈமக் கடன் அன்றைய வளர்காலைப் போதில் விடு விடுவென்று நடந்தேறியது.

ஞானவல்லியை எவ்வளவு தேற்றமுயன்றும் பயனில்லாது போயிற்று. நெடு நேரம் வாய்விட்டுக் கதறியழுத அவள் மயங்கிச் சோர்ந்த பிறகுதான் காத்தவராயனின் உடலை மயான பூமிக்கு எடுத்துச் செல்ல முடிந்தது.

இறுதிக் கடன்கள் முடிந்ததும் ஈர உடையுடன் திரும்பிய வருணகுலத்தானுக்கு, ஞானவல்லியைத் தேற்றி உணவருந்தச் செய்ய வேண்டிய பொறுப்பு விடப்பட்டது. சங்கிலி மன்னரே அவன் கரங்களைப் பற்றிக் கொண்டு இதைக் கோரினார். ''தாயை இழந்த சோகத்தில் தவித்துக் கொண்டிருந்த அந்தச் சின்னஞ்சிறு பெண் இப்போது தந்தையையும் இழந்து ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்து கிடக்கிறாள். குறுகிய இடைவெளியில் இத்தனை பெரிய இழப்புகளும் சோகங்களும் அந்தப் பெண்ணுக்கு நேர்ந்திருக்க வேண்டியதில்லை. கொடும் புயலில் சிக்கிய சின்னஞ்சிறு மலர்ச்செடி போல் அவள் வாடி வதைபட்டு நலிவதைப் பார்க்கவே எனக்குச் சங்கடமாக இருக்கிறது. இனி நீங்கள்தான் அந்தப் பெண்ணுக்கு எல்லாமும். உங்களுடைய அன்பும் ஆதரவும்தான் அவளுக்குப் பெரும் ஆறுதலாக இருக்க முடியும்..'' என்று கூறி நின்ற சங்கிலி மன்னரிடம்,

''தாங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். ஆனால், காத்தவராயர் தன் இறுதி மூச்சு இழைபரிந்த நேரத்தில், 'வருணகுலத்தாரே... உங்கள் வாக்குப்படி ஞானவல்லிக்கு மற்றொரு மாபெரும் இழப்பும் நேர்ந்துவிட்டது. ஆனால், நான் செத்துப் போவதால் அவள் ஒன்றும் அநாதையாகிவிட முடியாது. நான் முன்பே சொன்னது போல் சங்கிலி மன்னர் இருக்கும் வரை அவள் அநாதை என்ற நிலைக்கு ஆளாக மாட்டாள்...' என்றல்லவா கூறினார்...'' என்றான் வருணகுலத்தான். அவன் இப்படிக் கூறியதே சங்கிலி மன்னரின் வாயைக் கிளற வேண்டுமென்று எண்ணித்தான். ஆனால் அவரோ,

''தஞ்சைப் படைத்தலைவரே! நீங்கள் என் வாய் மொழியாக எதையோ உறுதி செய்து கொள்ளவே இப்படிப் பேசுகிறீர்கள். காத்தவராயன் தனது இறுதி மூச்சை விடுவதற்கு முன் தங்களிடம் எந்த உண்மையை வெளிப்படுத்தியிருப்பான் என்பதை நானறிவேன். ஆனால் அந்த இறந்த கால நிஜத்துக்கு மீண்டும் உயிர்தர நான் விரும்பவில்லை. ஞானவல்லி வெளி உலகத்தைப் பொறுத்தவரை இனி அநாதை என்பதே உண்மை. உங்கள் ஆதரவால்



மட்டுமே, அவள் அநாதையில்லை என்ற நிலை உருப்பெற வேண்டும். வேறு பழைய உறவுகள் அவளுக்குத் தேவையில்லை. நீங்கள் சென்று அவளோடு பேசுங்கள் — ஆறுதல் கூறுங்கள் — உணவருந்தச் செய்யுங்கள். எனக்குச் சிறிது அவசர அலுவல் இருக்கிறது. பிறகு நாம் சந்திக்கலாம். தங்கள் ஐயங்களை அப்போது நிவர்த்திக்கிறேன்'' என்று கூறி விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

**போ**ர்ச்சுக்கீசிய பாதிரி டிமெல்லோ அவசரமாகச் சங்கிலி மன்னரைச் சந்திக்க வேண்டுமென்று வந்து நின்றார். முன்பே அவை கூடியிருந்தது. அங்கே வன்னியன் தப்பிச் சென்றது குறித்து அவையினர் விவாதித்துக் கொண்டிருந்தனர்.. அடுத்து வன்னியனால் நேரக்கூடிய அபாயங்கள் குறித்தும், சங்கிலி மன்னர் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் அவைப் பிரமுகர்கள் விரிவாக எடுத்துரைத்துக் கொண்டிருந்தனர். டிமெல்லோவின் வரவு அறிவிக்கப்பட்டதும், அவரை வழக்கமான மரியாதைகளுடன் வரவேற்றுக் கௌரவித்து; அரசவைக்குள் அழைத்துச் சென்று உயரிய ஆசனத்தில் அமரச் செய்தனர். அவையின் மற்ற நடவடிக்கைகள் சற்று ஒத்தி வைக்கப்பட்டு, டிமெல்லோவின் செய்தியைக் கேட்க அவையினர் செவி தீட்டிக் கொண்டிருந்தனர்.

அந்தப் போர்ச்சுக்கீசிய பாதிரி, அத்தனை பேர் செவிப்பறைகளையும் கிழித்தெறிவது போல் அந்த இடியைச் செய்தியாக எடுத்து வீசினார்.

செய்தியா அது? பச்சையாகச் சதி! வஞ்சமும் வன்மமும் தம் கொடூரத்தை மறைத்துக் கொண்டு ஒப்பந்தம் என்ற பேரால் ஒப்பனை செய்த வண்ணம் வெளிப்பட்டன!

ஓநாய்கள் வெள்ளாட்டு வேடமணிந்தால் எப்படியிருக்கும் — அப்படியிருந்தது அந்த ஒப்பந்தமும்!

அரசவைக்குள் பிரவேசித்த அந்த போர்ச்சுக்கீசிய பாதிரி டிமெல்லோ, பணிவென்பதே சிறிதுமின்றி அகந்தையே வடிவெடுத்து வந்தாற்போல் காணப்பட்டார். மன்னரை வணங்கும் விதத்திலேயே அந்த மமதை வெளிப்பட்டது. சங்கிலி மன்னர் அதைப் பொருட்படுத்தவில்லை. மரபு தெரியாதவர்களை மன்னிப்பதைத் தவிர வேறென்ன செய்வது? என்னை இப்படித்தான் வணங்க வேண்டுமென்று வணக்கத்தைக் கேட்டுப் பெறுகிற அளவு இறங்குபவரல்லவே சங்கிலி மன்னர்!

''போர்ச்சுகீசியப் படையினரும் தளபதி பிலிப்-டி- ஒலிவேராவும் பூநகரிக்கு வந்து சேர்ந்தாயிற்று. அவர்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குள் பிரவேசிப்பதற்குப் போதுமான ஓடங்களையும் நாவாய்களையும் சங்கிலி மன்னர் உடனே ஏற்பாடு செய்து தரவேண்டும்...'' என்ற கோரிக்கையை முதலாவதாக முன் வைத்தார் டிமெல்லோ.

இதைக் கேட்ட மறுகணம் சங்கிலி மன்னரின் நிதானம் காற்றில் பறந்தது.

''டிமெல்லோ பாதிரிக்குப் புத்தியொன்றும் பிசகியிராது என்பது என் எண்ணம்...'' என்றார் அவர், சினத்தை அடக்க முயன்றபடி.

''ஈழ மன்னரின் இந்தப் பேச்சுக்கு என்ன பொருள் என்பதை நான் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்...'' என்றார் டிமெல்லோ.

''பாதிரிகள் மத விஷயத்தோடு நிற்பது நல்லது என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன். பீதுறு பொட்டன்கொன் பாதிரிதான் இதுவரை என் பேச்சை மதியாது வெளிப்படையாகவே எனக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறார் என்றெண்ணினேன். இப்போது நீங்களும் ஆரம்பித்து விட்டீர்களா?'' என்றார் சங்கிலி மன்னர்.

'நான் போர்ச்சுகீசிய அரசியல் அமைப்புக்குக் கட்டுப்பட்டவன். எங்கள் நாட்டுப் படைத்தளபதி இடும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது என் கடமை. சமயப் பணியுடன் மக்கட் சமாதானப் பணியும் கூட என் கடமைதான். சங்கிலி மன்னருக்கோ, ஈழ மக்களுக்கோ இன்னல் தரும் எந்தச் செயலிலும் நான் ஈடுபடவில்லை. பிலிப்-டி- ஒலிவேராவின் வேண்டுகோளின்படி நான் இங்கே வந்திருக்கிறேன். சங்கிலி மன்னர் என்ன பதில் கூறினாலும் அதை அப்படியே பிலிப்-டி- ஒலிவேராவிடம் சென்று தெரிவிக்கவும் கடமைப்பட்டுள்ளேன்...'' என்றார் டிமெல்லோ, ஏதோ ரொம்பவும் விநயமாக நடந்து கொள்பவர் போன்று.

''மிகவும் நன்று. அப்படியானால் நீங்கள் உடனே பூநகரிக்குச் சென்று, பிலிப்-டி- ஒலிவேராவுக்கு நான் எந்த உதவியும் செய்வதற்கில்லை என்று கூறியதாகச் சொல்லுங்கள். போர்ச்சுகீசியப் படை யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குள் எக்காரணம் கொண்டும் பிரவேசிக்கக் கூடாது. உடனே அவர்கள் கொழும்புக்குத் திரும்பிச் சென்றாக வேண்டுமென்று நான் கட்டளையிட்டதாகவும் எடுத்துரையுங்கள்...'' என்றார் சங்கிலி மன்னர்.



''ஆஹா... அப்படியே எடுத்துரைக்கிறேன்...'' என்ற டிமெல்லோ, ''நான் ஒரு கருத்தைச் சொல்ல மன்னர் அனுமதிக்க வேண்டும்'' என்றார்.

''சொல்லுங்கள்...''

சபை ஒட்டு மொத்தமாகத் தன் செவிகளைக் கூர் தீட்டிக் கொண்டது. டிமெல்லோவின் கருத்தைக் கேட்க.

''ஈழத்தில் தோன்றிய கலவரம் முற்றாக அடங்கி விடவில்லை. மக்களிடையே கலவரம் தோன்றினால் அதை அடக்கவும், அமைதியை நிலைநாட்டவும் ஒரு உதவிப் படை தேவையென்று தாங்கள் தஞ்சைக்குத் தூதனுப்பினீர்கள். அதை முகாந்திரமாகக் கொண்டு தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான் சில வீரர்களோடு இங்கு வந்ததாக ஒரு பேச்சு நிலவுகிறது. ஆனால், பெரியஅளவில் படை எதுவும் வரவில்லை. வந்தவர்களும் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்றும் ஒரு கருத்து நிலவுகிறது என்றே தெரிகிறது. அதனால் தாங்கள் போர்ச்சுகீசியப் படையினரை இங்கு வரவழைத்து அமைதியை நிலைநாட்டலாமே! பிலிப்-டி- ஒலிவேராவும் இதே எண்ணத்துடன் வந்திருப்பதாகவே நான் கருதுகிறேன்...'' என்றார் டிமெல்லோ.

கருத்தா இது! நெற்களஞ்சியத்திற்கு எலிகளை அழைத்து, காவல் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமாமே!

''உங்கள் மேலான கருத்துக்கு நன்றி. எதைச் செய்ய வேண்டும், எவர் உதவியை நாட வேண்டும் என்றெல்லாம் எனக்குத் தெரியும். தஞ்சையும் ஈழமும் தனித்தனியே பிரிந்திருந்தாலும் தமிழ் உடம்பு என்ற வகையில் ஒன்றுதான். மார்புக்கும் கைகளுக்கும் உள்ள இடைவெளியை மாபெரும் பிளவாக நாங்கள் கருதுவதில்லை. கடல் மட்டும்தான் எங்களைப் பிரிக்கிறதே தவிர, ஓடும் குருதியும் உணர்வுகளும் எங்களுக்குள் ஒன்றேதான். ஆனால் போர்ச்சுகீசியர்களுக்கும் எங்களுக்கும் எந்தவித ஒட்டுமில்லை; உறவுமில்லை. அவர்கள் யாரோ நாங்கள் யாரோ... ஏதோ வாணிபம் என்று வந்தார்கள் — பிழைத்துப்போ என்று பெரிய மனத்துடன் இடமளித்தோம். கடைவிரிக்க வந்தவர்கள் இன்று எங்கள் கழுத்தை நெரித்துப் போட்டு விட்டு, எங்கள் காலின் கீழுள்ள பூமியையே களவாடப் பார்க்கிறார்கள். இங்கு நடைபெறும் கலவரங்கள் அனைத்திற்கும் அந்த விதேசிகளே — வெள்ளைப் பெருச்சாளிகளே காரணம். மதம் — கடவுள் என்ற பெயரால் மனித நேயம் பேசிவந்த பாதிரி டிமெல்லோ அவர்களே, கா[illegible]

யில் நீங்களும் உங்கள் இன வெறியைக் காட்டிவிட்டீர்கள். பாதகமில்லை. உங்களை நொந்து கொள்வதில் பயனில்லை என்பதை நானறிவேன். ஏனெனில், 'எய்தவனிருக்க அம்பை நோவதில் என்ன பயன்' என்னும் முதுமொழியை அறிந்தவன் நான். தாங்கள் புறப்படலாம்...'' என்றார் சங்கிலி மன்னர்.

''புறப்படுகிறேன். அற்குமுன் போர்ச்சுகீசிய தளபதியின் முழு ஒப்பந்தச் செய்தியையும் கூறிவிட்டுப் புறப்படுகிறேன்'' என்ற டிமெல்லோ, வெகு நிதானமாக அந்த விஷ வார்த்தைகளைக் கக்கத் துவங்கினார்...

''வன்னியத்தேவர் தங்கள் சிறையில் இன்றும் இருந்திருந்தால் என் பேச்சு வேறு விதமாக இருந்திருக்கும். நான் நேற்றே புறப்பட்டு விட்டேன் இங்கு வருவதற்காக. இன்று இங்கே நிலைமை மாறியிருக்கிறது. வன்னியன் தங்கள் சிறையிலிருந்து தப்பிச் சென்று விட்டார். அதனால் மாறிய இந்தச் சூழ்நிலைக் கேற்ப நான் பேசியாக வேண்டியிருக்கிறது. முதலில் போர்ச்சுகீசியர்களுடன் தாங்கள் நட்புரீதியில் தொடர்ந்து இணக்கம் கொண்டிருக்கிறீர்களா என்பதறிய வேண்டியிருந்தது. அது இல்லை என்பது உங்கள் பேச்சின் மூலம் தெரிந்து விட்டதால், பிலிப்-டி- ஒலிவேராவின் அடுத்த செய்தியையும் நான் தங்களிடம் சொல்லியாக வேண்டியிருக்கிறது. உதகம்பக உக்கிரசேனரைக் கொன்றது விஷயமாக வருணகுலத்தானை விசாரிக்க விரும்புகிறார் பிலிப். உடனே அவனை என்னுடன் அனுப்ப வேண்டும்...

''வரணகுலத்தானை விசாரிப்பதையோ, அதன்பேரில் அவனைத் தண்டிப்பதையோ சங்கிலி மன்னர் குறுக்கிட்டு, தடுக்க முயலக் கூடாது. அத்துடன் தஞ்சைப்படை என்று எதுவும் இருக்குமாயின் அவர்களை உடனே திருப்பி அனுப்பிவிட வேண்டும். மேற்கொண்டு, தஞ்சை வீரர்கள் எவருமே ஈழ மண்ணில காலெடுத்து வைக்கக் கூடாது. இவற்றை ஒப்புக்கொண்டு நடந்தால் போர்ச்சுகீசியர்கள் தங்களோடு நல்லுறவு காட்டியே நடப்பார்கள் என்பது பிலிப்-டி- ஒலிவேராவின் கருத்து. ஆனால், போர்ச்சுகீசியப் படை உதவியை மன்னர் புறக்கணித்தாலும் அவர்கள் யாழ்ப்பாண நாட்டின் நன்மை கருதி சில அலுவல்களை மேற்கொள்வதினின்று பின்னடையவே மாட்டார்கள்...'' இப்படிச் சொல்லிக் கொண்டே போன டிமெல்லோவை மேற்கொண்டு பேச விடாது தடுத்தது சங்கிலி மன்னரின் சிம்மகர்ஜனை.

''அடே யாரங்கே... இந்தப் பாதிரியைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுங்கள். இனி ஒரு கணம் இந்த ஆள் இங்கு

R



நின்றாலும் என் வாளால் வெட்டியெறிவேன். இவன் தூது பேச வந்தவனாயினும் சரி, சூது பேச வந்தவனாயினும் சரி... இவனோடு பேசவோ, ஒப்பந்தம் செய்து கொள்ளவோ நான் விரும்பவில்லை. இத்துடன் பேச்சை நிறுத்தினால்தான் இவனுக்கு உயிர்ப்பிச்சை அளிப்பேன். உடனே கொண்டுபோய் வெளியே தள்ளுங்கள் இவனை...'' என்று கொதித்தெழுந்து கூறி நின்றார், சங்கிலி மன்னர்.

அவர் வாளை உருவுமுன் பாதிரி டிமெல்லோ அரசவையினின்று வெளியேற்றப்பட்டார்.

**கா**த்தவராயனைக் குத்திச் சாய்த்து, காவலர்களின் கவனத்தைத் திசை திருப்பி விட்டுத் தப்பியோடிய வன்னியன், நேரே ராஜகாமினியின் வீட்டை நோக்கித் தான் சென்றான். திட்டமிட்டபடி ராஜகாமினியால் வருணகுலத்தானைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல முடியாது போயினும்அவளாவது திரும்பி வந்து சேருவாள் என்று அவன் எதிர்பார்த்திருந்தான். அவள் வந்து சேரவில்லை என்பதோடு, யாழ்ப்பாணம் திரும்பி அங்கேயே தங்கிவிட்டது அவனுக்குப் பெரும் அதிர்ச்சியளிப்பதாயிருந்தது. அவனுக்குக் கிடைத்திருந்த மிகப் பெரிய ஆயுதம் அவள். அதை எக்காரணம் கொண்டும் கைநழுவ விட்டுவிட வன்னியன் தயாராயில்லை. அதனால்தான் மாளிகைச் சிறையினின்று தப்பியதும் — யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும் முன் அவளைப் பார்த்துவிட வேண்டுமென்ற நோக்கோடு — அவள் வீட்டுக்குச் சென்றான்.

அழகிய தென்னந்தோப்பு ஒன்றின் நடுவே தனித்திருந்தது அவள் வீடு. ஊரெல்லையில் சற்று ஒதுக்குப் புறமான பகுதி அது. பின்புறம் கண்ணுக்கு எட்டிய மட்டும் வயல்வெளிதான். பாசனக் கால்வாய் ஒன்று வேறு ராஜகாமினியின் வீட்டுப் பின்னால் அருகிலிருந்தது. அதன் உயரிய கரைகளில் பூந்தேக்கு மரங்கள் நிறைய — நெடுக இருந்தன. வன்னியனின் ஆட்கள் இந்த வழியாகத்தான் யாழ் நகருக்குள் அடிக்கடி பிரவேசிப்பது வழக்கம். நகர காவலர்களின் கண்ணில் படாமல் தப்ப இந்தப் பிரதேசம் அவர்களுக்கு மிகவும் உதவியது. தவிர, ராஜகாமினி விஷயத்தில் விசேஷ கவனம் எதுவும் செலுத்தவில்லை சங்கிலி மன்னர். இதனாலெல்லாம்தான் அந்த இடம் சதிகாரர்களின் இரகசிய நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடமாக இருந்தது.

தவிர, ராஜகாமினி சமீப காலமாக அந்தத் தோப்பு வீட்டில் அதிகம் தங்குவதும் இல்லை. அவள் வன்னியனின் மலைக்காட்டு மாளிகையிலும், பூநகரி மாளிகையிலுமே அதிகமாகத் தங்கி

வந்தாள். இப்போது மேலைக் கடற்கொள்ளையன் டொம்பீதுரு ரொட்றிகஸின் ஆணையையும் அச்சுறுத்தலையும் மீற முடியாத நிலையில்தான் அவள் யாழ்ப்பாணத்தின் இந்தத் தோப்பு வீட்டில் தங்கியிருந்தாள். இதெல்லாவற்றையும் விட அவள் இதயத்தில் புதைந்து கிடந்த ரகசிய ஆசையொன்றும் காரணமாக இருந்தது.

அது வேறொன்றுமில்லை; வருணகுலத்தானின் காதலை எப்படியாவது பெற்றுவிட முயல வேண்டுமென்பதுதான். ஆளரவமற்ற அத்துவானக் காட்டில் அப்படி ஓரிரவு தனித்திருந்தபோது சலனப்படாதவன் — தானே வலியச் சென்று தழுவிக் கிடந்த போதும் உதறியெறிந்து விட்டு விலகி நடந்தவன், இப்போது மட்டும் எப்படித் தன்பால் நேயம் கொள்வான் என்றெல்லாம் அவள் சிறிதும் யோசிக்கவே இல்லை.

ஆசை நெருப்பாகப் பற்றியெரியும் போது புத்தி சிறிதும் வேலை செய்வதில்லை என்பதுதான் காம சாஸ்திரம் கண்ட உண்மையாயிற்றே! எதையும் தனக்குச் சாதகமாகவே எண்ணிப் பார்க்கும் மனநிலையைத் தானே இந்தக் காதலும் காமமும் உண்டு பண்ணிவிடுகிறது! ராஜகாமினியின் இப்போதைய நிலையும் அதுதான். வருணகுலத்தானின் கம்பீரமான தோற்றமும், வைரம் பாய்ந்த மேனியும், உருண்டு உரமேறிய தோள்களும் பரந்த மார்பும் அவள் நினைவுகளை விட்டகல மறுத்தன.

கடல் நடுவே கொள்ளையர்களின் மரக்கலத்தில் அந்த வீர வாலிபன் நிகழ்த்திய சாகசங்கள் ஒவ்வொன்றும் அவள் நினைவை விட்டகல மறுத்து உலாவந்தன. எப்படியும் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து தங்குவதன் மூலம் அவனைச் சந்திக்கவும், அவனது காதலைப் பெற்று விடவும் சந்தர்ப்பம் வாய்க்குமென்பது அவளது நம்பிக்கையாயிருந்தது. இப்படிக் கனவுகளோடிருந்தவளின் கண்ணெதிரேதான் அன்று அதிகாலைப் போதில் வன்னியன் வந்து நின்றான்.

ஒரு கணம் அதிர்ந்து போனாள் அவள். உடனே அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனை வரவேற்க சித்தமானாள் என்றபோதும், அவளது முகத்தில் தெரிந்த வியப்பும் — மெல்லிய பதற்றமும் — ''ஓ நீங்களா! வாருங்கள்'' என்ற சுரத்தற்ற வரவேற்பும் வன்னியன் கவனத்தில் நன்றாகவே பதிந்து போயின.

''ஏன் ராஜகாமினி... நான் இங்கு வேண்டாத விருந்தினனாகி விட்டேனா? என்வருகையை நீசற்றும் எதிர்பார்க்கவில்லையா?'' என்று வினவினான் வன்னியன்.

''நாம் எதிர்பார்த்தபடிதான் என்றும் நிகழ்வதாக இல்லையே... நிலைமை முற்றாக மாறித் தலைகீழாகி விட்டது. நீங்கள் தஞ்சைப் படைத்தலைவரிடம் தோற்றுப் போவீர்கள் என்றோ, யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு சிறை வைக்கப்படுவீர்கள் என்றோ நான் எதிர்பார்த்தேனா என்ன...'' என்றாள் ராஜகாமினி.



''சிங்கத்தைச் சிலந்தி வலையால் சிறைப்படுத்த முடியாது ராஜகாமினி... என்னை அடைத்து வைக்கவும் இந்த யாழ்ப்பாணத்தில் ஒரு சிறை உண்டா என்ன! இந்தக் குட்டிச்சுவர்களா பெரிய காவல் அரண்... நான் இவற்றை முட்டித் தகர்த்துவிட்டு வெளியேறும் மதயானை. சிறையிலேயே அடைபட்டுக் கிடப்பேன் என்றா எண்ணினாய்... நான் தப்பி விடுவேன் என்று நீ எண்ணிக் கூடப் பார்க்கவில்லையா?'' என்றான் வியந்து போன விழிகளை விரியத் திறந்த வன்னியன்.

''நான் அது பற்றி வீண் ஊகம் எதுவும் கொள்ளவில்லை வன்னியத்தேவரே! நீங்கள் சிறைப்பட்டீர்கள் என்பது மட்டுமே எனக்குத் தெரியும்...''

''சரி! சிறைப்பட்ட என்னைத் தப்ப வைக்க நீ எந்த முயற்சியிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லையே... அது ஏன்?''

''அது என் வேலையல்ல, அப்படிச் செய்ய எனக்குத் தோன்றவும் இல்லை. அப்படி முயன்றாலும் அது பயன் தராது. யாழ்ப்பாணம் இப்போது நீங்கள் நினைப்பது போல் அப்படியொன்றும் திறந்த வீடாகக் கிடக்கவும் இல்லை. தஞ்சைப் படைத்தலைவரின் வருகையால் மக்கள் மிகுந்த உற்சாகமுடனிருக்கிறார்கள். விழித்துக் கொண்டிருக்கும் ஒரு நகரத்தில் சதி வேலை அத்தனை எளிதான ஒன்றல்ல...''

''வீண் பிதற்றல் உன் பசப்பல், போதும். என்னைச் சிறையிலிருந்து தப்ப வைக்க நீ விரும்பவில்லை என்பதோடு நிறுத்திக் கொள். அதுதான் உன் வேலையல்ல என்று கூறிவிட்டாயே... அதன் பிறகும் உன் புத்தியை நான் புரிந்து கொள்ளாமலா இருப்பேன். என்ன இருந்தாலும் பெண்களை அதிகம் நம்பக்கூடாது என்பது மிகவும் சரியாய்ப் போயிற்று. அந்த வருணகுலத்தான் மீது நீ மோகம் கொண்டு விட்டாய் என்பது உன் பேச்சிலிருந்தே நன்றாகத் தெரிகிறது. ஒன்றாக உங்கள் இருவரையும் மரக்கலத்தில் ஏற்றி அனுப்பியது என் முட்டாள் தனம்...'' என்று எரிந்து விழுந்தான் வன்னியன்.

அவனுடைய எரிச்சலை மேலும் அதிகப்படுத்துவது போலவே இருந்தது ராஜகாமினியின் பேச்சு. வன்னியன் மேலும் அவளிடம் பேச்சை வளர்த்த விரும்பாதவனாகச் சட்டென்று ஒரு முடிவெடுத்தவனாக—

''சரி உன்னோடு இங்கு பேசிக் கொண்டு நிற்க எனக்கு நேரமில்லை.உடனே புறப்படு. நாம் பூநகரிக்குச் சென்றாக வேண் டும். பிலிப்-டி-ஒலிவேரா போர்ச்சுகீசியப் படையுடன் அங்கு வருவதாகத் தகவல். அங்கு விசாரித்துக் கொள்கிறேன் உன்னை...'' என்று பரபரத்தான்.

அந்தப் பரபரப்புக்கு ராஜகாமினி ஒத்துப் போகிறவளாகத் தெரியவில்லை. ''இல்லை. நான் எங்கும் வர விரும்பவில்லை. டொம்பீதுறு ரொட்றிகஸ் என்னை யாழ்ப்பாணத்தை விட்டு அகலக் கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறான். போதும் இந்த அரசியல், எனக்கு அரியணை ஆசை எதுவுமில்லை., பட்டமும் வேண்டாம். வாரிசு உரிமையும் வேண்டாம். அனைத்தையும் உதறி ஒதுங்கி வாழவே நான் விரும்புகிறேன். என்னை விட்டு விடுங்கள்...'' என்று மன்றாடும் குரலில் கூறினாள் அவள்.

டொம்பீதுறுவின் பெயரைக் கேட்டதுமே வன்னியனின் முகத்தில் அச்ச நிழல் படர்ந்தது. ''அந்தக் கடல் ராட்சதன் சகல விஷயங்களிலும் தலையிடுகிறானே'' என்று அவன் நெஞ்சு கொதித்தது. ஆனாலும் போர்ச்சுகீசியர்களே கண்டு நடுங்கும் டொம்பீதுறு ரொட்றிகசைத் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்ற நினைவால் முகம் இறுகிப் போய் சில கணப்போது ஸ்தம்பித்து நின்ற வன்னியன், தன்னைச் சுதாரித்துக் கொண்டவ னாக, ராஜகாமினியை உறுத்து நேர்க்கினான். அந்தப் பார்வை அவளை உலுக்கியது. விபரீதமான அர்த்தங்களைத் தோன்றச் செய்யும் அந்தப் பார்வை கண்டு, மலை சாய்ந்தாலும் நிலைகுலை யாத மன உரங்கொண்ட ராஜகாமினியே நடுங்கிப் போனாள்.

அவன் கொலைகாரன் என்று எண்ணியல்ல ராஜகாமினி நடுங்கியது. காமம் கனலும் கண்களால் அவன் தன்னை வெறித்து நோக்குவது கண்டே அவள் நடுங்கினாள். தன் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்க மறுக்கும் அவளைக் காமக்கரம் கொண்டு கசக்கியெறிந்தால் தான் பணிய வைக்க முடியும் என்ற குருட்டுத்த னமான நம்பிக்கையில் அந்த வெறிபிடித்த மிருகம் விபரீதம் நிகழ்த்தத் துணிந்தது.

அதே சமயம், ''அவளைத் தொடாதே. எட்டி நில்,'' என்ற கர்ஜனைக் குரல் ஒன்று, அந்த மூர்க்கன் தலையில் சம்மட்டி கொண்டு அடிப்பது போல எழுந்தது. அதைத் தொடர்ந்து அங்கே உருவிய வாளுடன் பிரசன்னமானான், தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான்.

R

# 18. திரண்டெழுந்த தீரர் கூட்டம்

ஞானவல்லியைச் சமாதானப்படுத்தி ஆறுதல் கூறித் தேற்ற வும் உணவருந்தச் செய்யவும் வருணகுலத்தானுக்குக் கட்டளையி டப் பட்டிருந்தது என்றபோதும், தந்தையை இழந்த சோகம் அத்தனை எளிதில் அந்த இளம் பெண்ணின் மனத்தை விட்டு அகலாது என்பதை நன்றாகவே உணர்ந்திருந்தான் வருணகுலத் தான். தவிர, காத்தவராயன் அவளது வளர்ப்புத் தந்தைதான் என்பதையோ, உண்மையில் அவள் மன்னன் மகள் என்பதையோ அப்போது எடுத்துச் சொல்வது அத்தனை உசிதமானதல்ல — நாகரிகமுமல்ல என்று எண்ணினான் அவன்.

இத்தனை வருடமும் அவள் யாரால் வளர்க்கப்பட்டிருந் தாளோ, அந்தப் பெற்றோர்களை அவள் வெகு சில நாட்கள் வித்தியாசத்தில் ஒருவர் பின் ஒருவராக இழந்திருக்கிறாள். அந்த இழப்பும் வேதனையும் சாதாரணமான ஒன்றல்ல — அழுதால் தான் அவள் நெஞ்சின் பாரம் குறையும் என்பதால், மாளிகையி னுள் நுழைந்த மறுகணம் தன் மார்பில் வந்து புதைந்து அரற்றிய ஞானவல்லியைச் சிறிது நேரம் அழவிட்ட வருணகுலத்தான். பிறகு மெல்ல அவள் தோள்களைத் தட்டி ஆசுவாசப்படுத்தினான். இதமான வார்த்தைகள் பல எடுத்தியம்பினான்.

ஆனால், ஞானவல்லியின் நெஞ்சு அமைதி கொள்ளவே இல்லை. ''என் தந்தையைக் கொன்றவனை ஒருவரும் பிடிக்கவில் லையா... அவனைப் பிடித்து என் கரங்களாலேயே பழி தீர்க்க வேண்டும்'' என்று புலம்பிப் பதறினாள் அவள். பீறிட்டெழும் அந்தச் சோகத்தையும் ஆவேசத்தையும் அலட்சியப்படுத்த விரும் பாத வருணகுலத்தான்,

''நீ சொல்வதுதான் சரி. ஞானவல்லி! வன்னியன் இந்த யாழ்ப்பாணத்தை விட்டு அவ்வளவு எளிதில் தப்பிவிட முடியாது. நாலாபுறமும் காவல் வலை விரித்திருக்கிறேன். நம் வீரர்கள் எப்படியும் அவனைப் பிடித்து விடுவார்கள்...'' என்று கூறினான்.

அப்போதுதான் அவன் மனசில் ஒரு பொறி தட்டியது. மாளிகைச் சிறையிலிருந்து தப்பியோடிய வன்னியன் இவ்வளவு நேரமாகியும் காவலர்கள் கையில் சிக்கவில்லை. அவன் நகரை விட்டு ஓடிப் போயிருப்பதும் சாத்தியமில்லை. அப்படியானால், எங்கோ ஓரிடத்தில் அவன் சிறிது மறைந்திருக்க வேண்டும்..... எங்கே?

ஆம்; அப்படித்தானிருக்க வேண்டும்... ''இதோ வந்து விடுகி றேன் ஞானவல்லி... நீ சற்று அமைதியாக இரு...'' என்று கூறிய வருணகுலத்தான், அடுத்த நொடியில் அஷ்டமங்கலப் புரவி மீது ஆரோகணித்தவனாய் ராஜகாமினியின் தோப்பு வீட்டை நோக்கி மின்னல் வேகத்தில் பாய்ந்தான்.

அங்கே.....

அவன் கணிப்பு வீண் போகவில்லை.

வன்னியன் மிருக வெறியில் ராஜகாமினியைப் பலாத்காரம் செய்ய முயன்று கொண்டிருந்தான். சூழ்நிலையின் நிர்ப்பந்தங்க ளால் கூடாநட்பின் வசப்பட்டிருந்தவளானாலும் ராஜகாமினி, அந்த மிருகத்துக்குத் தன் பெண்மையை நிவேதனம் செய்து விடுகிற அளவு இழிந்து போய்விடவில்லை. ஆண்களுக்குச் சரிநிகராய் அலையும் பெண்களைச் சமூகம் வெறுப்பதும் அவதூ றுகள் எழுப்புவதும் இயல்புதான். அதுவும் இவளோ அந்நியர்க ளான போர்ச்சுகீசியர்களோடும் கூட நெருக்கமான நட்பு வைத்தி ருந்தவள். மக்கள் ராஜகாமினி பற்றி அசூயை கொண்டிருக்க நியாயமான காரணங்கள் பல இருந்தன. ஆனாலும் கூட, இதனா லெல்லாம் அவள் வேசி நிலைக்குப் போய்விட்டவள் என்று சொல்வதற்கில்லை என்ற உண்மையை நிரூபிப்பதே போன்றிருந் தது, அப்போது அவள் காமவெறி கனன்று நின்ற வன்னியனை எதிர்த்துப் போராடிய கோலம்.

வருணகுலத்தான் உருவிய வாளும் சிம்ம கர்ஜனையுமாய் அங்கே பிரசன்னமானதும் ஒருகணம் விதிர் விதிர்த்துப் போனான் வன்னியன். யாழ்ப்பாண நகர எல்லையை விட்டு அகலுவதற்குள் இவனிடம் சிக்கி விட்டோமே என்பதை எண்ணும்போது அவ னுக்கு மூச்சடைப்பது போலிருந்தது. அச்சம் என்று சொல்வதற் கில்லை, அவனும் வாள்வீசும் வலிமை வாய்ந்தவன்தான். ஆனால், தஞ்சைப் படைத்தலைவனின் திண்தோள் வலிவை, திறமையை — வாள்வீசும் ஆற்றலை அவன் கண்கூடாகக் கண்டி ருந்தான். முன்னர் நடந்த சம்பவங்கள் அவனுக்குப் பாடம்



கற்பித்திருந்தன. இந்த வேளையில் இவனை எதிர்த்து வாளை உயர்த்துவது தற்கொலைக்குச் சமம் என்பதை வன்னியன் தெளி வாகவே உணர்ந்திருந்தான்.

அதனால்... அவன் சரேலென்று தன் குறுவாளை உருவி, ராஜகாமினியின் தொண்டைக் குழியில் பதித்து, ''தஞ்சைப் படைத்தலைவனே! அப்படியே நில். நீ ஓரடி நெருங்கி வந்தாலும் இவள் பிணமாகச் சரிவாள்...'' என்று கூறினான்.

ஒரு பெட்டையைப் போல், பேதைப் பெண்ணின் பின்னால் ஒளிந்து நின்று அவள் குரல் வளையில் குறுவாள் பதித்து மிரட்டிப் பின்வாங்கி நகரும் அவனை என்ன செய்வது என்று புரியாமல் சில விநாடிப் போதுகள் ஓங்கிய வாளைத் தாழ்த்தி நின்றான் தஞ்சைப் படைத்தலைவன்.

வன்னியனுக்கு அந்தச் சில விநாடிகளே போதுமானதாயிருந் தது. அவன் அந்த வீட்டின் வழியாக ராஜகாமினியை இழுத்த வாறே நகர்ந்து, தோட்டக் கதவைத் திறந்து கொண்டு — அங்கு முன்னதாகவே ஆயத்த நிலையில் நிறுத்தப்பட்டிருந்த புரவி மீது தாவியேறி, ராஜகாமினியையும் அதே புரவி மீதே தூக்கி அமர்த் திய வண்ணம் தப்பியோடினான்.

நீண்ட கால்வாய் மேட்டின் மீது அந்தப் புரவி ஏறும் போதே வருணகுலத்தானும் வாசலுக்கு விரைந்து வந்து, அஷ்டமங்கலத் தின் மீது தாவியேறியவனாக வன்னியனைப் பின்தொடர்ந்தான். அஷ்டமங்கலத்தை அதிகம் விரட்ட வேண்டிய அவசியமில்லை. தலைவன் குறிப்பறிந்து மின்னல் வேகம் காட்டியது அது. இருந்தா லும் கூட, அவன் வாயிலுக்கு வந்து அஷ்டமங்கலத்தின் மீது தாவி, அந்தத் தோப்பு வீட்டின் சுற்றுப்புற வேலியைத் தாண்டியி ருந்த ஒற்றையடிப் பாதை வழியாகவே கால்வாய்க் கரையை அடைய வேண்டியிருந்ததால் அதற்குள் வன்னியனின் புரவி சிறிது தொலைவு சென்று விட்டிருந்தது.

ஆயிற்று, இதோ வன்னியனை நெருங்கி விட்டோம் என்கிற அளவில் அஷ்டமங்கலம் காற்றைக் கிழித்துக் கொண்டு கணை யெனப் பாய்ந்தும் பயனில்லாது போயிற்று — எப்படியும் தஞ் சைப் படைத்தலைவன் கையில் சிக்காது தப்பியே தீருவது என்ற குறிக்கோளுடன் வெறி பிடித்தவன் போல் விரைந்து கொண்டி ருந்த வன்னியன், கடைசித் தருணத்தில் அந்தக் கொடூரத்தைச் செய்துவிட்டான். ராஜகாமினியின் வயிற்றில் குறுவாளை ஆழமா கச் செருகி, அவளை அப்படியே புரவியிலிருந்து கீழே தள்ளி

விட்டு தலை தெறிக்கிற வேகத்தில் தன் புரவியைச் செலுத்தினான்.

பெருத்த அலறலுடன் கால்வாய்க் கரையின் சரிவில் விழுந்து உருண்ட ராஜகாமினி, சலசலவென்று ஓடிக் கொண்டிருந்த நீரினுள் போய் விழுந்தாள்.

தஞ்சைப் படைத்தலைவன், காற்றெனக் கடுகி விரைந்து கொண்டிருந்த அஷ்டமங்கலத்தின் கடிவாளக் கயிற்றைத் திடீரென்று இழுத்துப் பிடித்து நிறுத்த நேர்ந்ததால், அது கடைவாய் ஓரங்களின் நோவு தாளாமல் தன் முன்னங்கால்களை வான் நோக்கி உயர்த்திச் சிலிர்த்து எழுந்து கனைத்தபடிநின்றது. அதன் முதுகிலிருந்து பொத்தெனக் குதித்த படைத்தலைவன், கால்வாயினுள் கிடந்த ராஜகாமினியை நோக்கிப் பதைபதைப்புடன் ஓடினான்.

அங்கே..... கணுக்காலளவு சலசலத்தோடிய கால்வாய் நீரில் வயிற்றிலிருந்து ஊற்றெடுத்துப் பிரவகித்த குருதி கலந்து, கால்வாய் முழுவதுமே குருதி ஓடுவது போல் நெடுந்தூரத்திற்கு அச்சம் தரும் செந்நிறம் பரவிக் கிடக்க, ஆவி பிரியும் தருணத்து முனகலோடு — விழிகள் மேலிட்டுச் செருக நலிந்து கிடந்தாள் ராஜகாமினி. அவளை அவன் தூக்கிக் கரையோரம் எடுத்துவந்து பசும் புல் பரப்பில் கிடத்தவும், ''என்னை மன்னித்து விடுங்கள்... ஈழ மண்ணைக் காப்பாற்றுங்கள்!'' என்ற வார்த்தைகளையே தன் மரண சாசனம்போல் அவனது மனப் பலகையில் எழுதி முடித்து விட்டு, அவளது இறுதி மூச்சு ஓயவும் சரியாக இருந்தது.

அப்படி வருணகுலத்தான் கவனம் ராஜகாமினியின் மீது திரும்ப வேண்டும் என்பதற்காகவே அவளைக் குறுவாளால் குத்திச் சாய்த்துவிட்டு, அந்தச் சிறிது நேர இடைவெளிக்குள் வெகுதூரம் தன் புரவியை விரட்டிச் சென்று தப்பித்துப் போய்விட்டான் வன்னியன்.

ஒரே நாளில், அடுத்தடுத்து இரண்டு கொலைகளை — ஒரே உத்தியைக் கையாண்டு செய்துவிட்டு தப்பியோடி விட்டான் அந்த மனித ராட்சதன்.

**போர்**ச்சுகீசியப் படைகள் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் பிரவேசிக்கக் கூடாது என்று கூறியிருந்தார் சங்கிலி மன்னர். பூநகரியில் வந்து தங்கியிருக்கும் போர்ச்சுகீசியப் படைத் தளபதி பிலிப்-டி-ஒலிவேரா, தனது படை வீரர்களுடன் குடாக் கடலைக் கடக்க யாரிடம் படகுகள் கேட்டாலும் அவர்கள் அவனுக்கு எந்த



உதவியும் செய்யக் கூடாது என்பதும் சங்கிலி மன்னரின் கட்டளையாயிருந்தது. அரசாணையை மீறி, போர்ச்சுகீசியர்கள் தரும் பொன்னுக்கு ஆசைப்பட்டுக் கடலோரப் பரதவர்கள் யாரும் தங்கள் கட்டுமரங்களை அவர்களுக்கு அளித்தால்கூடக் கடுமையான தண்டனை கிடைக்கும் என்று எச்சரித்தார்.

அந்நியப்படைகளை உள்ளே நுழைய விட்டுவிட்டால் ஈழ மக்கள் எத்தகு இன்னல்களுக்கு ஆளாக நேரும் என்பதை நன்கு உணர்ந்திருந்ததாலேயே சங்கிலி மன்னர் இப்படி ஆணைகள் இட்டு அந்த ஆபத்தைத் தடுக்க விரும்பினார்.

ஆடுகள் நடுவே கலவரம் மூண்டுவிட்டது என்பதற்காக, சமாதானப்படுத்தி வைக்க ஓநாய்களையா அழைத்து வர முடியும்?

அதுவும் போர்ச்சுகீசியர் மிலேச்சர்கள், வேற்று நாட்டிலிருந்து வந்திருக்கும் அந்த விதேசிகளுக்கு எப்படித் தமிழ் மக்களின் உணர்வுகள் புரியும்? ஈழ மண்ணையே கபளீகரம் செய்துவிடத் துடித்துக் காத்திருக்கும் அவர்களால் எப்படி மக்கள் நடுவே அமைதியைத் தோற்றுவிக்க இயலும்?

நன்மை எதுவும் நிகழாது போயினும் கூட, ஈழ மக்களுக்குத் தன் ஆட்சியில் தீமைகள் எதுவும் சம்பவித்து விடக் கூடாது என்று எண்ணினார் சங்கிலி மன்னர். அதனால்தான் அவர் போர்ச்சுகீசியப் படைகளை யாழ்ப்பாணத்திற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்பதில் உறுதி கொண்டிருந்தார் — போர்ச்சுகீசியப் படையினர் குடாக் கடலைக் கடக்க நாட்டு மக்கள் எவரும் எந்த உதவியும் புரியக் கூடாது என்று மூலை முடுக்கெல்லாம் பறையறிவிக்கச் செய்திருந்தார்.

ஆனால், துரோகிகளை எந்த உத்தரவுதான் கட்டுப்படுத்த இயலும்?

விநாசகால விபரீதங்களை எந்த ராஜ கட்டளையால்தான் தவிர்க்க இயலும்?

**யா**ழ்ப்பாணக் குடா நாட்டினுள் நுழையத் துடித்த — இரத்த வெறி பிடித்த ஓநாய்க் கூட்டத்துக்குச் சமமான போர்ச்சுகீசியப் படையினருக்குச் சகலவிதமான உதவிகளையும் வன்னியன் செய்தான். அவனது ஆட்கள் பெரிய நாவாய்களையும் படகுகளையும் ஓட்டி வந்து, அதன் மூலம் போர்ச்சுகீசியப் படையினரைக் குடாக் கடல் கடந்து யாழ்மண்ணில் கரையிறங்கச் செய்தனர். ஏழைப் பரதவர்களை மிரட்டி அவர்களின் கட்டுமரங்களையும் பிடுங்கி

வந்து, அதன் மூலமும் ஆயிரக்கணக்கான கூலிப்படையினரைக் கொண்டு வந்து குவித்தனர்.

யாழ்ப்பாணப் பிரதேசங்களில் ஏராளமான அந்நியர் நடமாடத் துவங்கியதும் கிராமங்கள் பரபரப்படைந்தன. மக்கள் பெரும் பீதி வசப்பட்டனர். ஆங்காங்கே சிறு சிறு கலவரங்களும் நிகழ்ந்தன. போர்ச்சுகீசியர் கண்ணில்பட்ட பொருட்களையெல்லாம் தங்களுக்குச் சொந்தமென்று பறித்துச் சென்றனர். அவர்கள் மாமிச உணவு உண்ணுபவர்கள் என்பதால் ஏராள ஆடு மாடுகளும் ஏழைக் குடியானவர்களிடமிருந்து பறித்துச் செல்லப்பட்டன. எதிர்ப்பவர் படுகொலை செய்யப்பட்டனர். யானைகள் புகுந்த கரும்புத் தோட்டம் போல் ஆனது யாழ்ப்பாணக் கிராமங்கள்.

இனிப் பொறுப்பதில்லை என்ற முடிவுடன் சங்கிலிமன்னர் தஞ்சைப் படைத்தலைவனை அருகழைத்து, ''தஞ்சையிலிருந்து படை என்று எதுவும் வந்திருந்தால் அவர்கள் செயல்பட வேண்டிய நேரம் இதுதான். உடனே அவர்களை வரவழைத்து என் கண் முன்னால் நிறுத்த வேண்டும்'' என்று கட்டளையிட்டார்.

வருத்தமும் சினமும் மேலிட்ட நிலையில் இருந்த சங்கிலி மன்னரிடம் வருணகுலத்தான் மிகவும் அமைதி நிறைந்த குரலில் பேசினான்:

''மன்னர் இதுபற்றி வருத்தம் கொள்ள ஒன்றுமேயில்லை, போர்ச்சுகீசியர்கள் எந்த விதமான தர்மத்துக்கும் கட்டுப்பட்டு நடக்க இந்த மண்ணுக்கு வரவில்லை. அவர்கள் நோக்கமெல்லாம் ஈழத்தைக் கைப்பற்றுவது ஒன்றுதான். அதனால் அவர்கள் பூநகரியைத் தாண்டியும் — தங்கள் கட்டளையை மீறியும் யாழ்ப்பாணத்துக்குள் பிரவேசித்தது பற்றி வருத்தமடைய வேண்டாம். போர் சமீபித்து விட்டது என்ற உண்மையை மட்டும் நாம் உணர்ந்து, அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வோம்.

''தஞ்சைப் படையினரை ஒன்றுகூட்டி, நிச்சயமாகத் தங்கள் முன் அணிவகுத்து நிற்கச் செய்து காட்டுகிறேன். இதுபற்றி முன்பே தங்களிடம் கூறியும் இருக்கிறேன். 'வருணகுலத்தானுக்கு வாள் வழங்கும் விழா' என்று பறையறிவியுங்கள். நல்லூர் வீரமாகாளி ஆலயத்தின் முன்னுள்ள திடல் வெளியில் மறுகணமே என் வீரர்கள் வந்து குவியத் துவங்குவர்.

''இந்த வேளையில் தங்களிடம் மற்றொரு விஷயத்தையும் நான் கூறிவிடுகிறேன். தஞ்சை வீரர்களைப் பல்வேறு உபாயங்களைக் கையாளச் செய்து ஈழ மண்ணுக்குள் நான் எப்போதோ



கொண்டு வந்து சேர்த்துவிட்டேன். பயணிகள் போல் வந்தவர்கள் — வணிக மரக்கலங்களில் கூலித் தொழிலாளர்களாக வந்தவர்கள் அனைவரும் யாழ்ப்பாண கிராமங்களில் எப்போதோ ஊடுருவி விட்டார்கள். இரவு நேரங்களில் படகுகளிலும் கட்டுமரங்களிலுமாக வந்த எண்ணற்ற வீரர்கள் இந்த யாழ்ப்பாண தீபகற்பத்தை ஒட்டியதாகக் கடலில் இறைந்து கிடக்கும் வேலணைத்தீவு, மண்டைத்தீவு, புங்குடுத்தீவு, நயினாத்தீவு, காரைத்தீவு, அனலைத்தீவு, நெடுந்தீவு போன்ற ஏழு தீவுகளில் வேட்டைக்காரர்கள் போலவும் குறவர்கள் போலவும், மீனவர் போலவும் மறைந்து வாழ்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் இரவு நேரங்களில்கரையோரக் காடுகளுக்கு வந்து அவ்வப்போதைய நிலவரங்களையும், செய்திகளையும் எங்கள் தேர்ந்த ஒற்றர்கள் மூலம் அறிந்து செல்கிறார்கள். போர் எப்போது துவங்கும் என்றுதான் தஞ்சை வீரர்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.....'' என்று கூறிக் கொண்டே போன தஞ்சைப் படைத்தலைவனை இடைமறித்த சங்கிலி மன்னர், மிகுந்த மகிழ்வோடும், உணர்ச்சிப் பெருக்கோடும்,

''நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் என்றோ, தஞ்சைப் படை வராமலே நம்மை ஏமாற்றிவிடுமென்றோ நான் ஒருபோதும் எண்ணியதில்லை வருணதேவரே! நீங்கள் இத்தனை முன்னேற்பாடுகளுடனும் ராஜ தந்திரத்துடனும் திட்டமிட்டுச் செயலாற்றியிருப்பதை அறிந்து மிகவும் மகிழ்கிறேன். ஆனால், எதற்காக இந்தத் தலைமறைவு நாடகம்...? நான்தான் வெளிப்படையாகத் தஞ்சை மன்னரிடம் படைஉதவி கேட்டிருக்கிறேனே..... நேராகத் தாங்கள் யுத்த மரக்கலங்களில் தஞ்சை வீரர்களை அழைத்து வந்திருக்கலாமே? நானே முன்வந்து சகல விதமான மரபு சார்ந்த மரியாதைகளுடனும் தங்களை வரவேற்றிருப்பேனே... எதற்காக இப்படியொரு தலைமறைவு வாழ்க்கையிலிருக்கின்றனர் தஞ்சை வீரர்கள்? அதுவும் நட்பு நாடான ஈழத்தின் கடலோரத்திலும் தீவுகளிலும் அவர்கள் ஒளிந்து வாழ்வதும் — இரவு நேரங்களில் மட்டுமே ஒருவரையொருவர் சந்திப்பதும் அவசியந்தானா?'' என்றார்.

''இதற்கு முன்பே தங்களுக்குச் சுருக்கமாக விடையளித்திருந்தேன். எனினும் முழுவிளக்கத்தையும் இப்போது கூறிவிடுகிறேன்'' என்ற தஞ்சைப்படைத்தலைவன், சொல்லத்தொடங்கினான்:

''மன்னா! போர்ச்சுகீசியர்கள் மிகுந்த தந்திரத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகுகின்றனர். அவர்கள் தங்களோடு ஒரு

வெளிப்படையான யுத்தத்தை மேற்கொள்ளவில்லை. ஒருபுறம் தங்களோடு நட்புறவு கொண்டவர்கள் போன்று நடிக்கின்றனர். மறுபுறம் மக்கள் நடுவே தாங்கள் ஒரு கொலைகாரர் என்றும் — முறையான அரச வாரிசல்லவென்றும் மதபோதகர்களை விட்டுப் பிரசாரம் செய்கின்றனர். மக்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து மோதிக் கொள்ளும் சூழ்நிலைகளைத் தோற்றுவித்து, சிங்களர் — தமிழர் என்ற இன மோதலையும் தோற்றுவித்து இந்த நாடகம் நடக்கிறது. அதே வேளையில் தங்களுக்கு உதவ விரும்பு பவர் போன்று போர்ச்சுகீசியப் படைகளைக் கொண்டு வந்துவிட வும், அவர்கள் ஆதிக்கத்தை நீங்கள் ஏற்குமாறு செய்யவும் சதியும் முயற்சியும் நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் நான் தஞ் சையிலிருந்த போதே கூர்ந்து கவனித்து வந்தேன். ஏனெனில், இலங்கையும் தஞ்சையும் அருகருகே உள்ள நாடுகள். இரண்டி லும் வாழும் மக்கள் இனத்தாலும் பல்வேறு அம்சங்களாலும் ஒன்றுபட்டவர்கள். ஈழத்தில் மின்னல் தோன்றினால் தமிழகத்தில் மழை பொழியும். இங்கே தோன்றும் எல்லாப் பிரச்சனைகளுக் கும் அங்கே பாதிப்புகளும் பின் விளைவுகளும் உண்டு. அதிலும் இது அந்நியர் சம்பந்தப்பட்ட அபாயகரமான பிரச்னை. இதே போர்ச்சுகீசியர் அங்கும் வாணிப வேடம் பூண்டு வந்திருக்கிறார் கள். எனவே, மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும் என்பதை நான் உணர்ந்திருந்தேன்.

''தவிர, போர் ஆயத்தங்களுடன் யுத்த மரக்கலங்களை எடுத் துக் கொண்டு, ஆயிரக்கணக்கான வீரர்களுடன் புறப்பட்டால் நாகைப்பட்டினம் போன்ற கீழைக் கடலோரப் பிரதேசங்களில் உள்ள போர்ச்சுக்கீசியப் படையினரின் கண்களிலிருந்து தப்ப முடியாது. தேவையற்ற போரும், வீண் குழப்பங்களும்தான் எஞ்சும். அவர்கள் தஞ்சைப் படையினர் ஈழம் வருவதை விரும்ப மாட்டார்கள். ஆகவேதான் இந்த முன்னேற்பாடுகள். இங்கே நான் வந்து கரை இறங்கிய பிறகும் எத்தனை ஆபத்துகளைச் சந்திக்க நேர்ந்தது என்பதைத் தாங்களே அறிவீர்கள். தஞ்சைப் படையினர் பற்றிய ரகசியங்களை அறிந்து கொள்ளும் முயற்சியில்தான் எதிரி கள் காத்தவராயனின் குடும்பத்தைச் சின்னா பின்னப்படுத்தி விட்டார்கள். இதோ கடைசியில் விசுவாசமிக்க அந்த ராஜ ஊழியன் ராஜ சேவகத்துக்காகத் தன் இன்னுயிரையே இழந்துவிட் டான்...'' என்றான்.



''உண்மைதான். உங்கள் முன்யோசனை மிக்க ஏற்பாடுகளை நான் புரிந்து கொள்கிறேன் — பாராட்டுகிறேன். நீங்கள் கூறிய வாறே நல்லூர் வீரமாகாளி அம்மன் திருச்சந்நிதியில் நாளையே தங்களுக்கு வாள் வழங்கும் விழா நிகழும். இன்றே பறையறி விக்க ஏற்பாடு செய்கிறேன்...'' என்றார், சங்கிலி மன்னர். உடனே அதற்கான கட்டளைகளையும் பிறப்பித்தார்.

வருணகுலத்தான் மற்றொரு தகவலையும், அப்போது சங் கிலி மன்னரிடம் எடுத்துரைத்தான்:

''வேந்தே! மேலைக் கடலில் போர்ச்சுக்கீசியரின் வணிக மரக்கலங்கள் அனைத்தையும் சூறையாடுபவனும் — அவர்க ளுக்கு நினைக்கவே அச்சம் தரும் சிம்ம சொப்பனமாகத் திகழ்பவ னுமான டொம்பீதுறு ரொட்றிக்ஸை நான் எதிர்பாராவிதமாகச் சந்திக்க நேர்ந்தபோது, அவன் தங்கள் பால் மரியாதையும் நட்பு ணர்வும் கொண்டவனாக இருப்பதை அறிந்ததாகக் கூறினேன் அல்லவா? அவன் தக்க சமயத்தில் தங்களுக்குப் படை உதவி செய்யவும் சித்தமாக இருப்பதாகக் கூறினான். ஒரு கொள்ளை யனை உதவிக்கு அழைப்பதா என்று யோசிக்காமல் தாங்கள் அனுமதியளித்தால் நாம் அவனை இங்கு வரவழைக்கலாம்...''

''வருணதேவா! டொம்பீதுறு பற்றிய தகவல் அனைத்தையும் நான் முன்பே அறிவேன். அவனைப் போர்ச்சுகீசியர்கள்தான் கடற்கொள்ளையன் என்று கூறுகிறார்களே தவிர, அவன் ஒரு இலட்சிய வீரன் என்பதை என் போன்ற சுதேச மன்னர்கள் அறியாமலில்லை. டொம்பீதுறு கேரளத்தின் குஞ்சாலி மரைக்கா யர் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவன் சுதேச மரக்கலங்கள் எதனை யும் கொள்ளையிட மாட்டான்-முன் விரோதம் இருந்தாலொழிய. போர்ச்சுகீசியர் பலமுறை அவனை ஒழித்துக் கட்ட முயன்றனர். இயலவில்லை..... கேரளத்தை ஒட்டிய மேலைக்கடல் பிரதேசம் அனைத்தையும் நன்கு அறிந்தவன் டொம்பீதுறு. கடலின் நெளிவு, சுளிவுகள், கடலடிப் பாறைகள், மிகச் சமீபத்திலுள்ள முக்கூடல் பிரதேசத்தின் காற்று மண்டல மாறுபாடுகள் அனைத்தையும் அறிந்தவன் அவன்.

''கடல் மைந்தனான அவன் கண்களினின்று மிலேச்சர்களின் மரக்கலங்கள் தப்பவே முடியாது. அவன் எந்தக் கடல் வளைவில் மறைந்திருப்பான் என்பதை அவர்களால் ஊகிக்கவே முடியாது. அத்துடன் இலக்கு நோக்கிப் பாய்வதில் டொம்பீதுறுவின் மரக்க லங்களுக்கு உள்ள வேகம் அசாத்தியமானது. ஒரு மரக்கலத்தை இவ்வளவு விரைவாகச் செலுத்த முடியுமா என்று அந்நியர்கள்

அயர்ந்து போகின்றனர். அவனைக் கடல் ராட்சசன், கடற்பூதம், கடற்சூறாவளி என்றெல்லாம் மேலை நாட்டுக் கடலோடிகள் வருணிப்பது வழக்கமாம்.

"போரிட்டு வெல்ல முடியாது போகவே எப்படியாவது டொம்பீதுறுவைத் தங்களுக்குச் சாதகமானவனாக ஆக்கியே தீருவ தென்று கூட அவர்கள் கங்கணம் கட்டி முயன்றனர். அதுவும் இயலவில்லை. தந்திரமாக அவனைச் சிறைப்பிடித்துக் கோவா வுக்குக் கொண்டு சென்று, கிறிஸ்தவ மதத்துக்கு மாறும்படி வற்புறுத்திப் பார்த்தனர். அப்படி மதம் மாறினால் அவனை உடனே விடுதலை செய்து விடுவதாகவும் — அவன் வழக்கம் போல் கடற்கொள்ளையனாகவே இருக்கலாமென்றும், ஆனால், போர்ச்சுகீசிய மரக்கலங்களை மட்டும் அவன் கொள்ளையடிக்கக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டனர். டொம்பீதுறுவோ தந்திர மாக அனைத்துக்கும் சம்மதம் தெரிவித்து — மதம் மாறுவதாகக் கூறி வெளியே வந்ததும் தன் பழைய சுபாவப்படியே நடந்து கொண்டு வருகிறான். போர்ச்சுகீசியர்களின் மீது கடுமையான சினம் கொண்டிருக்கும் அவன், இப்போது நமக்கு உதவியாக வரக்கூடும் என்பது உண்மைதான். ஆனால், அவனுக்கு எப்படித் தகவல் அனுப்புவது? அவன் ஓரிடத்தில் நிலைத்து நிற்பவன் அல்லவே... அவனோடு தொடர்பு கொள்வது சாத்தியமற்றதா யிற்றே...?" என்றார் சங்கிலி மன்னர்.

"அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். டொம்பீ துறு ஒரு கடற் பறவையை என்னிடம் கொடுத்திருக்கிறான். அதன் மூலம் நான் அவனுக்குச் செய்தி அனுப்பி விடுகிறேன். அந்தப் பறவை டொம்பீதுறுவின் மரக்கலம் எங்கிருந்தாலும் அதைக் கண்டுபிடித்துச் சென்று விடும்..." என்று கூறினான் வருணகுலத் தான்.

எப்படியும் போர்ச்சுகீசியர்களை வெளிப்படையாக எதிர்த் துப் போரிட வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதை உணர்ந் திருந்த சங்கிலி மன்னர், வருணகுலத்தானின் முன்னேற்பாடுக ளால் சிறிது நிம்மதியுற்றவராக, அடுத்து நடக்க வேண்டிய காரியங்களில் கவனம் செலுத்தலானார்.

**ந**ல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் கூட்டம் அலை மோதியது. திமுதிமுவென்று மக்கள் வெள்ளமெனப் பெருகிவிட் டனர். சின்னஞ்சிறு ஆலயம் அது. அதற்கு முன் அவ்வளவு பெரிய திருவிழாக் கூட்டம் கூடியதே இல்லை. நல்லூர் கந்தசாமி கோயில், சட்டநாத சுவாமி கோவில் போன்றவற்றில்தான் பெரிய



திருவிழாக்கள் நடைபெறும். கோவிலும் பிரம்மாண்டமானவை. கூட்டமும் பிரம்மாண்டமானதாக இருக்கும். ஆனால், இப்போது நல்லூர் வீரமாகாளி ஆலயத்தின் முன் இவ்வளவு கூட்டம் திரள்வ தைக் கண்டு யாழ்ப்பாணமே திகைத்துப் போயிற்று.

கோவிலின் முன்னால் விரிந்து கிடந்த பெருந்திடல் வெளி யில் மக்கள் குழுமி நின்றதும் சங்கிலி மன்னர் ராஜரதம் ஒன்றில் வந்து இறங்கினார். மற்றொரு ரதத்தில் தஞ்சைப் படைத்தலை வன் வருண குலத்தானும் உபதலைவன் வேல்மாறனும் வந்திறங் கினர்.

வீரமாகாளிக்குச் சிறப்பு வழிபாடு நடத்தப்பட்டது. பின்னர் கோவிலின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலின் நடுவே இருந்த உயரிய மேடைக்கு அவர்கள் அழைத்துச் செல்லப் பட்டனர். கூடி நின்ற மக்கள் அனைவரும் சங்கிலி மன்னரையும் தஞ்சைப் படைத்தலைவனையும் நன்கு காணுமாறு செய்யவே இந்த ஏற்பாடு. அம்மனுடைய பாதங்களில் வைத்து வழிபாடு செய்யப்பட்ட வீரவாள் எடுத்து வரப்பட்டது. அதைச் சங்கிலி மன்னர் வாங்கி, மக்கள் முன்பாக உயர்த்திப் பிடித்து, "இதோ இந்த வாளைத் தஞ்சைப் படைத்தலைவனுக்கு வழங்குகிறேன். இணையற்ற இந்த வீரர் நமக்குப் பெரும் பாதுகாப்பாக நிற்கவும், அந்நியர்களோடும் துரோக சக்திகளோடும் நமக்குப்போர் மூண் டால் இந்த இளைஞர் தமிழக வீரர்களின் திண்தோள் வலிவால் நமக்குப் பெரு வெற்றி தேடித் தரவும் அன்னை வீரமாகாளி அருள் புரியட்டும்..." என்று கூறியவாறே, அந்த வீரவாளை வருணகுலத் தானிடம் அளித்தார். அதை அவன் பணிவுடன் ஏற்றான்.

மன்னரின் ராஜவாளும் அம்மன் பாதங்களில் பூஜைக்கு வைக்கப்பட்டிருந்தது. அதையும் பெரிய தாலமொன்றில் வைத்து ஏந்தியவாறு அந்தணப் பெரியவர் ஒருவர் அடுத்ததாக மேடை யேறினார். அப்போதுதான் அந்த துர்ச்சம்பவம் நிகழ்ந்தது. மேடையை நோக்கிப் படிகளில் ஏறும்போது அவர், காலிடறிக் கீழே விழுந்துவிட்டார். ராஜவாள் மண்ணில் விழுந்தது. சித்திர வேலைப்பாடு மிக்க பெரிய தாலம் கீழே விழுந்ததால் ஏற்பட்ட பெருத்த ஓசை அனைவர் நெஞ்சிலும் சுரீலென்று உறைந்து, இனம் புரியாத கலக்கத்தை ஏற்படுத்தியது. அனைவரும் அந்த அபசகுனத்தைக் கண்டு நெஞ்சம் பதைக்க பெருமூச்செறிந்தனர்.

# 19. சிம்ம சொப்பனம்

நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில், பூஜையில் வைத்து எடுத்து வரப்பட்ட ராஜவாள் மண்ணில் விழுந்ததைக் கண்டு சங்கிலி மன்னர் ஒரு கணம் திடுக்கிட்டு, திகைப்படைந்தார் என்ற போதும்; அவர் தமது உணர்வுகளை முகத்தில் வெளிக்காட்டாமல் மனதுக்குள் எழுந்த அதிர்வலைகளை அடக்கிக் கொண்டவராய் மக்களை நோக்கிக் கூறினார்.

''யாரும் இப்படியொரு துர்ச்சம்பவம் நிகழ்ந்து விட்டதே என்று கலங்க வேண்டாம். அன்னை பராசக்தி — வீரமாகாளி எதையாவது நமக்குக் குறிப்பால் உணர்த்த விரும்பும் போதுதான் இது போன்ற சம்பவங்கள் நிகழும். சகுனம் என்பதே தெய்வசித்தம் இருந்தால்தான் நிகழும். சகுனம்,எல்லாம் நம் மனநிலையைப் பொறுத்ததே. தெய்வம் குறிப்பால் எதை உணர்த்தினாலும் அதை நாம் மனத்தால் ஏற்பதுதான் உண்மையான நம்பிக்கையின் அடையாளம்.

''நான் இந்தச் சகுனத்தை ஏற்றுக் கொள்கிறேன். ராஜவாள் கீழே விழுந்தால், போருக்குப் போக வேண்டாம் என்பது பொருளாக இருக்க முடியாது. 'எச்சரிக்கையாக இரு; ஆபத்து நிகழ வாய்ப்பிருக்கிறது' என்று அன்னை வீரமாகாளி உணர்த்துவதாகவே இந்தச் சகுனத்துக்கு நான்பொருள் கொள்கிறேன். மக்கள் யாரும் மனக்கலக்கமடைய வேண்டாம். மிகுந்த துணிவோடும் நம்பிக்கையோடும் இருங்கள். அரசனை விட அன்னை பராசக்திக்கே மக்களைக் காக்கும் பொறுப்பு அதிகம். அவள் சார்பில், அவள் அளித்த வாளெடுத்துக் களம் செல்லும் ஒரு சாதாரண ஊழியனாகவே நான் என்னைக் கருதுகிறேன். போர்ச்சுகீசியரோடு நமக்குப் போர் மூளுமேயானால், 'தெய்வமே! எப்படியாவது என்னைக் காப்பாற்று' என்று பிரார்த்திக்கிறவனல்ல நான். 'தாயே பராசக்தி! இந்த ஈழத்திருநாட்டை மிலேச்சர்களிடமிருந்து காப்பாற்று; என் குடிமக்களை—தமிழ் மக்களை வீண் உயிர்ச் சேதத்துக்கு ஆளாகாமல் காப்பாற்று' என்பதுதான் என் பிரார்த்தனையாக இருக்கும். தஞ்சைப் படைத்தலைவருக்கு இன்று அன்னை பராசக்தி அளித்த வீரவாளை நான் வழங்கியிருக்கிறேன். அவரும் தமிழக வீரர்களும் நமக்குப் பெருந்துணையாக இருப்பார்கள். ஈழத்தின் பாதுகாப்புப் பொறுப்புக்கள் இன்று வருணகுலத்தானிடம் ஒப்படைக்கப்பட்டாயிற்று. இந்த விழா இத்துடன் நிறைவடைகிறது. மக்கள் அமைதியாகக் கலைந்து செல்லலாம்...'' என்று கூறினார்.



மக்கள் சிறிது நேரம் வாழ்த்துக் கோஷங்களை முழக்கிவிட்டு மெல்ல கலைந்து செல்லத் துவங்கினர். கீழே விழுந்த வாள் எடுத்து வரப்பட்டு, மன்னரிடம் தரப்பட்டது. அவர் அதைப் பெற்றுக் கொண்டு, மேடையிலிருந்து இறங்கி மறுபடியும் அம்மன் சந்நிதியை நோக்கிச் சென்றார். மௌனமாகச் சிறிது நேரம் பிரார்த்தனை செய்த வண்ணம் நின்றிருந்த அவர், வீரமாகாளியை வணங்கி விட்டுத் திரும்பும் போது, இன்னமும் கலைந்து செல்லாது ஏராளமானோர் திடல் வெளியில் அமர்ந்திருந்தனர்.

''இவர்கள் அனைவரும் தஞ்சை வீரர்கள். ஐயாயிரம் பேரும் இங்கே வந்திருக்கிறார்கள். அணிவகுத்து நிற்கச் செய்கிறேன். தாங்கள் தஞ்சை வீரர்களின் அணிவகுப்பைப் பார்வையிட்ட பிறகு அரண்மனை திரும்பலாமல்லமா...?'' என்றான் வருணகுலத்தான்.

''அப்படியெல்லாம் எதுவும் இங்கே செய்ய வேண்டாம். தமிழ் நிலத்திலிருந்து வந்திருக்கும் இவர்களைப் பார்க்கையில் என் மனம் பூரிப்படைகிறது. தாங்கள் வாக்கை நிறைவேற்றி விட்டீர்கள். ஆனால், இவர்களை உடனே கோட்டைக்குள் அழைத்துச் செல்ல இயலாது போலிருக்கிறதே... ஐயாயிரம் பேருக்கும் அங்கே போதிய தங்குமிடம் இருக்காதே...?'' என்றார் சங்கிலி மன்னர்.

''அவர்கள் திரும்பவும் பழைய உறைவிடங்களுக்கே சென்று விடுவார்கள் வேந்தே, தாங்கள் எப்போது போர் முரசு கொட்டுகிறீர்களோ அப்போது அவர்கள் நகருக்குள் பிரவேசிப்பார்கள்...''

''இல்லை, அப்படிச் செய்வது நியாயமில்லை. இவர்கள் இங்கேயே தங்கியிருக்கட்டும். உடனே இவர்களுக்குத் தேவையான துகின் மனைகளை இங்கேயே அமைத்துத் தர நான் கட்டளை பிறப்பிக்கிறேன். தஞ்சை வீரர்களைத் தகுந்த விதத்தில் உபசரிப்பது என் கடமை...'' என்றார் சங்கிலி மன்னர்.

வருணகுலத்தான் இதை ஒப்புக் கொண்டான். உடனே அவன் வேல்மாறனை அனுப்பிப் பத்து இளைஞர்களை அழைத்து வரச் செய்து, அவர்கள் ஒவ்வொருவர் பெயரையும் கூறிச் சங்கிலி மன்னருக்கு அறிமுகப்படுத்தினான்.

''மன்னா! இவர்கள் பத்துப் பேரும் என்னுடைய உபதளபதிகள். என்னுடைய இரண்டு கரங்களிலும் உள்ள பத்து விரல்களாக இவர்களை நான் கருதுகிறேன். இவர்கள் ஒவ்வொருவரின் கீழும் பத்துப் பேர் வீதம் நூறுஇளைஞர்கள் இருக்கிறார்கள். அந்த நூறு பேரையும் நான் அடிக்கடி சந்தித்து, என் அவ்வப்போதைய திட்டங்களை விவரிப்பேன். அவர்கள் ஒவ்வொருவரும் ஐம்பது வீரர்கள் வீதம் ஐயாயிரம் படை வீரர்களுக்குப் பொறுப்பேற்று வழிநடத்திச் செல்வார்கள். எனவே, இவர்களை மூலைக்குமூலை பிரிப்பதும், பிறகு தேவைப்படும் இடத்தில் ஒன்றாகச் சேர்ப்பதும் எனக்கு மிகவும் எளிதாகிறது. இன்று தாங்கள் ஐயாயிரம் வீரர்களையும் அணிவகுத்து நிறுத்திப் பார்க்கவில்லையென்றாலும், என்னுடைய அம்பறாத்தூளியில் எப்போதும் நிறைந்து கிடக்கும் ஆயுதங்களைப் போன்ற அந்தச் செயல்மறவர் நூற்றுவரையும் தங்கள் முன் அணிவகுத்து நிறுத்துகிறேன். அனுமதி உண்டல்லவா...?'' என்றான்.

அவனது இந்த ஆர்வமிக்க கோரிக்கையைச் சங்கிலி மன்னர் ஏற்றார். உடனே வருணகுலத்தானின் கைத்தட்டலைக் கேட்டு, நூறு இளைஞர்கள் எழுந்து வந்து நின்றனர். குன்றனைய தோள்களும், கூரிய பார்வையும், அகன்ற மார்பும், ஆஜாநுபாகுவான தோற்றமுமாய் — பூட்டிய வில்லிலிருந்து புறப்பட்ட கணை போல், எழுந்து வந்து நின்ற அந்த நூற்றுவரையும், சங்கிலி மன்னர் பெருமிதம் பொங்க நோக்கினார். அந்தச் செயல் மறவர்கள் மன்னரை கம்பீரமாக வணங்கி நின்றனர். தஞ்சைப் படையினரின் கட்டுத் திட்டங்களும், அவற்றை ஏவல் கொள்ளும் மதிநுட்பம் வாய்ந்த வருணகுலத்தானின் ஆற்றலும் மகத்தான நம்பிக்கையைத் தோற்றுவித்தன சங்கிலி மன்னரின் இதயத்தில்.

**போர்** முரசு கொட்டுவது தவிர வேறு வழியில்லை என்று எண்ணிய சங்கிலி மன்னர், தஞ்சைப் படையினரை அதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் வேளையில், மீண்டும் ஒரு முறை தூது பேச வந்தார் போர்ச்சுகீசிய பாதிரி டிமெல்லோ, 'அன்பு நெறியும் அறச் சிந்தனைகளும் போதிக்கும் ஒரு மதபோதகனாகிய என்னை வெறுத்து ஒதுக்க மாட்டாய் என்ற நம்பிக்கையிலேயே மறுபடியும் நான் இங்கு வந்திருக்கிறேன். தமிழர்கள்



அன்பையும் நட்பையும் மதிப்பவர்கள். அதற்குப் புறம்பாக நடந்து கொண்டான் சங்கிலி மன்னன் என்ற அவப்பெயருக்கு ஆளாவதை நீ விரும்பமாட்டாய் என்று நம்புகிறேன்' என்றெல்லாம் வாயிற் காவலனிடம் கூறியனுப்பியதால் டிமெல்லோ பாதிரியை உள்ளே அழைத்து வர அனுமதியளித்தார் சங்கிலி மன்னர்.

அன்பை முன்னிறுத்தி, அடிமடியில் அடிமைப்படுத்தும் சாதனங்களை ஏந்தி வருபவர்களை என்னென்பது? இனிமை பூசிய வார்த்தைகளை வசியமந்திரம் போல் உதடுகள் உச்சரித்து உதிர்க்கையில் அவர்தம் இதயத்து எரிதழலை எப்படி ஊகிப்பது?

அந்தப் போர்ச்சுகீசியப் பாதிரி டிமெல்லோவை நாகரீகம் கருதி நன்றாகவே வரவேற்று உபசரித்தார் சங்கிலி மன்னர். டிமெல்லோ கூறினார்:

''மன்னா! ஒரு போரைத் துவக்குவதற்கு முன்பு ஆயிரம் முறை சிந்திப்பதுதான் ஓர் அரசனுக்கு அழகு. இரண்டு தரப்பு மக்களையும் வீணாகக் கொன்று குவிப்பதில் அர்த்தமே இல்லை. இடையே உள்ள பிரச்சினை வெறும் கௌரவம் சம்பந்தப்பட்டதாக இருந்தால் அதன் காரணமாக மூளும் போரை மனித குலம் ஒருபோதும் மன்னிக்காது. வேறு பிரச்னை எதுவாயினும் கூட அதைப் பேசித் தீர்ப்பதுதான் சாலச் சிறந்தது.

இப்போது போர்ச்சுகீசியர்கள் அத்துமீறி, உன் ஆணையை மீறி யாழ்ப்பாணக் குடா நாட்டினுள் பிரவேசித்து விட்டார்களே என்பதுதான் உன் சினமாக இருக்கும். அதற்காக நீ தஞ்சைப் படையினரைத் திரட்டி வைத்துக் கொண்டு போர்முரசு கொட்டத் துடிக்கிறாய் என்பதை நானறிவேன். நன்றாக யோசித்துப் பார். போர்ச்சுகீசியர்கள் ஒன்றும் பல்லாயிரக்கணக்கில் உன் நாட்டில் பிரவேசித்து விடவில்லை. மிஞ்சிப் போனால் அவர்கள் எண்ணிக்கை ஆயிரம் பேர் இருக்கும்; அவ்வளவுதான். மற்றபடி அவர்கள் திரட்டி வைத்திருக்கும் ஏனைய வீரர்கள் அனைவரும் இந்த இலங்கை மண்ணைச் சேர்ந்தவர்கள்தான். போரில் இரத்தம் சிந்தி மாளப் போகும் பல்லாயிரம் பேரும் எந்த அணி என்பது முக்கியமல்ல; அவர்கள் இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள் என்பது மட்டுமே நிஜம்...''

டிமெல்லோவின் பேச்சில் குறுக்கிட்ட சங்கிலி மன்னர், ''இந்த நியாயங்களையெல்லாம் நான் உணராமலில்லை டிமெல்லோ அவர்களே... இதே நியாயங்களை நீங்கள் போர்ச்சுகீ

சியரிடம் சொல்லிப் பார்ப்பது தானே... அத்துமீறி நுழைந்திருப்ப வர்கள் அவர்கள்தானே?'' என்று வினவினார்.

''போர்ச்சுகீசியர்கள் உன்னை எதிர்க்க வேண்டும் என்று எண்ணியிருப்பதாக நீ தவறாக நினைக்கிறாய். போர்ச்சுகீசியர்கள் உனக்கு ஆதரவாக இருக்கவே விரும்புகிறார்கள். மக்களில் ஒரு பிரிவினர் உன்னை மன்னனாக ஏற்க மறுத்துக் கலவரம் செய்கிறார் களே தவிர, அது போர்ச்சுகீசியர்களின் தூண்டுதலால் அல்ல. அந்தக் கலவரத்தையும் கூட நீ போர்ச்சுகீசியப் படையினரை வைத்தே ஒடுக்கியிருக்கலாம். தேவையில்லாமல் தஞ்சைப் படை யினரை வரவழைத்து விட்டாய். ஈழத்தில் அமைதி நிலவச் செய்ய வந்த உதவிப் படையினர் என்ற பெயரில் தஞ்சை வீரர்கள் பல இடங்களில் பண்பாடே இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்ற னர். ஏராளமான பெண்கள் கற்பழிக்கப்பட்டிருக்கின்றனர். பலரு டைய வீடுகள் சூறையாடப்பட்டிருக்கின்றன. தஞ்சைப் படைத்த லைவனே ஒரு கொலைகாரன் போல நடந்து கொண்டிருக்கிறான். உடனே நீ தஞ்சைப் படைத் தலைவனை விசாரணைக்காகப் போர்ச்சுகீசியர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறியுள் ளார் பிலிப்-டி-ஒலிவேரா. இதை நீ ஏற்றுக் கொண்டு செயல்பட் டால் எல்லா பிரச்சனைகளும் தீர்ந்துவிடும். ஒரு போர் மூள்வ தைத் தவிர்த்து விடலாம்...'' என்றார் டிமெல்லோ.

''தேவையில்லாமல் ஒரு போர் மூளக்கூடாது என்பதுதான் எனது கருத்தும் டிமெல்லோ அவர்களே. ஆனால், தமிழன் போர் வந்து விட்டதே என்று புலம்பிக் கிடப்பவனல்ல என்பதையும் தாங்கள் உணர வேண்டும். முந்தைய தூதில் என்ன பேசினீர்களோ அதையேதான் இப்போதும் தாங்கள் பேசுகிறீர்கள். இதை நான் ஒப்புக்கொள்ள இயலாது என்று முன்பே கூறிவிட்டேன். உள்ளே வராதே என்ற பிறகும் வந்து நிற்கின்றனர் போர்ச்சுகீசியர்கள். அத்துமீறி யாழ்ப்பாண நாட்டில் பிரவேசித்த பிலிப்-டி-ஒலிவேராதான் குற்றவாளி. அவரை இங்கே இழுத்து வந்து விசாரணை நிகழ்த்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதையே நீங்கள் அங்கு சென்று தெரிவிக்கலாம். கூடவே, தஞ்சைப் படைத்தலைவனை ஒரு போதும் அவர்களிடம் ஒப்ப டைக்க மாட்டேன் என்பதையும் உறுதியாக எடுத்துரையுங்கள். உடனே போர்ச்சுகீசியர்கள் திரும்பிச் செல்ல வேண்டும். இல்லை யேல் படை நடத்தி வந்து நானே அவர்களை விரட்டியடிக்க நேரும் என்பதையும் கூறுங்கள்...'' என்றார் சங்கிலி மன்னர்.

R



இந்த முறை எரிமலையாய் குமுறாது போனாலும் சங்கிலி மன்னரின் பேச்சில் சிறிதும் உறுதி குலையாதிருப்பதைக் கண்ட டிமெல்லோ, ''ஒரு விஷயத்தை நான் கூற மறந்து விட்டேன். அதையும் சொல்லி விடுகிறேன்'' என்றார்.

''என்ன...?'' என்று வினவினார் சங்கிலி மன்னர்.

''நீ நம்பினாலும்சரி, நம்பாவிட்டாலும் சரி... உனக்கு உதவி செய்யும் பொருட்டுதான் பிலிப்-டி-ஒலிவேரா இங்கு வந்து சேர்ந் தார். இப்போது நீ அவர்களைத் திரும்பிப் போகச் சொல்கிறாய். சில விஷயங்கள் பேச வேண்டியிருந்தாலும் கூட பிலிப்-டி-ஒலிவேரா பூநகரி மாளிகையில் சென்று தங்கியிருந்த வண்ணம் உன்னோடு அரசியல் பேச்சு வார்த்தைகள் நடத்த விரும்புகிறார். அதற்குமுன், போர்ச்சுகீசிய வீரர்களுக்கு கொஞ்சம் உணவுப் பொருட்கள் தேவைப்படுகின்றது. இரண்டு மாத காலம் கொழும் பிலிருந்து தரை மார்க்கமாகப் பயணம் செய்து வந்திருப்பதால், பல வீரர்கள் உடல் நலம் குன்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாமா கச் சேர்த்து உன்னிடமிருந்து சிறிது பண உதவியை எதிர்பார்க்கி றார் அவர்...'' என்றார் டிமெல்லோ.

சங்கிலி மன்னருக்கு நன்றாகப் புரிந்து போயிற்று. போர்ச்சுகீ சியர்கள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள்; மிஞ்சினால் கெஞ்சுவார் கள் என்பது அவர் அறிந்ததுதான். கப்பம் கட்டு என்று மிரட்டிக் கலவரங்களைத் தூண்டி விட்டவர்கள் இன்று கப்பரை ஏந்தி, வயிற்றுத் தீனிக்கும் வழிச் செலவுக்கும் ஏதாவது கொடு என்று கெஞ்சுகிறார்கள். ஒரு கூட்டம் பட்டினி கிடக்கிறது என்று கூறி, யாசிக்கும் போது மறுப்பது மனிதத்தனமல்ல... என்றெல்லாம் எண்ணிய அவர், அவர்களுக்குச் சிறிது உணவு தானிய மூட்டை களை அனுப்பி வைக்கச் சம்மதித்தார். அத்துடன் ஐயாயிரம் பகோடாஸ் பணமும் கொடுத்தார். ஆனால், உடனடியாக போர்ச்சு கீசியப் படைகள் குடாக் கடலைக் கடந்து, பூநகரிப் பக்கம் சென்று விட வேண்டும் என்பது உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண் டிய ஒப்பந்தம் என்று சங்கிலி மன்னர் வலியுறுத்தினார்.

டிமெல்லோ பாதிரி அனைத்திற்கும் சம்மதம் தெரிவித்து, சங்கிலி மன்னர்அளித்த உதவிப் பொருட்களையும், பணத்தையும் பெற்றுச்சென்றார். எனினும் அந்த ஒப்பந்தம் மீறப்பட்டது. பத்து நாட்களுக்கு மேலாகியும் போர்ச்சுகீசியப் படை பின்வாங்க முய லவே இல்லை. போர்ப் பாசறைகளை அமைத்துக் கொண்டு நிரந்தரமாகவே தங்கிவிட்டனர். புதிய புதிய யுத்த தளவாடங்கள்

வந்து குவிந்து கொண்டிருந்தன. நிறைய பீரங்கி வண்டிகள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டன. அத்துடன் நாகைப்பட்டினத்தி லிருந்த போர்ச்சுகீசிய படைத்தளத்திலிருந்து சில யுத்த மரக்கலங் களை அனுப்பி வைக்குமாறு வேறு பிலிப்-டி-ஒலிவேரா தகவல னுப்பியிருந்தான்.

போர்ச்சுகீசியர்களின் நரித்தனத்தை, நயவஞ்சகத்தை, நம்பிக் கைத் துரோகத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டார் சங்கிலி மன்னர். அவர்கள் பெரும் யுத்தத்துக்கு ஆயத்தமாவதை அறிந்த பின்பும் வாளாவிருப்பதில் அர்த்தமில்லை என்றெண்ணினார் அவர். அடுத்த கணம் போர்முரசு கொட்டப்பட்டது. சீறியெழுந்த சின வேங்கையென பாய்ந்து புறப்பட்டான் வருணகுலத்தான். தஞ்சைப் படையினர் ஐயாயிரம் பேரும் ஊழிக்காற்றின் சீற்றத் தோடு வாளைச் சுழற்றியபடி அணி அணியாகத் திரண்டெழுந்து, தினவெடுத்த தோள்களுடன் தீர நடை போட்டனர். தஞ்சைப் படையினரிடம் அவ்வளவு ஆயுதங்கள் எங்கிருந்துதான் கிடைத்த னவோ தெரியவில்லை... கல்லெறி கவண்கள், எந்திர விற்பொறி கள், எரியீட்டிகள், சுருள் கத்திகள் போன்றவற்றோடு போர்ச்சுகீசி யர்களிடம் உள்ளது போன்ற அதிநவீன பீரங்கிகளும் கூட அவர்க ளிடம் இருந்தன. மறைத்து வைத்திருந்த அந்த பீரங்கிக் குழாய் களை எடுத்து, தனித்தனியே கிடந்த சக்கரங்களைக் கொண்டு திடீரென்று தயாரிக்கப்பட்ட வண்டிகளில் பொருத்தி உருவாக்கப் பட்ட நிறைய பீரங்கி வண்டிகளுடன் தஞ்சைப் படை புறப்பட்ட தைக் கண்டு சங்கிலி மன்னர் பெரிதும் வியந்து போனார்.

முதல் அணியாகப் புறப்பட்ட அவர்களை மட்டும் களம் புக அனுப்பிவிட்டுத் தாம்மட்டும் யாழ்ப்பாண நல்லூர் அரண்ம னையில் பத்திரமாகத் தங்கியிருந்து விட எண்ணவில்லை. போர்த் திட்டம் வகுக்கும் போது, இது பற்றி மிகவும் வலியுறுத்திக் கூறியிருந்தான் வருணகுலத்தான்.

''போர்ச்சுகீசியர்களை யாழ்ப்பாண எல்லையிலிருந்து விரட் டியடிப்பது என் பொறுப்பு. தாங்கள் வேறு போர்க்களத்திற்குப் புறப்பட்டு விட வேண்டாம். தாங்கள் தலை நகரிலேயே இருப்பது தான் சிறப்பானது. அற்ப எதிரிகளை விரட்டியடிக்க அரசரே களம் புகுவது ஏற்புடைய ஒன்றல்ல. இந்த ஒரு மாபெரும் யுத்தமாகக் கருதவே என் மனம் இடம் தரவில்லை. விஷமிகளை — மக்கள் அமைதிக்கு இன்னல் விளைவிக்கும் கலவரக்காரர்களை ராஜசே வர்கள் சென்று தண்டிப்பதுதான் வழக்கம். தங்கள் சேவகனாக — தளபதியாக நான் செல்கிறேன். தஞ்சைப்படை மாபெரும்



வெற்றியுடன் திரும்பும்...'' என்று கூறிவிட்டுத்தான் தஞ்சைப் படைத்தலைவன் போருக்குப் புறப்பட்டான்.

ஆனால், அப்படிச் சும்மா இருந்துவிட சங்கிலி மன்னருக்கு மனம் இடம் தரவில்லை. யாழ்ப்பாண நிலைப் படை வீரர்களைத் திரட்டிக் கொண்டு அடுத்த அணியாக அவருமே புறப்பட்டுச் சென்றார். முன்னால் புறப்பட்டிருந்த தஞ்சைப் படையினர் போர்ச் சுகீசியர்களை ஓட ஓட விரட்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி தொடர்ச்சியாக அவர் செவிகளை எட்டிக் கொண்டே யிருந்தன. அந்த வெற்றிச் செய்தியால் அவர் முழுதும் மகிழ்ந்து விடாத வண்ணம் ஓர் அவலச் செய்தியும் வந்து அவர் செவிகளை நாராசமாய்த் தாக்கியது. வண்ணார் பண்ணை என்னுமிடத்தில் போர்க்களம் அமைந்திருந்தது. களத்தின் ஒரு முனையில் வருண குலத்தான் வீரப் போர் நிகழ்த்திக் கொண்டிருந்த அதே வேளை யில், திடீரென்று பின்புறமாக — மறுமுனையில், சிங்களக் கூலிப் படையினரும், வன்னியனின் திரண்ட சேனையும் தஞ்சை வீரர்க ளைச் சூழ்ந்து வளைத்துக் கொண்டு, அநீதமான முறையில் போரிடத் துவங்கி விட்டன என்ற செய்திதான் அது.

நல்ல வேளையாகப் பின்னாலேயே அவரும் படை திரட்டி வந்து கொண்டிருக்கும் செய்தி எதிரிகளை எட்டியிருக்கவில்லை. தவறான கணக்குடன் சண்டாளர்கள் அதர்ம யுத்தம் ஆரம்பித்த சில விநாடிப் போதுகளிலேயே சங்கிலி மன்னர் விரைந்து வந்து அந்த இடத்தை அடைந்து விட்டார். சங்கிலி மன்னரின் வருகை கண்டு எதிரிகள் கதிகலங்கிப் போயினர். அந்த ராஜசிங்கத்தின் வீரப் பாய்ச்சலின் முன் எதிர்த்து நிற்க முடியாமல் குழி முயல்கள் போல் சிதறி ஓடினர் எதிரிகள்.

சங்கிலி மன்னரின் தோள்வலிவும் — வாள் வலிவும் நூற்றுக் கணக்கான எதிரிகளை அவர் வெட்டிச் சாய்த்ததும் — ஓய்வோ, தயக்கமோ சிறிதுமின்றி அவர் அடிக்கடி போர் முறையை மாற்றி மாற்றி, சூறாவளியொன்று சுழன்று வருவது போன்று பகைவர் கூட்டத்திடையே பிரவேசித்ததையும், தோற்றோடி வந்த வீரர்கள் கூறக் கேட்ட வன்னியன் பிரமித்துப் போனான்.

சங்கிலி மன்னர் மட்டும் போர்க்களத்திற்கு வராதிருந்தால் அன்றைய போரில் எப்படியாவது தஞ்சைப் படைத்தலைவனை முறியடித்து, சிறைபிடித்துச் சென்று விடுவதென்று கங்கணம் கட்டியிருந்தான் வன்னியன். உதகம்பக உக்கிரசேனனைக் கொன்ற அவனைத் தன் கையாலேயே சித்திரவதை செய்து கொன்று பழிதீர்க்க வேண்டுமென்பது அவன் எண்ணமாயிருந்தது. அத

னால் தான் அவன் பின்னாலிருந்து தஞ்சைப் படைகளைச் சிதறச் செய்ய சிங்களக் கூலிப் படையினரை ஏவினான். ஆனால், அந்தத் திட்டத்தைத் தவிடு பொடியாக்கி விட்டார் சங்கிலி மன்னர்.

அன்றிரவு, போர்ப் பாசறையில் தங்கியிருந்த மன்னரைச் சந்திக்க ஓடோடி வந்தான் வருணகுலத்தான். நடந்ததனைத்தையும் கேள்விப்பட்டிருந்த அவன் நெஞ்சம் நன்றியால் கனத்துப் போயிருந்தது. சங்கிலி மன்னர் மட்டும் தக்க நேரத்தில் வராமல் போயிருந்தால், தஞ்சைப் படைகளுக்கு எவ்வளவு பெரிய ஆபத்து நேர்ந்திருக்கும் என்பதை அவனால் நன்றாகவே உணர முடிந்தது. அந்த இருமுனைத் தாக்குதலை — பின்னாலிருந்து தாக்கும் துரோகிகளின் சதித் திட்டத்தை அவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. துரோகிகளுக்குச் சரியான பாடம் புகட்டிவிட்டார் ஈழவேந்தர் என்று பூரித்துப் போனவனாக அவன் அந்த ராஜ மனைக்குள் பிரவேசித்தான்.

அங்கே—போரிட்ட களைப்பே சிறிதும் புலப்படாத நிலையில் கம்பீரமாக வாசல் முகப்பு வரை வந்து நின்றிருந்தார் சங்கிலி மன்னர். அவனை வரவேற்க அவரே அப்படி வந்து நின்ற பண்பு வருணகுலத்தானின் மனப் பரப்பை வருடியது.

நெஞ்சம் நெகிழ்ந்து நின்ற தஞ்சைப் படைத்தலைவனைத் தோள் தழுவி, மார்புற அணைத்து, கனிவு ததும்பக் கலகலவென நகைத்து, ''வா...'' என்று கூறி அழைத்துச் சென்று இருக்கையில் அமரச் செய்தார் மன்னர்.

''நான் வர வேண்டாமென்று கூறியும் கூட தாங்கள் வந்ததும் — அப்படித் தாங்கள் வராதிருந்தால் என்னவெல்லாம் நேர்ந்திருக்கும் என்பதையும் எண்ணிப் பார்த்தால் எனக்குப் பேச நா எழ மறுக்கிறது...'' என்றான் வருணகுலத்தான் தழுதழுத்த குரலில்.

''இல்லை வருணதேவா! நான் உன் வீரத்தையோ, தஞ்சைப் படையினரின் வீரத்தையோ சிறிதும் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. நான் வராதிருந்தாலும் கூட நீ பெரும் வெற்றி பெற்றிருப்பாய் என்பதில் சந்தேகமில்லை. நான் இந்தச் செருகளத்தில் நுழைந்தது முதல் எதிரிகளை விரட்ட எடுத்துக் கொண்ட நேரத்தை விட, உன் பேராற்றலை, வீரசாகசத்தைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருப்பதில்தான் அதிக நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். போர்ச்சுகீசியர்களின் பீரங்கிகளுக்கு எதிரே நீ துணிச்சலோடு சென்று, உன் விசித்திரமான நட்சத்திர ஆயுதங்கள் மூலம்



எதிரிகளைச் செயலிழந்து விழச் செய்து வீரப் போரிட்டது அற்புதத்திலும் அற்புதம் என்று அனைவரும் சொல்கிறார்கள்.

வெடி மருந்தும் குண்டுகளும் நிரப்பப்பட்ட பீரங்கிகளின் முனையில் நெருப்பு வைக்க ஆயத்தமான நிலையில் ஒரே சமயத்தில் எட்டுப் பேரை நீ மின்னல் வேகத்தில் தாக்கி வீழ்த்தியதையும், உடனே அந்தப் பீரங்கிகள் கைப்பற்றப்பட்டு, அவற்றைக் கொண்டு வந்த போர்ச்சுகீசியர்களின் மீதே மறுகணம் திருப்பப்பட்டு, சுட்டுத் தள்ளியதையும் வியந்து வியந்து புகழாதவர்களே இல்லை. இதுவரை எந்தப் போரிலும் இப்படியொரு வீர சாகசம் நிகழ்ந்ததாக நான் கேள்விப்பட்டதே இல்லை.

உன் போர் முறை அனைத்துமே புதியனவாகவும், மெய்சிலிர்க்கச் செய்வதாகவும் இருக்கின்றன. சின்னச்சின்ன இரும்பு நட்சத்திரங்களை எதிரிகளின் மார்பு, கழுத்து என்று குறி பார்த்து எறிவதும், இரு முனைகளிலும் இரும்புப் பந்துகள் கோக்கப்பட்ட முழுநீளச் சங்கிலிகளை வீசி, வில் வீரர்களை நிலைகுலையச் செய்யும் விதமும், அசாத்தியமான வீரசாகசம், இரட்டை வாட்களை ஏந்திச் சுழற்றியபடி, வாழைத் தோட்டத்தில் புகுந்த யானை போல் நீ எதிரிகளை வெட்டிச் சாய்த்தபடி முன்னேறி, அவர்களின் மார்பிலும், தோள்களிலும் ஏறி மிதித்து வீர நர்த்தனம் புரிந்தாய் என்றெல்லாம் கேள்விப்பட்டேன். போர்ச்சுகீசியர்களுக்கு உன்னைக் கண்டாலே குலை நடுங்குகிறது. இப்படிப்பட்ட ஒரு மாபெரும் வீரனை, கோழைகளும் துரோகிகளும் பின்னாலிருந்து தாக்கி நிலைகுலையச் செய்யும்படி விட்டுவிட்டு நான் மட்டும் சுகமாக யாழ்ப்பாண நல்லூர் அரண்மனையில் உட்கார்ந்திருந்தால் அதைவிட ஈனத்தனம் ஒன்று உண்டா என்ன? நாளைய சரித்திரம் என்னை 'துணை வந்த வீரனை துரோகிகளிடம் சிக்க வைத்துப் பலி கொடுத்தவன் எப்படி ஒரு உண்மையான தமிழ் மன்னனாக இருக்க முடியும்?' என்று இழித்தும் பழித்தும் பேசாதா...? அத்துடன் என் மகளுக்கு நான் என்ன பதில் சொல்வேன்...?'' என்றார் சங்கிலி மன்னர்.

''ஞானவல்லியை உங்கள் மகள் என்று இப்போது ஒப்புக் கொண்டு விட்டீர்கள் வேந்தே. 'அந்த உறவே இனி உயிரூட்டப்பட வேண்டாம்' என்பது போல் முன்பு பேசிய தாங்கள் இப்போது மனம் மாறியிருப்பது கண்டு நான் மகிழ்வடைகிறேன்...'' என்றான் வருணகுலத்தான்.

''தவறு இளைஞனே! நான் ஒரு போதும் அந்தப் பெண் என் மகளல்ல என்று உன்னிடம் கூறவில்லை. என் வாழ்வில் அது ஒரு சோக நாடகம். நான்தான் தந்தை என்பதை அந்தச் சிறு பெண் இதுவரை அறிந்ததில்லை. இப்போது அதை அவளுக்குச் சொல்லி, வீணாக அவள் மனத்திலே ஒரு பாச வேகத்தை உருவாக்க வேண்டாம் என்பதுதான் என் எண்ணமாயிருந்தது. அல்லது இத்தனை நாள் நான் அவளுக்குத் துரோகமிழைத்து விட்டதாகக் கூட அவள் எண்ணி என்மீது அசூயையும் வெறுப்பும் கொள்ளலாம். அவள் தாயும் இப்போது உயிருடன் இல்லை — உண்மைகளை விளக்க நானோ இப்போது வேறொரு பெண்ணுடன் வாழ்கிறேன். இதையெல்லாம் அந்தப் பெண்ணால் மிகச் சரியான கோணத்தில் புரிந்து கொள்ள இயலாமலும் போகலாம். ஒரு சின்னஞ்சிறு பெண்ணின் இதயத்திலே பெரும் உணர்ச்சிப் புயலை உருவாக்குவது நல்லதல்ல...'' என்றார் சங்கிலி மன்னர்.

''சரி நான் மட்டுமாவது நடந்த உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாமல்லவா... அந்தப் பெண் காத்தவராயரிடம் ஒப்படைக்கப்பட்ட சூழல் விதம் பற்றி தங்களிடமே நான் கேட்டறியலாம் என்று கூறினார் அவர் இறக்கும் தருணத்தில்...''

''காத்தவராயன் மிகச் சிறந்த மனிதன் வருணதேவா! நான் எதுவும் அவனிடம் ஒப்படைக்கவில்லை. அவன்தான் ஞானவல்லியைப் பிறந்த உடனேயே சாகாமல் காப்பாற்றினான். தாயை இழந்த அந்தப் பெண்ணை எப்படி வளர்ப்பதென்று புரியாமல் நான் தவித்தபோது தானே வளர்ப்பதென்று தூக்கிச் சென்றான். அரண்மனைச் சதிகாரர்களால் என் குடும்பமே சின்னாபின்னமான அந்தச் சோக சரித்திரத்தை உனக்குச் சுருக்கமாகச் சொல்கிறேன்...'' என்ற சங்கிலி மன்னர், தன் விழிகளில் பளபளத்து அரும்பிய நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டார்.

தலை மீது மலையே தகர்ந்து சரிந்தாலும் நிலை குலையாத மன உரம் கொண்ட அந்த இரும்பு மனிதனின் இதயம் நெகிழ்ந்து ஈரம் கசிவதை அவன் வேதனை உணர்வு மேலிட நோக்கினான்.

சங்கிலி மன்னர் அந்த வருத்தம் மறைக்க வறண்ட நகை பூத்துத் தொடர்ந்தார்...

''வருணதேவா! என்னை ஒரு கொலைகாரன், பதவி வெறி பிடித்தவன், ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற அரச குடும்பத்தை



வெட்டிச் சாய்த்தவன் என்றெல்லாம் போர்ச்சுகீசியர்கள் கூறுகிறார்களே என்று நீ அன்று வருத்தமுடன் கேட்டாயல்லவா? அந்தக் குற்றச் சாட்டுகளின் மறுபுறத்தை இப்போது நான் உனக்குச் சொல்கிறேன். ஒரு புறம் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை மிகக் கடுமையாக ஆட்சேபிக்கும் வலிமை வாய்ந்த இளைஞனாக அப்போது நான் இருந்ததாலும், இன்னொரு வகையில் அரச குடும்பத்தில் சில ஈனமதி படைத்த அற்பர்களுக்கு நான் சிம்ம சொப்பனமாக இருந்ததாலும் மறைமுகச் சதிகள் எனக்கு எதிராக நடந்தன.

என் மனைவியைப் பிரசவ அறையிலேயே கொன்று விட்டு, குளிர் காய்ச்சல் வந்து இறந்து போனதாகச் சொன்னார்கள். மறுநாள் குழந்தையைக் கொல்வதாகவும் — தாய்ப்பால் இல்லாமல் கத்திக்கத்தியே செத்ததாகவும் சொல்லி விடலாம் என்பது திட்டம். நல்ல வேளையாக ஒரு தாதிப் பெண் மூலம் சேதியறிந்து, என் மகளைக் காத்தவன் அந்தக் காத்தவராயன். அப்போது நான் யாழ்ப்பாணத்தில் இல்லை. திரிகோணமலையிலிருந்து திரும்பிய போது இந்த அதிர்ச்சிச் செய்திகள்தான் எனக்காகக் காத்திருந்தன.

காத்தவராயன் தனியானதோர் இடத்துக்கு என்னை அழைத்துச் சென்று, ரோஜா புஷ்பத்துக்கு கையும் காலும் வைத்தது போன்றிருந்த என் மகளை என்னிடம் காண்பித்தான். அன்று பார்த்து மகிழ்ந்ததுதான் அவளை. எங்கே நான் இசகுபிசகாக அந்தக் குழந்தையைத் தூக்கி விடுவேனோ என்றெண்ணி, காத்தவராயனின் மனைவி குழந்தையைத் தொடக் கூட எனக்கு அனுமதி தரவில்லை. அவர்களே தூக்கிச் சென்று வளர்த்தார்கள் என் மகளை.

பிறகு நான் வேறொரு பெண்ணை மணந்து கொண்ட போதும்கூட, என் மகளை நான் காத்தவராயனிடமிருந்து பிரித்து அரண்மனைக்கு அழைத்துவர விரும்பவில்லை. காரணம், என் வாழ்வே ஒரு போராட்டமாகி விட்டதுதான். அரண்மனைச் சதிகளை எதிர்த்து சிலகாலம் போராட்டம்; பிறகு போர்ச்சுகீசியர்களை எதிர்த்து நடக்கும் அரசியல் போராட்டம் என்று என் கவனமெல்லாம் நாட்டு நலன் பற்றியதாகவே ஆகிவிட்டது. இதில் ஒரு மகளை வளர்த்து, பாசம் பொழியவெல்லாம் எனக்கு நேரமே இல்லை. தவிர, காத்தவராயன் ஞானவல்லியைத் தன்

சொந்த மகளாகவே கருதி அன்புடன் வளர்த்தான். எங்கிருந்தாலும் என் மகள் பாசத்தோடும் அன்போடும் வளர்க்கப்பட வேண்டும் என்பதே என் ஆசையாக இருந்தது. அவள் இப்போது வளர்ப்புத் தந்தையையும் வளர்ப்புத் தாயையும் இழந்து, உண்மையான பெற்றோரை இழந்த சோகத்திலிருக்கிறாள். நீங்கள்தான் இப்போது அவளுக்குப் பெரும் ஆறுதல். உங்கள் பொறுப்பில் அவளை ஒப்படைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒருவேளை, இந்த அரசியல் போரில் போர்ச்சுகீசியர்களால் என் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் என் மறைவுக்குப் பிறகு நீங்களே அவளிடம் உண்மையை எடுத்துரைத்து, 'சங்கிலி மன்னரின் மகள்தான் நீ', என்று கூறுங்கள். ஒரு மன்னன் மகளாக அரச குடும்பத்தில் பிறந்தோம் என்ற ஒரேயொரு மகிழ்வாவது அவள் மனத்தில் பதியட்டும்.''

இப்படி அவர் கூறிய போது வருணகுலத்தான் உள்ளம் துடித்துப் போனான். 'எவ்வளவு மகத்தான ஒரு மனிதரை தியாக சீலரை ஈழத் திருநாடு மன்னராகப் பெற்றிருக்கிறது' என்பதை எண்ணும் போதே அவனுக்கு சிலிர்ப்பேற்பட்டது. ஆனால், சங்கிலி மன்னர் அங்கே வந்திருப்பது எவ்வளவு பெரிய ஆபத்தை உருவாக்கப் போகிறது என்பதை அவன் அப்போது சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை. விபத்துக்களும் விபரீதங்களும் சொல்லிக் கொண்டா வருகின்றன...?

R

## 20. காலத்தின் கரங்களில்...

அன்றிரவு பாசறைத் துகின் மனையில் சங்கிலி மன்னரோடு நெடு நேரம் உரையாடிக் கொண்டிருந்த தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான், தனது மறுநாள் போர்த் திட்டம் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தான். போர்ச்சுகீசியர்களைப் பூநகரிப் பக்கம் விரட்டுவதோடு மட்டுமில்லாமல், அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தின் பக்கமே தலை வைத்தும் படுக்காத அளவுக்குச் சரியான பாடம் புகட்டப் போவதாகவும், கடற்பறவை மூலம் தான் அனுப்பிய செய்தி கிடைத்து, டொம்பீதுறு ரொட்றிகஸ் தனது யுத்த மரக்கலங்களுடன் குடாக் கடல் அருகே வந்து நிற்பதால், போர்ச்சுகீசியர்களின் யுத்த மரக்கலம் எதுவுமே அந்தக் கடற் பிரதேசத்தில் உதவிக்கு வர இயலாது என்றும், அதனால் பூநகரியின் மீதும் தான் படையெடுத்துச் செல்லவிருப்பதாகவும் விவரம் கூறினான்.

பொழுது புலர்வதற்கு முன்பே அவன் எழுந்து களம் நோக்கிச் சென்றும் ஆயிற்று. அவனுடைய திட்டங்கள் தீர்க்கமாக இருந்ததால் அவற்றை முழு மனத்துடன் அங்கீகரித்திருந்தார் சங்கிலி மன்னர். அத்துடன், தஞ்சைப் படைகளை துரோகிகள் பின்னாலிருந்து வியூகம் அமைத்துத் தாக்காதிருக்கவும், உதவி தேவைப்பட்டால் பின் தொடர்ந்து சென்றுபோரிடவும், பூநகரியைத் தகர்க்கும் வீரப் போரில் பங்கேற்கவும் போர்ப் பாசறையிலேயே தங்கியிருந்தார். டொம்பீதுறு ரொட்றிகஸ் வந்து விட்டான் என்ற செய்தி அவருக்கு மிகுந்த மகிழ்வையும், மாபெரும் கடற்படையொன்றே தனக்குக் கிடைத்து விட்டது போன்ற மன வலிவையும் உண்டாக்கியிருந்தது.

அந்த மகிழ்வை மேலும் அதிகரிக்கச் செய்ய உறுதி செய்வது போல், டொம்பீதுறு ரொட்றிகஸ் அனுப்பிய ஏராள பரிசுப்

பொருட்களுடன் சிறப்புப் பிரதிநிதி ஒருவன் அதிகாலையில் சங்கிலி மன்னரைச் சந்திக்க வந்து சேர்ந்தான். டொம்பீதுறுவின் அளவற்ற அன்பை எண்ணிப் பெரிதும் மகிழ்ந்து போனவராய் அந்தச் சிறப்புப் பிரதிநிதியுடன் அவர் உரையாடிக் கொண்டிருக்கும் வேளையில் பாதிரி டிமெல்லோ வேறு வந்து நின்றார். போர்ப் பாசறையாயினும் வாசல் வரை வந்து நின்றவரை அழைத்து உபசரிக்காமலும், விசாரிக்காமலும் எப்படித் திருப்பியனுப்புவது என்றெண்ணிய மன்னர், அந்தப் போர்ச்சுகீசியப் பாதிரியை உள்ளே அழைத்து வரப் பணித்தார்.

டிமெல்லோ நேரடியாக விஷயத்துக்கு வந்தார். ''மன்னா! தவறு நடந்து விட்டது. இந்தப் போருக்குக் காரணமே ஒரு தப்பிதமான புரிந்துணர்வுதான். அதை நான் இங்கே பிரஸ்தாபிக்கலாமல்லவா...?'' என்று வினவினார் அவர்.

''தாராளமாகப் பிரஸ்தாபியுங்கள் பாதிரியாரே. என்ன தப்பிதமான புரிந்துணர்வு? யார் அப்படித் தப்பிதமாகப் புரிந்து கொண்டது...?'' என்றார் சங்கிலி மன்னர்.

''இரு தரப்பிலும் இந்தத் தப்பிதம் நிகழ்ந்திருக்கலாம் மன்னா. முதலாவதாக, நாகைத் துறைமுகத்திலிருந்து யுத்தக் கப்பல்கள் வருவதாக உனக்குக் கிடைத்த தகவல் தவறு. கொழும்புக்கும், நாகைக்கும் மரக்கல உதவி கேட்டுச் செய்தி அனுப்பியது நிஜம். ஆனால் அது யுத்த மரக்கலம் கேட்டல்ல. இங்குள்ள போர்ச்சுகீசியப் படை வீரர்கள் தரை மார்க்கமாகக் கொழும்புக்குத் திரும்ப மறுத்து விட்டனர். புத்தளம், சிலாபம், முள்ளிக்குளம் வழியாக அவர்கள் சமீபத்தில்தான் இங்கு நடந்து வந்திருந்தனர். உன்னோடு செய்து கொண்ட ஒப்பந்தப்படி அவர்களை உடனே திருப்பியனுப்ப எண்ணிய பிலிப்-டி-ஒலிவேரா கடல் மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்தார். அதற்காகத்தான் படை வீரர்களையும், பீரங்கிகளையும் ஏற்றிச் செல்ல சில மரக்கலங்களை அனுப்புமாறு அவர் தகவல் அனுப்பினார். இப்போது கொழும்பிலிருந்து தலைமைத் தளபதி கொன்ஸ்டாண்டின் டிசா அப்படி இரண்டு மரக்கலங்களை அனுப்பியுள்ளார். ஆனால், அவற்றை வழிமறிப்பது போல் டொம்பீதுறுவின் மரக்கலங்கள் நிற்கின்றன. டொம்பீதுறு ரொட்ரிகஸின் வருகைதான் போர்ச்சுகீசியர்களைச் சினமடையச் செய்து விட்டது.



''சரியோ தவறோ போர் மூண்டு விட்டது. இதை இப்போது நிறுத்துவதும், தொடர்ந்து நடத்துவதும் உன் கையில்தான் இருக்கின்றன. மற்றொரு தகவலும் உனக்கு எட்டியிருக்கும் என்றெண்ணுகிறேன். தமிழகத்திலுள்ள பழவேற்காட்டிலிருக்கும் டச்சுக் கடற்படைத் தளபதி போர்ச்சுகீசியர்களுக்கு எதிராகவும், உனக்கு ஆதரவாகவும் இந்தப் போரில் பங்கு கொள்ள விரும்பி, தரங்கம் பாடி அருகேயிருந்து சில டச்சு மரக்கலங்களை அனுப்பியிருக்கிறான். இதையெல்லாம் நீ அனுமதித்து ஏற்றால், பெரும் போர் நிகழக் கூடும். சிறிய மனக் கசப்பைப் பெரிதுபடுத்தி மிகப் பெரிய போரை நடத்துவது உன் உத்தேசமாக இருக்காது என்பதாலேயே நான் இங்கே வந்தேன். டொம்பீதுறுவின் மரக்கலங்களை யாழ்குடாக் கடலினின்று சற்று விலகி நிறுத்தச் சொல். கொழும்பு மரக்கலத்திலேறி போர்ச்சுகீசியப் படைகள் திரும்பிச் சென்றுவிடும். நல்ல மனம் படைத்த நீ மிகச்சிறந்த விவேகத்துடன் இப்போது நடந்து கொள்வாய் என்பது என் நம்பிக்கை...'' என்றார் டிமெல்லோ.

அந்தப் பாதிரியின் புகழ்த் துதியில் மயங்கவில்லை யென்றாலும், மெய்யாகவே நல்லிதயம் பெற்ற மனிதன் என்பதால் சங்கிலி மன்னர் அவசியமில்லாத ஒரு போரை நிகழ்த்துவானேன் என்றெண்ணினார். போர் ஒன்றும் அவர் இலட்சியமல்ல. யாழ்ப்பாணத் தமிழ் மக்களையும், தஞ்சைத் தரணியிலிருந்து உதவிக்கு வந்துள்ள தமிழ் வீரர்களையும் வீணாகப் பலி கொடுக்க ஒரு போதும் அவருக்குச் சம்மதமில்லை.

உழக்குக்குள் கிழக்கு மேற்கு பார்க்கிற நிலையிலிருக்கிறது தமிழ்த் தேசம். இதற்குள்ளேயே சுத்த தமிழன் நீயா, நானா என்று வன்னியன் போன்றவர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள். இந்த நிலையில் போர்ச்சுகீசியப் பேய்களின் வருகை போதாதென்று டச்சு வேதாளங்களையும் மண்ணுக்குள் அனுமதிப்பது மாபெரும் முட்டாள்தனம் என்றெண்ணினார் சங்கிலி மன்னர். உதவிக்கு என்ற பெயரில் இன்னொரு மிலேச்சனை உள்ளே புக அனுமதித்தால் என்னென்ன பின் விளைவுகள் நிகழும் என்பதை ஊகிக்க முடியாதவரல்லவே அவர்... எனவே, எதிரிக்கு எதிரியை நண்பனாகப் பாவிக்கும் அரசியல் தந்திரம் ஒன்று மட்டுமே போதும்; நிஜ நட்பு வேண்டாம் என்று கருதிய அவர் போர்ச்சுகீசியர்கள் இங்கிருந்து அகன்று சென்று விட்டால், அதைச் சொல்லியே

'இப்போது உங்கள் வருகையும், உதவியும் தேவையில்லை. தேவைப்படும் போது அழைக்கிறேன்' என்று கூறி டச்சுக்காரர்களையும் திருப்பியனுப்பி விடலாம் என்றெண்ணினார்.

உடனே டொம்பீதுறுவின் சிறப்புப் பிரதிநிதியைப் பார்த்து, ''நீ இங்கு வந்ததும், இந்த வேளையில் இங்கு இருந்ததும் மிகவும் நல்லதாய்ப் போயிற்று. டொம்பீதுறுவிடம் போய் நான் சொன்னதாகச் சொல் — அவனுடைய மரக்கலங்கள் யாழ்குடாக்கடல் பகுதியினின்று உடனே விலகட்டும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு தொலைவு தள்ளிப் போய் விட வேண்டும். அவசியமேற்பட்டால் அவன் உதவி கேட்டு நான் மறு தகவல் அனுப்புகிறேன். அப்போது வந்தால் போதுமென்று சொல். போர்ச்சுகீசிய மரக்கலங்கள் இங்கே வருவதை அவன் எக்காரணம் கொண்டும் தடுக்கக்கூடாதென்றும் கூறு...' என்று வாய்மொழிக் கட்டளை பிறப்பித்து அவனை அனுப்பி வைத்தார்.

டிமெல்லோ பாதிரியும் சங்கிலி மன்னரின் விசால மனத்தைப் பாராட்டி விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

**ம**தியத்துக்குப் பின் திடீரென்று வன்னியத்தேவன், சங்கிலி மன்னரைப் பார்க்க வேண்டுமென்று வந்து நின்றான். அவன் பின்னால் ஏழெட்டுப் பேர் பெரிய பெரிய தாலங்களை ஏந்தியபடி நின்றிருந்தனர். வாயிற் காவலர்கள் வன்னியனை உள்ளேவிட மறுத்து விட்டனர். அவன் உரத்த குரலில் தர்க்கம் செய்து கொண்டிருப்பது துகின் மனையினுள் நன்றாகவே கேட்டது. உடனே சங்கிலி மன்னர் வன்னியனை உள்ளே அழைத்துவரப் பணித்தார்.

வாயிற் காவலர்களில் ஒருவன் வன்னியனை மட்டும் உள்ளே அழைத்துச் சென்றான்.

''மன்னர் மன்னா! ஈழத் தமிழர்களின் இதய வேந்தே! இன மானம் காக்கும் தனிப் பெரும் தலைவா! என்னை மன்னிக்க வேண்டும். நான் இங்கே எதிரியாக வரவில்லை... தங்கள் அடிமையாக வந்திருக்கிறேன். என்னை நம்புங்கள்...'' என்று ஏராளமாகப் புகழ்த் துதி பாடி, நெடுஞ்சாண்கிடையாக சங்கிலி மன்னரின் பாதங்களில் விழுந்து வணங்கினான் வன்னியன்.

சங்கிலி மன்னருக்கு ஒரு கணம் தயக்கமும் குழப்பமும் தோன்றினாலும் உடனே அவர் வாய் திறந்து,



''எழுந்திரு வன்னியத்தேவா! நான் உன்னை எப்போதுமே என் எதிரியாக எண்ணியதில்லை. நமக்குள் பகை ஏற்பட அடிப்படைக் காரணம் என்று எதுவுமே இல்லை. ஆனாலும் உன் திடீர் மனமாற்றத்துக்குக் காரணம் ஏதாவது இருக்க வேண்டும். அதை நான் அறிந்து கொள்ளலாமல்லவா...?'' என்று வினவியபடியே அவன் தோள்களைப் பற்றித் தூக்கினார்.

எழுந்து நின்ற வன்னியன் மிகவும் அடக்க ஒடுக்கமாக, மரியாதை காட்டும் பாவனையில் சற்றே குனிந்து நின்று, ''வேந்தே! நான் இதுநாள் வரை புத்தி கெட்டுப் போய் மிலேச்ச எதிரிகளுடன் அணி சேர்ந்து நின்றிருந்து விட்டேன். என்னால் தங்களுக்கு ஏற்பட்ட இன்னல் அனைத்திற்கும் இப்போது மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். காத்தவராயன்தான் என் மனக் கண்களைத் திறந்தான். அவன் என்னிடம் வாதிட்ட போது அறிவு மயக்கம் தெளியாத நிலையில் அவனைக் குத்திச் சாய்த்து விட்டேன். ஆனால், அவனுடைய வாதத் திறன்மிக்க வார்த்தைகள் என் செவிகளை விட்டு அகலவே இல்லை.

இதயத்தைச் சம்மட்டியால் பிளப்பது போல் சதா சர்வ காலமும் ரீங்கரித்த அவனது நல்லுரைகளைப் பற்றி நான் பின்னர் சிந்திக்கலானேன். தமிழர்கள் பிளவுற்று நிற்பதால்தான் அந்நிய ஆதிக்கம் இங்கே தலை கொழுத்து ஆடுகிறது. முற்றாக நான் போர்ச்சுகீசியர்களை இப்போது வெறுக்கிறேன். தமிழின் பேரால், தமிழ் இனத்தின் பேரால் இனி நாம் ஒன்றிணைந்து நின்று போர்ச்சுகீசியர்களை இம்மண்ணிலிருந்தே விரட்டியடிக்கலாம். என்னையும், என் நட்பையும் ஏற்றருளுங்கள் மன்னா...!'' என்று கூறினான்.

இதுநாள் வரை போர்ச்சுகீசியர்களின் பொல்லா நட்பை விழுந்து விழுந்து நேசித்தவனுக்கு இப்போது மட்டும் திடீரென்று அந்த நட்பு கசந்து போனது ஏனென்று புரியவில்லை சங்கிலி மன்னருக்கு. வன்னியன் கூறும் காரணங்களும் போதுமானதாக இல்லை. திடீரென்று தமிழ் மொழியின் பாலும், தமிழ் இனத்தின் பாலும் அவனுக்கு என்ன காதல் என்பதும் கேள்விக்குறியாகவே இருந்தது. ஒரு வேளை, வருணகுலத்தான் வெற்றி வாகை சூடுவதும், போர்ச்சுகீசியர்கள் தோற்றோடுவதும் வன்னியனுக்கு அதிர்ச்சி தந்திருக்கலாம். தென் கடலில் டொம்பீதுறு ரொட்றிக

ஸின் வருகையும், டச்சுக்காரர்கள் வரவிருப்பதும் அவனுக்கு பெரும் கிலியை ஏற்படுத்தியிருக்கலாம். காற்றடிக்கிற பக்கம் பாயை விரித்தால்தான் வாழ்க்கை மரக்கலத்தில் சுகப் பயணம் மேற்கொள்ள இயலும் என்று அவன் எண்ணியிருக்கலாம்.

காரணம் எதுவாயினும் களத்திலே நிராயுதபாணியாக வந்து நின்று, நான் உன் எதிரியில்லை; இந்தக் கணமே நண்பனாகி விட்டேன் என்று கூறி நிற்பவனை எப்படி உதாசீனப்படுத்துவது என்றெல்லாம் எண்ணிய சங்கிலி மன்னர்,

''வன்னியத்தேவா! நீ உண்மையாக மனம் மாறியிருந்தால், அதைவிட மகிழ்ச்சி தரும் சேதி வேறொன்றில்லை எனக்கு. வருணகுலத்தான் இந்த நேரத்தில் இங்கில்லாது போனானே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. ஒரு காத தூரத்தில் அவன் போர்ச்சுகீசியர்களோடு கடுமையாகப் போரிட்டுக் கொண்டிருக்கிறான். போர்ச்சுகீசியர்களோ 'நாங்கள் போரிடவே விரும்பவில்லை. ஓடிப் போக எங்களுக்குக் கடல் வழியில் தடை அகற்றுங்கள்' என்று தூதனுப்புகிறார்கள். அவர்களுக்குப் பெரும் பக்க பலமாக நின்றிருந்த நீயோ மனம் மாறி என்னருகே வந்து விட்டாய். இதைவிட விந்தையும், வியப்பும், மகிழ்வும் வேறென்ன இருக்க முடியும்? நான் உன் நட்பை ஏற்கிறேன்...'' என்றார்.

''வேந்தே! என் நட்பை ஏற்றதற்கு மகிழ்ச்சி. என் அன்புக் காணிக்கையாகச் சிறிது பொன்னும், மணியும் கொண்டு வந்திருக்கிறேன். அவற்றை உள்ளே கொண்டு வந்து தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்க அனுமதி வேண்டும். வன்னியச் சிற்றரசனாகிய நான் தங்களைப் பேரரசராக ஒப்புக் கொண்டதற்கு அடையாளமான கப்பமாக அவற்றை ஏற்றருள வேண்டும்'' என்று மிகவும் பணிவுடன் வேண்டினான் வன்னியன்.

முதலில் அதையெல்லாம் மறுத்தாலும் வன்னியன் மிகுந்த பணிவோடு திரும்பத் திரும்ப மன்றாடவே, ''சரி, அவற்றை... உள்ளே கொண்டு வரச் சொல்'' என்றார் சங்கிலி மன்னர். வாயிற் காவலனிடம் அனுமதிக்கும்படி கட்டளையிட்டார்.

அடுத்த கணம், ஏழெட்டு பேர் பெரிய பெரிய தாலங்களைச் சுமந்து வந்தனர். அனைத்தும் பட்டுத் துணி போர்த்தப்பட்டிருந்தன. வன்னியனே ஒவ்வொன்றாக விலக்கிக் காண்பித்தான்.



முத்தும், பவழமும், இலங்கையின் புகழ் பெற்ற ரத்னபுரி மணிகளும், பொற்காசுகளும் குவிந்திருந்தன அந்தத் தாலங்களில். அவன் இரண்டொரு தாலங்களைப் போர்த்தியிருந்த பட்டுத் துணிகளை விலக்கிக் காண்பித்ததுமே, 'போதும்' என்று சைகை காட்டிய மன்னர், ''அவற்றை கீழே வைக்கச் சொல்...'' என்றார்.

''இல்லை வேந்தே. இவற்றை அப்படியே கனகாபிஷேகம் செய்வது போன்று தங்கள் பாதங்களில் கொட்டிக் குவிக்க வேண்டும் என்பது என் விருப்பம். அத்துடன் இதோ இந்தப் பொற்பதக்கச் சங்கிலியைத் தங்கள் கழுத்தில் என் கரங்களாலேயே அணிவிக்க வேண்டும்...'' என்றவாறே, வன்னியன் ஒரு சங்கிலியைக் கரங்களில் ஏந்தி வந்தான்.

பெரியதாகவும், அழகிய வேலைப்பாடு மிக்க ரத்னங்கள் பதிக்கப்பட்ட பதக்கத்துடனும் காட்சியளித்த அந்தச் சங்கிலியை அவனே சங்கிலி மன்னரின் கழுத்தில் அணிவித்து, பதக்கத்தை மார்புக்கு நேரே சரிசெய்தவாறு நின்ற அவன், திடீரென்று சங்கிலி மன்னரை மார்புறத் தழுவி அணைத்தான்.

அந்த அணைப்பு மல்யுத்த வலிமையுடன் இறுக இறுகத்தான் சங்கிலி மன்னரின் மனத்தில் சந்தேகம் எழலாயிற்று. ''போதும் விடு...'' என்ற அவரது குரல் கேட்டு இடி இடியென நகைத்தான் வன்னியன். அதே கணத்தில், தாலம் ஏந்தி நின்ற ஒவ்வொருவனும் அந்தத் தாலத்தின் அடியில் மறைத்துப் பிடித்திருந்த வாட்களை உருவினர்.

சதியும், வஞ்சகமும் அங்கு வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டு விட்டதை உணர்ந்த சங்கிலி மன்னர் நெஞ்சம் பதைத்தார். அப்போது அவருடைய வீரவாள் கையிலிருக்கவில்லை. துகின் மனையின் மையத்திலிருந்தது. துவஜத்தில் தொங்க விடப்பட்டிருந்தது அந்த வாள். அது மட்டும் இப்போது அவர் கரத்தில் இருந்திருக்குமேயானால் நூற்றுவர் சூழ்ந்தாலும் நிகழ்வதே வேறாக இருந்திருக்கும். இப்படியொரு விபரீதம் நிகழும் என்பதைத்தான் அன்றே நல்லூர் அன்னை வீரமாகாளி சூசகமாக உணர்த்தினாள் போலும்; நிராயுதபாணியாக நட்பு பேச வந்து நிற்கிறானே வன்னியன் என்பதால்தான் அவர் அந்த வாளை முன்னமே எடுத்து இடையில் அணிந்து கொள்ளாதிருந்தார். 'தொழுத கையுள்ளும் பகை இருக்கும்' என்ற வள்ளுவன் வாக்கை

நிரூபிப்பதே போல் வன்னியன் வணங்கி வந்து, வஞ்ச நெஞ்சை வெளிப்படுத்தி விட்டான். இப்போது என்ன செய்வது... என்று பலவாறாக யோசித்த சங்கிலி மன்னர், உடும்புப் பிடியாகத் தன் விலாவை இறுக்கித் தழுவிக் கிடந்த வன்னியனை நொடியில் உதறியெறிந்து வாளை எடுக்க முயன்றார். முடியவில்லை.

''ஓரடி அசைந்தாலும் நீர் பிணமாகச் சரிவது திண்ணம் சங்கிலி மன்னா. உமது வீரர்கள் கூட எவரும் இப்போது உமக்கு உதவ முடியாது. இங்கு சிறு சலசலப்பு எழுந்தாலும், எதிரே உள்ள புளியந்தோப்பில் ஆயத்த நிலையில் நிறுத்தப்பட்டிருக்கும் இரு பது பீரங்கிகள் உமது வீரர்களின் கூடாரங்கள் மீது குண்டு மழை பொழியும். அமைதியாக எங்களுடன் வந்து, வாசலில் நிறுத்தப் பட்டிருக்கும் கூண்டு வண்டியில் ஏறுவதுதான் இப்போது நீர் காட்டும் புத்திசாலித்தனமாக இருக்க முடியும். விசாரணைக்குத் தான் உம்மைப் போர்ச்சுகீசியர்களிடம் அழைத்துச் செல்கிறேன். மற்ற விஷயங்களை நீர் அங்கே பேசிக் கொள்ளலாம்'' என்று எச்சரித்தான் வன்னியன்.

ஓர் எதிர்பாராத சூழலில் திடீர்த் தாக்குதலை உருவாக்கி, பீரங்கிக் குண்டுகளுக்கு நூற்றுக் கணக்கான வீரர்களைப் பலி கொடுக்க விரும்பாத சங்கிலி மன்னர், போர்ச்சுகீசியர்களின் விசாரணைக்குத் தம்மை உட்படுத்திக் கொள்ள முடிவெடுத்தவ ராய், துரோகி வன்னியனை அமைதியாகப் பின் தொடர்ந்தார்.

ஆனால், சங்கிலி மன்னர்தான் விசாரணைக்குப் பின் திரும் பவே இல்லை. விசாரணைக்கு என்றதெல்லாம் வெறும் பேச்சு. 'அடிமை சாசனத்தை ஒப்புக் கொள்கிறாயா இல்லையா' என்ற ஒரே கேள்வியைத்தான் திரும்பத் திரும்பக் கேட்டனர் போர்ச்சுகீசி யர். உயிருள்ளவரை அதை ஒப்புக் கொள்ள இயலாது என்று கூறிவிட்டார் சங்கிலி மன்னர். தீர்ப்பை முன்னதாக எழுதி வைத் துக் கொண்டு கண் துடைப்பு விசாரணை நிகழ்த்துவதில்தான் மிலேச்ச வெள்ளைப் பெருச்சாளிகள் அதிசமர்த்தர்களாயிற்றே!

பதினைந்து நாள் கடற் பயணத்திற்குப் பின் பாரதத்தின் மேற்குக் கடற்கரையை ஒட்டியுள்ள தீவான கோவாவைச் சென்ற டைந்த' சங்கிலி மன்னருக்குத் தூக்கு மரம்தான் காத்திருந்தது.

சங்கிலி மன்னர் துரோகி வன்னியனிடம் சிறைப்பட்ட அன்று கூட வருணகுலத்தான் ஒரு காத தொலைவில் நடந்த போரில்



மாபெரும் வெற்றி பெற்றான். போர்ச்சுகீசியர்கள் சிதறி ஓடினர். ஆயினும் நடந்த உண்மை அந்த மாவீரனுக்குத் தாமதமாகவே தெரிந்தது. உடனே அவன் டொம்பீதுறுவுக்குத் தகவலனுப்பி வரவழைத்தான். சங்கிலி மன்னரை விசாரணைக்காகக் கொழும் புக்குத்தான் கொண்டு சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்ததால், அவர்கள் மாமன்னனைச் சிறை மீட்க மகத்தான முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால் தவறான தகவல்களை வஞ்சகர்கள் பரப்பியதே தஞ்சைப் படைத்தலைவனையும், கடல் ராட்சசனான டொம்பீதுறுவையும் ஏமாற்றத்தானே!

டொம்பீதுறு ரொட்றிகஸ் சிறிதும் அயர்ந்து போகாமல் கோவா வரை சென்று பார்த்தான். எனினும் முயற்சிகள் காலம் கடந்ததாகி விட்டன. சங்கிலி மன்னர் தூக்கிலிடப் பட்டார் என்ற செய்தியைத்தான் அவனால் பெற முடிந்தது. கடும் சினத்தோடு கடற் சூறாவளி போல் பொங்கியெழுந்த டொம்பீதுறு ரொட்றி கஸ் எண்ணற்ற போர்ச்சுகீசிய மரக்கலங்களை மேலைக் கடல் பரப்பில் நாசம் செய்தான். ஆயினும் அந்த மிலேச்சர்களின் ஆதிக்கம் புல்லுருவிகளின் ஆதரவுடன் ஈழத்தில் படர்ந்து பரவி யதை எவராலும் தடுக்க இயலவில்லை.

தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான், யாழ்ப்பாண நல்லூரிலிருந்த ஞானவல்லியை எப்படியோ மிகவும் பாதுகாப் பாக அழைத்து வந்து விட்டான். அந்த இலட்சிய வீரனால் ஈழத்தின் இந்தத் தோல்வியை ஒப்புக் கொள்ளவே இயலவில்லை. 'களம் வந்து வெற்றி காண முடியாத கயவர்கள், துரோகிகளின் துணை கொண்டல்லவா வஞ்சகமாய் ஈழ வேந்தனைச் சிறைப் படுத்தி வீழ்த்தி விட்டார்கள்... இந்த வஞ்சகத்தை எப்படி தண்டிக் காமல் விடுவது...' என்றெண்ணிய அவன், யாழ்ப்பாணத்தை ஒட்டிய தீவுகளிலும், காடுகளிலும் நெடுநாள் தலை மறைவு வாழ்க்கை மேற்கொண்டு அவ்வப்போது எதிரிகளுடன் கடும் போரிட்டான். தஞ்சைப் படையினர் பெரும்பான்மையினர் தாய கம் திரும்பி விட்டாலும் சில நூறு வீரர்கள் அவனுடனேயே தங்கியிருந்தனர். அத்துடன் ஈழ வேந்தர் சங்கிலியின்பால் இணை யற்ற ராஜ விசுவாசம் கொண்ட யாழ்ப்பாணத் தமிழ் வீரர்கள் சில நூறு பேர் அவனுடன் சேர்ந்து கொண்டனர்.

பேராற்றல் மிக்க இந்த ராஜ விசுவாசப் படையினரின் உதவியோடு ஈழத்தை மீட்க முடியாது போனாலும் எதிரிகள் ஸ்தம்பித்துப் போகுமளவு தொல்லைகளை விளைவித்துக் கொண்டிருந்தான் வருணகுலத்தான். தங்கள் குலதெய்வம் என்றே அவனைப் போற்றினர் தமிழ் மக்கள். ஈழத்தை மீட்கும் இலட்சிய வேகம் எத்தனை பேர் இதயங்களில் கனன்று கொண்டிருந்ததோ அத்தனை பேரும் அவனை ஆதர்ச நாயகனாகப் போற்றினர்.

ஞானவல்லி, மன்னன் மகள் என்ற உண்மை தெரிந்ததும் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சங்கிலி மன்னரின் சகாப்தமும், சரித்திரமும் இன்னும் முடிந்து விட வில்லை. அதை எப்படியும் மறுபடி மகிமை கொள்ளச் செய்தே தீரவேண்டும் என்று அந்த ராஜ விசுவாசிகள் கருதினர். ஞானவல் லியை வருணகுலத்தான் மணந்து கொண்டான்.

மாபெரும் நம்பிக்கையுடனும், கனவுகளுடனும் அந்த ரகசிய இயக்கம் கடுமையாக எதிரிகளுடன் போரிட்டவாறு காடுகளில் மறைந்து வாழ்ந்த காலத்துச் சம்பவங்கள் மற்றொரு மகா காவியத் துக்கு இணையானவை என்றே சொல்லலாம். இந்த ரகசிய இயக்கத்தை முற்றாக ஒழிக்க முனைந்து காடுகளில் புகுந்த போர்ச்சுகீசியப் படையினர் ஒவ்வொரு சமயமும் பேரழிவிற்கு உள்ளாயினர். எனினும் இரண்டாண்டு காலப் போராட்டத்தின் பின்னர் ஒரு கடைசிப் போரில் வருணகுலத்தான் வீர மரணம் எய்தினான். அவனுடைய தலை வெட்டப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த வெட்டுண்ட தலையின் கம்பீரம் கண்டே நெஞ்சம் துணுக்குற்று நின்றான் போர்ச்சுகீசிய தலைமைத் தளபதி கொன்ஸ்டாண்டின் டிசா. 'எப்படியொரு வீரப் பொலிவு! இந்த கம்பீர முகத்தையுடைய மனிதன் இப்போது என் எதிரே நின்று, விழிகளைத் திறந்து நோக்கினால் என் இதயம் அச்சத்தால் நடுக்கமுறும் என்பதில் சந்தேகமே இல்லை' என்றானாம் அவன்.

அந்த மாவீரனின் மறைவிற்குப் பின், சங்கிலி மன்னரின் புனித நினைவுக்கு அடையாளமாகப் போற்றப்பட்ட ராஜ வாள் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இன்றும் அந்த வீரவாள் அம்மன் கரத்திலிருக்கிறது. ஆம்; தமிழ் மக்களின் தன்மானம் காக்க சங்கிலி மன்னர் கொண்டிருந்த



உறுதியான ராஜகங்கணத்தை அன்னை வீரமாகாளியே ஏற்றுக் கொண்டு விட்டாள். என்றென்றும் தமிழ் மக்களைக் காக்கும் பொறுப்பு அந்த அன்னை வீரமாகாளியுடையதுதானே...? என் றைக்கும் நிரந்தரமாக ஆட்சி புரிபவள் அவள்தானே? இன்னல்கள் அகன்று, இழிந்த நிலை மாறி, ஈழத்தின் கனவுகள் ஈடேறி, என்றென்றும் தமிழ் மக்கள் அமைதி காண — நல்வாழ்வு பெற அந்த நல்லூர் வீரமாகாளி அருள் புரியட்டும்.

★—★—★—★—★

R

**(முற்றும். எனினும் சங்கிலி மன்னரின் வீரவாளை வருணகுலத்தான், நல்லூர் வீரமாகாளி கரத்தில் ஒப்படைத்த நிகழ்ச்சி பற்றிய கதையும் இங்கே வாசகர்கள் படித்து மகிழலாம்...)**

# சங்கிலியின் வீரவாள்

**தே**சம் எந்த அளவுக்குச் சீரழிந்து கிடக்கிறது என்பதற்கு ஓர் அடையாளமே போல் அந்தக் கோவில் மண்டபம் சிதைந்து, சிதிலமாகிக் கிடந்தது. கோவிலும் கூடத்தான். மண்டபமாவது, தூண்கள் சரிந்து போனாலும் ஒரு பெரிய சச்சதுர மேடை மிச்சமாக இருந்தது. ஆனால், அந்த யாழ்ப்பாண வன துர்க்கையம்மன் கோவிலோ முற்றாக அழிந்து போயிருந்தது. வெறும் கற்குவிய லாக மாறியிருந்தது. அதன்மீது புற்பூண்டுகளும் எருக்குகளும் முளைத்துக் கிடந்தன. வன துர்க்கை சிலை தனியே பிடுங்கியெறி யப்பட்டு, பாதிக்கு மேல் கறையான் புற்று மூடிக்கிடந்தது.

யாழ்ப்பாணத்தை ஒட்டிய அந்த வனத்திற்குள் தஞ்சைப் படையினர் வந்ததும் செய்த முதல் காரியம், கறையான் புற்றை நொறுக்கி, வனதுர்க்கையை மீட்டதுதான். அம்பாள் மறுபடியும் ஆலயப்பிரவேசம் செய்யவில்லை எனினும், ஒரு வன்னி மரத்தடி யில் நடப்பட்டாள். தலைமறைவாக இருந்த தஞ்சைத் தமிழ் வீரர் அனைவரும் நாள்தோறும் அந்த வனதுர்க்கை அம்மனை வழிபட் டனர். அவள் முன்பாகத்தான் அனைவரும் கூடி, அன்றாடம் போர்த்திட்டங்களை வகுத்தனர்.

கறையான் புற்றைத் தகர்த்து, வனதுர்க்கையம்மன் சிலையை மீட்டபோது, சில கருநாகங்கள் சீறிச் சினந்து வெளிப்பட்டன. தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான், சிறிதும் தயங்கா மல் அவற்றைத் தன் வாளால் வெட்டிச் சாய்த்தான். ''ஐயோ!''



என்ன காரியம் செய்துவிட்டீர்கள் தலைவரே! இதனால் தெய்வ குற்றம்தான் வரப்போகிறது...'' என்று பதறினர் வீரர்கள்.

அப்போது சொன்னான் தஞ்சைப் படைத்தலைவன், ''நண்பர் களே! நாம் ஈழத் தமிழ் மன்னர் சங்கிலிகுமாரருக்கு உதவுவதற்காக இங்கு வந்தோம். ஆனால், அது நிறைவேறவில்லை. நடந்தவை அனைத்தும் நீங்கள் அறிவீர்கள். பொல்லாத போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கம் இப்போது இலங்கை நாட்டில் பரவி தலைவிரித்தாடு கிறது. தமிழ் மக்கள் வணங்கிப் போற்றி வந்த பண்பாட்டுப் பெருமையெல்லாம் இந்த வனதுர்க்கை சிலைக்கு நேர்ந்த கதி யைப் போன்றே மண்ணில் பிடுங்கியெறியப்படுகிறது அந்நியர்க ளால். போர்ச்சுக்கீசியக் கறையான்கள் வாணிபம் புரியும் நோக் கில் வருவதாகக் கூறிக்கொண்டு இந்த மண்ணில் ஏராளமாக வந்து குவிந்தன. பின்னர் அந்தக் கறையான்கள் எழுப்பிய புற்றுகளிலே போர்ச்சுகீசிய மேலாதிக்க வெறி என்ற கருநாகங்கள் வந்து குடிபுகுந்து விட்டன. என்றைக்கு இருந்தாலும் ஒருநாள் நாம் அந்த அந்நியர்களை விரட்டியடிக்க வேண்டும். வெட்டிச் சாய்க்க வேண்டும். அதற்கு அடையாளமாகத்தான் நான் இவற்றை வெட் டியெறிந்தேன். யாரும் அச்சப்பட வேண்டாம்.''

ஆயிற்று; இரண்டாண்டு காலமாக அவர்கள் இந்த வனத் திலே மறைந்திருந்து, போர்ச்சுகீசியர்களை எதிர்த்து அவ்வப் போது போராடுகிறார்கள். ஏராள வெள்ளை இனத்து வீரர்களை வெட்டிச் சாய்க்கிறார்கள். ஆனாலும்... குன்று முட்டிய குருவி கதையாகத்தான் இருக்கிறதே தவிர, எதிரிகளை ஈழத்திலிருந்து முற்றாக விரட்டவே முடியவில்லை.

அதோ... அந்த மண்டப மேட்டில் உட்கார்ந்து, வனதுர்க்கை யம்மன் சிலைமீது பார்வையைப் பதியவிட்டு, நெடுநேரமாக அப்படியே அடித்து வைத்த சிலைமாதிரி உட்கார்ந்திருக்கிறான் தஞ்சைப் படைத்தலைவன்.

என்ன அப்படியொரு ஆழ்ந்த சிந்தனை? எது அவனை அப்படி உணர்வோடு உறைய வைத்திருக்கிறது?

அதைத்தான், அங்கே திடீர்ப் பிரசன்னமான தேவதை போல் தோன்றிய ஞானவல்லியும் கேட்டாள்...

மரத்தின் மீது பரண் கட்டி, அதில் என்னை ஏற்றி வைத்து விட்டு, நீங்கள் பாட்டுக்கு இந்த மண்டப மேட்டில் வந்து அடிக்கடி உட்கார்ந்து இப்படி உறைந்து போய்விடுகிறீர்கள். நான் வெட்டு வெட்டென்று அங்கே வானத்தை வெறித்தபடி தனித்துக் கிடக்கிறேன். நீங்கள் இங்கே இப்படி... இது இன்னும் எத்தனை நாளைக்கு? என்ன சிந்தனை? என்ன கவலை? ஏதாவது ஒரு பதிலை வாய் திறந்துதான் சொல்லுங்களேன்...''

அடர்ந்து கிடக்கும் அந்தக் காட்டினுள், பெரிய பெரிய மரங்களின் மீது பரண் வீடுகள் கட்டி, அவற்றினுள்தான் தஞ்சைத் தமிழ் வீரர்கள் வசித்து வந்தனர். அன்று நெடுநேரமாக வருண குலத்தான் அப்படி கிடப்பதைக் கண்டதும் ஞானவல்லி, காட்டுக் கொடிகளாலான ஏணியைத் தொங்கவிட்டு, பரண் வீட்டிலிருந்து குரல் கொடுத்தவாறே கீழிறங்கி வந்தாள். வருணகுலத்தான் பதிலே பேசவில்லை. சரிந்து கிடந்த தூண் ஒன்றின் மீது ஏறி, மண்டப மேட்டில் வந்து நின்ற அவள், இப்போது சற்று உரத்த குரலில் சினம் தொனிக்க வினவியதும் தஞ்சைப் படைத்தலைவன் அவளை ஏறிட்டு நோக்கினான்.

எவ்வளவு அழகு! ஒரு அசைப்பில் வனமோகினி வந்து நிற்பது போலிருக்கிறது. சிலைத்த மேனி - சிவந்த நிறம் - செழித்த மார்புகள் - அரச குடும்பத்தவள் என்பதைப் பறைசாற்றும் நிலைத்த கம்பீர வனப்பு. கவிதை எழுதத் துடிக்கும் கண்கள். கனவிலும் பவனிவரும் நிலா முகம்...

ஓ! ராஜ மாளிகையில் எப்படியெல்லாம் வாழ்ந்திருக்க வேண்டியவள். இப்படிக் கானகம் வந்து கல்லிலும் முள்ளிலும் நடந்து... வாடி மெலிந்து வதைபடும்படி நேர்ந்து விட்டதே!

எண்ணங்களின் பின்னல் வேறு விதத்தில் அவனை வளைத்து இறுக்க, திமிறி, தலை சிலுப்பி, ''ஞானா! நீ எப்படி இளைத்து மெலிந்து விட்டாய் தெரியுமா...? வனப்பும் கம்பீரமும் வம்சச் சொத்து. ஆனால், நீ இப்படி வதைபட நேருகிறதே...?'' என்றான்.

''நான் உங்களைக் கேட்டதே வேறு...'' என்றாள் ஞானவல்லி.

R



''என்ன கேட்டாய்...?''

''காடோ, வீடோ... எங்கு வாழ நேர்ந்தாலும் எனக்குக் கவலையில்லை. உங்களோடும் உங்கள் இலட்சியங்களோடும் ஒன்றிக் கிடப்பதே என் நெஞ்சம். நீங்கள்தான் அவசியமின்றி என்னை ஒதுக்கி வைக்கிறீர்கள். அதுதான் இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி என்று கேட்டேன்...''

''ஞானவல்லி, நீயா இப்படிக் கேட்பது? ஈழத்தின் அரசியல் பணிக்காக வந்தவன் நான். இடையிலே நம் சந்திப்பு நிகழ்ந்தது. காதலும் எழுந்தது. ஆயினும் வந்த பணியை நிறைவேற்றாமல் என் சொந்த வாழ்க்கைப் பணியை மேற்கொள்ள இயலாது என்று உன்னிடம் உரைத்தேன். கடமைக்கு முதலிடம்; காதலுக்கு அடுத்த இடம்தான் என்றேன். நீயும் காத்திருக்கச் சம்மதித்தாய். இப்போது என் கடமை முடிந்துவிட்டது என்றா எண்ணுகிறாய்...?''

ஞானவல்லி தீட்சண்யமாக அவனை ஏறிட்டு நோக்கினாள்.

''தஞ்சை வீரரே! ஈழத்தின் ராஜ சரித்திரமே முடிந்துவிட்டது. நீங்கள் இன்னும் எந்தக் கடமையைப் பற்றிப் பேசுகிறீர்கள்...? சங்கிலி மன்னரையே வஞ்சகமாகச் சிறைப்பிடித்து, கோவாவுக்குக் கொண்டு சென்று தூக்கிலிட்டு விட்டனர், போர்ச்சுக்கீசிய மிலேச்சர்கள். ஈழம் எடுப்பார் கைப்பிள்ளையாகி விட்டது. தமிழர்கள் உழக்கினுள் கிழக்கு மேற்கு, உயர்வு - தாழ்வு பார்த்ததால் வந்த வினை இது. ஜாதிகளும் இனங்களும் குலங்களுமாகப் பிரிந்து, கோபக் கொடி தூக்கி அலைந்தனர். ஒருவருக்கொருவர் குழிபறிப்பதே குறியாய் - வீரமாய் - விவேகமாய் - ராஜதந்திரமாய் எண்ணியும் பேசியும் செயல்பட்டும் தமிழர் அழிந்தனர்.

''வன்னி மண்டலத்தில் ஒரு வீரன் எழுந்து வாய்ப்பறை கொட்டி அலைந்தான். சங்கிலி மன்னரை வெள்ளை மிலேச்சர்களிடம் காட்டிக் கொடுத்தான். அதனால் இன்று ஆண்ட பரம்பரை ஒழிந்தது. தமிழர் அடிமைகளாயினர். வாழ்வைத் தொலைத்த பின்னர் வம்சம் பற்றி இவர்கள் கீர்த்தி பேச என்ன இருக்கிறது...? மிதி படட்டும் - வதை படட்டுமே - உதை படட்டுமே... நீங்கள்

ஏன் கிடந்து அல்லாடுகிறீர்கள்? ஈழம் இழந்த மானத்தை இனி மீட்டுவிட முடியுமா என்ன... காட்டில் கிடந்து கனவு வளர்ப்பது வீண், என்னைப் பொறுத்தவரை எல்லா நம்பிக்கைகளும் தகர்ந்து போய் விட்டன. இனி மீதமிருப்பது, ஒரு பொழுதாகிலும் உங்கள் மனைவி என்று பெயர் தாங்கி - மங்கல நாண் சுமந்து, மடி மீது உறங்குவதுதான். உங்கள் மடியில் அப்போதே - அந்தக் கணமே என் உயிர் போனாலும் பாதகமில்லை...''

நெடுமூச்செறிய நின்ற அந்த ராஜவம்ச நங்கையின் மனக் குமுறலை நன்றாகப் பொருள் உணர்ந்தான் வருணகுலத்தான்.

சங்கிலி மன்னரின் திருப் புதல்வியாகப் பிறந்தவள் அவள். அரச குடும்பத்தில் ஏற்பட்ட சூறாவளியில் - பதவி வெறிப்பூசலில் - ஏற்பட்ட நாளொன்றில் அவள் பிறந்திருந்ததால் ஒரு ராஜ ரகசியமாக மறைக்கப்பட்டது அவள் பிறப்பு, அவளைக் காத்து வளர்க்கும் பொறுப்பேற்ற ராஜ விசுவாசி - காத்தவராயர்தான், ஓர் அரசியல் தூதராகத் தஞ்சை வந்து, மன்னர் இரகுநாத நாயக்கரிடம் படை உதவி கோரி நின்றார். அந்த அழைப்பின் பேரில் ஐயாயிரம் தமிழ் வீரர்களுடன் இலங்கை மண்ணில் வந்து இறங்கினான் வருணகுலத்தான். ஆரம்பத்தில் மாபெரும் வெற்றிகளை ஈட்டி - ஈழத்தில் அமைதி நிலவச் செய்தான் அவன். மாபெரும் நம்பிக்கைத் தூணாக அவனைப் போற்றினார் ஈழவேந்தர் சங்கிலி. அப்போதுதான் இந்தக் காதலும் வளர்ந்தது. சங்கிலி மன்னருமே இதையறிந்து, மகிழ்ச்சி நிறைய மனப்பூர்வமாக ஆசீர்வதித்தார்.

திடீரென்று ஈழத்தில் நிம்மதி குலைந்தது. போர் துவங்கியது. குரங்குக் கைப்பூமாலையாக நாடே பிய்த்தெறியப்பட்டு, சின்னா பின்னமான வேளையில் காதலாவது, கல்யாணமாவது?

இப்போது...?

வருணகுலத்தான் சொன்னான்.

''ஞானா! நான் ஒரு முடிவிற்கு வந்துவிட்டேன்...''

''நல்ல முடிவாக இருக்க அன்னை வீரமாகாளி அருளட்டும்...''

R



''அன்பே! உன் ராஜவம்ச சிந்தனையின் தீர்ப்பாகவே இத்தனை எண்ணுகிறேன். நல்லூர் வீரமாகாளியைத்தான் நானும் இப்போது நினைத்தேன். உன் தந்தையின் உயிர்மூச்சு அந்த அன்னையின் திருப்பாதங்களில்தான் எப்போதும் உலவும். இதை அவரே முன் பொரு முறை என்னிடம் சொன்னார். இப்போது நீயும் அந்த அன்னையின் பெயரையே உரைத்தாய்...''

''நல்லூர் வீரமாகாளி எங்கள் குல தெய்வம். நீங்கள் உங்கள் முடிவைச் சொல்லுங்கள்... பார்த்தீர்களா, வார்த்தை அசுத்தமடைகிறது. இதுபோன்ற அறச்சொற்களை உச்சரிப்பதையே நான் விரும்புவதில்லை. முடிவல்ல, புதிய தொடக்கத்திற்கான உங்கள் தீர்மானம்தான் என்ன, சொல்லுங்களேன்?''

''ஞானா! உன் ஞானம் எப்போதுமே என்னை வியக்க வைப்பதாக இருக்கிறது! முடிவோ, தொடக்கமோ நானறியேன். தஞ்சை வீரர்கள் ஊர் திரும்ப வேண்டுமென்று நச்சரிக்கிறார்கள். மன்னரே மடிந்த பின்னர் ஈழம் எதிரியின் கையகப்பட்ட பின்னர் யாருக்காக இந்தப் போரை நடத்துகிறீர்கள் என்று எதிர்வாதம் செய்கின்றனர். அவசியமின்றி, அர்த்தமின்றி ஏராள வீரர்களை நான் பலி கொடுத்து விட்டேனாம். நேற்றிரவு நடந்த நீண்ட நேர ஆலோசனை முழுக்க, என் மீது குற்றச்சாட்டுகளால் துளைப்பதற்குத்தான் பயன்பட்டது. என்னால் வாயே திறக்க முடியவில்லை. இதோ, நீ வேறு சாடி நிற்கிறாய். பெண் பாவம் வேறு எனக்கு எதற்கு? நாம் நாளையே தஞ்சை திரும்புகிறோம். தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கர் நம் கதை முழுக்க அறிவார். காதல் பற்றியும் தான். அங்கே நடக்கும் நம் திருமணம்...''

''அதெல்லாம் சரி. இன்றென்ன செய்யப் போகிறீர்கள்? நல்லூர் வீரமாகாளி என்றீர்களே...?''

''ஆம்; இன்று அங்கே போய் வர வேண்டும். சங்கிலி மன்னரின் ராஜவாள் நம்மிடம் இருக்கிறதே... அதை எடுத்துச் சென்று நல்லூர் அன்னை வீரமாகாளியின் பாதங்களில் சமர்ப்பித்துவிடப் போகிறேன். இனி அவள் பார்த்துக் கொள்ளட்டும், இந்த ஈழத்தின் விவகாரத்தை. நாடு அவளுடையது. காலங்களைக்

கடந்து இதைக் காத்து நிற்பவளும் அவள்தானே...? ஈழத்தை மிலேச்சர்களிடமிருந்து மீட்பதா வேண்டாமா - தமிழ் மைந்தர்களின் கரத்தில் ஒப்படைப்பதா, வேண்டாமா என்பதையெல்லாம் அவள் எப்போது விரும்புகிறாளோ, அப்போது தீர்மானிக்கட்டும். இதுதான் என் முடிவு...'' என்றான், தஞ்சைப் படைத்தலைவன்.

அவள் பதறித் துடித்துப் பாய்ந்தோடி வந்து, தன் வலக்கரம் உயர்த்தி, அவன் வாயைப் பொத்தினாள்.

''என்ன இது அபசகுனப் பேச்சு... முடிவு, முடிவு, முடிவு! சொல்லாதீர்கள் இந்த வார்த்தையை என்றால், திரும்பத் திரும்ப அதையே சொல்லுகிறீர்கள்...''

''சரி, சரி... எல்லா முடிவுகளினின்றும் ஒரு புதிய தொடக்கமே நிகழும். நீ துணிவோடு இரு. போய் அந்த வாளை எடுத்து வா...''.

ஞானவல்லி, வன துர்க்கை இருந்த வன்னிமரத்தடிக்குச் சென்றாள். அந்த மரத்தின் பெரிய பொந்து ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்த நீண்ட ராஜ வாளை உறையோடு அப்படியே எடுத்து வந்தாள். அதை ஏந்தியதும் அவள் கண்களினின்று கங்கை பிரவாகமெடுத்தது. அந்த வாளின் சரித்திரத்தை அவள் அறிவாள்.

அந்த வாள் மட்டும் அன்று துரோகம் சூழ்ந்த நேரத்தில் சங்கிலி மன்னரின் கரத்திலே இருந்திருந்தால், எதிரிகளால் அவரை நெருங்கியிருக்கவே முடியாது. அவரது புஜத்தில் புயல் உருவாகும். அந்த வாள் முனையில் இரத்த நதிகள் சிருஷ்டிக்கப்படும் என்பதையெல்லாம் நாடே அறியும். ஆனால், பண்பு கருதி எதிரியாக நின்றவன் மனம் மாறி, நட்புள்ளத்தோடு சமரசம் பேச வருகிறபோது, அவனை ஆயுதம் ஏந்தி நின்று வரவேற்பது அத்தனை உசிதமல்ல என்ற உயரிய உள்ளத்தோடு சங்கிலி மன்னர் அந்த வாளை எடுத்து வைத்துக் கொள்ளாதிருந்தார்.

அது, வண்ணார் பண்ணை என்னுமிடத்தில் நிகழ்ந்தது. அங்கேதான் சங்கிலி மன்னர் போர்ப் பாசறை அமைத்துத் தங்கியிருந்தார். போரிலே ஈழவேந்தர் சங்கிலி, வெற்றி முகம் கண்டிருந்த வேளை அது. ஒரு காத தூரத்தில் களத்தின் மறுமுனையில் தஞ்சைப்படை, பூ நகரியை நோக்கிப் போர்ச்சுக்கீசியர்களின் கூலிப்படையை விரட்டியடித்துக் கொண்டிருந்தது. எக்காரணம் கொண்டும் தஞ்சைப்படை சோர்வுற்றுப் பின்வாங்க நேரிட்டு விடக் கூடாதென்ற நோக்கில் பின்பலமாய் பெரும் சைன்யத்துடன் சங்கிலி மன்னர் காத்திருந்தார். போதும் போதாததற்கு யாழ்ப்பாணக் குடாக் கடலிலே, கேரளத்தின் சுதேசி வீரர் கூட்டமான குஞ்சாலி மரக்காயர்களின் தலைவனும் மேலைக் கடல் முழுக்க அந்நியர்களைக் குலை நடுங்க வைக்கும் ஆற்றல் மிக்க மாவீரனுமான டொம்பீதுறு றொட்றிகஸ் நவீன ஆயுதங்கள் பொருந்திய கடற்படையுடன் சங்கிலி மன்னருக்கு ஆதரவாக வந்து கொண்டிருந்தான்.

R



இந்த முறை மிலேச்சர்கள் மிதிபட்டு நசுங்கப் போகிறார்கள். நாடு பிடிக்கும் பேராசையும் வஞ்சகமும் சர்வ நாசம் காணப் போகின்றன என்னும் அற்புதமான நிலை உருவாகிக் கொண்டிருந்தது.

அந்த வேளையில் பார்த்துத்தான் தமிழ் நிலத்தின் களைகளும் களங்கங்களும் ஓருருவாய் வடிவெடுத்த காக்கையன் என்ற துரோகி, நட்பு பேசிக் கொண்டு வந்து நின்றான், சங்கிலி மன்னரின் பாசறை வாசலில். அந்தத் திடீர் வருகையைச் சற்றும் எதிர்பாராத மன்னர், பாசறைத் துகின் மனையின் நடுவே இருந்த தூணில் தொங்கவிடப் பட்டிருந்த ராஜ வாளை உறையுடன் எடுத்து இடுப்பில் அணிந்து கொள்ளலாமா என்று ஒரு கணம் எண்ணினார். மறுகணம், நட்பு பேச வருபவனை சந்தேகிப்பது அறத்திற்கு அழகல்ல என்றெண்ணி, இதய சுத்தியுடன் - இனித்த முகத்துடன் இருகை நீட்டி அவனை வரவேற்றார்.

அந்த துரோகி, சிரித்த முகம் காட்டி செய்த தவறுகளுக்கெல்லாம் வருந்துவதாக நீலிக் கண்ணீர் வடித்து, மாய்மால வார்த்தைகளைச் சொரிந்த வண்ணம் நெருங்கி வந்து பாதம் பணிந்தான். விலை மதிக்க முடியாத ரத்தினக் கற்கள் பதித்த தங்கச் சங்கிலி

ஒன்றை மன்னர் கழுத்தில் அணிவிக்க விருப்பம் தெரிவித்தான். சம்மதித்தார், சங்கிலி மன்னர். சங்கிலியை அணிவித்த சண்டாளன் அவரை மார்புறத் தழுவி நின்றான். அந்த நொடிப் போதில் எதிரிகள் அந்தத் துகின் மனையைச் சூழ்ந்தனர். பீரங்கிகள் புகை கக்கின. மன்னன் பாசறையைக் காத்து நின்ற தமிழ் வீரர்களின் தலைகள் கொய்யப்பட்டன. அவர்கள் தங்கள் தலைகளை மட்டுமா இழந்தார்கள்...? தலைவனையும்தான்!

தொழுத கையுள் பகை இருந்ததை-துரோகம் இருந்ததை உணராத சங்கிலி மன்னர், திமுதிமு வென்று உள்ளே பாய்ந்த துரோகத் தமிழ் வீரர்களால் சிறைப்படுத்தப்பட்டார். இரவோடிரவாக அவர் மரக்கலம் ஒன்றிலேற்றப்பட்டு, ஈழ தேசத்திலிருந்தே அப்புறப்படுத்தப் பட்டார். கடலில் அவரைச் சுமந்த கலம், கோவா நோக்கி மரண யாத்திரைக்கு அவரை இட்டுச் சென்றது. காலம் கவலை சுமந்து நின்றது.

இந்த வரலாறுகளை உள்ளடக்கிய அந்த வாள், 'நான் மட்டும் அப்போது சங்கிலி மன்னரின் கரத்தில் இருந்திருந்தால்...' என்று ஓயாது ஓலமிடுவது போன்றிருந்தது ஞானவல்லிக்கு.

அவளிடமிருந்து அந்த வாளை வருணகுலத்தான் வாங்கிக் கொண்டு, யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலை நோக்கிப் புறப்பட்டான்.

நல்லூரில் அன்று திருவிழா. சங்கிலி மன்னர் உயிரோடு இருந்திருந்தால், நல்லூர் விரமாகாளி அம்மன் கோவிலில் ஒவ்வொரு சாதாரண வெள்ளிக்கிழமையுமே கூட திருவிழா நாளாகத்தான் மிளிர்ந்திருக்கும். அன்று ஆடி வெள்ளிக் கிழமை. ஆனால், தேசமே தலைவனை இழந்து ஆடி அலமலந்து போயிருந்ததால், அத்தனை உற்சாகமாக அந்த வெள்ளி சோபிக்கவில்லை. மரபு விட்டுப் போய் விடக் கூடாதென்ற எண்ணத்தில், மக்கள் மிகச் சிலரேதான் குழுமியிருந்தனர். வருணகுலத்தான் ஒரு சாதாரண கரக ஆட்டக்காரன் வேடத்தில் உருமாறி அங்கே வந்திருந்தான். அவனோடு விசுவாச வீரர் சிலர் மஞ்சள் வஸ்திரம் அணிந்து, மத்தளம், உடுக்கை, நாதஸ்வரம் போன்ற வாத்தியங்களை இசைத்து வந்தனர்.



அம்பாளுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. துணை வந்த பத்துப் பன்னிரண்டு தமிழ்வீரர் ஒன்றாக அம்மன் கருவறையை நெருங்கி, வாசல் மறைத்து நின்ற வேளையில், வருணகுலத்தான், மறைத்து வைத்திருந்த அந்த வாளை உருவி அர்ச்சகரிடம் நீட்டியபோது, ஒரு கணம் அவர் திடுக்கிட்டுப் போனார். ஆனால், மறுகணம் அவர் முகத்தில் பிரகாசம். அந்த ராஜவாள் அவர் அறியாததா என்ன...? எத்தனை முறை அம்பாள் கரங்களில் வைத்து அபிஷேக ஆராதனைகள் செய்த பின் அரசர் பெருமானிடம் அவரே ஒப்படைத்திருக்கிறார்!

"என்ன இது... ராஜவாள்! யார் நீங்கள்...?"

"அந்தணரே! நான்தான் தஞ்சைப் படைத்தலைவன். தலைமறைவு இயக்கம் நடத்தி, இது நாள் வரை போர்ச்சுக்கீசியரை எதிர்த்துப் போராடினேன். சங்கிலிமன்னர் என்னிடம் ஒப்படைத்த பணியை எந்தக் கட்டத்திலும் என்னால் உதறி எறிய முடியவில்லை. என் தேகத்தில் உயிர்மூச்சு இருக்கும் இறுதிக்கணம் வரை இந்த தேசத்தை அந்நியன் கரத்திலிருந்து மீட்பது என் கடமையாக இருந்தது. ஆனால் துணைவந்த தஞ்சைப்படை துயருற்று மாள்கிறது. எல்லோரும் ஊர் திரும்புவதாக முடிவெடுத்து விட்டனர். ஒற்றை மனிதனாக நின்று நான் என்ன செய்வது? இதோ ராஜவாள். இனி இது அம்பாளின் கரத்திலே இருக்கட்டும். அனைத்திற்கும் அவளே சாட்சி. மீட்சி அளிக்க வேண்டியவள் அவளே. அருளாட்சி நடத்தி தமிழர் அனைவருக்கும் அவளே ஆன்ம பலம் அருளட்டும்..." என்றான் வருணகுலத்தான்.

சங்கிலி மன்னரின் ராஜவாள் அம்பாள் கரத்தில் ஆரோகணித்தது. நிம்மதிப் பெருமூச்சுடன் வருணகுலத்தான் சந்நிதியை விட்டு வெளியே வந்தான். என்ன இது... எப்படி அங்கே போர்ச்சுக்கீசிய வீரர்கள் வந்தனர்! இரகசியம் எப்படி அம்பலமானது! யாருக்குத் தெரியும்?

அங்கே ஒரு குட்டிப் போர் நிகழ்ந்தது. வஞ்சம் தீர வாளெடுத்துப் போரிட்டான் வருணகுலத்தான். ஆயினும் எல்லா முயற்சிகளும் தோற்றன. தஞ்சை வீரர் அனைவரும் கொல்லப்பட்டனர். வருணகுலத்தான் தலை வெட்டப்பட்டு, தனியே எடுத்துச் செல்

லப்பட்டது. மறுநாள் கொழும்பு நகரிலே - போர்ச்சுக்கீசியப் படைத்தலைவன் பிலிப்-டி-ஒலிவேரா, அந்தத் தலையை தளபதி கொன்ஸ்டாண்டின்-டி-சௌசாவிடம் காட்டினான். அந்த வெட்டப்பட்ட தலையைக் கண்டே மிரண்டு போனான் தளபதி. 'அப்பா!' என்னவொரு கம்பீரம்! எப்பேர்ப்பட்ட மாவீரன் இவன். போர்ச்சுகீசிய ஆதிக்கத்தையே இரண்டாண்டுக் காலம் திக்குமுக்காடச் செய்து விட்டானே, இந்த மாவீரன்' என்று கூறி, வியந்தானாம் அவன். சரித்திரம் சொல்கிறது.

காதலும் நிறைவேறவில்லை; கடமையும் நிறைவேறவில்லை; தஞ்சை திரும்பி, காதல் மனையாளுடன் களி உவகை கொண்டு வாழலாம் என்ற அவன் கனவும் நிறைவேறவில்லை. ஆனால், அன்று அந்த மாவீரன் - தஞ்சைப் படைகளின் சேனாநாயகன் - நல்லூர் வீரமாகாளி அம்மன் கரங்களிலே சேர்ப்பித்த சங்கிலி மன்னரின் ராஜவாள் இன்னும் அந்த அன்னையின் கரங்களிலே இருக்கிறது. இது நிஜம். ★